# பூங்குயில்

## 70



வெளியீடு :
சோலைக்குயில் அவைக்காற்றுக் களம்
தெல்லிப்பழை
2020

# பூங்குயில்

சோலைக்குயில் அவைக்காற்றுக்களத் தலைவர்

## திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களின்

அகவை எழுபது நிறைவு மலர்

*தொகுப்பாசிரியர்கள் :*

திருமதி பாகீரதி கணேசதுரை அவர்கள்

திருமதி சிவமலர் சுந்தரபாரதி அவர்கள்

*வெளியீடு :*

சோலைக்குயில் அவைக்காற்றுக் களம்

★ தலைப்பு : பூங்குயில்
கலாபூஷணம்
கோகிலா மகேந்திரன்
அவர்களின் அகவை எழுபது
நிறைவு மலர்

★ பதிப்பு : முதல் பதிப்பு 17-11-2020

★ தொகுப்பாசிரியர்கள் : திருமதி பாகீரதி கணேசதுரை
திருமதி சிவமலர் சுந்தரபாரதி

★ அச்சு : அம்மா அச்சகம், இணுவில்

★ வெளியீடு : சோலைக்குயில் அவைக்காற்றுக் களம் - தெல்லிப்பழை

★ உரிமை : திரு. கிருஷ்ணர் மகேந்திரராஜா

★ பக்கங்கள் : 167 + viii

★ Title : Poonkuyil
Kalapooshan Kohila Mahendran's
7oth Birthday
Felicitation Number

★ First Edition : 17-11-2020

★ Compile Editors : Mrs. Baheerathy Ganesadurai
Mrs. Sivamalar Sundarabarathy

Printers : Amma Printers, Inuvil

Publisher : Solaikkuyil Avaikkattu Kalam,
Tellippalai.

Copy right : Mr. Krishnar Mahendrarajah

Pages : 167 + viii

Price : 700/-

ISBN : 978-624-5407-00-2

# பதிப்புரை

மருக்கொழுந்து, துளசி, கற்பூரவள்ளி போன்ற அற்புத மூலிகைகள் தாம் மண்ணில் துளிர் கொள்ளும் போதே தம்மைத் தமது தெய்வீக சுகந்தத்தால் தாமாகவே இனங்காட்டி விடுவது போல கலாபூஷணம் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களும் தம்மை இம் மண்ணுக்குத் தமது பிஞ்சுமனப் பருவத்திலேயே இனம்காட்டித் தடம் பதித்த ஒரு பன்முக, பல்திறன் ஆளுமையாளர் ஆவார்.

இன்று ஒரு அற்புத நன்னாள், சோலைக்குயில் அவைக்காற்றுக் களமானது விழிசைக் குயிலின் மனமாளிகை மாடத்திலிருந்து பறக்க விடுகின்ற பூங்குயிலின் இனிய ரீங்காரம் எங்கள் இதய அரங்கத்தின் சாளரத்திரை விலக்கி உள் நுழைந்து எம்மைப் பரவசப்படுத்தும் பொன்னாள்.

உன்னிப்பாயிருத்தலுடன் கூடிய அறிகைச் சிகிச்சை கற்கை நெறியின் நிறைவு நாளையும் விழிசைக்குயிலின் அகவை எழுபதை நிறைவு செய்யும் நாளையும் ஒன்றிணைத்து நினைவில் நிறுத்தும் நாளில் பூங்குயில் இனிய வெளியீடாக உலா வருகின்றது. இந்நூல் தொகுப்பை எனது ஆத்மார்த்த உந்து சக்தியும் ஆர்வமும் உந்தித் தள்ளப் பதிப்புரை வரைந்து உங்களுடன் இணைவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஆலவிருட்சம் ஒன்றை அதன் கிளைகள், இலை, காய், கனி, ஆணிவேர், பக்கவேர்த் தொகுதி, வேர் மூடி ஆகிய அனைத்தும் இணைந்து போஷிப்பதன் மூலமே அது பசுமையுடன் செழிப்புடன் வளர்வது எமது கண்களுக்குப் புலனாகின்றது. அதேபோன்று சாதனையாளரின் சாதனைகள் பல்வேறு துறைசார் ஆளுமைகளால் பன்முகப் பார்வைக்குட்படுத்தப்பட்டும், தாமாகவே படைக்கப்பட்ட படைப்புக்கள் மூலமாகவும் வகைப்படுத்தப்பட்ட தொகுப்பாகப் பூங்குயில் உயிர்ப்படைந்துள்ளது.

எழுத்தாளர் ஆகிய கோகிலா என்கின்ற நார் ஆனது சிறுமி, மாணவி, ஆசிரியர், அதிபர், அதிகாரி, சீர்மியர், வளவாளர் என்கின்ற முகமலர்களை இணைத்து ஒரு மலர்ச் சரமாகச் சமூகத்தினுள் வியாபகம் கொண்டுள்ளது. இவர் விரும்பித் தேர்ந்தெடுத்து வளர்த்துக்கொண்ட அழகியல் துறைகள் இவரது அழகியல் நுகர்வை மேலோங்க வைத்து ஆளுமைச் சமநிலையையும் ஆத்மார்த்த நிறைவையும் ஏற்படுத்த இவர் செம்மைப்படுத்தப்பட்டார். அந்தச் செம்மைக்கு நிகராக உளவியல் துறை மூலம் பல்வேறு பயிற்சிகள், பயிற்றுவிப்புக்கள், புதிய புதிய கற்கை நெறிகள் வடிவமைத்து அறிமுகப்படுத்தி அண்மைக் காலமாக மிக வேகமாக அறிகை, அறிவியல்சார் உளநலம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றி வருகின்றார்.

குயில் என்பதன் கூவும் செயலாகவே இவர் சமூகத்தை வானொலி, காணொலி, கல்விக்கூடங்கள், நிறுவனங்கள் என்பவற்றினூடாகக் கூவி அழைத்து எமது சந்ததியினரை, பெற்றோரை ஆற்றுப்படுத்தி வருகின்றார். அற்புத ஆசான்களால் வளர்க்கப்பட்டு அவர்கள் வழங்கிய அருட்கொடை இளையோரைச் சென்றடைய வைத்த நல்லாசான் இவர். இவற்றிற்கான ஆதாரங்கள் எமது பூங்குயிலின் பட்டுச் சிறுகுகளில் எடுத்துக் காட்டப்படுகிறது.

தொகுத்தல், வகுத்தல், பதித்தல் என்னும் எண்ணக் கருக்கள் இங்கே கையெழுத்துப் பிரதிகளாகவும், மாணவரிலிருந்து மாண்புமிகு பேராசான்கள், நிபுணர்கள், சான்றோர்களின் இதயபூர்வ ஆசியாக, வாழ்த்தாக, நற்சான்றாக, நன்றியாக, உளப் பகிர்வாகத் தொகுக்கப்பட்டுப் பதிக்கப்பட்டுள்ளன. இத்தனை கவனமாக எத்தனை இடர்ப்பாடுகள் கடந்தும் பாதுகாக்கப்பட்டுப் பொக்கிஷப்படுத்தப்பட்டவை. இன்று பூங்குயிலின் பட்டுச் சிறகுகள் நூற்றறுபது பக்கங்களையும் தாண்டி நிற்கின்றன. நாளைய தலைமுறையினருக்கு இவர் தார்மீகக் கடமையாக இதனை வழங்கியுள்ளார்.

சும்மா இருத்தல் என்பது இல்லாதிருத்தல் இவரது சுயம். எப்பொழுதுமே இவரது உலைக் களத்தில் ஏதாவது ஒரு படையல் தயாராகிக்கொண்டே இருக்கும். அது முழுமை பெறும்போது அடுத்ததொன்று தயார்நிலையில் இருந்து உலையில் ஏறிவிடும். இது உண்மையில் ஒரு அற்புதம் தான். இவரது உயிர்ப்பின் ரகசியமே இதுதான். இந்த வாழ்வு உந்தலே இவரை முன்னோக்கி நகர்த்திச் செல்லும் சஞ்சீவியாகும்.

என்னுடனான இவரது தொடர்பாடல் 1975இற்கு முன்பே ஆரம்பிக்கப்பட்ட ஒன்று. எத்தனையோ இணைந்த பயணங்கள், பயிற்சிகள், நினைவுகள் என்று ஒன்றாகப் பயணித்த நினைவுகள் அடிக்கடி பகிரப்பட்டுக் கொண்டே இருந்தமை ஒரு மெல்லிய தென்றலாக வருடிச் செல்லும். இந்தக் கோகிலத்தின் இயங்கு திறன், ஆரோக்கியம் என்பன அவரது வாழ்வியல் இலக்குகளை அடைவதில் முழுமூச்சாகச் செயற்பட்டு மன அமைதியோடு அவருக்குப் பிடித்த மாதிரியே வாழ்வை அனுபவித்து வாழ இறையாசியும் சான்றோர்களின் ஆசீர்வாதங்களும் என்றும் நிலைத்திருக்க வேண்டி விடை பெறுகின்றேன்.

**திருமதி பாகீரதி கணேசதுரை**
தொகுப்பாசிரியர்,
சோலைக்குயில் அவைக்காற்றுக் கள
நிறுவுனரில் ஒருவர்.

# தொகுப்புரை

திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களின் வாழ்வியல் சாதனைகளைத் தொகுத்துப் பூங்குயிலாக வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். இதில் திருமதி கோகிலா மகேந்திரன் தொடர்பான எழுத்தாளர்களின் தொடர்பாடல்கள், அவருடைய மாணவர்களின் கருத்துக்கள், அவரது ஆக்கங்கள் தொடர்பான விமர்சனங்கள், பாடசாலைச் சம்பவப் பதிவேட்டுக் குறிப்பு, நாடக எழுத்தாக்கம், உளவியற் சிறுகதை, தொடர் நவீனம், சிறுவர் கதை, கவிதை, இசைப்பாடல், டயறித் தொகுப்பு, உறவினர் பற்றிய நினைவாடல், கட்டுரைகள், அவர் எழுதிய விமர்சனங்கள், விருந்தினர் உரைச் சுருக்கம், அதிபராகப் பரிசளிப்பு விழாவின் அறிக்கை, 2015இல் அகவை அறுபத்தைந்து நிறைவு மலரான விழிசைக்குயிலிலும், 2010 அகவை அறுபது நிறைவு மலரான சோலைக்குயிலிலும் வெளிவராத அவரின் நிறைவான செயற்பாடுகள் என்பவற்றை இங்கே தொகுத்துள்ளோம்.

வாசல் வந்தவை என்ற பகுதிக்குள் அவரைப் பற்றிப் புறத்திலிருந்து வந்தவையும், மெதுவாகத் திறந்தவை என்ற பகுதிக்குள் அவரிடமிருந்து வந்தவையுமாக இரு பகுதியில் எழுபதாவது அகவை நிறைவுமலர் பூத்திருக்கிறது.

திருமதி கோகிலா மகேந்திரன் எனும் மாபெரும் பன்முகப் பெண் ஆளுமையைத் தெரிந்து கொள்ள இத்தொகுப்பு மிக உதவும் என நம்புகின்றேன்.

**திருமதி சுந்தரபாரதி சிவமலர்**
தொகுப்பாசிரியர்,
செயலாளர்
சோலைக்குயில் அவைக்காற்றுக் களம்

# நன்றியுரை

எனது அன்புக்குரிய துணைவியாரின் எழுபது அகவை நிறைவையொட்டியும் அவர் நடத்திய உன்னிப்பாயிருத்தலுடன் கூடிய அறிகைச் சிகிச்சை வகுப்பின் சான்றிதழ் வழங்கல் நிகழ்வையொட்டியும் சோலைக்குயில் அவைக்காற்றுக் களம் "பூங்குயில்" என்ற மலரை வெளியிடுகிறது.

எங்கள் திருமணம் 05-05-1977இல் நடைபெற்றது. அதற்கு முன் விழி, விழிசைக்குயில் போன்ற புனை பெயர்களில் அவ்வப்போது எழுதிக் கொண்டிருந்த என் மனைவியார் எமது திருமணத்தின் பின் கோகிலா மகேந்திரன் என்றே எழுதி வருகிறார். அவரது எழுத்தில் அதன்பின், புதிய சக்தி விஸ்வரூபம் எடுத்தது என்று நினைக்கிறேன். கோகிலா மகேந்திரன் என்ற பெயர் மிகப் பிரபலமான பெயராக அவர் தொட்ட துறைகள் பலவற்றில் துலக்கம் கண்டது.

நாற்பத்து மூன்று வருடங்கள் கடந்திருக்கும் எமது இல்லற வாழ்வு கூட்டுக் குடும்பத்தினூடாகப் பல அனுபவங்களைப் பெற்று நகர்ந்த போது பயனுள்ள வாழ்வாக அமைந்தது. அளவாய் ஒரே ஒரு புத்திரனாகப் பெற்ற என் மனைவி அவருக்குக் களி மகிழ்வு தரும் வாசிப்பு, எழுத்துச் சவாரிகளில் அதிக நேரம் செலவிட முடிந்தது.

1988இல் சோலைக்குயில் அவைக்காற்றுக் களம் தோற்றம் பெற்றது. கலைஞர்கள் பலரும் இணைந்து நாடகங்கள் செய்தனர். மிக ஆரம்ப காலத்திலிருந்தே வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தம் செய்வதிலும், நாடகங்களுக்கு துணை நெறியாளராகவும், இசை நெறியாளராகவும் அமைவதிலும் என் துணைவியுடன் சேர்ந்தியங்கிய திருமதி. பாகீரதி கணேசதுரை அவர்கள் இன்று இம்மலரின் தொகுப்பாசிரியரில் ஒருவராக இருந்து பதிப்புரையும் அழகாக எழுதியுள்ளார். அவருக்கு எமது குடும்பத்தின் சார்பில் நன்றி.

சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் இப்போதைய இணைச் செயலாளரில் ஒருவராகிய திருமதி சிவமலர் சுந்தரபாரதி அவர்கள் மற்றொரு தொகுப்பாசிரியராக இருந்து தொகுப்புரையும் எழுதியுள்ளார். அவருக்கு எமது ஆழ்ந்த நன்றி உரியது.

வாழ்வில் அவ்வப்போது வந்த வாழ்த்துக்கள், நன்றிகள், பின்னூட்டல்கள், விமர்சனங்கள், கடிதங்கள் போன்றவற்றில் சிலவற்றை "வாசல் வந்தவை" என்ற முதல் பகுதியில் சேர்த்துள்ளனர். அவ்வப்போது தமது கருத்துக்களைச் சொன்னதன் மூலம் இந்த முதல் பகுதியை அழகுபடுத்திய அனைவருக்கும் நன்றி. கோகிலா எழுதிய பல்வேறுபட்ட புனைவுகள், புனைவு சாராத் துறைகளில் இருந்து மாதிரிக்கு ஒவ்வொரு விடயங்கள் தெரிவு செய்யப்பட்டு மெதுவாகக் கதவு திறந்தவை என்ற இரண்டாவது பகுதியில் அமைகின்றன. சோலைக்குயில், விழிசைக்குயில், பூங்குயில் ஆகிய மூன்று

மலர்களையும் ஒரு சேர வைத்துப் பார்த்தால் கோகிலாவை ஓரளவு புரிந்து கொள்ள முடியும்.

இம்மலரின் அட்டையை அலங்கரிக்கும் சித்திரங்கள் எங்கள் செல்லப் பேர்த்தி நயன பாஷினியின் ஆக்கங்கள். அப்பம்மாவின் மலருக்காக ஏழு வயதுப் பிள்ளையின் பங்களிப்பு எம்மைப் பரவசப்படுத்துகிறது.

எங்கள் நூல்களில் பலவும் அம்மா அச்சகத்தின் பதிப்புகள். மிகவும் சிரமப்பட்டு எடுத்த காரியத்தைச் செம்மையாக நிறைவு செய்வதற்கு "அம்மா அச்சகம்" ஒரு நிதர்சன முன்னுதாரணம் என்றால் மிகையில்லை. அவர்களின் செம்மை நோக்கிய செயற்பாடு என்பது சொற்களின் விபரிப்புக்கு அப்பாற்பட்டது. எமது குடும்ப நன்றி எப்போதும் அவர்களுக்கு உரியது.

"கொரனா" கால அனர்த்த நேரத்திலும் இம்மலர் வெளிவர உதவிய சோலைக்குயில் அவைக்காற்றுக்கள உறுப்பினர் அனைவருக்கும், அமைப்புக்கு வெளியே இருந்து உதவியோருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

**கிருஷ்ணர் மகேந்திரராஜா**
**ஓய்வுநிலை அதிபர்,**
**அளவெட்டி அருணோதயக் கல்லூரி.**

**கே.கே.எஸ் வீதி,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**
17-06-2020

# உள்ளே அமைபவை


பதிப்புரை iii
தொகுப்புரை v
நன்றியுரை vi

## வாசல் வந்தவை :

| | |
|---|---|
| ச. பொ. கனகசபாபதி | 01 |
| சிவத்தமிழ்ச் செல்வி | 02 |
| சோ. ப. | 03 |
| ஏ.ரி. பொ. | 04 |
| சி.எஸ். நச்சினார்க்கினியன் | 05 |
| ம. பிரவீணன் | 06 |
| லெ. முருகபூபதி | 08 |
| கெக்கிராவ ஸஹானா | 11 |
| யோகா பாலச்சந்திரன் | 12 |
| பி.எஸ். பெருமாள் | 13 |
| விமலாதேவி | 14 |
| ஆசிரிய உளவளத் துணையாளர் | 15 |
| பா. சிவதர்சன் | 16 |
| எஸ். கிருசாளினி | 19 |
| க. செல்வநாதன் | 21 |
| சி. காருண்யா | 22 |
| இ. புஷ்பராணி | 25 |
| வைஷ்ணவி | 27 |
| அ. சிவாணி | 28 |
| அன்புமணி | 29 |
| கே.எஸ்.சிவகுமாரன் | 32 |
| ஈ. குமரன் | 33 |
| புலோலியூர் க. சதாசிவம் | 41 |
| சோ. ப. | 43 |
| தெளிவத்தை ஜோசப் | 44 |
| சிறுவர் பாதுகாப்பு நிதியம் - லிபி கெனாட் | 47 |
| நேர் வகுப்பறை முகாமைத்துவச் செயற்திட்ட வளவாளர் | 48 |
| பாடசாலை மாணவர் | 50 |
| கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் | 51 |
| பாடசாலைப் பதிவேடு | 52 |


## கதவு திறந்தவை :

| | |
|---|---|
| நாடகம் | 53 |
| சிறுகதை | 60 |
| தொடர் நவீனம் | 64 |
| சிறுவர் கதை | 68 |
| சிறுவர் கவிதை | 71 |
| கவிதை | 72 |
| இசைப்பாடல் | 73 |
| டயரி | 74 |
| நனவிடை தோய்தல் | 79 |
| நாடக விமர்சனம் | 83 |
| உளவியல் | 85 |
| சமயக் கருத்தரங்கு | 89 |
| விசேட தேவை | 96 |
| புலம்பெயர் வாழ்வு | 102 |
| விழுமியம் | 104 |
| பெற்றோரியம் | 107 |
| வளர்ந்த நிறுவனம் | 114 |
| பண்பாடு | 117 |
| சிறுவர் காப்பகம் | 120 |
| வாழ்வியல் | 123 |
| பாதை காட்டிய அதிபர் | 127 |
| சக ஆசிரியர் கண்ணீர் அஞ்சலி | 131 |
| நூல் அணிந்துரை | 132 |
| நூல் முன்னுரை | 135 |
| நூல் பதிப்புரை | 138 |
| நூல் முன்பக்கக் குறிப்பு | 140 |
| பாலர் இலக்கிய நூல் பதிப்புரை | 141 |
| பின்னட்டைக் குறிப்பு | 143 |
| அதிபர் அறிக்கை | 144 |

# வாசல் வந்தவை



மகாஜனாவில் A/L மாணவி கோகிலா



குடும்பத்தினருடன்



# மிக மதிப்பார்ந்த ஆசிரியர் வாழ்த்து

அன்பின் கோகிலா:

அகவை அறுபதைத் தொடும்
உண்மை இன்று போல்
என்றும் சமூக உணர்வுடன்
வாழ வேண்டும் என
வாழ்த்துகிறேன்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்
தாய் போல் உமது பெருமையை
கண்டு அவையும்
பூரிப்பு என்றும் எனது
உள்ளத்தைத் [illegible]

சீரிய பண்புடையவளாகும்
இல்லறத்தவளே
நீண்ட காலம்
இளமையான இன்பம் தழைத்து
வாழ வேண்டும் என
வாழ்த்துகிறேன்

அன்புடன்

[illegible]

17-11-2010

# சிவத்தமிழ்ச் செல்வியின் கடிதம் ஒன்று

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
07.06.1991

திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள்,

அன்பு மகளே,

வணக்கம். எங்கள் தேவஸ்தானத்து நிர்வாக சபையின் இருபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தி அடைவதை முன்னிட்டு வெள்ளிவிழா மலர் ஒன்று வெளிவர உள்ளது. அம்மலரில் 'தேவஸ்தான வளர்ச்சியில் பத்திரிகைகளின் பங்களிப்பு' எனும் தலைப்பில் ஒரு கட்டுரை வெளிவர வேண்டியிருப்பதால், நாளை இவ்விடம் வந்து என்னைத் தொடர்பு கொள்ளுமாறு அன்பாக வேண்டுகிறேன். நீங்களே இக் கட்டுரையை எழுதித்தர வேண்டுமென்பது என் விருப்பம். வேண்டிய செய்திகள் அனைத்தும் இவ்விடம் உண்டு.

**இங்ஙனம்,**
**தங்கம்மா அப்பாக்குட்டி.**

**கோகிலாவின் பூர்வீகம்...**

| | |
|---|---|
| தந்தையார் | - செ.சிவசுப்பிரமணியம் (அதிபர்) |
| தாயார் | - சுப்பிரமணியம் செல்லமுத்து |
| பாட்டன் | - செல்லையா (அச்சுக்கூடப் பணியாளர்) |
| பூட்டன் | - சின்னக்குட்டி |
| ஓட்டன் | - முத்தர் |
| சேயோன் | - வீரகத்தி |
| பரன் | - கார்த்திகேயர் |

கார்த்திகேயரின் தந்தை ஆழ்வார் வட்டுக்கோட்டையில் இருந்து வந்து பங்கிலிட்டியில் (விழிசிட்டியில் ஒரு காணிப்பெயர்) குடியேறினார்.

**மூத்த கவிஞரிடமிருந்து...**

**01.07.1994 இல் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபராகப் பதவி ஏற்றபோது கிடைத்த வாழ்த்து**

# அந்தக் காலம் தெரிகிறது

அறிவினைத் தேடும் ஆர்வம்
ஆராய்ச்சி முயற்சி ஊக்கம்
பெறுமதி மிக்க பேச்சை
எழுத்தினைப் பேணும் பண்பு
சுறுசுறுப்பாகச் சுற்றிச்
சுழன்று பல் பணி செய்தாலும்
சிறுமைகள் கண்டால் பொங்கிச்
சிலிர்த்தெழுதலும் நீ செய்வாய்.

எண்ணத்தில் உயர்வு பேச்சில்
இனிமை செய் பணியில் தூய்மை
உண்மை என்பன கைக் கொண்டே
ஓங்குக; உயர்க! உன்கை
வண்ணத்தில் எமது பிள்ளைச்
செல்வங்கள் வளர அந்த
விண்ணை இம் மண்ணிற் காண
வேண்டும்நீ - ஈதென் ஆசை!

பண்ணை, எழுத்தை, நாடகத்தைப்
பாலித்திடுமோர் அதிபரென்றும்
உண்ணும் உணவு, உடுக்கும் உடை
உறையுள் இழந்த மாணவர்கள்
எண்ணற்றோரைக் கை தூக்க
ஏற்ற பணிகள் மேற்கொள்ளும்
பெண் இக் கோகிலா வென்றும்
பேசக் கேட்க வேண்டுமம்மா!

ஞானம் படைத்தோர் கல்வியினை
நடத்தும் காலம் நமக்குற்ற
ஊனம் ஒழியும், தமிழரினம்
உயரும் பகை உட்பூசலெலாம்
போன வழியும் தெரியாமல்
போம்; நம் கலையும் பண்பாடும்
ஆன நிமிரும்; என் கண்ணுள்
அந்தக் காலம் தெரிகிறது!

**சோ.ப**
அதிபர், பலாலி ஆசிரிய பயிற்சிக்கல்லூரி, திருநெல்வேலி.

# மூத்த நாடகக் கலைஞரிடமிருந்து...

கலைப்பேரரசு ஏ.ரி.பி.நாடகவளர்ச்சி நிதியம்
குரும்பசிட்டி
21.04.99

பெருமதிப்புக்குரிய கோகிலா மகேந்திரன் அவர்கட்கு,

தங்கள் "வாழ்வு ஒரு வலைப் பந்தாட்டம்" நூலக்குச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தமை பற்றிய அறிவித்தல் படித்து மகிழ்ந்தோம். Congratulations! தொடரட்டும் எழுத்துப்பணி!

உடல்நலக் குறைவு, எழுதக் கஷ்டம், வடிவாக, உறுப்பமைய எழுத முடியவில்லை. தடிமன், இருமல், தலைச்சுற்று - உடன் சிறு சிறு கோளாறுகள்.

பெரிய வியாதி என்றில்லை. உற்சாகமாகத் தொழிற்பட முடியவில்லை. அவ்வளவுதான்.

15 தனி நடிப்புகள் 75% க்கு மேல் தரமாக நிற்கின்றன. நல்ல வெற்றி! தங்களுக்கும் மறைமுகப் பங்குண்டு என்பது தெரியும். முடியுமானால் ஒரு வாரத்தின் பின் சந்திப்பேன்.

அன்புடன்
**ஏ.ரி.பொன்னுத்துரை**

**எழுதப்பட்ட குறுநாவல்கள்:-**

| | | | |
|---|---|---|---|
| இருளில் ஓர் மின்மினி | - மித்திரன் | 16.03.80 - 30.03.80 | (இருவர் சேர்ந்து) |
| நிர்ப்பந்தங்கள் | - ஈழநாடு | 18.05.80 - 06.07.80 | (தனி) |
| திருப்பங்கள் | - மித்திரன் | 13.07.80 - 07.09.80 | |
| ஆத்மாவின் தாகங்கள் | - சுடர் | செப். 80 - பெப் 81 | |
| காலங்கள் காத்திருக்கும் | - மித்திரன் | 26.07.81 - 30.08.81 | (இருவர் சேர்ந்து) |
| சிதைவுகளில் ஓர் உதிப்பு | - ஈழநாடு | 12.08.84 முதல் | (பலர் சேர்ந்து) |
| வைகறை உணர்வுகள் | - முரசொலி | 12.04.87 முதல் | (தனி) |
| சந்தனச் சிதறல்கள் | - தொண்டன் | 88 - 89 ஒக்டோ | (தனி) |
| முதுகில் ஊரும் தம்பலப் பூச்சி | - புத்தெழில் | 89 →முடியவில்லை | (தனி) |

(இவற்றில் நிர்ப்பந்தங்கள், வைகறை உணர்வுகள், சந்தனச் சிதறல்கள் ஆகியவை 2018 இல் வெளியான நாவலில் இணைந்துள்ளன.)

## From the Association for Health and Counseling "Shanthiham"

Mrs. Kohila Mahendran
Hospital View, Inuvil.

Dear Madam,

### Promotion to SLEAS

The Association feels happy to felicitate you on the occasion of your promotion to SLEAS and your appointment to the esteemed position of Zonal Deputy Director of Education.

We are indeed proud of your achievement and of the fervent hope that your charming manners, uniform courtesy and sweetness of temperament will win educational encomium in future.

*We wish you well.*

*Yours sincerely,*

**C.S.Nachiinarkinian** - President. April 1999

* * *

**கோகிலா மகேந்திரன் நாடகம் – நடிப்பு மட்டும்**

- ஐயை - (ஐயை பாத்திரம், மகாஜனா, சின்னையா இல்லம் -1966)
- அம்பையின் வஞ்சினம் - (தோழி பாத்திரம், கலைக்கழக நாடகப் போட்டியில் தேசிய மட்ட முதலிடம் பெற்ற நாடகம், மகாஜனா - 1967)
- கோமகளும் குருமகளும் - (குருமகள் பாத்திரம், கலைக்கழக நாடகப் போட்டியில் தேசிய மட்ட முதலிடம் பெற்ற நாடகம் - மகாஜனா - 1968)
- அபலைக்கா ஆறுதல் - (அபலையாக - பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்மன்றம் நடத்திய விடுதிகளுக்கிடையிலான போட்டியில் விஜயவர்த்தனா விடுதிக்காக - சிறந்த நடிகை விருது - 1973)
- காலனை வென்ற காலன் - (நாரதர் பாத்திரம், பலாலி ஆசிரியர் கலாசாலை இந்துமா மன்றம் - 1979)

# மகனின் (கலாநிதி. ம.பிரவீணன்) கடிதம் ஒன்று

அடிலெயிட், அவுஸ்திரேலியா.
19.04.2001

அன்பின் அம்மா, அப்பா அறிவது,
நலம் நாடுவதும் அஃதே.

உங்கள் கடிதங்கள் இரண்டு, மூன்று சென்ற வாரத்தில் கிடைத்தன. நான் சிட்னியிலிருந்து முந்தநாள் தான் திரும்பி வந்தேன். சிட்னியில் எட்டு நாள் நிற்க நேர்ந்தது. திரு. த.கலாமணி அவர்களிடம் கார் இல்லாத படியால் அதிகமாக வெளியில் போகவில்லை. கலாமணி அவர்களின் மக னுடன் Easter show மட்டும் போய்ப் பார்த்தேன். கலாமணி அவர்களும் தன் படிப்பு, ரியூசன் கொடுப்பது, பகுதிநேர வேலை என்று ஒரே பிசி.

கலா அன்ரியின் விலாசத்தை அடிலெயிட்டில் விட்டு விட்டுப் போய் விட்டேன். கலாமணி அவர்களின் வீட்டுக்கு மேல் பன்னாலை உடையார் வளவைச் சேர்ந்த யோகா இருக்கிறா. (தெரியுமா? மகாஜனாவில் படிக்கும் போது உங்களுடன் காரில் போவேன் என்று சொன்னா) அவ விடம்தான் கலா அன்ரியின் போன் நம்பர் வாங்கினேன். முதலில் போன் பண்ணிய போது அவவுக்கு வருத்தம் என்று சொல்லி மிஸ்டர் சிவராஜா தான் கதைத்தார். ஆயினும் மறுநாள் இருவரும் வீட்டுக்கு வந்தார்கள். புதுவருடத் தன்று ஒரு கோயிலுக்கும் மறுநாள் சிட்னி நகருக்கும் அவர்களுடன் போனேன். அவர்களின் பிள்ளைகளுக்கு அதிகம் தமிழ் வராது. மகள் இப்போது Master Degree முடித்திருக்கிறா. மகன் 10ம் வகுப்பில் படிக்கிறார். கலா உங்களுடன் படித்த காலங்களைப் பற்றிக் கூறினா. முன்பும் அவதானித்திருக்கிறேன் அந்த நேரம் மகாஜனாவில் படித்தவர்களுக்கெல்லாம் கோகிலாவைப் பற்றி ரொம்பப் பெரிய image இருக்கிறது. எப்படி? நேரம் இருந்தால் முருகபூபதி அவர்களுக்கும், கலா அன்ரிக்கும் கடிதம் போடுங்கள்.

இந்தியப் பாடகர் மோகன் வைத்திய நாதனின் (குன்னக்குடி வைத்தியநாதனின் மகன்?) இசை நிகழ்ச்சி ஒன்று புதுவருடத் தன்று சிட்னியில் நடந்தது. அங்கு போய் வரத்தான் wheezing ஏற்பட்டது. அதற்கு முதல் இரு நாட்கள் சளி இருந்தது. கவனிக்காமல் விட்டுவிட்டேன். கலாமணி அவர்களின் வீட்டாரும் கொஞ்சம் பதற்றப்பட்டு விட்டார்கள். அவர்களின் வீட்டிலும் எல்லாருக்கும் சளி இருந்ததால், அவர்கள் பாவித்த antibiotic ஐ நானும் பாவித்தேன். இங்கு வந்த பிறகு மருந்து எடுத்தேன். இங்கு puff தான் தருகிறார்கள். puff இனால் ஆபத்து இல்லையாம். wheezing நிற்கும்வரை 10 முறைகூட அடிக்கலாமாம். கை, கால் நடுங்கினாலும் ஒன்றும் நிகழாது என்று doctor சொன்னார். இங்கு ventolin tablets பாவிப்பதில்லை. வசதிப்பட்டால் உவ்விடம் வாங்கி அனுப்பவும். ஆயினும் இதைப்பற்றி நீங்கள் worry பண்ண வேண்டாம். கிட்டத்தட்ட 2, 3

கிழமைக்கு ஒரு முறைதான் puff பாவிக்க வேண்டி வரும். தலையிடியும் இப்போது வருவதில்லை.

ஆறு. திருமுருகன் அவர்களை New Year அன்று இசைநிகழ்ச்சியில் சந்தித்தேன். கூட்டம் முடிய நிற்கும்படி கூறினார். எனக்கு wheezing வந்தபடியால் நான் நிற்காமல் வந்துவிட்டேன். மிகுதி மறு கடிதத்தில்.

அன்புடன்
மகன்

* * *

**2015இன் பின் கிடைக்கப்பெற்ற கௌரவங்கள் விருதுகள்:-**

- 12.03.2016 - கொழும்பு தமிழ்ச்சங்க சர்வதேச மகளிர் தினவிழா - மாண்புறு மகளிர் கௌரவம், மூன்று பெண்களில் ஒருவர் (செல்வி திருச்சந்திரன், கௌரி பழனியப்பனுடன்)
- 09.03.2016 - வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் பெண்கள் தினவிழா - "எதிர்காலத்துக்கு வலுவான பெண்களை நிலைநிறுத்தல்" - பேச்சுக்கான விருது.
- 04.06.2016 - கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கம், கொட்டடி சனசமூக நிலையம் தந்த 'சமூக திலகம்' விருது - வழங்கியவர் பேராசிரியர் மா.வேதநாதன்.
- 08.09.2016 - சாகித்திய விருதுக்குத் தெரிவுசெய்யப்படும் 3 நூல்களில் ஒன்று நேர் கொண்ட பாவை.
- 10.09.2016 - இரா உதயணன் இலக்கிய விருது - தமிழ் வளர்ச்சி நூல் - "நேர்கொண்ட பாவை"
- 11.03.2017 - வட இலங்கைச் சங்கீத சபை - "கலைப்பிரவாகம்" விருது.
- 11.11.2017 - ரூபராணி ஜோசப் நினைவு விருது - மக்கள் கலை இலக்கிய மன்றமும் ஷெரின் அழகுக் கலை நிலையமும் வழங்கியது - கண்டி இந்துகலாசார மண்டபம். வழங்கியவர் - மத்திய கல்வி அமைச்சர் கௌரவ இராதாகிருஷ்ணன்.
- 24.06.2018 - 'நீதியரசர் பேசுகிறார்' - முதலமைச்சர் நூல் வெளியீடு - சிறப்பு விருந்தினர் உரைக்கான விருது.
- 21.07.2018 - மகாஜனா பழைய மாணவர் - 1989 O/L - ஆசிரியர் கௌரவம்.
- 22.07.2018 - மகாஜனா பழைய மாணவர் - 1987 O/L - ஆசிரியர் கௌரவம்.
- 11.09.2018 - சாகித்திய விருதுக்குத் தெரிவுசெய்யப்பட்ட 3 நூல்களில் ஒன்று - திருமனிதர் வாழ்வு.
- 27.02.2019 - IBC தமிழ் நிறுவனம் - "பன்முக ஆளுமையாளர்" விருது.
- 08.03.2019 - வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் கௌரவம் - வீரசிங்கம் மண்டபம்.
  Inspirational women's award.
- 27.07.2019 - மகாஜனா பழைய மாணவர் தாய்ச்சங்கம் - 'மகாஜனா விழுது' கௌரவம்.
- 22.07.2019 } மகாஜனா பழைய மாணவர் -1985 O/L - ஆசிரியர் கௌரவம்.
- 28.07.2019 } மகாஜனா பழைய மாணவர் - 1986 O/L, 1991 O/L, 1992 O/L ஆசிரியர் கௌரவம்
- 28.10.2019 - வடமராட்சி கல்வி வலயம் - உலக உளநல நாள் - உளவளத் துணையாளர் பயிற்றுநர் விருது.
- 07-01-2020 - தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானம் - கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்தநாள் வைபவம் - சிவத்தமிழ் விருது.

P.O. Box 317,Brunswick,
Victoria - 3056, Australia.
27.11.1989

# புலம்பெயர்ந்த சகோதர எழுத்தாளரிடமிருந்து...

அன்புள்ள சகோதரி கோகிலா அறிவது,

நலம் நாடுவதும் அதுவே. அவ்விடம் தங்கள் துணைவர் அருமைச் செல்வன், அன்புப் பெற்றோர் உட்பட அனைவரும் நலம்தானே?

தங்களின் 12.12.89 ஆம் திகதிய கடிதம் வசந்தாவின் வவுச்சர் யாவும் கிடைத்தன. நன்றி. மகிழ்ச்சி. இக்கண்டத்தில் தனித்து வாழும் எனக்கு - தங்களைப் போன்ற நல்ல இதயங்களின் பாராட்டுக் கடிதங்கள் - என் பணிகளை ஊக்கப்படுத்தும் உயிர்ச் சத்துக்கள் என நினைக்கிறேன்.

குடும்பப் பிணைப்புகளை விரும்பி, அப்படியே வாழ்ந்து பழக்கப்பட்டுவிட்ட என்னை இந்த home sickness அதிகம் வாட்டுகிறது. அதனைத் தவிர்க்கவே இங்கு நான் மேற்கொள்ளும் சமுதாயப்பணிகள். காரணம் இன்றிக் காரியம் இல்லைத்தானே. எனவே இப்பணிகள் குறித்துப் பெரிதுபடுத்த ஏதும் இல்லை.

வறுமையையும், அதனால் கல்விக்கு ஏற்படும் குந்தகத்தையும் சிறிய வயதில் அநுபவித்தவன் என்ற அடிப்படையில் இந்தக் கண்டத்துக்கு வந்த பின்பு இப்படியொரு புலமைப்பரிசில் திட்டத்தை உருவாக்க யோசித்தேன். உங்களைப் போன்ற பல நல்லவர்களின் ஆசீர்வாதம்தான் என்னை இது விடயத்தில் உற்சாகமுடன் செயற்படத் தூண்டுகிறது என எப்போதும் நம்புகிறேன். நீங்கள் அனுப்பிய இரண்டாவது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு உதவத் தீர்மானித்துள்ளோம். 1989 நிதியாண்டுக் கொடுப்பனவுகள் முடிந்துவிட்டன. 1990 ஜனவரி முதல் மீண்டும் உதவிகள் அனுப்பும்போது தங்களது இரண்டாவது மாணவருக்கும் உதவி அனுப்புவோம். டிசம்பர் 10ஆம் திகதி இங்கு இது தொடர்பான ஆண்டுப் பொதுக்கூட்டம் நடை பெறவுள்ளது. இது தொடர்பாக நாம் வெளியிடவுள்ள வருடாந்த அறிக்கை தற் சமயம் அச்சுக்குப் போயுள்ளது. வெளியானதும் தங்களுக்கும் பிரதி அனுப்புவேன்.

இது தொடர்பாகத் தங்களின் உதவியும் தேவைப்படுகிறது. தங்களின் கண் காணிப்பில் இருக்கும் எமது உதவி பெறும் மாணவர்களுக்கும் தங்கள் தெல்லிப்பழை ஊருக்குக் கிட்டவாகவுள்ள சில அருகாமை ஊர்களில் வசித்து எம்மிடம் உதவி பெறும் மேலும் சில மாணவர்களுக்கும் மொத்தமாகப் பணம் (3 மாதங்களுக்கு ஒரு தடவை) தங்கள் பெயருக்கு அனுப்பி வைத்தால் தங்களால் அவற்றை உரியவர்களிடம் பகிர்ந்து அளிக்க முடியுமா? இவ்விதம் தங்கள் பொறுப்பில் 5 மாணவர்களை ஒப்படைக்க விரும்புகிறோம். இதே விதமாகத்தான் கிளிநொச்சி மாவட்டத்திலும் வடமராட்சிப் பகுதியிலும் திரிகோணமலையிலும் செய்கிறோம். இது தொடர்பான தங்களின் கருத்தை அறிய விரும்புகிறோம்.

தாங்கள் இதற்குச் சம்மதமாயின்...

தங்களின் பெயரில் வங்கி A/c இருப்பின் விபரங்களை - பெயர் - வங்கி - A/c இல. - வங்கிப் பெயர் - கிளை முதலிய விபரங்களை ஆங்கிலத்தில் எனக்குத் தெளிவாக எழுதினால் தங்களுக்கே நேரடியாக நிதி உதவியை அனுப்பி வைத்துப் பகிர்ந்து கொடுக்கச் சொல்லமுடியும்.

மாணவர் கண்காணிப்பு - பராமரிப்புப் பணிகளை 1990 ஜனவரியின் பின்பு ஒருங்கிணைக்க இது பெரிதும் உதவும்.

தற்போது அங்குள்ள சூழ்நிலைகளினால், இது விடயத்தில் வெகுஜன அமைப்புகளுடன் தொடர்புகொள்ள நாம் விரும்பவில்லை. அனுப்பும் தொகை சொற்பமாகவும் மாணவர் நலனுக்காகவும் இருப்பதனால் இது விடயத்தில் தங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது என நம்புகிறோம். இது சம்பந்தமாகத் தங்கள் கணவருடன் கதைத்து ஆலோசித்து எனக்கு விபரமான பதில் தரவும்.

இன்று மல்லிகைக்கு “தலைமுறைகள்” என்ற சுவாரஸ்யமான கட்டுரை ஒன்று அனுப்பினேன். தாங்கள் வெள்ளிவிழா மலருக்கு என்ன எழுதினீர்கள்?

எனது சோவியத் பயணக்கதை “சமதர்மபூங்காவில்” விரைவில் வெளியாகும். தங்களுக்கும் பிரதி கிடைக்க ஒழுங்கு செய்வேன். ஏனைய புத்தக எழுத்து வேலைகளை டிசம்பரில் வரும் கோடை விடுமுறையில் கவனிப்பேன். கோடை விடுமுறை 32 நாட்கள் - பொழுதைப் பயனுள்ள முறையில் பயன்படுத்துவேன்.

தங்களின் “தூவானம் கவனம்” விமர்சனம் அண்மையில் படித்தேன். எதில் என்று ஞாபகம் இல்லை. பிரதியை - ஜீவாமூலம் - நண்பர் ராஜஸ்ரீ காந்தனுக்குச் சேர்ப்பித்தால் எனக்குக் கிடைக்கும். படிக்க ஆவலுடன் இருக்கிறேன்.

“சமாந்தரங்கள்” பிரதி இன்று அனுப்பலாம் என எண்ணியிருந்தேன். அதற்கிடையில் தங்களுக்கு ஜீவா மூலம் பிரதி கிடைத்தது மகிழ்ச்சியைத் தந்தது. தங்கள் கருத்துக்கள் என்ன? எழுதுங்கள்.

ஆகஸ்ட் மல்லிகையில் தங்களின் சிறுகதை படித்தேன். இரவல் புத்தகம் வாங்குவோருக்கு நல்ல “அடி”. எனக்குப் பிடித்தமான கதை. தொடர்ந்து எழுதுங்கள். அதன் மூலம் ஈழத்து இலக்கியத்திற்கு வளமூட்டுங்கள். என் வாழ்த்துக்கள் என்றும் உண்டு. “கொம்புகள்” வைத்து எழுதுவோர் பற்றித் தயவுசெய்து அலட்டிக் கொள்ளா தீர்கள்.

தி.ஜானகிராமன், கி.இராஜநாராயணன், மௌனி, லா.ச.ரா போன்றோர் எப்படி அலட்டிக் கொள்ளாமல் வாழ்ந்தார்களோ அப்படியே நானும் இப்போது அலட்டிக் கொள்வதில்லை.

கள்ளுக்கடையும் தவறணையும் உள்ள ஊரில் தான் கோயில் இருக்கும். பன்றி இறைச்சிக் கடை உள்ள ஊரில் பள்ளிவாசல் இருக்கலாம். விபசார விடுதி கள் உள்ள ஊரில் அநாதை இல்லங்களும் இருக்கலாம். அரிசியில் நெல்லும் கல்லும் இருக்கும். அரிசிதானே எமக்கு முக்கியம். - கல்லை ஒதுக்குவோம். அரிசியில் கல் இருக்கிறதே என நாம் கத்தினால் அரிசிக் கடைக்காரன் கல் இல்லாத அரிசிக்கு எங்கே போவான்?

புரட்சி - முற்போக்கு - தீவிரவாதம் இவற்றில் எனக்கு ஒருகாலத்தில் நம்பிக்கை இருந்தது. இன்று அவை யெல்லாம் வெற்றுக் கோஷங்களாகப் படுகிறது.

கீழைத்தேய நாடுகளில் நடக்கும் பாராளுமன்றத் தேர்தல்களையும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் நடக்கும் தேர்தல்களையும் பார்த்தவன் நான். இங்கு ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் நடந்தது. தொலைபேசி - மின்சாரத்தைத் தவிர - அனைத்தும் ஸ்தம்பிதம். கார்கள் மட்டும் தெருவில் ஓடின. முழு விக்டோரியாவும் ஸ்தம்பிதம் அடைந்தது. ஆனால் எந்த அசம்பாவிதமும் இல்லை. வேலை நிறுத்தம் நடந்த உணர்வே தென்படவில்லை.

இங்கு தேர்தல்கள் நடக்கும். T.V மூலம்தான் அது நடக்கிற செய்தி அறிவோம். மற்றும்படி அவரவர் அவரவர் வேலையுடன் பொழுது போய்விடும். அரசியல் வாதிகளைப் பற்றி இங்கு யாருக்கும் கவலை இல்லை. அதேசமயம் இலங்கை - இந்தியத் தேர்தல்களில் பலியாகிப் போனோர்

களையும், பெருகிய அநாதைகள் விதவை களின் எண்ணிக்கை யையும் பார்த்துக் கண் கலங்கியிருக்கிறேன். எனது முடிவும் தீர்ப்பும் இதுதான்.

மனிதனின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டால், தம்மை மக்கள் மறந்து விடுவார்கள் என்ற சுயநல பயத் தினால்தான் அரசியல் கட்சிகள் மோது கின்றன. நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால் இதன் தாற்பரியம் புரியும்.

எனவே - மக்களைச் சிந்திக்க வைக்கும் - விழிப்புணர்வு பெற வைக்கும் - பணிகளை மனிதாபிமான அடிப்படையில் - எமது எழுத்தின் மூலம் மேற்கொள்வோம். இப் பணியில் "கொம்புகள்', "குருவிச்சைகள்" பெருகலாம். தவிர்க்க முடியாது. அதுதான் சமுதாயம். ஆனால், எதற்கும் காலம் பதில் சொல்லும். அந்தக் காலம் - எம் எழுத்தை - பணியைத் தீர்மானிக்கட்டும்.

தொடர்ந்து எழுதுங்கள். நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் அனைத்து நலன் களும் பெற வாழ்த்தி விடைபெறும்.

அன்புச் சகோதரன்,
முருகபூபதி.

* * *

**கோகிலா மகேந்திரன் எழுதிய சிறுகதைகள்:-**

| | | | |
|---|---|---|---|
| 01. | அன்பிற்கு முன்னால் | - குயில் | நவம்பர் 1972 |
| 02. | நாள்தோறும் அற்புதம் | - குயில் | டிசம்பர் 1972 |
| 03. | அவள் உயர்ந்துவிட்டாள் | - வானொலி | 22.08.1974 |
| 04. | துன்பங்கள் சாவதில்லை | - சங்கமம் | செப். 1974 (மகாஜனாக் கல்லூரி) |
| 05. | இதுவும் சிரிப்புத்தான் | - மலைக்குருவி | 1975 (கையெழுத்துச் சஞ்சிகை) |
| 06. | அவன் ஏன் வாழ்கிறான் | - சங்கமம் | பெப். 1975 |
| 07. | ஏன் காதலித்தாய்? | | 1975 |
| 08. | தியாகி யார்? | - வானொலி | 1976 |
| 09. | உன்னத தரிசனம் | - வானொலி | 25.05.1976 |
| 10. | தண்டனை அது எனக்கு வேண்டியதுதான் | - வானொலி | 28.06.1976 இளவேனில் |
| 11. | ஒலிக்காத ஓலம் | - ஈழநாடு | 31.12.1978 |
| 12. | ஓர் ஏக்கம் மடிகிறது | - ஈழநாடு | 04.02.1979 |
| 13. | தலைமுறைகள் முரண்படும்போது | - ஈழநாடு | 15.04.1979 |
| 14. | மனித சொரூபங்கள் | - சுடர் | வைகாசி 1979 |
| 15. | மனத்திருப்பம் | - மல்லிகை | யூலை 1979 |
| 16. | கலைகின்ற வேஷங்கள் | - சுடர் | ஆகஸ்ட் 1979 |
| 17. | பலியாடுகள் | - ஈழநாடு | 08.09.1979 |

282, பிரதான வீதி,
கெகிராவை.
26.12.1989

# சக எழுத்தாளரின் கடிதம் ஒன்று

அன்புடன் கோகிலா மகேந்திரன் அவர்களுக்கு,

வந்தனங்கள்.

என்னை யாரென்று உங்களுக்குத் தெரியாதிருக்கும். ஆனால் எனக்கு உங்களை நன்கு தெரியும்.

இலங்கையில் முன்னிலைப் பெண் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்க திறமையாளர் என்று உங்களைப் பற்றி ஒரு பொதுவான அபிப்பிராயம் இலக்கியம் தெரிந்தவரிடையே உண்டு. அதுவே என்னுடையதும்! உங்களுடைய 'துயிலும் ஒரு நாள் கலையும்', 'தூவானம் கவனம்' போன்ற எந்தவொரு நாவலையுமே நான் வாசித்தவளல்ல. அவை பற்றிப் பரவலாக எழுந்த கருத்துக்களையும் விமர்சனங்களையும் மட்டுமே செவியுற்றிருக்கிறேன். படித்திருக்கிறேன்.

அவற்றைப் படிக்க ஆவலுண்டு. கிடைக்கவில்லை. கிடைத்தால் மகிழ்வேன். கலைப் பூங்காவில் நீங்கள் அளித்த பேட்டியும் மல்லிகையில் இடம்பெறும் உங்கள் கதை, கட்டுரைகளும் என் பிரியத்துக்குரியவை. பெண்ணின் - அதுவும் வேலைக்குப் போகும் பெண் ஒருத்தியின் பிரச்சினைகளை மையப்படுத்தி நீங்கள் அடுத்து எழுதப்போகும் நாவலுக்கு முன் கூட்டியே என் வாழ்த்துக்கள். அது தரமாக அமையுமென்பதில் ஐயமில்லை.

உங்களைப் பற்றி மல்லிகை ஜீவா நிறைய நிறையச் சொன்னார். உங்கள் கணவரின் இலக்கிய ஒத்துழைப்புப் பற்றியும் கூடச் சொன்னார். பிரமித்துப் போனேன். உங்களுக்கு எழுதச் சொன்னார். உங்களிடம் என்னை அறிமுகப் படுத்துவதாகச் சொன்னார். என்னைப் பற்றி நானே சொல்வதற்கு ஒன்றுமில்லை. சென்ற ஆகஸ்ட், ஒக்டோபர், நவம்பர் மல்லிகை இதழ்களில் எனது ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

T.V ஊர்கோலத்தில் உங்கள் photo வைக் கண்டுவிட்டு, ஒருநாள் இரவு முழுக்க உங்களையே கனவில் கண்டு கொண்டிருந்தேன். நீங்களும் உங்கள் கணவரும், திரு ஜீவாவும் நம் வீடு வந்திருப்பதாக... இன்னும் நிறைய உண்டு. உங்கள் நட்பு மடல்கண்டு தொடர்வேன். நட்பை நாடும்,

- ஸஹானா

* * *

**எழுதப்பட்ட சித்திரம்**

பாரதி மீண்டும் வருகிறான்- தாரகை செப். 82

திருமதி. யோகா பாலச்சந்திரன்,
111/1, W.A.Silwa Mawatha,
Colombo - 6
13.09.86

# மற்றொரு பெண் எழுத்தாளரிடமிருந்து...

அன்புச் சகோதரி கோகிலா,

நலம். நாடுவதும் அதுவே.

அடிக்கடி தங்கள் இலக்கிய முயற்சிகள் பற்றிக் கேள்விப்படுகிறேன். அவற்றைப் பெறும் வாய்ப்புத்தான் இல்லை. இன்றைய சூழலில் தொடர்ந்தும் அயராது இயங்கும் தங்களது முயற்சி நீடு வெல்க. நிற்க.

ரூபவாஹினியில் தங்களைப் பேட்டி காண விரும்புகிறேன். கொழும்பு வரக்கூடிய சந்தர்ப்பம் எழும்போது இரண்டு வாரங்களுக்கு முன்பாக எனக்கு அறிவித்து விட்டு வரவும்.

சகோதரி குறமகள் எப்படி இருக்கிறார்? என் கடிதங்களுக்கும் பதிலில்லை. சந்தித்தால் நான் கேட்டதாகச் சொல்லவும்.

தங்களின் சமீபத்திய நூல்களைப் படிக்கக் கொள்ளை ஆசைதான். என்ன செய்யலாம்? இன்னும் எவ்வளவு காலத்துக்கு இந்த “நித்திய கண்டம் பூரண ஆயுசு” என்ற நிலை நீடிக்கப் போகிறதோ அறியேன். நல்லதோ கெட்டதோ சகலதுக்கும் ஒரு தொடக்கம் இருப்பது போல ஒரு முடிவும் இருக்க வேண்டும் தானே! எமது சமூகத்தின் அவலமும் தீரும் காலம் முகிழ்ந்து வருவதாய் என் மனம் சொல்கிறது. அதுவரை பொறுத்திருப்போம். சமாதான யுகம் மலரும்போது உங்களைப் போன்ற சத்தியபூர்வமான, நேர்மையான, மக்களை நேசிக்கும் இலக்கியகாரர்களின் பணி கணிப்பும் மெருகும் பெறும். மன மார்ந்த வாழ்த்துக்கள்.

**இப்படிக்கு,**
**அன்புச்சகோதரி,**
**யோகா.**

* * *

**கோகிலா மகேந்திரன் எழுதிய சிறுகதைகள்:-**

| | | | |
|---|---|---|---|
| 18. | பொருத்தங்கள் | - மல்லிகை | ஒக். 1979 |
| 19. | ஓர் உறுத்தல் வருடப்படுகிறது | - எழில் | 1979 (பலாலி ஆசிரியர் கலாசாலை) |
| 20. | எல்லைகள் | - மல்லிகை | மார்ச் 1980 |
| 21. | ஒரு நெருடலும் ஓர் அசைவும் | - ஈழநாடு | 13.04.1980 |
| 22. | நம்பிக்கைகள் | - மல்லிகை | மே, யூன் 1980 |
| 23. | குரூர ரசனைகள் | - சுடர் | யூன் 1980 |
| 24. | சுவர்கள் சரியக்கூடாது | - மித்திரன் | 10.08.1980 |

# கலை இலக்கியக் களத்தில் விருது பெற்ற ஊடகவியலாளர் ஒருவரிடமிருந்து

கலாபூஷணம்
திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள்.
கோண்டாவில்.

வணக்கத்துடன் வரைவது,

தமிழ்ச் சமூகத்திற்குப் பெரும் பணிகள் ஆற்றியுள்ள பெருமதிப்புக்குரிய மூன்று பிர முகர்களுடன் என்னையும் - ஒரு பத்திரி கையாளனாகிய என்னையும் அழைத்துத் தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களத் தின் நூறாவது இலக்கிய விழாவில் பொன் னாடை போர்த்தி, மாலை அணிவித்து, விருதுக் கேடயமும் வழங்கி, பேராசிரியர் சண்முகலிங்கன் அவர்களைக் கொண்டு பாராட்டுரையும் நிகழ்த்துவித்தமைக்கு நான் பெரிதும் நன்றியுடையவனாய் இருக் கின்றேன். இதில் தங்களின் பங்கே அதிகம் என்பதை அறிவேன். அந்த வகையில் களத்தின் தலைவர் கலாபூஷணம், சைவப் புலவர் சு. செல்லத்துரை அவர்களுக்கும் அமைப்பின் ஏனைய கௌரவ உறுப்பினர் களுக்கும் என் வணக்கமும் நன்றியும் உரித்தாகுக.

அன்புடன்
**எஸ்.பெருமாள்**
28.01.2019

* * *

**கோகிலா மகேந்திரன் எழுதிய சிறுகதைகள்:-**

25. ஒரு பிணத்தின் தரிசனம் - ஈழத்துச் சிறுகதை மஞ்சரி ஆகஸ்ட் 80 (நீர்ப்பாசனத் திணைக்களம் நடாத்திய போட்டிப் பரிசு)
26. முரண்பாடுகளின் அறுவடை - சுடர் பரிசுக்கதை டிச. 80
27. நிமிரும் ஊனங்கள் - ஈழநாடு 08.02.81
28. ஓர் உள்ளம் பேசுகிறது - ஈழநாடு 15.03.81
29. தரிசனங்கள் - 1981 நீர்ப்பாசனத் திணைக்களப் போட்டிப் பரிசு
30. அர்த்தமற்ற ஒரு வாழ்வு அர்த்தமுள்ளதாகிறது - யாழ் பிறை 81
31. நாளைய உலகின் நாயகர்கள் - இ.த.ஆ. சங்கப் போட்டிப் பரிசு - 17.02.82
32. பூக்கள் நிறம் மாறுகின்றன - இரசிகமணி நினைவுப் போட்டிப் பரிசு - நவ. 83
33. வதை - நீர்ப்பாசனத் திணைக்களப் போட்டிப் பரிசு - 82
34. அர்ச்சிக்கப்படாத விக்கிரகங்கள் - வானொலி - 05.01.83
35. உள்ளத்தால் அடிமைகள் - வானொலி -02.02.83
36. பரம்பரை இடைவெளிகள் - மேகம் - ஜன.- பெப். 83

# ஆசிரியர் ஒருவரின் நன்றிக் கடிதம்

கனம்
திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

அம்மணி,

கற்பித்தல் என்பது புனிதமான ஒரு பணியாகும். இதற்கு ஈடாக எந்தவொரு பணியும் அமையாது என்பதே எனது தாழ்மையான கருத்தாகும். ஆசிரியர் தொழில் எனக்குக் கிடைத்தமை ஒரு வரப்பிரசாதமாகவே கருதுகிறேன்.

தாங்கள் எனது சேவையைக் கௌரவித்து அன்பளிப்பு வழங்கியமை, நான் எனது கடமையைத் திருப்திகரமாகச் செய்து வருகின்றேன் என்ற ஒரு மனநிறைவையும் மகிழ்ச்சியையும் தருவதோடு எனக்கு எனது தொழிலில் பற்றையும் உத்வேகத்தையும் தந்துள்ளது. தங்களைப் போன்ற சான்றோர்களின் நல்லாசியும் வாழ்த்தும் எங்களை என்றும் வழி நடத்தும்.

தயவு செய்து எனது பணிவான நன்றியை ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஸ்ரீ கணேச வித்தியாலயம்,
சித்தன்கேணி. 07-10-1999

இப்படிக்கு
க.விமலாதேவி

* * *

**கோகிலா மகேந்திரன் எழுதிய சிறுகதைகள்:-**

37. முரண்பாடுகள் - வானொலி - 07.05.83
38. ஒரு சோகம் இறுகும்போது - மல்லிகை - நவ. 83
39. ஒரு புதிய பகல் விடிகிறது - ஈழநாடு - 27.11.83
40. மனிதர்கள் - வானொலி - 31.12.83
41. அந்தரங்கம் நினைவுகளில் - வீரகேசரி - 01.01.84
42. ஓர் இருள் விலகுகிறது - வானொலி - 18.02.84
43. பரிகாரம் தேடும் பரிதாபங்கள் - தாரகை சிறுகதைப் போட்டிப்பரிசு - பெப். 84
44. சடப்பொருள் என்று நினைத்தாயோ?
    1. மல்லிகை - யூன் 84
    2. பெண்ணின் குரல் - மறுபிரசுரம் - 84
    3. செங்கதிர் - மறுபிரசுரம் - மார்ச் 2009
    4. உதயம் - மறுபிரசுரம் - 30.08.2009
    5. புதுவிதி - மறுபிரசுரம் 07-07-2018

# From the Teacher Counsellors...

Simple was your arrival
Sweet your instruction.
You gave us strength
Through since attending

Spotless is your heart
Boundless your love
Maliceless your mind
Your eyes the limit of your compassion

Calling for colours
You grouped us
Offered us a "mantra"
To change our outlook

You tempered
Our wounded minds
Cheered us up
And urged us to activity

Saw you as mother
Admired your intellect
We realize
There is a lot to learn for

**During NET by Vivo team,**
2003 - 2008

*_*_*

**கோகிலா மகேந்திரன் எழுதிய சிறுகதைகள்:-**

45. ஒரு மேடையில் இது துருவங்கள் - தொண்டன் - ஆவணி 84
46. மனிதாபிமானம் மறு பரிசீலனைக்கு- ஈழமுரசு - 19.08.84
47. உழத் தெரிந்த மாடுகள் - களம் - ஒக். 84
48. உதயத்துக்கு முன் - ஈழமுரசு - 20.10.84
49. மறுமலர்ச்சி - வீரகேசரி - 26.05.85 (இருவர் எழுதியது)
50. கிழிந்து போன வாழ்க்கைகள் - மல்லிகை - யூன் 85
51. நாளைய ஓட்டைகள் - ஈழநாடு - 14.07.85
52. சாம்பல் படர்ந்த தணல் - தொண்டன் - யூலை 85
53. பட்டங்கள் மீண்டும் பறக்கும் - நீர்ப்பாசனத் திணைக்களப் பரிசு - ஆகஸ்ட் 85
54. பிறழும் நெறிகள் - வீரகேசரி - 15.09.85
    - மறுபிரசுரம் - காங்கேயன் கல்விமலர் - 1985

# CBT கற்கை நெறியில் படித்த ஒரு மாணவரின் பின்னூட்டல்...

வாழ்வின் சில பகுதிகளைச் சரியாக வாழக் கற்றுத்தந்த ஆசான் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

வாழ்வின் ஏனைய பகுதிகளையும் செம்மையாக வாழக் கற்றுத் தருமாறு வேண்டி நிற்கிறேன்.

அறிகை நடத்தைச் சிகிச்சையைக் கடந்த ஆறு மாதகாலமாகக் கற்றதனால் பாடப் பரப்பைத் தாண்டி என் வாழ்வில் பல நல்ல மாற்றங்கள் ஏற்பட வழி வகுத் துள்ளது. எனது சுயத்தில் அது நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. நான் வாழ்வில் எங்கும் அதிகளவு கோபத்தை வெளிப் படுத்துபவனாக இருந்து வந்தேன். இங்கு கற்பிக்கும்போது கோபத்தினால் ஏற்படும் நன்மை தீமைகளைத் தெளிவுபடுத்தினார். அதற்குப் பல உதாரணங்களையும் எடுத்துக் காட்டுக் களையும் எடுத்துக் கூறினார். இதனால் இப்போது நான் எனது கோபத்தை நிதானித்தே வெளிப்படுத்துகிறேன்.

தற்போது கோபம் வரும்போதெல்லாம் ஆசிரியரால் கற்றுத்தரப்பட்ட

“செல்லா இடத்துச் சினம் தீது செல்லிடத்தும்
இல்லதனின் தீய பிற”

என்ற திருக்குறளை மனதில் கொண்டே வெளிப்படுத்துகிறேன்.

மேலும் இந்தக் கற்கை நெறி ஏற்கெனவே நான் எனக்கென வகுத்து வைத்திருந்த நெறிமுறைகளை ஆழப்படுத்தவும் அவற்றைத் தொடர்ந்து நடைமுறையில் வைத்திருக்கவும் என்னைத் தூண்டியுள்ளது. சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்க நெறிமுறைகளை மற்றவர்கள் கடைப் பிடிக் கவில்லை என்பதற்காக நாம் அவற்றில் இருந்து விலகக்கூடாது. எமக்குச் சரி என்று தென்பட்டால் அதனை நாம் கடைப் பிடிப்பதில் தவறில்லை. முடிந்தளவு கடைப் பிடிக்கத்தான் வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இங்கு பெற்ற கருத்துக்களை மற்றவர்களுக்குப் பகிர்ந்ததன் மூலம் அவர் களிடம் பல நல்ல மாற்றங்களை ஏற்படுத்த முடிந்துள்ளது.

அரச அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒருவர் அங்கு தனக்கு இடம் பெறும் பிரச்சினைகள் பற்றி என்னிடம் பகிர்ந்து கொண்டபோது அவருக்கு நாங்கள் படித்த “மூக்குத்திப் பூண்டு” கதையைக் கூறித் தெளிவு படுத்தியதன் மூலம் அவரில் நல்ல மாற்றத்தைக் காணமுடிந்துள்ளது.

வீட்டில் அதிக தடவைகள் கெட்ட சொற்களைப் பயன்படுத்தி வந்த ஒருவருக்கு, “கெட்ட சொற்கள் பாவிப்பதால் உங்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் எவை? தீமைகள் எவை?” என்று கேட்டுத் தற்போது

அவர் என் முன்னால் கெட்ட வார்த்தைகள் பாவிப்பதை நிறுத்தியுள்ளார்.

இந்த வகுப்பில் கற்றதன் மூலம் பல புதிய கற்பித்தல் முறைகளைக் கற்றுக் கொண்டதுடன், என்னில் பல மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன.

திருக்குறளை எழுதி அதற்குப் பொருள் கூறி வகுப்பை ஆரம்பிக்கும் செயற் பாடானது, திருக்குறள் மீது எனக்குக் கவர்ச்சியை ஏற்படுத்தித் திருக்குறள் புத்தகத்தை வாங்கி ஏனைய குறள்களை யும் வாசிக்கத் தூண்டியதுடன் முடிந்தளவு குறளின் வழி வாழவேண்டும் என்ற எண் ணத்தையும் மனதில் ஏற்படுத்தி உள்ளது. கற்ற குறள்கள் மனப்பாடத்தில் நிற் கின்றன.

பாராட்டுதல், மற்றும் பரிசுகள் வழங்கும் செயற்பாடுகளில் தெரிந்தவர், தெரியாதவர் என்ற வேறுபாடு பால்நிலை வேறுபாடு என்ற எந்த வேறுபாடுகளும் இன்றிப் பாராட்ட வேண்டிய விடயங்களை உடனுக்குடன் பாராட்டும் தன்மையும் பரிசுகள் வழங்கும் போது அதற்கான காரணங்களைக் கூறி வழங்கும் முறையும் இன்னும் புதிய பாராட் டக்கூடிய நல்ல விடயங்களைச் செய்யத் தூண்டுகிறது.

இதே போலப் பிழைகளைச் சுட்டிக் காட்டும் போதும் எந்தவிதப் பாரபட்சமும் இன்றி, பிழை செய்தால் அவர் யாராக இருந்தாலும் ஒரே முறையிலேயே சுட்டிக் காட்டித் திருத்தும் முறை, பிழை செய்தவர் களை அவர்கள் செய்த பிழையை ஏற்றுக் கொள்ளும் எண்ணத்தை வளர்க்கிறது.

சிறிய செயற்பாடாக இருந்தாலும் சரி, பெரிய செயற்பாடாக இருந்தாலும் சரி நுணுக்கமாக அவதானிக்கும் தன்மை திருமதி கோகிலா மகேந்திரனிடம் உண்டு. அனைத்து நேரங்களிலும் அனைத்துச் செயற்பாடுகளிலும் அவதானமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை அது வளர்த் துள்ளது.

இவர் பின்னூட்டல் வழங்கும் முறை தனித்துவமானது. பரீட்சைகள் முடிந்தவுடன் ஒவ்வொருவரைப் பற்றியும் தனித்தனியாக அவரிடம் காணப்பட்ட நல்ல விடயம், மாற்றம் செய்யப்பட வேண்டிய விடயம், கைவிடப்பட வேண்டிய விடயம் எனப் பட்டியல்படுத்திக் கூறுவதன் மூலம் நாம் தொடர்ந்து மேல் நோக்கி நல்ல மாற்றங் களுடன் செல்ல வழி வகுக்கிறது.

கோகிலா மகேந்திரன் மனிதர்களுக்குக் கற்பிக்கவில்லை. மனித மனங்களுக்குக் கற்பித்துள்ளார். ஏன் எனில் இங்கு பாடம் நடக்கும்போதோ அல்லது பரீட்சைகளின் போதோ கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் எதுவும் இருக்கவில்லை. தடி வைத்திருக்கவில்லை. ஆயினும் யாரும் வகுப்பில் தேவையற்றுக் கதைத்ததும் இல்லை. பரீட்சையின்போது பார்த்தெழுதும் எண்ணமும் இருந்ததில்லை. இது எப்படிச் சாத்தியமாகிறது?

மேலும் குறித்த நேரத்திற்குள் பாடத் தைத் தொடங்குதல் சிறந்த ஆயத்தப் படுத்தலை வெளிப்படுத்தும் தன்மைகள் ஆகியவை நம்மைப் பாடத்தைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவதுடன், பாடத்தை விளங்கப்படுத்தும் போது ஆசிரியரால் கூறப்படும் அநுபவக் கதைகள் பாடத்தைத் தெளிவாக விளங்கி மனதில் பதிய வைக்க வழி வகுத்தன.

குறித்த நேரத்திற்கு மேலும் கற்பிக்கும் அவரது தன்னல மற்ற சேவை புரிந்தாலும், குறித்த நேரத்திற்குத் தொடங்குவது போல் குறித்த நேரத்திற்கு முடித்தால் பூரண திருப்தியை இலகுவாகப் பெற முடியும்

என்று தோன்றுகிறது. வெளியில் வேறு வேலை இருந்தாலும் ஆசிரியரின் கருத்தை விட்டுவிட்டுப் போகவும் மனம் இன்றி இருந்து கேட்டுவிட்டுச் செல்வதால் பூரண திருப்தியுடன் செல்லாத நிலை சிலவேளை உருவாகி இருக்கிறது.

அத்துடன் குறித்த வகுப்பு நடைபெறும் நாளைத் தவிர்த்து, புதிய விடுமுறை நாட் களையும் வகுப்பிற்காக இணைக்கும்போது சில சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. அதிலும் மாற்றம் செய்தால் நன்றாக இருக்கும்.

இவரிடம் மீள மீளப் படிக்க வேண்டும் என்ற எண்ணமும், பாடசாலைக் கல்வி யினைக் கற்ற காலத்தில் இவர் எங்களுக்கு ஆசிரியராக இருந்திருக்கக் கூடாதா என்ற எண்ணமும் என் மனதில் ஏற்பட்டன. அதற் கான காரணங்களில் அவரது நேர்மை, உண்மைத் தன்மை, வெளிப்படைத்தன்மை, உண்மையைக் கூறும் முறை, பக்கச் சார்பற்ற தன்மை, கட்டுப்பாடு, முகாமைத் துவம், திட்டமிடல் ஆகியவை சில. இன்னும் பல விடயங்கள் உள்ளன.

ஆசிரியர் எமக்குக் கற்றுத்தந்த "உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்" என்ற குறளிற்கு ஏற்றாற் போலவே அவரது பிரிவு உள்ளது.

புத்தகங்களை வாசிப்பது தொடர்பாக அவர் கூறிய கதைகளும் புத்தகத்தை வாசிக்க அவர் தூண்டிய தன்மைகளும் (புத்தகங்களைப் பரிசாகத் தருதல், புத்த கத்தில் பரீட்சை வைத்தல்) போன்ற செயற் பாடுகள் வாசிப்பில் எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி எனது கிராம நூலகத்தில் அங்கத்தவராக இணைந்து நூல்களை எடுத்து வாசிக்க வழி ஏற்படுத்தி உள்ளது.

**பா.சிவதர்சன்**
ஆகஸ்ட் 2019

* * *

**கோகிலா மகேந்திரன் எழுதிய சிறுகதைகள்:-**

| | | |
|---|---|---|
| 55. | யுகோதயம் - வீரகேசரி | - 17.11.85 (இருவர் எழுதியது) |
| 56. | மனிதம் இன்னும் சாகவில்லை | - தொண்டன் - டிச. 85 |
| 57. | பிரசவங்கள் - மல்லிகை | - ஜன. 86 |
| 58. | மரணிப்பிலும் உயிர்க்கும் | - மல்லிகை யூன் 86 |
| 59. | உச்ச அறுவடை | - 1986 |
| 60. | ஒலி - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ் மன்றப் போட்டிப்பரிசு - அமிர்தகங்கை - புரட். 86 | |
| 61. | வெளிச்சத்துக்கு வா - ஈழநாடு | - 23.11.86 |
| 62. | சமுதாயம் ஒரு சறுக்குப் பாறை | - ஈழநாடு - 11.01.87 |
| 63. | வாழ்வும் ஒரு வலைப் பந்தாட்டம் | - வீரகேசரி - 01.02.87 (தகவம் பரிசு) |
| 64. | மனிதம் மதலைகளிடம் மட்டும் | - வீரகேசரி - 17.07.88 |
| 65. | நம்பிக்கைச் சிறகுள்ள பூச்சிகள் | - புத்தெழில் - புரட் 88 |
| 66. | ஒரு சதுரம் இருளாக மறு சதுரம் ஒளியேறும் - முரசொலி - 1989 | |
| 67. | முகங்களும் மூடிகளும் | - நோர்வேத் தமிழ்ச் சங்கப் போட்டிப்பரிசு - 15.01.89 |

# DBT, CBT ஆகிய இரு கற்கை நெறிகளிலும் பயின்ற ஒரு மாணவியின் பின்னூட்டல்...

உண்மையிலேயே இவ்வாறான வகுப்பிற்கு வரக் கிடைத்தமையை இறை வனின் வரப் பிரசாதமாக எண்ணுகிறேன். இந்த வாய்ப்பைப் பெற்றுத் தந்த நண்பி சுகர்ணா விற்கு மிக்க நன்றியைக் கூறிக் கொள் கிறேன்.

மதிப்பிற்குரிய கோகிலா மிஸ் அவர் களிடம் நான் உளவியலை மட்டுமல்ல, என் வாழ்விற்குத் தேவையான பல விடயங் களைக் கற்றுள்ளேன். வகுப்பிற்கு வருகை தந்த முதல் நாளிலேயே ஆன்மிகக் கூற்று மற்றும் இன்றைய நாளுக்குரிய சிந்தனை தொடர் பாகக் கூறியபோது எனக்கு உள வியலுக்கும் ஆன்மிகத்திற்கும் இடை யிலான தொடர்பை அறிய முடிந்தது.

அடுத்த நாள், சிறப்பாகச் செயற்பட்ட வர்களுக்கான நேர்மீள வலியுறுத்திகள் வழங்கப்பட்டன. அதன்போது வெறுமனே பரிசு கொடுக்காது அதனை வழங்கு வதற்கான காரணத்தைக் கூறி வழங்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டேன். அத்துடன் பரிசாக வழங்கப்பட்ட நூல்கள் பல காலமாக மழுங்கியிருந்த என் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டி விட்டுள்ளன. அதற்கு மனமார்ந்த நன்றிகள்.

ஓர் ஆசிரியர் வகுப்பறையில் எவ்வாறு முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும் என்பதனை நேரத்திற்கு வருகை தருதல், சரியான பதில் கூறினால் thumbs up காட்டி உடனே பாராட்டுதல், வெண் பலகையில் எழுத்துப் பிழையின்றி எழுதுதல், பல நூல்களை வாசித்துப் பல்துறை அறிவு டையவராக இருத்தல் என்று பல விடயங்கள் இருக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டேன்.

உளவியல் வகுப்பைப் பொறுத்த வரையில் நான் உளவியல் பாடத்தைப் பல் கலைக்கழகத்தில் கற்றிருந்த போதிலும் சிகிச்சை முறைகள் தொடர்பான அடிப்படை அறிவை மட்டுமே பெற்றிருந்தேன். இங்கே புதிய சிகிச்சை வடிவமாகிய DBT ஐக் கற்றுக் கொண்டேன். அதிலே வகுப்ப றையில் வழங்கப்படுகின்ற mindfulness activities ஐ எனது தனிப்பட்ட வாழ்விலும் நான் பணியாற்றும் இடத்திலும் பயன்படுத்தி ஓரளவு வெற்றி காண முடிந்துள்ளது. மேலும் E.Q வை உயர்த்துவதற்கான செயற்பாடுகள், happiness calender ஆகியன பல மகிழ்வான சம்பவங்களை ஏற்படுத்தியுள்ளன.

நான் முன்னர் துன்பகரமான சம்பவங் களையே எண்ணிப் பார்த்துள்ளேன். இப்போதுதான் மகிழ்வாக இருந்த நாளை உன்னிப்பாகப் பார்க்கிறேன். அதை நண்பர் களுடன் பகிர்ந்துள்ளேன்.

CBT யில் நான் முதல் தடவையாக ஒரு role play செய்து கோகிலா மகேந்திரன் அவர்களிடம் 'Good' என்று

'Comment' வாங்கியதை என் வாழ்வில் மறக்க முடியாது. எனக்கு அவர் தான் எழுதிய புத்தகம் "முகங்களும் மூடிகளும்" தனது கையொப்பத்துடன் தந்தமை மிக்க மகிழ்ச்சி. முதல் தடவையாக CBT ஒருவரில் apply செய்துள்ளேன். அதற்கான அனுமதியையும் வழிகாட்டலையும் தந்தமைக்கும் அவருக்கு நன்றியுடையேன்.

இந்த வகுப்பு எனக்கு வயதான நண்பர் களைத் தந்துள்ளது. நளாயினி மிஸ், இளையதம்பி மிஸ், விஜயா மிஸ் என்று பலர் என்னில் அன்பும் அக்கறையும் கொண்டுள்ளனர். இவர்களது நட்பு எனது எதிர்கால வாழ்விற்கு உற்சாகம் தருவதாக உள்ளது.

எமக்குப் பக்க பலமாக நின்று எமது முன்னேற்றத்திற்கு உதவியவர்களை நினைத்துப் பார்த்து அடிக்கடி மற்றவர் களுக்கும் கூறுவது நல்ல பண்பு. திருமதி. கோகிலா மகேந்திரன் அவ்வாறு நினைத்துப் பார்க்கும் அளவிற்கு அவரை வழிப்ப டுத்திய ஆசிரியர்களை நினைக்க எனக்குப் பொறாமையாகத்தான் உள்ளது. நானும் எனது ஆசிரியர்கள் சிலரை நினைத்துப் பார்த்துள்ளேன். எனது ஆரம்பக் கல்வி அதிபரை நேரில் சந்தித்து நன்றி கூறியுள் ளேன்.

ஒரு பொது நோக்கிற்காகப் பிரார்த்திப் போம் என்று நினைத்து வேலையற்ற பட்ட தாரிகளுக்கு வேலை கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்தேன். அதே வகுப்பில் எனக்கு வேலை கிடைத்துள்ள தாகத் தகவல் கிடைத்தது.

அலுவலகத்திலே எனது செயற்பாட்டில் நேரான மாற்றங்களைக் கண்டு, "கோகிலா மிஸ்ஸிடத்தில் படிக்கிறதாலை வந்த மாற்றம்" எனக் கூறும் அளவிற்கு என்னில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

கோகிலா மகேந்திரன் அவர்கள் மேலும் இவ்வாறான வகுப்புக்களை நடத்த வேண்டும். பல நூல்களைப் படைக்க வேண்டும். இறைவன் அவருக்கு மகிழ்வையும் ஆரோக்கியத்தையும் தர வேண்டுகிறேன்.

**எஸ்.கிருசாளினி**
ஆகஸ்ட் 2019

* * *

**கோகிலா மகேந்திரன் எழுதிய சிறுகதைகள்:-**

| | | |
|---|---|---|
| 68. | மேல் மட்டம் | - தொண்டன் |
| 69. | ஆழ்ந்த அநுதாபங்கள் | - மல்லிகை - ஆவணி 89 |
| 70. | இருட்டு - முரசொலி | - 27.10.90 |
| 71. | மண்டையில் சுற்றும் முட்சக்கரங்கள் | - முரசொலி - 30.10.90 |
| 72. | திசை மாறும் | - முரசொலி - 19.11.90 |
| 73. | எரியும் - மல்லிகை | - மார்கழி 91 |
| 74. | விலை | - 1994 |
| 75. | முகாமுக்குப் போகாத அகதி | - மல்லிகை 94 |
| 76. | மனதையே கழுவி | - மல்லிகை - தை 95 |
| 77. | சர்ப்ப மரணம் | - 1995 |
| 78. | கண்ணாடி | - வலம்புரி - 20.12.2000 |

**உளவளத்துணை பயின்ற மாணவர் ஒருவரிடமிருந்து**

# பதமலர் வேண்டுவேன்

கல்வி உயர்ந்திட ஊக்குவித்தீர்கள்
கல்லாமை அகன்றிடப் பாடுபட்டீர்கள்
நன்மைகள் சிறந்திட விரும்பி நின்றீர்கள்
நல்லனவற்றைச் செய்கு வித்தீர்கள்
உண்மை நெறி சமைத்திட, ஒற்றுமை துலங்கிட
வண்ணம் கொண்டுயர்ந்து வாழ்த் தொலியால் இலங்க,
எண்ணம் தனில் தங்களை எடுத்துப் போற்றுகிறேன்
வெள்ளை உள்ளம் கொண்ட அம்மணி!
அஞ்ஞான இருள் அகற்ற
மெய்ஞ்ஞானத்தால் கண்ட உண்மைகளை
விஞ்ஞானக் கதைகளில் காட்டி நிற்பீர்கள்
எஞ்ஞான்றும் புதுமைகள் பரப்பி வாழ
வேய்ங்குழல் வண்ணன் பதமலர் வேண்டுவேன்.

அம்பனை,
சுன்னாகம்
25.02.2001

**க.செல்வநாதன்**
(சாந்திகப் பயிற்சி மாணவன்)

* * *

**கோகிலா மகேந்திரன் எழுதிய சிறுகதைகள்:-**

79. விஷம் - அருள் ஒளி - தை 2001
80. கறுப்புக்குரல் - வலம்புரி - 20.12.2002
81. வாழ்வுந்தலும் - வலம்புரி - 31.01.2003
82. பெண்பனை - வலம்புரி - 07.02.2003
83. இளம்கனவு - வலம்புரி - 07.02.2003
84. நெருஞ்சி - வலம்புரி - 14.02.2003
85. தலையீடு - வலம்புரி - 28.02.2003

# Feed back from a student who studied DBT "The way is open"

There was a time I was uneasy to discuss some problems with my friends or family. I was searching for a good guide like a mentor or a counselor. But I failed finding a suitable one. In that point I decided that there should not be another one lacking this guidance and I should be able to be in a position to support the mental health of others.

I think, as a result of my wish, I got the opportunity to study, 'Dialectical behaviour therapy', which in short called DBT under the guidance of Mrs. Kohila Mahendran who was the key resource person of the course.

The course syllabus was divided into four main topics known as Mindfulness, Interpersonal effectiveness, distress tolerance and emotional regulation. But the concepts we have learnt under these main topics are many and extremely useful for our life. Few of them are "How to be happy", "To be grateful for our blessings", "Improving E.Q" and "to live with values".

The classes always start with a "thought for the day" of various religions and philosophies. We learnt to connect the meaning of these thoughts scientifically to the real life. Then we used to practice mindfulness activities. We had Ms. Shyamala Selvaratnam who is an Art therapist and Educator form U.K to give us the knowledge and practice on mindfulness activities. Her way of teaching was different and discussion oriented. Because of her, we were exposed to a foreign learning culture.

Apart from this, we learnt a lot about general things which are connected to our life such as famous people, habits of animals, nature, popular books, writers, TED talks, healthy food, sleeping habits, helping others and the use of technical devices and social media. We also had many activities such as relaxation, solving I.Q questions, team works and games.

This course had two theory tests, and many continuous assessments. Caring animals, caring another person, expressing gratitude, observing the characteristic of a good listener, starting a new hobby, perception of characters in novels, guiding a client by applying DBT skills, presentation and viva are a few methods used by the key resource person to decide about our learning skills.

Though all these matters are connected to our syllabus, the art of teaching and the way of expressing matters of the lecturer are the most important things which made us to understand the concepts clearly and with interest.

I am a new student of Kohila Madam. There are a lot of things that I admire in her. Her way of dressing, teaching, her body language commitment and transparency are a few of them. She always prepares the content well for the class. She clarifies the doubts very clearly after verifying and referring various knowledge sources. Without any hesitation she accepts anything that has to be changed in her teaching.

Whenever she observes us doing good things, she always appreciates and gives positive reinfncement to encourage us to do better. These appreciations are usually verbal or small gifts like books. I proudly say that I started my reading habit after receiving the first book from Kohila madam.

I would say that it is only her effort and commitment which made us to learn DBT skills.

The classes were carried out smoothly as planned and we successfully completed it on time.

Both lectures did not charge fee for disseminating their valuable knowledge with us. This is the first time I heard that this great knowledge is given without a course fee.

I think Kohila madam's aim is to spread this knowledge with many people as far as possible as she could. Only because of her attitude I got an opportunity to join this course without any restrictions.

However we have some requests from the lecturer. They are:-

1. We wish to extend the duration of study to go more and more deeply.
2. If the marks for each question could be mentioned in the exam paper, it would be easy for us to write the answers accordingly.
3. We want to do more practicals in handling clients using DBT skills.

In my experience of completing few other higher studies, I say that this course had its own standard. I observed changes in myself even from the very first day of joining the course.

I can feel that I am improving when I feel down in my life, the skills are helping me and giving me better hope.

According to me when we listen without judgement we help others to live better. I am improving my listening skills after following this course. I am practicing to show empathy. I have started to support my friends to solve their problems on their own.

It is to be analyzed that we follow so many courses from birth do death, but how many of them leads us for better life?

Self confidence, self respect, values, living happily, handling relationships, understanding the messages of the religions, facing a disaster, escaping from dangerous animals, distress tolerance! Are we learning these? Should not we learn all of these from our childhood?

I feel that the children who learn these will have the courage to live better.

But to guide them, we as adults should learn them first. Specially if the teachers know these concepts, it would easily reach the students. Some may have the skills on their own.

Even if not, we wish to learn! The way will be open!

**Sivaratnam Kaarunyaa**
05.09.2019

* * *

**கோகிலா மகேந்திரன் எழுதிய சிறுகதைகள்:-**

| | | |
|---|---|---|
| 86. | பூக்குளிப்பு | - வலம்புரி - 14.03.2003 |
| 87. | ஏ- 9 பாதை | - வலம்புரி - 28.03.2003 |
| 88. | மெத்தென்ற தென்றல் | - வலம்புரி - 04.04.2003 |
| 89. | நெருக்கீட்டின் பின் | - வலம்புரி - 18.04.2003 |
| 90. | கூறானது மனம் | - வலம்புரி - 02.05.2003 |
| 91. | மலையைச் சுமத்தல் என்பது | - வலம்புரி - 09.05.2003 |
| 92. | பிறழ்வின் தோற்றம் | - வலம்புரி - 23.05.2003<br>மறுபிரசுரம் உதயம் - ஆகஸ்ட் 2009 |
| 93. | உயர்ந்து செல்லும் சீரழிவு மானி | - வலம்புரி - 02.06.2003 |
| 94. | புலன்களுக்கு அப்பால் உள்வாங்குதல் | - வலம்புரி - 15.08.2003 |
| 95. | விழுதலும் எழுதலும் | - மல்லிகை 2007 |
| 96. | கால் ஒப்பம் | - தாயகம் - ஒக் 2007 (தகவம் சிறப்புப் பரிசு) |
| 97. | சுன்னாகம் < சிட்னி < சுன்னாகம் | - ஜீவநதி - மே 2012<br>(அவுஸ்திரேலியா சிறப்பு மலர்) |
| 98. | ஜகரண்டா | - சங்கப் பொழில் 2013<br>கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் |
| 99. | ஆத்ம இம்சை | - உதயன் 2015<br>(புத்தாண்டுச் சிறப்பு மலர்) |

# ஆரம்ப உளவளத்துணை CBT, ACT, DBT, MBCT ஆகியவை பயின்ற ஒரு மாணவ ஆசிரியரிடமிருந்து..

## "எனது நன்றிக்குரிய ஆசிரியர்"

எனது வாழ்வில் பெற்றோர், சகோதரர், பாடசாலை ஆசிரியர்கள், பல்கலை ஆசிரியர்கள் எனப் பலரும் வழி காட்டியாளர்களாக எனது நினைவில் இருந்து வருகிறார்கள். இவர்கள் சமய வாழ்வு வாழவும் விழுமியங்களைப் பின் பற்றவும், பாட அடைவைப் பெற்றிடவும் வேலை வாய்ப்புப் பெற்றுச் சீராக வாழவும் இன்றுவரை உதவி வந்துள்ளனர்.

"கருவறையில் இருந்து கல்லறை வரை கல்வி" என்பது கல்வியியலாளர்களின் கருத்தாகும். இம்முதுமொழிக்கிணங்க எனது வாழ்வில் நான் ஆசிரிய சேவையில் இருந்த பொழுது சந்தித்து இன்று வரை ஆசிரியராக இருக்கும் ஒருவரை நன்றியுடன் நினைவுகூர விரும்புகிறேன்.

இவ்வாசிரியரைப் பலமுறை கண்டும் அறிந்தும் இருந்த பொழுதிலும் 1998ஆம் ஆண்டு முதல் என்னைச் சிந்திக்க வைத்த ஆசிரியராக நினைவுகூர விரும்புகிறேன். அந்த ஆண்டில் நடைபெற்ற முரண்பாட்டுத் தீர்வு என்னும் செயலமர்வினூடாக எனக்குள் சிந்தனைக் கிளறலை ஏற்படுத்தியிருந்தார். அவ்வாண்டு முதல் அவ்வாசிரியரின் செயலமர்வுகளில் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைத்தது. இதனால் அன்பு, கருணை, சினம், எண்ணம், சொல், மனப்பாங்கு, உறுதிப்பாடு, கனவுகள், மாணவர்கள் தொடர்பான அணுகுமுறைகள், சேவை மனப்பாங்கு எனப்பல விடயங்கள் எனக்குள் புகுந்து சிந்திக்க வைத்தது.

பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்களின் வகுப்பறைக் கற்பித்தல் என்னும் புத்தகத்தினை வாசித்தபோது யதார்த்தமாக எவ்வாறு இப்படிக் கூற முடிகிறது? என வியந்திருக்கிறேன். ஆனால் அதன்பின் எனது ஆசிரியரின் செயலமர்வுகளில் கூறப்படும் கருத்துக்கள் அப்படியே உண்மையாயின "யதார்த்தமாக எவ்வாறு இவ்வாறு கூறமுடிகிறது?" என வியந்ததுடன் சிந்திக்கவும் கற்றுக் கொண்டேன். வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அவரது வார்த்தைகள், கருத்துக்கள் எனது செவிகளில் ஒலிக்கும். "எங்களை நாங்கள் பார்க்க வேண்டும்", "நாங்கள் மாணவர்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும்", "பிள்ளைகளின் சப்பாத்துக்களில் எமது காலைப் பொருத்திப் பார்க்க வேண்டும்". "காய்க்கிற மரம்தான் கல்லடிபடும்", "தெருவில் குரைக்கிற நாய் பற்றி அதிகம் கவலைப்படத் தேவையில்லை", "ஒரு பாதை மூடப்பட்டால் இன்னொரு பாதையால் முன்னேறலாம், இலக்கை அடையலாம்", "முரண்பாடுகளின் மூலம் எதுவெனக் கண்டறிதல் வேண்டும்", "புரிந்துணர்வுடன் நடத்தல் வேண்டும்" எனப் பல வார்த்தைகளும் கருத்துக்களும் என் மனதில் வந்துவிடும்.

இரண்டாயிரமாம் ஆண்டு முதல் இரண்டாயிரத்து ஐந்து வரையான காலப் பகுதியில் எனக்கு இவரது செயலமர்வுகளில் பங்குபற்றும் சந்தர்ப்பம் கிடைக்

காமல் போனாலும் எனக்குள் "ஏகலைவன்" பெயர் அடிக்கடி வந்து போகும். அக் காலப் பகுதியில் என் ஆசிரியரிடம் கற்றுக் கொண்ட விடயங்கள் என்னை நெறிப் படுத்தத் துணையாக இருந்தன. தொடர்ந்தும் இரண்டாயிரத்து ஆறுமுதல் கருத்தமர்வுகளில் பங்குபற்றும் வாய்ப்புக் கள் அவ்வப்போது இருந்தாலும் இரண்டாயிரத்துப் பதின்னான்கு முதல் இன்றுவரை நேரடியாகக் கற்கும் வாய்ப்புத் தொடர்ச்சியாக இருந்து வருகிறது. மனித விழுமியங்களை ஆழமாக உணரவும், தாங்குதிறனை அதிகரிக்கவும், சேவை மனப்பாங்கு, வாழ்வின் பயன் ஆகிய வற்றைப் பற்றி உணரவும், சிந்திக்கவும் வாய்ப்புத் தந்து கொண்டிருக்கும் எனது ஆசிரியரை நன்றியுடன் நினைவு கூருகிறேன். அவ்வாசிரியர் மதிப்பிற்குரிய திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் ஆவார்.

**செல்வி புஷ்பராணி இளையதம்பி**
**இணுவில் - 16-01-2020**

* * *

**நடுவர்**

26.06.84 கீரிமலை நகுலேஸ்வர ம.வி - தமிழ்த்தினப் போட்டி
26.09.84 தெல்லிப்பழை வட்டாரத் தமிழ்த்தினப் போட்டி
08.10.84 யாழ் மாவட்டத் தமிழ்த்தினப் போட்டி (இந்து மகளிர் கல்லூரி)
28.02.85 கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவர் கதை சொல்லல் போட்டி
02.10.85 தெல்லிப்பழைக் கல்வி வட்டார நடுவர்களுக்கான போட்டி (அருணோதயாக் கல்லூரி)
04.10.85 தெல்லிப்பழை வட்டாரம் - தமிழ்த்தினப் போட்டி
17.06.86 கீரிமலை நகுலேஸ்வர ம.வி - பேச்சுப் போட்டி
28.08.88 கருகம்பனை இந்து இளைஞர் விளையாட்டுப் போட்டி
19.02.98 மானிப்பாய் மெமோரியல் தனிநடிப்புப் போட்டி
18.06.98 } 19.06.98 } தமிழ்த்தினப் போட்டி - வடகிழக்கு மாகாணம் - திரிகோணமலை
23.07.00 தமிழ்த்தினப் போட்டி - தேசியமட்டம் - பம்பலப்பிட்டி இந்து
25-.04.16 பாரிஸ் TRT தமிழ் வானொலியில் நடத்தப்பட்ட தோழர் சபாரத்தினம் சுரேந்திரன் ஞாபகார்த்த சர்வதேச சிறுகதைப் போட்டி - 2015
யூன் 17 வடக்கு மாகாணக் கலாசாரத் திணைக்களம் - சிறுகதைத் தொகுதிப் பரிசுப் போட்டி
21.03.18 இலங்கை வங்கி - யாழ் மாவட்டக்கிளைகள் பெண்கள் தினம் - பட்டிமண்டபம் - இந்துமகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்
யூன் 18 கிழக்கு மாகாணக் கலாசாரத் திணைக்களம் - சிறுகதைத் தொகுதிப் பரிசு
கிழக்கு மாகாணக் கலாசாரத் திணைக்களம் - சிறுகதைத் தொகுதி அச்சிடலுக்கான தெரிவு
கிழக்கு மாகாணக் கலாசாரத் திணைக்களம் - சிறுகதைத் தொகுதி கொள்வனவுக்கான தெரிவு
கிழக்கு மாகாணக் கலாசாரத் திணைக்களம் - நாடக நூல் பரிசு
19.06.18 } 20.06.18 } Bond International School - speech & poem competition
யூலை 18 வடக்கு மாகாணம் - இளங்கலைஞர் விருது - சிறுகதை
ஆக. 18 வடக்கு மாகாணம் - அரச ஊழியர் மற்றும் மன்றங்களுக்கிடையிலான சிறுகதைப் போட்டி
28.09.19 வடக்கு மாகாணம் - கலைக்குரிசில் விருது - சிறுகதைக் கலைஞர்
ஆக. 19 கிழக்கு மாகாணம் - சிறுகதைத் தொகுதிப் பரிசு

# From a student of Sathiya Sai School - Manipay - 2014

My class teacher's name is Mrs. Kohila Mahendrarajah. She has a good personality. She looks very beautiful. She is tan in complexion. She has short hair. She is a good example for a good teacher. She has a lean body and is tall. She helps other teachers in many ways. She teaches English and Science for us. She is a psychological counselor too. She has taught in many schools, in foreign countries as well. She is a writer and writes stories and poems for the News papers and magazines. She is always happy because she looks at the positive side of the world. She is an optimistic and outgoing person. She feels very sure of herself. She finds easy to talk to new people.

She wants to do well in life, but she is not very ambitious. She has a lot of common sense and is sensible. She does a lot of social works and advises us to do so. She is retired from the Government sector. She is always very confident and her hobby is reading. She has charity and kindness. She is friendly with others. She is always ready to help us in our studies. She has a vast experience in teaching. She shares experiences of her life with us. She gives assembly talks in Wednesdays in English. She is honest and punctual. I love my teacher very much.

**Vaishnavi - Gr. 10**

(Written as an essay for the examination)

* * *

**கோகிலா மகேந்திரனின் நாடகங்கள் – நெறியாள்கையும் எழுத்துருவும்**

* பட்டர் பெருமான் - (பொலிகண்டி இ.த.க.பாடசாலை நவராத்திரி விழா - 1974)
* காலனை வென்ற காலன் - (கீரிமலை நகுலேஸ்வரா வெள்ளிவிழா - 1980<br>இந்து மகளிர் கல்லூரி - 1991<br>மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை - 20.06.2015)
* தரிசனங்கள் - (மகாஜனா இல்ல நாடகப் போட்டி - 1982)
* பாரதி வருகிறான் - (மகாஜனா நிறுவியவர் நினைவுநாள் - 1983)

# என் மனதில் இடம்பிடித்துள்ள எனது ஆசிரியர் பற்றிய சில வரிகள்....

எனது சிறுவயதில்- ஆண்டு 8 படிக்கையில்- ஒரு சரஸ்வதி பூஜைநாளில் சிறப்புச் செய்தி வழங்குவதற்காக எமது பாடசாலைக்கு வருகைதந்திருந்தார். அன்றையதினம் இவரின் பேச்சின் சிறப்பைக் கூறி எனது சகமாணவி அம்மண்டபத்திற்கு அழைத்திருந்தார். நான் சைவசமயம் இல்லாத போதிலும் நானும் சென்றேன்.

அன்றைய தினம் அவர் ஆற்றிய உரையில் எளிமையான சொற்பிரயோகம் இருந்தது. மாணவர்களுக்கான அறிவுரை, ஊக்கம் போன்றவற்றைக் கல்வித் தெய்வத்தின் முன்னிலையில் கூறி உரையாற்றினார். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இது எனது முதல் நாள் அனுபவத்தில் ஆசிரியரைக் கண்டகாட்சி.

அநேக வருடங்களின் பின் இவரிடம் நெருங்கிப் பழகும் இனிமையான வாய்ப்புக் கிடைத்தது. இவர் மிகவும் அன்பாகவும் அக்கறையாகவும் இருப்பார். இந்தச் சமூகத்தை நன்னிலைப்படுத்த வேண்டிய வளவாளர்களை உருவாக்குவதில் ஊக்கமுடையவர். நேரத்தை சரிவரப் பிரயோகிப்பது என்பது அவரின் சிறப்பான குணமாகும். அனைவரையும் பாரபட்சமின்றி ஏற்றுக் கொள்வார். தனது வாழ்க்கையை மிகவும் எளிமையாகவும் சாதாரணமாகவும் வாழ்பவராகக் காணப்படுகின்றார். சமூகத்தையும் சூழலையும் நேசிப்பவராகவும் காணப்படுகின்றார்.

இவ்வாசிரியருடன் பழகுவதனூடாக எனது வாழ்க்கையில் நான் நல்ல விடயங்களைச் செய்ய முனைகிறேன். இச் சமூகத்திற்குப் பிரயோசனமான வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என விரும்புகிறேன்.

இறுதியாக இந்த ஆசிரியரின் பெயரைக் குறிப்பிடுகிறேன். அவரதுபெயர் திருமதி. கோகிலா மகேந்திரன்

**அ. சிவாணி,**
உளவளத்துணையாளர், MBCT
மாணவி.

* * *

**Seminar Participation**

28.08.19 TAF Seminar at Colombo -3, head office of Asia Foundation

18.09.19 Meeting with TAF technical Advisors at Rio hotel - Nallur

அன்புமணி அவர்களின் விமர்சனம்

# "மனித சொரூபங்கள்" (சிறுகதைத் தொகுதி)

பெண் எழுத்தாளர்கள் என்றதும் அந்தக் காலத்து வை.மு.கோதைநாயகி முதல் இந்தக் காலத்து அநுராதா ரமணன் வரை பெண்களைப் பாதிக்கும் பிரச்சினை களை மையமாகக் கொண்ட கதைகளையே அதிகம் எழுதுகிறார்கள் என்ற எண்ணம் முனைப் பாகிறது. இந்த வரிசையில் ஈழத்துப் பெண் எழுத்தாளர்களும் சேர்கிறார்கள். யோகா பாலச்சந்திரன், தாமரைச்செல்வி, தமிழ்ப் பிரியா, மண்டூர் அசோகா, கோகிலா மகேந்திரன் அவர்களுட் சிலர்.

கோகிலா மகேந்திரன் எழுதிய பன்னிரண்டு சிறுகதைகள் "மனித சொரூபங்கள்" என்ற அர்த்தபுஷ்டியான தலைப்பைக் கொண்ட சிறுகதைத் தொகுதியில் அடங்கியுள்ளன. இதயமற்ற மனிதர்களை "மனித சொரூ பங்கள்" என்று பொருத்தமாகவே அவர் சுட்டுகிறார். இதில் உள்ள பெரும்பாலான சிறுகதைகளில் பெண்களுக்கு இழைக் கப்படும் அநீதிகள், ஓரவஞ்சனைகள், அடக்குமுறைகள் ஏதோ ஒரு வகையில் இடம்பெறுகின்றன. சில சந்தர்ப்பங்களில் ஆசிரியையின் மனக் குமுறல் வெளிப்படை யாகவே தெரிகிறது.

முதலாவது கதையான "ஒலிக்காத ஓலம்" (சோமுவின் "கேளாத கானம்" நினைவுக்கு வருகிறதா?) சிறுகதை எழுத்தில் லட்சியங் களை இரசிக்கும் ஓர் ஆண் நிஜத்தில் சீதனம் சேர்த்து வைக்கும் பெண்ணை விரும்பும் முரண்பாட்டைச் சித்திரிக்கிறது. "... இந்த உலகில் பேச்சும் செயலும் எவ்வளவு தூரம் முரண்பட்டுப் போய்க் கிடக்கிறது என்பது எனக்கு மட்டுமே புரிகிற போது, அந்த என் மௌனத்தின் அழுகுரல் எனக்கே கூடக் கேட்காமல் - ஒலிக்காத ஓலமாய்ப் பெரிதாக - மிகப் பெரிதாக - எனக்குள்ளே உருவாகி ஓய்ந்து போகிறது" என்று கதை முடியும்போது அந்தப் பெண் உள்ளத்தின் ஓலம் மட்டுமல்ல அந்த ஓலத்தை ஏந்தி வரும் சொல் அலைகளும் கூட, மிக நீண்ட நேரம் நம் உள்ளத்தில் எதிரொலிக்கின்றன.

"ஓர் ஏக்கம் மடிகிறது" என்று ஒரு கதை. ஒரு வேலைக்காரச் சிறுமியின் பிஞ்சு உள்ளத்தில் தன்னை ஒத்த பாடசாலைச் சிறுமிகளுடன் சேர்ந்து பழக வேண்டும் என்ற தாபம் கொழுந்து விட்டெரிகிறது. ஆனால் வீட்டு எஜமானி அந்த "நோஞ்சான் குஞ்சு"வின் ஆசைக்குத் தக்க 'பரிசு' தரும் போது, வெறும் மனித சொரூபம் அந்த எஜமானி மட்டுமல்ல, அந்தப் பச்சைக் குழந் தையை வேலைக்காரியாக்கிய அதன் தாயுந்தான் என்ற சிந்தனை விரிகிறது.

திருமணங்களுக்குச் சாதகப் பொருத்தம் பார்க்கும் அறிவீனத்தையும் இந்த அறி வீனத்தால் கன்னிப் பெண்கள் கண்ணீரில்

மிதக்கும் கசப்பான உண்மையையும் நகைச் சுவை இழையோடச் சொல்கிறது, "பொருத் தங்கள்" என்ற மூன்றாவது கதை. எல் லோருக்கும் சாதகப் பொருத்தம் பார்த்துச் சொல்லும் சாத்திரியாருடைய மகள் கணவனை விட்டுப் பிரிந்து கண்ணீரும் கம் பலையுமாக பிறந்தகம் வந்து நிற்கும்போது நமக்குச் சிரிப்புப் பீறிடுகிறது. சாத்திரி யாரின் மனைவியே நல்ல 'டோஸ்' கொடுக்கிறாள்.

"எல்லைகள்" என்ற கதையில் வீட்டு வளவுக்கு எல்லை போடும் அற்ப விஷயத் தைக்கூட நம்மூர்ச் சனங்கள் (படித்தவர்கள் உட்பட) எப்படிப் பெரிது படுத்தி - அடிதடி, வழக்குக் கணக்கு என்று பெரிதுபடுத்தி - விடுகிறார்கள் என்பதைச் சிரிப்பும் சீரியஸு மாகச் சொல்கிறார் ஆசிரியை. "வழக்குச் செலவு எவ்வளவு? ஒரு அங்குலக் காணியின் பெறுமதி எவ்வளவு?" என்ற தொகுப்புரைக்கு அவசியமே இல்லை.

அரசியல்வாதிகள் மூலம் ஆசிரிய நியமனங்கள் (ஏன், பிற நியமனங்களுந் தான்) தகுதியில்லாதவர்களுக்குப் பெருந் தொகைக்கு விற்பனை செய்யும் சீர் திருத்தம் நம் சமுதாயத்தில் புகுத்தப்பட்ட பிறகு பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள ஒழுங் கீனங்களும், அதன் பிரதி பலிப்பாகச் சமுதா யத்தில் மலிந்துள்ள சீர்கேடுகளும் "நாளைய உலகின் நாயகர்கள்" என்ற கதையில் சொல்லப்படுகின்றன. நமது எழுத்தாளப் பெருந்தகைகள் 'கண்டுக்காத' ஒரு சங்கதி இது. இக்கதையை எழுதவும் பிரசுரிக்கவும் நிறையத் துணிச்சல் வேண்டும். இக்கதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திய போட்டியில் பரிசு பெற்று 1982இல் அவர்கள் வெளியிட்ட சிறு கதைத் தொகுதியில் இடம் பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

'ஒரு பிணத்தின் தரிசனம்' அநேகமாக எல்லாச் சாவீடுகளிலும் எல்லாத் தமிழ் ஊர்களிலும் இடம்பெறும் கதை. நம்மை நாமே ஒரு முறை பார்த்து உடம்பை நெளித்துக் கொள்ளச் செய்கிறது. இக்கதை நல்ல படப்பிடிப்பு! (இதிலும் படிப் பினையைத் தொகுத்துச் சொல்லும் இறுதிப் பகுதி அவசியமில்லை). நீர்ப் பாசனத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தால் நடத்தப் பட்ட சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது இக்கதை.

இவ்வாறே 'குரூர ரசனைகள்', "உறுத்தல் வருடப்படுகிறது", 'முரண்பாடு களின் அறுவடை', 'அவன் ஏன் வாழ் கிறான்?', 'கலைகின்ற வேஷங்கள்', 'மனித சொரூபங்கள்' முதலிய ஒவ்வொரு கதையும் நமது சமுதாயத்தில் புரையோடிப் போயுள்ள ஒவ்வொரு புண் ணுக்கு அறுவைச் சிகிச்சை செய்கிறது.

கோகிலாவின் கதைகளை ஒட்டு மொத் தமாகப் பார்க்கும்போது நமது உள்ளத்தில் எழும் உவகைகள் இரண்டு. (1) சமுதா யத்தில் உள்ள கண்ணுக்குத் தெரியாத சில முட்கள் இவரது உள்ளத்தில் தைக் கிறது. அவை நல்ல சிறுகதைகளாக உருப் பெறுகின்றன. (2) தெளிந்த சீரான குழப்ப மில்லாத நடையில் மனதைக் கிளுகிளுக்க வைக்கும் சொல்லாட்சியில் அக்கதைகள் விகசிக்கின்றன.

நிறைய உதாரணங்கள் சொல்லலாம். மாதிரிக்கு ஒன்றிரண்டு - (1) வானத்தில் கொஞ்சம் கருமுகில்கள் காணப்பட்டாலும், சூரியனின் கிரணங்கள் கிழக்குத் திசை யில் இருந்து புறப்பட ஆரம்பித்து விட்டன. கருமுகில் படைகளின் எல்லைகள் அழிந் தழிந்து புதிதாக உருவா கின்றன (பக் 25). (2) ..."ஏதேதோ புதிய கற்பனைகளும் கனவுகளும் நினைவுகளுமாய் அலை

அலையாய் நுரை நுரையாய் அடித்து ஆர்ப்பரித்துக் கரையை நோக்கி ஓடிவரும் கடல் அலைகள், கரையில் வந்து மோதிய பின்னர் ஒன்றுமில்லாமல் வெறுமனே திரும்பிச் செல்லும் காட்சி... (பக் 8). (3) சௌமியமான ஒரு காலைப்பொழுது மரம் நிறைய மஞ்சள், மஞ்சளாய்ப் பூத்துக் குலுங்கும் அந்தப் பெரிய கொன்றை மரத்தடியில்... (பக் 14).

சுமார் 70 பக்கங்களுடன் 10/- விலையில் வெளிவந்துள்ள இத்தொகுதிக்கு அட்டைப்படம் ஒரு திருஷ்டிப் பரிகாரம். அளவும் ஏற்றதல்ல. கிரௌன் சைஸில் புத்தகம் இன்னும் அழகாகவும் அதிக பக்கங்களுடனும் அமையுமே! அளவுக் கதிகமான அணிந்துரைகளும் உறுத்தல்களே!

15.03.83

**இரா. நாகலிங்கம்,**
ஆரையம்பதி,
காத்தான்குடி.

* * *

**கோகிலா மகேந்திரனின் நாடகங்கள் – நெறியாள்கையும் எழுத்துருவும்**

- பட்டங்கள் மீண்டும் பறக்கும் - (மகாஜனா ஜெயரத்தினம் நினைவுநாள் - 1985)
- முரண்பாடுகள் - (மகாஜனா நிறுவியவர் நினைவுநாள் - இசைநடன நாடகம் - 1986)
- தான் கெடு பள்ளம் (தமிழ்த்தினப் போட்டி பண்டத்தரிப்பு கோட்டமட்டம் முதலிடம் 1988, சரஸ்வதி பூஜை மகாஜனா 1988, பலாலி ஆசிரியர் கல்லூரி 20.10.89, மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை 05.05.2015

  ஆரிய திராவிட - பாஷா அபிவிருத்திச் சங்க விழா வைத்தீஸ்வராக் கல்லூரி)
- தன்வினை தன்னைச் சுடும் (மகாஜனா ஜெயரத்தினம் நினைவுநாள் 29.10.89)
- ஆலயம் தொழுவது (நல்லை ஆதீனம் நடத்திய சமய நாடகப்போட்டி முதலிடம் 1990, உரும்பிராய் ஞானவைரவர் ஆலயம் 10.03.94)
- வான்விளிம்பில் ஓர் நட்சத்திரம் (இலங்கையின் சுதந்திரதினத்தை ஒட்டி நடைபெற்ற நாடகப்போட்டியில் மாவட்டமட்ட முதற்பரிசு 1990 - மகாஜனா, கலை இலக்கியக் களத்தின் பொங்கல் விழா 14.01.90, மகாஜனா மண்டபம், வட.இ.ச.சபை வைரவிழா, இந்து மகளிர் கல்லூரி 1991 - விடிவெள்ளி காலிக்கும் என்ற பெயரில்)
- தாகம் - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் மகாஜனா இயங்கிய போது - 1991
- தான் முந்துறும் - தமிழ்த்தினப் போட்டி மகாஜனா - 1992
- குருவி கூவ மறந்ததோ? (பண்டத்தரிப்புக் கோட்டத் தமிழ்த்தினம், யூனியன் கல்லூரி 1993, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் விழா 07.04.94, உரும்பிராய் ஞான வைரவர் ஆலயம் 10.03.94, இன்னும் பல மேடைகள்)
- நாய்களோ? - 1993
- வீரம் விளையும் நிலம் - 1993
- மலையும் மடற்பனையும் -(மானிப்பாய் மெமோரியல் மண்டபம் ஆசிரியர் தினவிழா, பண்டத்தரிப்புக் கோட்டம் 1993)

**From a famous critic:**

# In revolt against a husband

**Thuylum oru Nal Kalaiyum (Even the slumber will one day be disturbed)**
**a Novel in Tamil by Kohila Mahendran (1986).**
**Published by Sivan Kalvi Nilayam, Viliciddy Tellippalai. Rs. 20/-.**

Perhaps the most successful woman writer in this country writing in Tamil, Kohila Mahendran has on many occasions proved her mettle. She has already published a few collections of her short stories and this is the first time her Novel has appeared. What appeals to most readers is her cerebral approach in understanding people, events and life itself. This is remarkable especially when most women writers (not necessarily local Tamil woman writers) still cling on to emotionalism and sentimentality even when they profess to write on the liberation of women.

But Kohila Mahendran's social consciousness though implicit is artistically embedded in the main points she wants to raise through her fiction : the moral and psychological placement of a Tamil woman in a rigid conservative Jaffna society. The fact that the things have fallen apart as the centre could not hold due to radical transformation of Jaffna society especially during the current decade is a different matter altogether. Kohila sees this change in contexts and attempts to give a psychological dimension which again is an aspect of realism.

The novel under review is about marital relationship and platonic love, but raises many questions in the context of freedom of choice or individualism of a female in a male determined society.

As is customary with the writing of Kohila Mahendran, this fiction is also written very well in terms of craft and style. It is simple, straight forward, selective and topical as to judiciously include as passing events, current happenings in the North, whether it applies to the youth or the school with different types of characters.

As she herself has suggested, Kohila Mahendran is capable of writing more richer and satisfying novels in the future. For the present Thuyilum Oru Nal Kalaiyum is refreshingly original and topical in local fiction in Tamil.

14.09.1986 **K. S. Sivakumaran**

* * *

தமிழ்த்துறை விரிவுரையாளரின் ஆழமான பார்வை

# சந்தனச் சிதறல்கள் – ஓர் ஆய்வு நோக்கு

I

கோகிலா மகேந்திரன் எழுத்து உலகுக்கு ஏலவே நன்கு பரிசயமானவர். நாவல்கள், சிறுகதைகள், உளவியல் எழுத்துக்கள், கலை இலக்கியக் கட்டுரைகள், விமர்சனங்கள், நாடகங்கள் எனப் பல துறைகளிலும் தனது ஆளுமையை வெளிப்படுத்தியவர். அவரது 'சந்தனச் சிதறல்கள்' என்னும் படைப்பு 2018 ஆம் ஆண்டு தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தின் 55 ஆவது வெளியீடாக வெளிவந்துள்ளது.

சந்தனச் சிதறல்கள் சற்று வித்தியாச மானதோர் படைப்பாகும். ஆசிரியர் வெவ்வேறு காலகட்டங்களில் தான் எழுதிய 'சந்தனச் சிதறல்கள்', 'நிர்ப்பந்தங்கள்', 'வைகறை', 'பெண்பனை' என்னும் நான்கு குறுநாவல்களை ஒன்றாகப் பிணைத்து அவற்றுக்கு நாவல் என்னும் உருவம் கொடுக்க முனைந்திருக்கின்றார்.

'சந்தனச் சிதறல்கள்' எனும் குறுநாவல் 1988 இல் தொண்டன் சஞ்சிகையில் வெளியானது. மேரி என்னும் மருத்துவபீட மாணவியைத் தலைமைக் கதாபாத்திரமாகக் கொண்டு அவளது அனுபவங்கள், ஆசைகள், எதிர் பார்ப்புக் கள், அந்தரிப்புக்கள் என்பவற்றை 1987 ஆம் ஆண்டுச் சமூகப் பின்னணியில் விபரிப்பதாக இக்குறுநாவல் எழுதப் பட்டுள்ளது. 'நிர்ப்பந்தங்கள்' மஞ்சு என்னும் வசதியான குடும்பத்தில் பிறந்த, பேராதனைப் பல்கலைக்கழக மாணவியை மையப்படுத்தியதொரு குறுநாவலாகும். இது 1980 இல் ஈழநாடு வாரமலரில் தொடர்ச்சி யாக வெளிவந்துள்ளது. 'வைகறை" 1987 இல் முரசொலி நடாத்திய குறுநாவல் போட்டியில் வெற்றி பெற்றது. போர்க்காலச் சூழலில் சொந்த மண்ணில் துணிந்து மனவிருப்புடன் பணியாற்றும் கல்யாணி என்னும் வைத்தியரின் வாழ்வியல், மனப்போராட்டங்களைக் கதைக்கருவாகக் கொண்டுள்ளது. 1990 இல் எழுதப்பட்ட 'பெண்பனை' என்னும் குறுநாவல் விரிவுரையாளராய், விமர்சகராய் இன்னும் வாழ்க்கையுடன் சதா போராடு கின்ற குடும்பப் பெண்ணாய் விளங்கும் சரஸ்வதி விஜயராஜா என்னும் பெண்ணின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு பின்னப்பட்டுள்ளது.

இந் நான்கு குறுநாவல்களையும் முதல் நான்கு அத்தியாயங்களாகக் கட்டமைத்துள்ள ஆசிரியர் '2018...' இல் இன்னும் ஓர் அத்தியாயத்தினை ஐந்தாவ

தாக இணைத்துள்ளார். இப் பகுதியே குறுநாவல் நான்கினையும் ஒருசேர இணைத்து நாவல் என்னும் உருக் கொடுக்கின்றது. பெண்களைத் தலைமைப் பாத்திரங்களாகக் கொள்ளுதல், அவர் களது வாழ்க்கையை மையப்படுத்துதல், அவர்களது வாழ்வியல் மனப் போராட்டங் களைப் பேசுதல் என்ற வகையில் இந்நான்கு குறுநாவல்களும் தொடர்புறு கின்றன. இந்நான்கு குறுநாவல்களின் தலைமைப் பாத்திரங்களும் அவரவரின் குடும்ப அங்கத்தவர்களுடன் 01.07.2018 அன்று ஒன்றுகூடல் நிகழ்வினை விபரிக்கும் ஐந்தாவது பகுதி பாத்திரங்களின் நிகழ்கால வாழ்க்கை, ஒருவர் மற்றவருக்கிடையிலான தொடர்பு, அந்நியோன்யம், எதிர்கால வாழ்க்கைக்கான திட்டமிடல் குறித்த பல தகவல்களை முன்வைக்கின்றது.

இங்ஙனம் குறுநாவல்களை இணைத்த தொரு நாவலாக்க முயற்சியொன்றினைச் சூட்சுமமாக ஆசிரியர் செய்ய விழைந் துள்ளார். இது புதுமையான முயற்சியாக அமைவதுடன் ஆசிரியரது ஆளுமையின் மற்றொரு விகசிப்பாகவும் விளங்குகின்றது.

II

'நாவல்' உலக மொழிகளில் நன்கு பிரசித்தம் பெற்றதோர் இலக்கிய வடிவமாகும். இது மனித அனுபவத்தின் வெளிப்பாடாக அமைவது. அனுபவம் ஆழமானது. நீண்ட வாழ்க்கைப் பயணத்தில் எதிர்நோக்கும் சவால்கள், சிக்கல்கள் அவை குறித்த மனப் பதிவுகள், சிந்தனைகள், எதிர்பார்ப்புக்கள் என்பன அனுபவங்களாகத் திரட்சி கொள்கின்றன. இந்த அனுபவத் திரட்சியே நாவலின் அடிப்படையாக அமைகின்றது. நாவலின் கருப்பொருள் இந்த அனுபவத் தொடர்ச்சியின் வழியே தீர்மானிக்கப்படு கின்றது. குறிப்பிட்ட பிரச்சினை முரண்பாடு, சிக்கல்கள் குறித்த அதிர்வுகள், அவற்றின் பிரதிபலிப்புக்கள், சிந்தனைகள், அபிப் பிராயங்கள் என்பன எடுத்த எடுப்பில் அனுபவங்களாக நாவல்களில் பதிவாகிவிட முடியாது. அவை எழுத்தாளனின் மனதில் பதிந்து, நீண்ட நாட்களாக ஊறிக்கிடந்து, 'குமைந்து' வெளியேறும்போதுதான் சிறந்த நாவலாக உருப்பெறுகின்றன. அரை ஜீரணமான அனுபவச் சிதறல்கள் நாவலாக முடியாது. இதுவே நாவலைச் சிறுகதை யிலிருந்து தனித்துவப்படுத்தும் மிக முக்கியமான அம்சமாகும்.

அனுபவங்களைப் பாத்திரங்களின் வளர்ச்சியினூடாக நாவல் விபரித்துச் செல் கின்றது. இதனால் பாத்திரவார்ப்பு நாவலில் அதிமுக்கியத்துவம் பெறுகின்றது. எழுத் தாளனின் அனுபவத் தேக்கத்தினை தெளிவாக நகர்த்தும் வகையில் பாத்திரங் கள் அமைதல் வேண்டும். அவை நாவலின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை சீரான வளர்ச்சியினைக் காட்டுதல் அவசியமான தாகும். நாவலில் கட்டமைக்கப்படும் எல்லாப் பாத்திரங்களுக்கும் இது பொருந்து மாயினும் குறிப்பாகத் தலைமைப்பாத் திரங்கள் வினைத்திறனாக வளர்க்கப் படுதல் அவசியமானது. ஆசிரியர் தானே ஒரு பாத்திரமாக நாவல்களில் இணைந்து விடுவதும் உண்டு. நாவலின் தரமும் அது வாசகரிடத்தில் பெறும் மதிப்பும் பாத்திர வார்ப்பிலேயே பெரிதும் தங்கியுள்ளன. தரமான நாவல்களில் வரும் பாத்திரங்கள் வாசகர் மனதில், நினைவில் நின்று நிலைத்து விடுகின்றன.

குறுநாவல் வித்தியாசமானதோர் இலக்கிய வடிவமாகும். அவற்றை நாவல்

களுடன் முழுமையாக இணைத்துப் பார்க்க முடியாது. பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடுவது போல குறுநாவல்கள் 'நாவற் சுருக்கங்களாகவோ' அல்லது 'சுருக்கப் பட்ட நாவல்களாகவோ' அமைவதில்லை. அதாவது வெறுமனே பருமனை அடிப்படை யாகக் கொண்டு மட்டும் குறுநாவல் அடையாளப்படுத்தப்படுவதில்லை. அது தனக்கெனத் தனித்துவமான எல்லைக் கோடுகளைக் கொண்டது. சிறுகதைக் குரியதும் நாவலுக்குரியதுமான பண்புகளில் சில குறுநாவல்களில் வரும் எனினும் தனித்து இனங்காணத்தக்க வடிவக் கூறுகளையும் அது கொண்டிருக்கின்றது. கதைத் தேர்வு, சம்பவக் கோப்பு, கதைநகர்வு, பாத்திர அமைவு என்னும் கூறுகளில் இத்தகைய தனித்துவங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன. உதாரணமாக நாவல்களில் சம்பவக் கோப்பு என்பது பாத்திர வளர்ச்சியினை மையப்படுத்திய தாக அமையக் குறுநாவல்களில் அது கதைநகர்வினைக் கருத்தில் கொண்டதாக அமைகின்றது. அதாவது குறுநாவல் கதை முடிவினை நோக்கி நகரும் விதத்தில் திட்டமிடப்பட்டுள்ளமை நோக்கத்தக்க தாகும். அதற்கேற்ற வகையான கதைத் திட்டமிடல், பாத்திர நகர்வு, கருத்துநிலை வெளிப்பாடு என்பன குறுநாவல்களில் கச்சிதமாகப் பொருந்தி வருதல் வேண்டும்.

இத்தகைய இலக்கிய வடிவங்கள் குறித்த விவாதங்களுக்கு மத்தியில்தான் தனது குறுநாவல்களை நாவல் என்ற ஒரு கட்டமைப்புக்குள் கொணர கோகிலா மகேந்திரன் முயன்றிருக்கின்றார். அதனைச் செய்தும் காட்டியுள்ளார்.

## III

சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், பிரச்சினைகள், முரண்பாடுகள், சிக்கல்கள் குறித்தும் அவர்களது ஆசைகள், பாசங்கள், எதிர்பார்ப்புக்கள் பற்றியும் பேசுவதாக இக்குறுநாவல்கள் அமைந்திருக்கின்றன. வெவ்வேறு சமூகப் பின்னணி, தொழில், மற்றும் வயதினைச் சேர்ந்த நான்கு பெண்கள் இவற்றில் தலைமைக் கதாபாத்திரங்களாக விளங்கு கின்றனர். பெண் எழுத்தாளர் என்ற வகையில் பெண்களின் உணர்வுகள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை ஆசிரியர் மிகத் துல்லியமாக அடையாளங்கண்டு, இங்கு வெளிப்படுத்தியுள்ளமை சுட்டிக் காட்டத் தக்கதொன்றாகும்.

இந்நாவலில் பெண்கள் சார்ந்த பிரச்சினைகள், சிக்கல்கள் என்பவற்றை ஆசிரியர் அணுகியிருக்கும் நிதானம், நேர்த்தி என்பன விதந்து குறிப்பிடத் தக்கனவாக அமைகின்றன. இச் சிறப்புக்கு அவர் தனது படைப்புக் கொள்கையை நிலை நிறுத்திக்கொண்ட தளம் மிக முக்கியமானது. 'பெண்பனை' என்ற அவரது குறுநாவலில் தனது தளத்தினை அவர் தெளிவாக இனங்காட்டிக் கொண்டுள்ளார். இக்கதையில் வரும் விரிவுரையாளர், விமர்சகர் திருமதி சரஸ்வதி விஜயராஜா என்ற பாத்திரத்தின் கூற்றுக்கள் அவரது பெண்கள் சார்ந்த நிலைப் பாட்டினை வெளிப்படையாக அடையாளப் படுத்து கின்றன. (1) நீண்டகால வாழ்வியல் அனுபவங்கள் (2) கல்வியறிவினால் பெற்றுக்கொண்ட ஆழமான அகலமான சமூகப்பார்வை (3) காலங்காலமாகப் பெண்

கள் புறக்கணிக்கப்பட்டும் வந்தமையை நேரடியாகக் கண்டுணர்ந்தமை (4) பெண்கள் சார்ந்த புறக்கணிப்புக்களையும், அடக்குமுறைகளையும் கேள்விக்குட்படுத்த முனையும் சத்திய ஆவேசம் என்பன அவரது பெண்கள் சார்ந்த பார்வைத் தளத்தினை வலுப்படுத்தியிருப்பதை அக் கதையினூடாகத் தெளிவாக அடையாளம் கண்டுகொள்ளலாம். இதனால்தான் சமூகத்தில் பெண்கள் சார்ந்த நிதானமான பார்வையைக் குறுநாவல்களில் அவரால் வெளிப்படுத்த முடிந்துள்ளது.

> 'பெண்கள் தொடர்பான கருத்துக்கள், கொள்கைகளில் மனிதர்கள் ஒரு நேரம் ஓர் ஒப்பனை போட்டுக் கொள்ளக்கூடும். பேசும்போது ஒரு முகம், எழுதும்போது வேறொரு முகம், நடத்தையில் இன்னொரு முகம். ஆனால் எனக்கு எப்போதும் ஒரு முகந்தான். அது ஒப்பனைகள் ஒரேயடியாய்த் துறந்த முகம்!' (பெண்பனை:143)

என்னும் நாவல் வரிகள் அவரது கொள்கைத் தெளிவினை எடுத்துக் காட்டுகின்றன. இதனால் சமூகத்தில் பெண்கள், அவர்களது வாழ்வுரிமை தொடர் பான துல்லியமான கண்ணோட்டத்தினை அவர் எடுத்துக் காட்டியுள்ளார். இதுவே நாவலின் கலைத்துவத்தையும், கருத்து நிலை வீச்சின் கனதியினையும் குறைவு படாமல் பேணிவந்துள்ளது.

பெண்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் ஆண்களது அடக்குமுறைச் சிந்தனைகள், ஆதிக்க மனப்பாங்கு என்பன ஒருபுறம் காரணமாக அமைய, மறுபுறத்தில் பெண்கள் தம்மைப் பற்றிய சிந்தனை யில்லாமல் வாழ்வதும் ஒரு காரணமாக அமைவதை நாவலில் ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார். காலங்காலமாகப் புறக் கணிப்புக்களுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளாகித் தம்மையே உணரமுடியாமல் பெண்கள் வாழ்வதை அரவது நாவலின் பின்வரும் வரிகள் மிகத் தெளிவாக அடையாளம் காட்டுகின்றன.

> "இந்தப் பூக்கள் பூத்திருக்கு. பூக்கிறபோதே, தாங்கள் ஆருக்கோ அர்ப்பணம் செய்யப்படுறதுக்காக, ஒரு நல்ல மாலையாகவேணும் எண்டு தான் கவலைப்படுதுகளே ஒழிய, நல்ல வித்துக்களை உருவாக்க வேணும், நிலத்துக்குப் பசளையாகிப் பயன்படவேணும் எண்டு கவலைப் படுறதில்லை. அது ஒரு வகையிலை பூக்களின்ரை பிழையுந்தான்." (பெண்பனை: 152)

பெண்ணின் முன்னேற்றம் அவர்களது கைகளிலேயே உண்டு; மரபுரீதியான சிந்தனைகளில் இருந்து அவர்கள் மீண்டு வருகின்றபோதே அவர்களது வாழ்க்கை முன்னேற்றமடையும்; தாம் கற்ற கல்வி, அனுபவம் என்பவற்றால் மரபார்ந்த சிந் தனைகளைப் பெண்கள் கேள்விக்குட் படுத்த முனையவேண்டும் என்பதை ஆசிரியர் கதைகளில் வலியுறுத்தியுள்ளார். பெண்களுக்கென்றும் எதிர்பார்ப்புக்கள், ஆர்வங்கள், ஆசைகள் உண்டென்பதை

ஆண்கள் சமூகம் உணர வேண்டும் அல்லது பெண்கள் அவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதைக் கதைகளில் சிந்தனைத் துளிகளாகச் சிதற விட்டுள்ளார். இக்கருத்துக்கள் நாவலில் பாத்திரக் கூற்றுக்களினூடாக கூர்மையாகவும் 'நாசூக்காகவும்' எடுத்துக் காட்டப்படுகின்றனவே தவிர துருத்திக் கொண்டு நின்று நாவலைப் பிரசாரத் தன்மை கொண்டதாக மாற்றியமைக்க வில்லை. இப் பண்பே பிற பெண்கள் சார்ந்த படைப்புக்களிலிருந்தும் அவரைத் தனித்து அடையாளப்படுத்தும் அம்சமாக விளங்குகின்றது.

பாத்திரங்களின் உளப் போராட்டங்களுக்கு முன்னுரிமை தருதல் கோகிலா மகேந்திரனின் குறுநாவல்களில் காணப்படும் மற்றுமொரு தனித்துவமான பண்பாகக் காணப்படுகின்றது. பாத்திரங்களின் மனக் குமைவுகளையும், மன உலைச்சல்களையும், மென்மையான மன வெளிப்பாடுகளையும் மிக நுட்பமாகக் கதைகளில் சித்திரிக்க முயன்றிருக்கின்றார். உளவியல் துறையில் நாட்டமும் புலமையும் கொண்டவர். அது தொடர்பாகக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி வந்தவர். உளவியல் ஆற்றுப்படுத்தல்களில் ஈடுபட்டவர். இற்றை வரை அதனைக் கற்பித்து வருபவர் என்பதால் அவரது எழுத்துக்களில் உளவியல் பார்வை செறிந்து இருப்பதைக் காணமுடிகிறது. மனிதர்களின் நடத்தைகளுக்குப் பின்னாலுள்ள உளவியல் உந்துதல்களை அவர் தெளிவாக அடையாளப் படுத்துகின்றார். பேச்சுக்கள், சிந்தனைகள், செயற்பாடுகள் என்பன மனிதர்களின் உளவியல்களால் தீர்மானிக்கப்படுவதை அவரது பாத்திரங்கள் வெளிப்படையாகப் பேசுகின்றன. பாத்திரங்களின் பல்வகைமையினால் யதார்த்த வாழ்வில் வெவ்வேறு வகையான உள நெருக்கடிகளுக்கு உள்ளாகும் மனிதர்களை வாசகர்களுக்கு அறிமுகம் செய்கின்றார். பாலியல் உந்தல்கள், அழியா மனவடுக்கள், நிறைவேறாத ஆசைகள், யுத்தத்தின் பாதிப்புக்கள், உடல் நலத்துக்குத் தீங்கான பழக்கவழக்கங்கள் எனப் பலவகையான உளவியல் நெருக்கீடுகளுக்கு உள்ளான பாத்திரங்கள் அவரது கதைகளில் வருகின்றன. பாத்திரங்களின் உளவியல் நெருக்குவாரங்கள் சமூகச் சீர்கேடுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் காரணமாவதை அவர் நுட்பமாக வெளிப்படுத்துகின்றார். உளவியல் நெருக்குவாரங்களுக்கு உள்ளாகும் மனிதர்கள் குறித்த அனுதாபமான, கரிசனை நிறைந்த பார்வையை அவரது குறுநாவல்களில் காணமுடிகின்றது. மிக அவதானமாகவும் அக்கறையாகவும் அவர்களை அணுகிப் பேசி அவர்களது உளநெருக்கீடுகளை அகற்ற முனைகின்ற சில பாத்திரங்களையும் அவரது நாவல்களில் அவதானிக்கலாம். 'சந்தனச் சிதறல்கள்' என்னும் அவரது குறுநாவலில் வரும் பின்வரும் பகுதி இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

"அவனது குரல் ஒரு அக்கினிக் கோட்டைக் கிழிப்பதை மேரி அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கையில் தன் பொக்கற்றிலிருந்து ஒரு பிளேட்டை எடுத்துத் தானே தன் கையில் 'சர்' என்று வெட்டினான்

கிரிஸ்ரோபர். அதில் இருந்து வெளி யேறும் குருதியை ஒருவித மகிழ்வுடன் பார்த்துக் கொண்டிருந் தான்.

அவனுக்குள் கூழாகும் வெறியைச் சிறிது நேரம் பார்த்துவிட்டு மேரி சொன்னாள் "வெளிச் சூழலாலை நாங்கள் எல்லாம் நல்லாப் பாதிக்கப் பட்டிருக்கிறம். நாங்கள் ஒருத்தருக் கொருத்தர் ஆறுதல் சொல்லிக் கொள்றதையும் உதவிறதையும் தவிர வேறை ஒண்டும் செய்ய முடியாது" (சந்தனச் சிதறல்கள்:56)

ஆசிரியர் கலைத்துவம் குறைவுபடாத வகையில் உளவியல் பார்வையை குறு நாவல்களில் கொண்டுவருகின்றமை அவரது ஆளுமையின் சிறப்பு எனலாம். பாத்திரங்களின் உரையாடல்கள், மன விபரிப்புக்கள், செயற்பாடுகள் என்பவற்றுக் கூடாக அவர்களின் உளநிலையை ஆசிரியர் தத்துரூபமாக வெளிப்படுத்து கின்றார். தன்னை ஓர் உளவியலாளர் என்றோ உளவியல் குறித்த தனது மேதா விலாசத்தை எடுத்துக்காட்ட வேண்டு மென்றோ அவர் முனையவில்லை. மாறாக உளவியல் நோக்கினை கதைமாந்தர் களுக்கூடாகக் கலந்து வெளிப்படுத்தியமை அவரது குறுநாவல்களுக்குத் தனிக் கவனிப்பைப் பெற்றுத் தருகின்றது.

ஆசிரியரின் நாவல்களில் விஞ்ஞானப் பார்வை கலந்திருப்பது குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதொரு விடயமாகும். விஞ்ஞானப் பாடத்தினைக் கற்றவர், பல ஆண்டுகளாகக் கற்பித்து வந்தவர் என்ற வகையில் அவரது குறுநாவல்களில் விஞ்ஞானப் பார்வை இயல்பாகவே கலந்து வந்திருக்கின்றது. குறிப்பாக மருத்துவம் சார்ந்த பல விடயங்களை 'சந்தனச் சிதறல்கள்', 'வைகறை' என்ற குறு நாவல்களில் காணமுடிகின்றது. இக் கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் மருத்துவத்துறையுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டவர்கள் என்ற வகையில் மருத்துவம் சம்பந்தமான விடயங்களை அவர்கள் வாயிலாக ஆசிரியர் முன்னிறுத்து கின்றார். வாசகர்கள் இலகுவாகப் புரிந்துகொள்ளும் வகையில் அவை எடுத்துக் கூறப்படுகின்றன. இம் மருத்துவ விஞ்ஞானக் கருத்துக்கள் சாதாரணமாக மக்கள் அறிந்திருக்க வேண்டியவைவே. இவற்றினைக் குறுநாவல்களின் கதையம் சத்துக்கு முரண்பாடில்லாமல் எடுத்துக் காட்டியமை ஆசிரியரின் திறன் எனலாம்.

சமகாலத்தில் முனைப்பாக இருந்த சமூகப் பிரச்சினைகளையும் குறு நாவல்களில் ஆசிரியர் வெளிப்படுத்தத் தவறவில்லை. வர்க்க முரண்பாடு, போர்க் காலச் சூழல் அனுபவங்கள், இராணுவ அடக்குமுறை, சமூக ஏமாற்றுக்கள் போலித் தனங்கள், பாலியல் சுரண்டல், பல்கலைக் கழக ராகிங் கொடுமை என்பவற்றையும் நாவல்களில் கொணர்ந்துள்ளார். அவரது குறுநாவல்களில் பேசுபொருள் வேறு பட்டவையாக அமையினும் சமகால சமூகத்தில் முனைப்புற்று நின்ற இப் பிரச்சினைகள் குறித்த யதார்த்த பூர்வமான பதிவினை இவரது குறுநாவல்களில் காண முடிகின்றது. பிரச்சினைகளின் வேர்கள்

அவற்றின் பிரதிபலிப்புக்கள், ஒட்டுமொத்த மக்கள் சமூகமும் அவற்றினால் அடையும் இடர்ப்பாடுகள் முதலானவற்றை ஆர்ப்பாட்ட மில்லாமல் விபரித்துச் செல்கின்றார். நாவலின் கதைப்பின்னலுடன் இயல்பாகப் பொருந்தும் வண்ணம் அவை ஒழுங் கமைக்கப்பட்டிருத்தல் நோக்கத்தக்க தாகும். பிரச்சினைகள் குறித்த தனது சொந்த அபிப்பிராயங்களை, கருத்து நிலைகளை நறுக்குத் தெறித்தாற்போல் வெளிப்படுத்தும் ஆசிரியரின் திறன் விதந்து நோக்கத் தக்கது. 'சந்தனச் சிதறல்கள்' நாவலில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்புச் சூழலில் மக்கள் பட்ட துன்பங்களின் அழியாச் சுவடுகளை உணர்ச்சி வசப்படாது ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார். அது போலவே 'வைகறை' குறுநாவல் இடப்பெயர்வு, விமானத் தாக்குதல், ஷெல் தாக்குதல், மரணங்கள் எனச் சதா போர்க் காலத் துன்பங்களுக்கு முகங்கொடுக்கும் மக்களின் வாழ்க்கையை பிரசார நெடியின்றி இயல்பாக வெளிப்படுத்துகின்றது. பல்கலைக் கழகங்களில் நடக்கும் ராகிங் கொடுமையின் சில பதிவுகளை அடையாளப்படுத்துவதாக 'நிர்ப்பந்தங்கள்' குறுநாவல் விளங்குகிறது. ராகிங் கொடுமைக்குள்ளாகும் மாணவர்களின் மனநிலை பற்றிய கீழ்க்காணும் விபரிப்பு அவரது ஆர்ப்பாட்டமில்லாக் கதை நகர்த்தலுக்கு மிகச்சிறந்த உதாரணம் எனலாம்.

> "ஒவ்வொரு மாணவனும் காது களில் பூ வைத்து... கால் சட்டையில் ஒரு காலை முழங்கால் வரை மடித்து விட்டு... முதுகில் ஏதோ எழுதிய கட தாசிகளை (பட்டங்களா?)க் குத்தி விட்டுக் கொண்டு... அவர்களை அணி நடை நடக்க வைத்திருக்கும் கோலம், பார்க்கச் சிரிப்பாக இருந் தாலும் அந்த மாணவர்கள் மனதில் எவ்வளவு அவதியும் அவமானமும் சங்கடமும் நிறைந்திருக்கும் என் பதை யோசிக்கிறாள்." (நிர்ப் பந்தங்கள்:70)

ஆசிரியர் எழுத்துலகில் மிக நீண்ட கால அனுபவம் கொண்டவர் என்பதால் அவர் குறுநாவல்களில் கையாளும் மொழி நடை மிகவும் செப்பமாக அமைந்திருக் கின்றது. வித்துவத் தன்மையற்ற யதார்த்த பூர்வமான மொழிநடை இது. சுருக்கமாக, தெளிவாக அமையும் உரையாடல்கள், கருத்துச் செறிவு கொண்ட வாக்கியங்கள், தவிர்க்க முடியாமல் கலந்துவரும் பிறமொழிச் சொற்கள், பொருத்தமுற அமையும் குறியீடுகள் என்பன அவரது மொழிநடைக்கு அழகு சேர்க்கின்றன. இடையிடையே கவிதைத் தன்மை வாய்ந்த வர்ணனைகள் குறுநாவல்களில் பிரயோக மாகி அதனை மெருகூட்டுகின்றன.

> "வெளுத்திருந்த வானம். அதற் கிடையில் ஊமைத் துயரமாய் ஒரு குளிர்காற்று" (சந்தனச் சிதறல் கள்:24)

> "முன்னாலே ஒரேஞ்சு மேகம். சூரியன் உதிக்கிறானா? மறையப் போகி றானா? பளபளக்கும் சூரியன்" (பெண்பனை:165)

"தெற்குப் புறத்தில் இருந்த வெங்காயத் தோட்டத்தில் விரித்திருந்த பச்சைப் பாயை யாரோ சுருட்டிக்கொண்டு போய்விட்டார்கள். மஞ்சளைப் பூசிக்கொண்டு விழிக்கிறது அது." (பெண்பனை:150)

கதை நகர்த்தலுக்கு மிக அவசியமானது எனக் கருதத்தக்க அளவு பாத்திரங்கள் குறுநாவல்களில் அறிமுகமாகின்றன. அவை பேச்சுக்களாலும், செயற்பாடுகளாலும் தமது இயல்பான மனவெளிப்பாட்டினை எடுத்துக் காட்டுவதைக் காணலாம். பாத்திரங்களைக் கதைகளில் அறிமுகப்படுத்தும் ஆசிரியரின் இலாவகம் தனித்து நோக்கத்தக்கது. பாத்திரங்கள் பற்றிய நீண்ட வர்ணனைகள், விபரிப்புக்களைத் தவிர்த்து குறுநாவல்களில் அவை இயங்கும் முறை கொண்டே அவற்றின் குணாதிசயங்களை ஆசிரியர் வாசகருக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

கதைப் பின்னலைப் பொறுத்தமட்டில் இலகுவான முறையினை அவர் பின்பற்றியுள்ளார். பொதுவாகவே அவரது குறுநாவல்கள் தொடக்கம், வளர்ச்சி, முடிவு என்ற வகையில் நகர்கின்றன. பின்நோக்கு, நனவோடை எனும் உத்திகளும் ஆங்காங்கே வந்து செல்கின்றன. 'பெண்பனை' குறுநாவலில் பனையொன்றின் பார்வையொன்றின் மூலம் தலைமைப் பாத்திரத்தின் வாழ்வியலை எடுத்துக்காட்ட முயன்றிருக்கின்றார். சிக்கலை ஏற்படுத்தாத கதைப்பின்னல் எத்தரத்திலுள்ள வாசகருக்கும் பொருத்தமானதாக அமைந்திருக்கின்றது.

ஆக, கோகிலா மகேந்திரனின் ஆளுமையின் மற்றோர் வெளிப்பாடாக இக் குறுநாவல் தொகுதி வெளிவந்திருக்கின்றது. கருத்துநிலை வெளிப்பாடு, கதைப் பின்னல் போன்றவற்றில் இக்குறுநாவல்கள் தனித்துவம் கொண்டனவாக அமைந்துள்ளன. அத்துடன் ஆசிரியரது பெண்கள் சார்ந்த முற்போக்கான கண்ணோட்டம், உளவியல் பார்வை, விஞ்ஞான அணுகுமுறை என்பனவும் இவற்றுக்குக் கனதியை வழங்கியுள்ளன. மொழிநடை, பாத்திரவார்ப்பு என்பனவும் கச்சிதமாக இவற்றில் பொருந்தி வந்துள்ளன. குறிப்பாக 'சந்தனச் சிதறல்கள்', 'வைகறை' என்னும் குறுநாவல்கள் இரண்டும் கலைத்துவப் பெறுமானம் மிக்கவை. ஆசிரியரின் குறுநாவல் படைப்பாளுமைக்கு முத்தாய்ப்பாக விளங்குவன. ஆசிரியர் குறுநாவல்களை இணைத்து நாவலாக மாற்ற முற்பட்டிருக்கும் முயற்சி பாராட்டத்தக்கது. ஆனால் நாவல் என்னும் இலக்கிய வடிவத்தினை இம்முயற்சி நெருங்கியுள்ளதா என்பது சந்தேகமே. எனினும் புதிய முயற்சியொன்றினைத் துணிகரமாக முன்னெடுத்த அவரின் உள்ளுரம் பாராட்டத்தக்கது.

**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
B.A Hons. M.Phil (Tamil), B.A, M.A (English Literature)
சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
15-03-2020

* * *

**மூத்த எழுத்தாளர் ஒருவரின் பார்வை**

# கோகிலா மகேந்திரனின் சிறுகதைகள் ஒரு நோக்கு

எழுத்துத்துறையில் பெண்களுடைய முயற்சிகள் திருப்தி தரத்தக்கதாக இல்லை என 1964ம் ஆண்டு ஈழத்து இலக்கிய வளர்ச்சியை அளந்த இரசிகமணி கனக செந்திநாதன் கவலை கொண்டார். இருப தாண்டுகளுக்குப் பின் இன்று ஒரு சில பெண் எழுத்தாளர்களின் படைப்புக்கள் ஈழத்து இலக்கியப் பரப்புக்குக் கணிசமான பங்களித்துத் திருப்தியைக் கொடுத்துள்ளன. இப்பெண் எழுத்தாளர்களில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒருவர் கோகிலா மகேந்திரன். 1975ஆம் ஆண்டு தொட்டு இற்றை வரை படைக்கப்பட்ட கோகிலாவின் ஆக்கங்கள் இதற்குச் சான்றாகும்.

முன்னணியில் நிற்கும் பெண் எழுத் தாளர் என்பது மட்டுமல்ல, தலை முறை எழுத்தாளர்களின் சிறப்பியல்பு களையும் நாடித்துடிப்பையும் இனம் காட்டும் ஒரு சிறுகதை எழுத்தாளராகக் கோகிலா மிளிர் கிறார் என்றால் அது மிகையாகாது. அறுபது எழுபதுகளின் சிறுகதைப் போக்கும் நோக்கும் எண்பதைவிட வேறுபட்டது. வாழ்க்கை அநுபவங்களைப் பலவகையான விரிவுபட்ட கருப் பொருளாகக் கையா ளுதல், மனித உறவுகளை உளவியல் பாங்கில் உற்று நோக்கல், வாழ்க்கைக்கும் இலக்கியத் திற்கும் உள்ள அத்தியந்தப் பிணைப்பை உணர்ந்து வாழ்க்கை அநுபவங்களை இலக்கியமாக்கும் திறமை, உருவமும் உள்ளடக்கமும் பின்னிப் பிணைந்திருக்கும் கலையம்சம் ஆகிய எண்பதிற்குரிய பண்புகள் அனைத்தும் கோகிலாவின் கதைகளில் முற்று முழுதாக இல்லாவிட்டாலும், குறிப்பிட்டுக் கூறுமள விற்கு அமைந்திருக்கின்றன.

மனித சொரூபங்கள், முரண்பாடுகளின் அறுவடை, அறிமுகவிழா ஆகிய நூல்களில் இருந்து கோகிலாவின் முப்பது சிறுகதை களை நாம் படிக்கக் கூடியதாக இருக்கிறது. எல்லாக் கதைகளின் ஊற்றும் மனித முரண் பாட்டின் அடியிலிருந்து உருவெடுக்கின்றது. ஆகவே மனித வாழ்க்கையை ஊன்றி அவதானிக்கும் ஆற்றல் தரமான ஓர் எழுத்தாளரின் பண்பு - கதைகளில் நீக்கமற நிறைந்திருக்கிறது.

பள்ளிச் சிறுவர்களின் மனப்பாங்கு, ஆசிரிய சமூகம், சாதிப்பாகுபாடு, சீதனத் தொல்லை, வறுமையின் கொடுமை, சமூ கத்தில் புரையோடியிருக்கும் மூடப் பழக்க வழக்கங்கள், தலைமுறை இடை வெளி, கால மாற்றம், பெண்களின் விழிப்புணர்வு ஆகியவற்றைக் கதைப் பொருளாக்கி விரிவு பட்ட பார்வையை வீசியிருப்பது பாராட் டப்பட வேண்டிய தொன்றாகும்.

பலவிதக் கருப்பொருள்களைக் கொண்டிருப்பதால் வேறுபட்ட குண இயல்புகளைக் கொண்ட பாத்திரங்களை இவரது கதைகளில் தரிசிக்க முடிகிறது. குணவியல்புகள் வேறுபட்ட பல பாத்திரங்களைப் படைக்கும் போதும் கோகிலா பாத்திரப் படைப்பில் கணிசமான வெற்றி பெற்றுள்ளார். பாத்திரங்களின் மன உணர்வை உளவியல் ரீதியில் நோக்குவது இவரது பாத்திரப் படைப்பின் வெற்றிக்குத் துணை நிற்கிறது. பாத்திரங்களின் அக உலகைச் சித்திரிக்கும் எழுத்தாளர்கள் பொதுவாகப் பாத்திரங்கள் வாழும் புற உலகினைச் சித்திரிப்பதில் அதிக ஈடுபாடு கொள்வதில்லை. ஆனால் கோகிலா புற உலகக் காரணிகளையும் தேவையான அளவு இணைத்துக்காட்ட முனைந்துள்ளார். பாத்திரங்களின் குண சித்திரங்களையும் சூழலையும் அறிந்து கொள்வதன் மூலம் நாம் வாழும் சமுதாயத்தின் இயக்கப்பாட்டைப் புரிந்து கொள்கிறோம்.

கோகிலாவின் பிரச்சினைகளை அணுகும் முறை (approach) யில் ஒரு புதுமையும் எதிர்கால வாழ்வில் நம்பிக்கையூட்டும் பான்மையும் விரவியிருப்பது விதந்து பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும். அறிமுக விழாவில் இருவர் இணைந்து எழுதும் இறுதிக் கதையான 'அந்தரங்கம் நினைவுகளில்' கதையைத் தொடுத்துச் சென்று முடிக்கும் விதம் இதற்கோர் நல்ல உதாரணமாகும். ஆசிரியரின் கதைகளில் காணப்படும் சொற் பிரயோகம் - குறிப்பாகப் புதிய சொற்களைப் புகுத்தியமை - உயிர்த்துடிப்பான உரையாடல்கள் ஆகியவை இவரது நடைக்கு அழகு சேர்க்கின்றன.

கோகிலா மகேந்திரனின் இலக்கிய உழைப்பும் ஊக்கமும் உற்சாகமும் ஈழத்து இலக்கிய வரலாற்றில் உரிய ஓர் இடத்தைத் தேடிக்கொள்ளும் என்பதில் சந்தேகம் இல்லை.

கோகிலாவின் இலக்கியப் பணி வாழ, வளர மனமார வாழ்த்துகிறேன்.

1984

**புலோலியூர் க. சதாசிவம்**

* * *

**கோகிலா மகேந்திரனின் நாடகங்கள் – நெறியாள்கையும் எழுத்துருவும்**

- இருட்டுக்குள் சுருட்டி -(தெல்லிப்பழை துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையின் 15வது ஆண்டுவிழா, இராமநாதன் கல்லூரி மண்டபம் - 1995)
- மல்லிகா மாப்பிள்ளை ஸ்ரோஸ் - (தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை 1998)
- சந்தோஷம் - (கைதடி முதியோர் இல்லத்தில் 1999)
- இலக்குப்புள்ளி -(வடக்குக் கிழக்கு கல்வி அமைச்சின் செயலாளரை வரவேற்கும் நிகழ்வு, வட இல. சங்கீத சபை ஏற்பாடு 1999)
- கேள்விகளின் முழக்கம் -(தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ் சிட்னி 24.03.2012)
- விடை தேடும் வினாக்கள் -(AMAF-நடத்திய முத்தமிழ் மாலை Orion function Centre கம்சி சிட்னி 01.12.2012)
- சேவல் அழும் -(அரங்காடல் 2013 நிகழ்வு Riverside theatre பரமற்றா சிட்னி 26.10.2013)

# A criticism about a speech

Dear Kohila,

I write this to congratulate you on the brilliant speech you made the other day. I have heard you before - on many occasions, but this was different. The speech was well - prepared and well presented. Above everything it came from the heart and sounded sincere. It was the best speech for the day.

I was rather reluctant to involve you in the function. I thought it was not proper to ask you soon after your bereavement. But you allayed my fears and rose to the occasion. That speaks for your personality.

Thank you for everything.

**S. Pathmanathan (Sopa)**
Principal
23.11.1999 Palaly Teacher's College.

* * *

**கோகிலா மகேந்திரனின் நாடகங்கள் : நடிப்பும், நெறியாள்கையும், எழுத்துருவும்**

- பௌர்ணமி நாள் - (வட. இல. சங்கீத சபையின் ஆசிரியர்தரத் தேர்வுக்கு - 1991 இந்து மகளிர் கல்லூரி)
- மீண்டும் நிலவு பொழியும் -(ஆசிரியர்தினம், அம்பனைக் கொத்தணி ஆசிரியர், மகாஜனா மண்டபம் 05.10.1991)
- ஆசிரியவாண்மை - (ஆசிரியர் தினம் மருதனார்மடத்தில் இயங்கிய மகாஜனா மண்டபம் 1994)
- முரண்பாடுகள் - (தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்பின் ஆசிரியர் கல்வித்துறை யூனிசெப்புடன் இணைந்து யாழ் மத்திய கல்லூரியில் நடத்திய முரண்பாட்டுத் தீர்வுக் கருத்தரங்கின் இறுதிநாள் மேடையேற்றம் - 1997)
- ஞானவிளக்கு - (யூனியன் கல்லூரி மண்டபம், ஆசிரியர் தினப் போட்டிக்காக தெல்லிப்பழை சைவப்பிரகாசா ஆசிரியர்களால் மேடையிடப்பட்டு முதற்பரிசு பெற்றது. 1997)
- கேள்விகளின் முழக்கம் -(வட. இல. சங்கீதசபையின் நாடக கலாவித்தகர் பட்டத்துக்கு 2002)
- மீண்டும் தொடங்கும் மிடுக்கு -(மகாகவியின் கவிதையின் விளக்கமாக 12வது எழுத்தாளர் விழாவில் செய்யப்பட்டது. பிரிஸ்ரன் நகர மண்டபம், மெல்பேர்ன், அவுஸ்திரேலியா 13.05.2012)

# நாடகச் சிகிச்சை முறையை அரங்கிற்கு அறிமுகம் செய்த திருமதி கோகிலா மகேந்திரன்

பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த போதே உளவளத் துறையில் அதிக தேடலையும், அரிய ஆங்கில நூல் வாசிப்பினையும் ஒரு ஆர்வத்துடன் மேற்கொண்டவர் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள்.

ஆங்கில உளவியல் நூல் வாசிப்பு உளவியல் தேடலை விரிவாக்கிக் கொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது. உள வியற் கல்வியை முறையாகக் கற்றுத் தேர்ந்து உளவியல் ஆலோசகரானார். (1993) கல்விப் புலத்தில் பல உளவளத் துணை அணியினருக்கு பயிற்சியாளராகப் பணியாற்றியவர்.

ஓவியச் சிகிச்சை முறையைக் கற்றுள்ள இவர் மான்செஸ்டர் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஜேம்ஸ் தொம்சனிடம் மந்திரக்கடை (Magic shop) என்கின்ற நாடக சிகிச்சை முறையையும் இத்தாலியில் மனவடுவுக்குரிய சிகிச்சை முறையையும் கற்றுள்ளார். அரங்கியல் ஆர்வமும் அனுபவமும் மிக்கவரான திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள், போர்ச் சூழலில் வாழுகின்ற, போரினால் பாதிக்கப்பட்ட உளத்தாக்கத்துக்கு உள்ளான பெரியவர்கள், பெண்கள், பிள்ளைகள் ஆகியோருக்கு மந்திரக்கடை என்கின்ற நாடகச் சிகிச்சை முறையை அறிமுகப்படுத்தி வந்துள்ளார். இவரிடம் பயிற்சி பெற்ற உளவளத்துறையினரும் அரங்கியற் கலைகளைப் பயன்படுத்திக் குணமடையச் செய்யும் முறைகளைப் பயிற்றுவித்துள்ளனர்.

நாடக சிகிச்சையில் உளமறி நாடகம், கலந்துரையாடல் அரங்கு, படிம அரங்கு, தனி நடிப்பு போன்றவற்றையும் பயிற்றுவித்துள்ளார். பேராதனைப் பல் கலைக்கழகத்தில் மருத்துவப் பிரிவில் கற்று, பின் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இணைந்து பயிற்சி பெற்று பொலிகண்டி தமிழ்க்கலவன் பாடசாலை யில் விஞ்ஞான ஆசிரியையாகப் பதவி ஏற்றார்.

கீரிமலை நகுலேஸ்வர வித்தியா சாலை, மகாஜனக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியப் பணியாற்றி தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயத்தின் அதி பராகப் பதவியேற்றார். மகாஜனக் கல்லூரியின் மாணவியாக இருந்த போதே கல்லூரி மேடையேற்றிய 'கோமகளும் குருமகளும்' என்னும் நாடகத்தில் பிரதான பாத்திரமேற்று நடித்து சிறந்த நடிகைக்கான பரிசையும் பெற்றுக் கொண்டார்.

பல்கலைக்கழகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய நாடக டிப்ளோமா பயிற்சி நெறியில் இணைந்து

பேராசிரியர்களான சு.வித்தியானந்தன், கா.சிவத்தம்பி, சி. மௌனகுரு, திரு. வி. வி. வைரமுத்து, குழந்தை ம.சண்முக லிங்கம் போன்றோரிடம் பயின்றிருக்கின்றார்.

ஆசிரியராக இருந்த காலங்களில் அக்கல்லூரிகளின் இல்ல நாடகப் போட்டி களில் இவர் எழுதி, நடித்து, மேடை யேற்றிய நாடகங்கள் இவரது அரங்கியல் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளன. நடிகை யாக, நாடகாசிரியராக, நெறியாளராக, பயிற்சியாளராக அரங்கியலின் பல் பரிமாணங்களிலும் பிரகாசித்தவர் கோகிலா அவர்கள். தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் செயலாளராக எண்பதுகள் முதல் பணியாற்றிய போதும் சோலைக் குயில் அவைக்காற்றுக் களத்தின் தலை வராகச் செயலாற்றிய போதும் நாடகமே மூச்சாகப் பணியாற்றி மாணவர்களின் அரங்கயீர்ப்புப் பணிகளை முன்னெடுத்தவர் இவர்.

மகாஜனக் கல்லூரி மேடையேற்றிய "பட்டங்கள் மீண்டும் பறக்கும்" "தான்கெடு பள்ளம்" "பாரதி வருகிறான்" ஆகியவையும் ஆசிரியர்தின விழாவுக்காக வெவ்வேறு காலகட்டங்களில் மேடை ஏற்றப் பட்டவையும் தேசிய கல்வி நிறுவனத்தின் முரண்பாட்டுத் தீர்வு என்னும் தொனிப் பொருள் செயலமர்வுக்காக செய்யப்பட்ட "முரண்பாடுகள்" (1997) எனும் நாடகமும் இன்னும் பலவும் இவரது தயாரிப்புக்கள்.

இணுவில் மத்திய கல்லூரியில் "பாலாய் நிலவு பொழியும்" என்னும் கவிதை நாடகத்தை மேடையேற்றினார் (1999). வட இலங்கைச் சங்கீத சபையின் ஆசிரியர் தேர்வுக்காக 'பௌர்ணமி நாள்' என்னும் நாடகத்தை எழுதி, நெறியாள்கை செய்து பிரதான பாத்திரத்தில் நடித்து அச்சபையின் நாடகமும் அரங்கியலும் எனும் பாடத் திட்டத்தில் ஆசிரியர் மட்டத் தேர்வில் வெற்றியீட்டிச் சங்கீத சபாவின் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் வாய்ப்பினையும் பெற்றுக் கொண்டார். (1992)

யாழ். பல்கலைக்கழகத்தின் 'நாடகமும் அரங்கியலும்' பாடத்துக்கான வருகைதரு விரிவுரையாளராக இரண்டு வருடம் பணியாற்றியுள்ளார். இவருடைய எட்டு நாடகங்களை உள்ளடக்கிய தொகுதி ஒன்று 'குயில்கள்' என்னும் பெயரில் 2001ல் நூலுருவாகியது. 2005ல் மறுபதிப்பும் பெற்றுள்ளது. 'கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு' என்னும் நூல் 1997இலும் 'அரங்கக் கலையில் ஐம்பதாண்டு' என்னும் கலையரசு ஏ.ரி.பொன்னுத்துரையின் அரங்கியல் வாழ்வு பற்றிய நூல் 2003லும் வெளிவந்துள்ளன.

அரங்கியலுக்கு அப்பால் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் ஈழத்தின் தரமான சிறுகதையாளர்களின் முன் வரிசைக்காரர். 1972ல் சிறுகதை எழுத ஆரம்பித்தவர். ஆறு சிறுகதைத் தொகுதி கள் வெளிவந்துள்ளன. இரண்டு நாவல் களும் எழுதியுள்ளார்.

- துயிலும் ஒரு நாள்கலையும் - 1986
- தூவானம் கவனம் -1989

கல்வித்துறையில் ஒரு விஞ்ஞான ஆசிரியராக ஆரம்பித்து, அதிபராக உயர்ந்து, பிரதிக் கல்விபணிப்பாளராக உயர்பதவி வகித்தவர். தன்னுடைய அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியத்துவத்துக்காக இரண்டு முறை 'நல்லாசான்' விருது பெற்றிருக்கின்றார். சிறுகதை, நாவல்,

நாடகம், உளவியல் ஆகிய துறைகளில் பன்னிரண்டு நூல்களை வெளியிட்டிருக்கும் கோகிலா பிறந்த ஊர் விழிசிட்டி. பிறந்த நாள் 17.11.1950. பெற்றோரிட்ட பெயர் கோகிலாதேவி. இவருடைய எழுத்துலக நாடக உலக வெற்றிகளுக்குத் தோள் கொடுப்பவர் இருடைய கணவர் மகேந்திர ராஜா அவர்கள். ஆசிரியராக, அதிபராக கடமையாற்றியவர். திருமணத்தின் பின் கோகிலாதேவி கோகிலா மகேந்திரன் ஆனார்.

அந்தப் பெயரே நிலைத்து விட்டது. கோகிலா மகேந்திரன் அவர்களுடைய புதல்வர் பிரவீணன். ஒரு கவிஞனாகக் கவனம் பெறுகின்றவர். அம்மாவின் சமூக செயற்பாடுகளுக்கு உற்றதோர் துணையாக இருப்பவர் பிரவீணன்.

**தெளிவத்தை ஜோசப்**
**தாய்வீடு**
**டிசம்பர் 2012**

* * *

**கோகிலா மகேந்திரனின் நாடகங்கள்**

**எழுத்துரு மட்டும்:-**

பெண்ணின் எதிரி - வானொலி ஒலிபரப்பு - 08.07.84

**நெறியாள்கை மட்டும்**

கோமகளும் குருமகளும் - இல்ல நாடகப் போட்டி மகாஜனா 1982
(கவிஞர் செ.கதிரேசர் பிள்ளையின் எழுத்துரு)

**தயாரிப்பு மட்டும்**

- செல்லிடத் தொலைபேசி - (இணுவில் மத்திய கல்லூரி 28.12.2013, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம் 30.01.2014, கொழும்பு தமிழ்ச்சங்கம் 15.03.2014, வேலணை மத்திய கல்லூரி 05.02.14)
- தண்ணீர் - இணுவில் மத்திய கல்லூரி - 28.12.2014

*Working for a better world for children*

**Save the Children**

Mrs. K. Mahendran
Deputy Director of Education,
Department of Education,
Zone 2.

October 22nd 1999

Dear Mrs. Mahendran.

I would like to take this opportunity to thank very much for agreeing to be an evaluator in the recent evaluation of the Principals and teachers CRC Awareness training I will forward a copy of the report once I receive it.

Your participation and input to both the evaluation and the training of the adolescent counsellors are essential for the effective implementation of our programmes and very much appreciated.

Again, thank you for your assistance.

Yours sincerely

Libby Kennard
District Coordinator

## Translation - oral

12.11.15 The speech of Amarkarki - Sai Studies Co-ordinator - South Asian countries - from Nepal - at Sai school Manipay

12.01.16 Shanthiham - Dr. Anna's Talk

10.02.16 Mr. James from ABC Radio / TV from Australia with resettled families from India

08.04.16 Seminar on trauma counseling - talk by Dr. Robin Gordon Brown - Consultant psychiatrist -UK - Faculty of Medicine lecture hall

25.05.17 }
27.05.17 } Anula Nikapotha's - Talk at Shanthiham

**வடக்கு மாகாணக் கல்வி அமைச்சில் யூனிசெப் அனுசரணையுடன் நடந்த நேர் வகுப்பறை முகாமைத்துக் கருத்தரங்கத் தொடரில் வளவாளர் பயிற்சியின் போது வளவாளர்களால் எழுதப்பட்ட குறிப்புகள்**

- தெளிவான கருத்து முன்வைப்பு
- உன்னத ஆளுமை மிக்கவர்
- அறிவைத் தேடுபவர்
- அறிவுப் பொக்கிஷம்
- பெண்ணினத்திற்குப் பெருமை சேர்ப்பவர்
- சிறந்த ஆளுமையின் வடிவம்
- தெளிந்த அறிவு
- சிறந்த ஆளுமை
- ஞான முடையவர்
- அதீத திறன் கொண்டவர்
- Wonderful patience organization and communication
- சிறந்த எழுத்தாற்றல் உடையவர்
- திரை கடலோடியும் திரவியம் தேடுபவர்
- அமைதியான தோற்றம் கொண்டவர்
- மிகச் சிறந்த படைப்பாளி
- நல்ல பெண்மணி
- நல்ல ஆளுமை
- நேர் கொண்ட பார்வை
- சிறந்த ஞானம்
- விளக்கமான அறிவாற்றல் உடையவர்
- ஆழமானவர்
- சிறந்த ஆளுமை மிக்க பெண்ணியவாதி
- சிறந்த ஆளுமையும் தெளிந்த அறிவும் உடையவர்
- தேடலுடன் பிறருக்கும் தனக்கும் வழங்குவதில் சிறந்தவர்
- சிறந்த நடிகர்
- சமநிலை ஆளுமை உடையவர்
- அதிகமாகச் சிந்திப்பவர்
- நல்லவர்
- எனது பயணத்தின் திசை காட்டி நீங்கள்
- சிறந்த வழிகாட்டி
- உன்னதமானவர்
- சிறந்த ஆளுமை உடையவர்
- நிதானமான கற்பித்தல் திறன் உடையவர்
- உன்னதமான ஆற்றல் மிக்கவர்
- சிறந்த ஆளுமை மிக்கவர்
- வழி காட்டும் பொக்கிஷம்
- மங்கையர் திலகம்
- அறிவுச் சிகரம்
- பின்பற்றக் கூடிய ஆளுமை உடையவர்
- சிறந்த உளவள ஆலோசகர்
- ஆளுமையின் சிகரம்
- நிறைகுடம்
- சாதனைகள் நிலை நாட்டியவர்
- சிறந்த அறிவு ஞானம் நிறைந்தவர்

2016

**வடக்கு மாகாணக் கல்வி அமைச்சில் யூனிசெப் அனுசரணையுடன் நடந்த நேர் வகுப்பறை முகாமைத்துக் கருத்தரங்கத் தொடரில் வளவாளர் பயிற்சியின் போது வளவாளர்களால் எழுதப்பட்ட குறிப்புகள்**

---

3/16 - TOT training for Positive Classroom management  Kohila Mahendran.

1. தெளிவான கருத்து கூர்மை  * உன்னத ஆளுமைமிக்கவர்
2. அறிவைத் தேடுவோர்.  * அறிவுப் பொக்கிஷம்
3, திறமை போராடும் திராவிடப் பெருமை
பெண்ணினத்திற்கு பெருமை சேர்ப்பவர்  * சிறந்த ஆளுமையின் சிகரம்
4) சிறந்த ஆளுமை
5). தெளிந்த அறிவு  *Wonderful patience, Organisation + communication THANKS! *
[illegible]
6) அறிவின் [illegible]

2) [illegible] உடையவர்
அமைதியான தெளிவும் கொண்டவர்  மிகச் சிறந்த பண்புடன் நல்ல செயல்கள். நல்ல ஆசிரியை.
நேர் கொண்ட பார்வை (பார்வை).
சிறந்த ஞானம்  தொடரும், புதுமைப் பண்பு சிறந்தவர்.
மென்மையான அணுகல் உடை
ஆழமானவர்
சிறந்த ஆளுமையின் வெளிப்பாடு
சிறந்த ஆளுமை, தெளிந்த அறிவு உடையவர்
சிறந்த நடிகர்
சோர்வில்லா ஆளுமை உடையவர்
அதிகமாக சிந்திப்பவர்.
நல்லவள்
ஒரு பயணத்தின் திசைகாட்டி.
சிறந்த வழிகாட்டி
உன்னதமானவர்
சிறந்த ஆளுமை உடையவர்
நிதானமான கற்பித்தல் திறன் உடையவர்
உன்னதமான அன்பு மிக்கவர்
சிறந்த அறிவாளி - நன்றியுடன்.
சிறந்த ஆளுமை மிக்கவர்
வழிகாட்டும் பொக்கிஷம்
மதிப்புமிகு திலகம் / அறிவுக் களஞ்சியம்.
பின்பற்றக் கூடிய ஆளுமையுடையவர்.
சிறந்த உளவள ஆலோசகர்
ஆளுமையின் சிகரம்,
நிறைகுடம்
சாதனைகள் நிலைநாட்டியவர்
சிறந்த அறிவு ஞானம் நிறைந்தவர்

## மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை க.பொ.த சா/த மாணவர் - 2015

ஆசிரியருக்கு எனது பணிவான வணக்கம்

[illegible]

நன்றி! நன்றி! நன்றி!

எனது கௌசல்யா டீச்சரிற்கு,

எனது அன்பான நன்றிகள். நீங்கள் எனக்கு விஞ்ஞானம் சொல்லித் தந்தீர்கள். அதுமட்டுமல்லாது பல அன்பான அறிவுரைகளையும் எமக்கு தந்தீர்கள். எனவே நாங்கள் படிப்பித்த பாடங்களை உள்வாங்கியதை விட நாங்கள் கூறிய ஏராளமான புதுமையான அற்புதமான சிந்தனைகளை உள்வாங்கியதே சிறந்தது. [illegible] பல விதமான உண்மைகளையும் அன்பான அறிவுரைகளையும் வழங்கியமைக்கு நன்றி டீச்சர். உங்களிடம் நான் படித்ததை என் நினைக்கும் போது எனக்கு சந்தோசமாக இருக்கின்றது. உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

அன்புடன் உங்கள்
மாணவி
M. [illegible]

[illegible]

J/ Vigneswara College,
Karaveddy,

Mrs. Kokila Mahendran,
Consultant,
Provincial Psychological Resource Centre

Dear Madam,

**Appreciation for conducting 30 hrs Seminar on "Positive Classroom Management"**

We would like to drop you a note to thank you for the opportunity given us to attend the professional development workshop on "Positive Classroom Management" from 10th March to 09th June, 2017.

The workshop sessions were both informative and inspirational also we are looking forward to apply the aspects we have learnt in our classrooms. We feel confident that the conducted course will really improve our efficiency and the perception on our students.

We really appreciate the time you have spent with your other colleges and the effort you all have put on us throughout the sessions. We hope that the changes are going to streamline the teaching methods and techniques towards the children with the positive manner.

We thank you all again for taking your valuable time to invest on us.

Thank you.

Sincerely,

.......................................................

Principal,

K.M.KANAGALINGAM
M.phil(Ed),M.Ed,Dip.in Ed,B.A,Sci.Trd.
PRINCIPAL
J/VIGNESWARA COLLEGE
KARAVEDDY

**மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை**
**சம்பவப் பதிவேட்டிலிருந்து...**

.05.2005 Participated as chief guest in the annual Prize giving of the school. Mr. R. Pathilingam – the former Principal was the special guest. The function started in time & the children were in order throughout. The Principal's report was precise and correct. It showed the development of the school. Of the cultural activities, the dance performed by Thevika was of high quality. I appreciate & congratulate the Principal Mrs. S. Sivamalar, the teachers & the students of the school for working hard to make the function a successful one.

[signature]
DDE-Edu

**CBT பயின்று சான்றிதழ் பெற்றோர் – 2019 (6 மாதம்)**
**(06-04-2019 – 05-09-2019)**

01. செல்வி பு.இளையதம்பி
02. செல்வி சி. கிருஷாளினி
03. திரு. பா.சிவதர்சன்
04. திருமதி ஜெ. சிவாஜினி
05. திருமதி. ந.யோகராணி
06. செல்வி அ. சிவாணி
07. செல்வி க. சங்கவி
08. செல்வி கு. புவனராணி
09. திருமதி. ச. தவராசா
10. திருமதி. ஆ. நாகேந்திரன்
11. திரு. சி. ஜீவமுகுந்தன்
12. செல்வி அ. நளாயினி
13. திரு. க. கணேசராஜா
14. திருமதி. பா. பவன்

# மெதுவாகக்
# கதவு திறந்தவை

කලාභූෂණ රාජ්‍ය සම්මාන ප්‍රදානෝත්සවය - 2014

கலாபூஷணம் அரச விருது வழங்கும் வைபவம் - 2014

Kalabhushana State Award Ceremony - 2014



**On 14th December 2014, At BMICH Colombo**

நாடகம்

# ஐந்தெழுத்து

**ஹோம்புஷ், சிட்னி சைவப் பாடசாலை மாணவர்களால் நடிக்கப்பட்டது.**
**கலைக்கோலம் நிகழ்வு - 2014**

எழுத்துரு :- கோகிலா மகேந்திரன் - திரு. K.K. சோமசுந்தரம் அவர்களின் எண்ணக்கரு
நெறியாள்கை :- பிரவீணன் மகேந்திரராஜா +கோகிலா மகேந்திரன்
தயாரிப்பு :- திருமதி, சி.ரோகினி

(பாடகர் குழு இரண்டு பிரிவாய் வரிசையில் வந்து மேடையில் ஏறி 'சைக்கிளோராமா' ஓரமாக இடைவெளி விட்டு நிற்கிறது. பாடகரில் ஒருவர் முன்வந்து DC யில்)

பாடகர் 1:- வணக்கம் இது ஐந்தெழுத்து நாடகம் (திரும்பிப் போதல்)

(ஒருவர் 'சி' என்ற எழுத்தையும் அடுத்தவர் 'வா' என்ற எழுத்தையும் அடுத்தவர் 'ய' என்ற எழுத்தையும் மற்றவர் 'ந' என்ற எழுத்தையும் அடுத்தவர் 'ம' என்ற எழுத்தையும் கொண்டு மேடையில் கண்டபடி ஓடி இறுதியில் ஒரு வரிசைக்கு வந்து ஐந்தெழுத்தைக் காட்டிவிட்டு நீங்குதல்)

பாடகர்:- (ஆடியாடி)
நாடகம் நல்லதோர் ஊடகம் தம்பி
நன்மையும் தீமையும் சொல்லிடத் தம்பி
ஆடலும் பாடலும் இணைந்தது தம்பி
அருமையான விளையாட்டுத் தம்பி
இசையுண்டு; உரையுண்டு;
இசையுண்டு, உரையுண்டு சித்திரம் உண்டு
எல்லா விதமான கலைகளும் உண்டு
நிகழ்த்துவோர் சுவைப்போர் ஒன்றாகக் கூடி
நிறைவான எதிர்கால நன்மையை நாடி
சிறுவரின் நாடகம் சிறப்பாகச் செய்ய
சிந்தனையில் நல்ல கருத்துக்கள் தோன்ற
மேடையில்; அலங்காரம்;
மேடையில் அலங்காரம் மிகையாக உண்டு
ஆடைகள் பலவிதம் அழகிது பாரும்

சாடையாய்த் தமிழிலே மழலையும் உண்டு
சோடை போகாதெங்கள் நடிப்புமே இங்கு
சிறுவரின் நாடகம் சிறப்பாகச் செய்வோம்
பெறுமதி கண்டு ரசிப்பீர் எம்மை.

**(ஏ.ரி.பொ அவர்களின் தாளக்காவடி பாடலைத் தழுவியது)**

உரை 1:- நாடகம் நடிக்கிறதெண்டால் ஒரு கதை வேணும்

உரை 2:- புராணக் கதை, இதிகாசக் கதை

உரை 3:- சிறுவர் நாடகமெண்டால் ஒரு பஞ்சதந்திரக் கதை

உரை 4:- சமூக நாடகமெண்டால் ஒரு குடும்பக் கதை

உரை 5:- நாங்கள் ஒரு நாடகம் கொஞ்சம் வித்தியாசமாச் செய்து பாப்பம்

உரை 6:- சமய வகுப்பிலை படிச்சதை வைச்சு...

உரை 7:- இது திருக்கைலாய மலை. சிவபிரானும் பார்வதி அம்மையும் அமர்ந் திருக்கிறார்கள்.

(வேத கோஷம் ஒலிக்கிறது. சாம்பிராணிப் புகை பரவுகிறது. பார்வதி வந்து சிவன் அருகில் அமர்கிறார்.)

பார்வதி:- நாதா! பூலோகத்தில் தவம் செய்வோரின் தவாக்கினியால் நாம் தகிக்கப் படுகிறோம். என் மலர் மாலை வாடுகிறது.

சிவன்:- உயிர்களின் தாயாகிய உன் கூந்தலும் தவாக்கினியால் கருகிப் போகிறது.

பார்வதி:- பிரபு! நடராஜனின் தாண்டவமும் அல்லவா இதனால் தடைப்படுகிறது?

சிவன்:- பார்வதி! எல்லாம் எமக்குத் தெரியும். தர்மராஜன் அகங்கரிக்கிறான். அவன் மமதை ஒழிய வேண்டும். ஐந்தெழுத்தின் மகிமையை உலகம் உணர வேண்டும்.

பார்வதி:- இது தங்கள் திருவுளமா?

சிவன்:- ஆம். இதை நடைமுறைப்படுத்த நாரத மாமுனி வருகிறார். அதோ!

(நாரதரோடு இரு அடியார்களும் வருகிறார்கள்.)

அடியார் 1:- சுவாமி, சிவபெருமான் எப்படிப்பட்டவர்?

அடியார் 2:- சக்தி இன்றிச் சிவம் இல்லை.

(மூவரும் நடந்து சிவனிடம் வருதல்.)

நாரதர்:- பராத், பராத், பரமேஸ்வராத்!
பாரத், பராத், பரமேஸ்வராத்!
சம்போ மகாதேவா, வணங்குகிறேன் சுவாமி!

சிவன்:- பக்தியை மெச்சினோம். கலகத் தொழில்தானே உமக்குக் கைவந்த கலை? பார்வதியையும் எம்மையும் மீண்டும் பிரித்துவைக்க...?

நாரதர்:- அபச்சாரம் சுவாமி. தங்கள் திருவுளப்படியே அனைவரும் இயங்குகிறோம். ஏன் தேவிகூட?

பார்வதி:- நாரதா! நிறுத்து உன் கலகப் பேச்சை...

சிவன்:- சரி, சரி, நீர் வந்த காரணம்?

நாரதர்:- சுவாமி! தங்களுக்குத் தெரியாததா? ஐந்தெழுத்தின் மகிமையை எல்லோரும் உணரும் காலம் வந்துவிட்டது. மிருகண்டு முனிவர் மகப் பேறுக்காக அரிய தவம் செய்கிறார்.

சிவன்:- அவருக்கு அருள் செய்வோம். வேறு...?

நாரதர்:- தர்மராஜனும் சற்று மமதையுடன்...

சிவன்:- ம்... ம்... தெரியும். சென்று வாரும்.

நாரதர்:- சம்போ மகாதேவா.

பார்வதி:- நாரதர் சொல்ல வந்தது என்ன? தங்கள் திருவுளத்தில் ஏதோ ரகசியம் அடங்கியிருக்கிறது.

சிவன்:- இரகசியங்களை அறிவதில் காலத்தை வீணாக்காதே பார்வதி... வா போகலாம்.

(வேத கோஷம் ஒலிக்கிறது. இருவரும் எழுந்து போதல்.)

(மறுபுறத்தில் யமலோகக் காட்சி அமைகிறது. யம கிங்கரர் ஆட்டம் நடைபெறுகிறது.)

பாடகர்:- சூரர் வீரர் நாமையா - தர்மராஜன்
சூரர் வீரர் நாமையா
சூரர் வீரர் நாமே சூழும் புவியில் தானே
ஆரும் எதிர்க்க வந்தால் பயப்படாது ஓடி
ஊரும் பேரும் சொல்லி அழைத்துக் கொண்டு வந்து
உந்த யமனுக்கு முன்னே கெட்டித்தனமாய் நிற்கும்

(சூரர்)

(கிங்கரர் ஆடிப் பாடிப் பல்வேறு தளங்களில் நிற்க, உரையாடல் தொடங்கும்.)

சித்திரபுத்திரனார்:- மூன்று யுகங்களாக நான் கடமையாற்றி வருகிறேன்.

தர்மராஜன்:- கலியுகம் பிறந்துவிட்டது. ஆயினும் சித்திரபுத்திரனாரே நீர்தான் எனது கணக்குப்பிள்ளை.

சித்திரபுத்திரனார்:- எனக்கு ஒரு நூறாண்டு காலம் லீவு தர முடியுமா?

தர்மராஜன்:- என்ன சொல்கிறீர்? இப்போது நாம் ஓய்வெடுக்க முடியாது. யுத்தம் நடைபெறும் நாடுகளில் எமக்கு வேலை அதிகம்.

சித்திரபுத்திரனார்:- சரி, பிரபு!

தர்மராஜன்:- கணக்குப் புத்தகம் சரியாக இருக்கிறதா?

சித்திரபுத்திரனார்:- ஆம், பிரபு. யாருடைய கணக்கைப் பார்க்கவேண்டும்?

தர்மராஜன்:- சம்பந்தப் பிள்ளையின் பக்கம் எங்கே?

சித்திரபுத்திரனார்:- மூன்று வயதில் தேவாரம் பாடிய பிள்ளையா? அவருக்கு முத்தி கொடுத்துப் பல நூறாண்டுகள் முடிந்துவிட்டனவே.

தர்மராஜன்:- அவரைப் பற்றி என்ன எழுதி வைத்திருக்கிறீர்?

உதவியாளர் 1:- சைவ சமயத்தின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய சமயகுரவர் என்று பல நூறு பக்கங்கள் எழுதப்பட்டுள்ளன, பிரபு!

தர்மராஜன்:- அவர் இப்போது தேவ உலகத்தில் என்ன செய்கிறார்?

உதவி 2:- தேவாரம் பாடிக்கொண்டு நிரந்தர மகிழ்வுடன் இருக்கிறார்.

சம்பந்தர்:- (பாடும் காட்சி) - "சிறையாரும் மடக்கிளியே.."

தர்மராஜன்:- 'அப்பர்' என்று ஒருவர், அதே காலத்தவர், அவரது கணக்கு எப்படி இருக்கிறது?

உதவி 1:- உழவாரத் தொண்டு செய்த குரவர். அவரது நல்ல இயல்புகள் மிக நீளமாக எழுதப்பட்டுள்ளன.

தர்மராஜன்:- அவர் என்ன செய்கிறார்?

உதவி 2:- அதோ! தேவர்களுக்கு மத்தியில்...!

அப்பர்:- (பாடும் காட்சி) - "மாதர்ப் பிறைக் கண்ணி யானை..."

தர்மராஜன்:- உலக யுத்தத்தின்போது, பல்லாயிரம் மனிதர் இறக்கக் காரணமாக இருந்த ஹிட்லரின் கணக்கு...?

உதவி 1:- அவர் நரகத்தில் இருக்கிறார்.

(ஒருவர் துன்பப்படும் காட்சி.)

தர்மராஜன்:- சரி, நீர் எல்லாம் சரியாக வைத்திருக்கிறீர். என் மனம் இன்று ஒரு நிலையில் இல்லை. எனக்கு ஏதோ அனர்த்தம் ஏற்படப்போகிறது!

(தூரத்தில் கானம் கேட்கிறது.)

என்ன தேவ கானம்? நாரத மாமுனி போலும்!

சித்திரபுத்திரனார்:- ஆம், அவர்தான்.

நாரதர்:- தர்மராஜனே... நினக்குப் பூரண ஆயுள்.

தர்மராஜன்:- வருக முனிவரே... அநேக காலத்தின் பின்...?

நாரதர்:- சம்போ மகாதேவா... காரணமின்றி இந்த முனி எவ்விடமும் செல்வதில்லையே?

தர்மராஜன்:- காரணமென்ன? கலகம் என்று சொல்லும்.

உம்மிடம் ஒரு கேள்வி - என்னிடம் யாராவது வராது இருந்துவிட முடியுமா?

நாரதர்:- முடியும். மரணத்தை வெல்லும் மருந்தை அறிந்தால்.

தர்மராஜன்:- என்ன? மரணத்தை வெல்ல ஒரு மருந்தா?

நாரதர்:- நீ அஞ்ஞானத்தில் மூழ்கி இருக்கிறாய்.

தர்மராஜன்:- என்ன சொன்னீர் முனிவரே, நிதானமாய்ப் பேசும்.

நாரதர்:- ஓம்... நமசிவாய!

("காதலாகி" பாடுகிறார்)

தர்மராஜன்:- நமசிவாய... ஹ... ஹ...

நாரதர்:- காலனுக்கு ஒரு காலன் உண்டு. நீ அதை விரைவில் அறிவாய். சென்று வருகிறேன்.

(காட்சி மாறுகிறது. மாரக்கண்டேயர் வீடு)

மார்க்கண்டேயர்:- பதினெண் சாத்திரங்களையும் வேத உபநிடதங்களையும் குருவிடம் கற்று நிறைவாக வீடு திரும்புகிறேன். எல்லாம் சிவன் செயல்! (இறைவனை வணங்குகிறார்.)

(மிருகண்டுவும் மனைவியும் வருதல்.)

மிருகண்டு:- மகனே! குறித்த பருவத்தில் வித்தை கற்று வீடு திரும்பும் உனக்குச் சர்வ மங்களமும் உண்டாகட்டும்.

(மார்க்கண்டேயர் வணங்கிறார்.)

மிருகண்டு:- மகனே, எழுந்திரு. குருகுலத்தில் இருந்து உன்னைப் பற்றிய நல்ல செய்திகள் வந்துகொண்டே இருந்தன. குரு நிறைவில் என்ன சொன்னார்?

மார்க்கண்டேயர்:- இதுவரை காலமும் பிரமச்சரியம் மேற்கொண்டிருந்த என்னை இனி இல்லறத்திற்குச் செல்லப் பணித்தார்.

மிரு. மனைவி:- (அவசரமாக) வேண்டாம் மகனே, அந்த எண்ணம் வேண்டாம்.

மார்க்கண்டேயர்:- ஏன் அம்மா? கிருகஸ்தம் எமக்கு விதிக்கப்பட்ட நெறிமுறைதானே!

மிருகண்டு:- ஒரு நங்கை விதவையாவதை அம்மா விரும்பவில்லைப் போலும். பஞ்சாட்சரத்தை ஜெபி மகனே!

மார்க்கண்டேயர்:- ஏன் அவ்விதம் கூறுகிறீர்கள்? உலகில் எல்லோரும்தானே ஒருநாள் இறக்க வேண்டிய நியதி உண்டு?

(இருவரும் பேசாதிருத்தல்.)

அம்மா, தந்தையே! தாங்கள் எதையோ மறைக்கிறீர்கள்! எத்துன்பத்தையும் ஐந்தெழுத்தின் துணைகொண்டு வெல்லலாம்.

மிரு. மனைவி:- சிவனார் எமக்கு உன்னை அருளியபோதே உன் வயது பதினாறு என்றார். இன்றிலிருந்து இன்னும் சில நாட்களில்... (அழுகிறாள்.)

மார்க்கண்டேயர்:- வருந்தாதீர்கள் அம்மா. இறப்பும் பிறப்பும் எவருக்கும் உண்டு.

இருந்தும் ‘சிவாயநம’ என்ற அருமருந்தைக் கொண்டு எதையும் வெல்லலாம். என்னை ஆசீர்வதியுங்கள் அம்மா. (வீழ்ந்து வணங்குதல்.)

மிரு. மனைவி:- நீ நீடூழி வாழ்வாய்! நீடூழி வாழ்வாய்.

(அணைத்து மகிழ்தல்.)

(காட்சி மாறுகிறது. மேல் உலகம்)

தர்மராஜன்:- சித்திரபுத்திரனாரே! இலங்கையில் சுமார் ஐந்நூறு தமிழரின் இறப்புக்குக் காரணமான ஒருவரின் காலம் இன்றோடு முடிகிறது.

அவரைக் கொணர எமது தூதர்கள் சென்றார்களா?

உதவி 3:- சென்றார்கள். அவர் இங்கே வரமாட்டார். அவரது கணக்குப்படி அவர் நரக உலகம் செல்வார்.

தர்மராஜன்:- சரி, சேக்கிழார் சொர்க்கத்தில் நலமாக இருக்கிறாரா?

உதவி 4:- இருக்கிறார். அவருக்கு அண்மையிலே சிட்னியில் விழா எடுத்தார்கள். அவர் சிறப்பாக இருக்கிறார். அதோ சேக்கிழாரைப் பாருங்கள்.

சேக்கிழார்:- "உலகெலாம்..." பாடுதல்.

தர்மராஜன்:- முக்கிய விடயம். மார்க்கண்டேயன் என்று ஒரு சின்னப் பையன். அவனது வாழ்வு இன்று காலையுடன் முடிந்தது. அவன் வீட்டுக்கு யார் போனார்கள்?

தூதர்:- (ஓடிவந்து) பிரபு! மன்னிக்க வேண்டும். நான் சிறப்புத் தூதன். ஒரு செய்தி வந்திருக்கிறது. மார்க்கண்டேயனை அணுகமுடியாதவாறு ஏதோ ஒரு சக்தி தடுக்கிறதாம்.

தர்மராஜன்:- ஆஹா! அதிசயம்! இவ்வளவு நாளும் இல்லாத புதினம்!

எனது சக்தியை மீறி ஒரு சக்தி உள்ளதா? பல கோடி வருடங்களாக நாடைபெறும் நியதியில் மாற்றமா? மார்க்கண்டேயன் இன்று சொர்க்கத்திற்கு வந்துதான் ஆகவேண்டும். எமது கிங்கரர் கோழைகள். மரணம் என்பது தர்மத்தின் நியதி. அதை மாற்ற யாராலும் முடியாது. நானே போகிறேன்.

நாரதர்:- தர்மராஜனே! உனக்குச் சர்வ சித்தும் உண்டாகட்டும். சம்போ மகாதேவா!

தர்மராஜன்:- ஓய் முனிவரே! உமக்கு இப்போது என்ன வேலை இங்கு?

சகுனத் தடையா? எங்கே என் பாசக்கயிறு?

தூதர்:- இதோ பிரபு! (கயிற்றை வாங்குதல்.)

நாரதர்:- உன் கயிற்றின் வலிமையை என்னிடத்தில் ஒரு முறை பரீட்சித்து விட்டுப் போகலாமே!

தர்மராஜன்:- என்ன வேடிக்கை செய்கிறீர்? மார்க்கண்டேயன் ஏதோ சிவாயநம என்று சொல்லிக்கொண்டிருக்கிறானாம். அவனைக் கூட்டிவரவே செல்கிறேன்.

நாரதர்:- ஐந்தெழுத்து உன்னை வெல்லும்.

தர்மராஜன்:- பார்க்கத்தான் போகிறேன்.

நாரதர்:- நானும் பார்க்கத்தான் போகிறேன்.

தர்மராஜன்:- விலகி நில்லும். விலகி நில்லும் முனிவரே. நான் பூலோகம் செல்கிறேன்.

(காட்சி மாற்றம்.)

(மார்க்கண்டேயர் சிவலிங்க பூஜை செய்துகொண்டிருக்கிறார்.)

மார்க்கண்டேயர்:- தேவாதி தேவா! கருணா மூர்த்தி! காத்தருள வேண்டும். கடந்த ஏழு வருடமாக ஐந்தெழுத்து மந்திரத்தைச் சொல்லி வந்திருக்கிறேன்.

("புழுவாய்ப் பிறக்கினும்..." என்று பாடத் தொடங்குதல். இடையில்...)

சுவாமி! என்ன? என் காது அதிரும் வண்ணம் ஏதோ சத்தம் கேட்கிறது. உலகை இருள் சூழ்கிறது! அதோ ஒரு உருவம் என்னை நோக்கி வருகிறது. தர்மராஜன் போலும். அபாய ரட்சகா! காப்பாற்ற வேண்டும். (சிவலிங்கத்தைத் தழுவுதல்.)

அசரீரி:- குழந்தாய்! பயப்படாதே! பயப்படாதே!!

தர்மராஜன்:- மார்க்கண்டா! நின் காலம் பூலோகத்தில் முடிந்துவிட்டது. என்னுடன் வந்துவிடு.

மார்க்கண்டேயர்:- சிவனாரின் அடியார்கள் உன்னுடன் வரவேண்டியதில்லை.

தர்மராஜன்:- நீ சிறுபிள்ளை. ஒன்றும் அறியாய். என்னுடன் வருவது தவிர்க்க முடியாதது.

மார்க்கண்டேயர்:- சிவபக்தனுக்கும் காலதேவனுக்கும் தொடர்பில்லை என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

தர்மராஜன்:- சாஸ்திரம் கூறுகிறாயா எனக்கு? பூலோக வாசிகளுக்கும் எனக்கு மிடையில் ஒரே ஒரு தொடர்புதான் உண்டு. அதுதான் இந்தப் பாசத் தொடர்பு. பார்!

மார்க்கண்டேயர்:- ஐந்தெழுத்து பாசக்கயிற்றின் வலிமையை அடக்காதா?

தர்மராஜன்:- ஐந்தெழுத்தா? ஆயிரம் எழுத்தும் அடக்காது. என்னோடு வா!

மார்க்கண்டேயர்:- தர்மராஜனே! நான் வரேன்! என்னைத் தொடாதே!

(பாசக் கயிற்றை வீசுகிறார். மார்க்கண்டேயர் சிவலிங்கத்தைத் தழுவிக்கொள்கிறார். பாசம் அறுந்து போகிறது.)

தர்மராஜன்:- என்ன ஆச்சரியம்? பாசம் அறுந்து விட்டதா? இதோ என்ன செய்கிறேன் பார்!

(சூலத்தை ஓங்குகிறார்.)

(சிவன் யமனைக் காலால் தொடுகிறார். அவன் வீழ்கிறான்.)

மார்க்கண்டேயர்:- (ஓடிவந்து வணங்கி)

சுவாமி! இந்த ஏழைக்காகவா காட்சி தந்தீர்?

நாரதர்:- சம்போ மகாதேவா! தர்மராஜன் இல்லாவிடில் அழித்தல் தொழிலை இயற்றுவது யார்? அவனுக்கு உயிர்ப்பிச்சை கொடுங்கள் சுவாமி!

சிவன்:- அங்ஙனமே ஆகட்டும்.

(யமன் எழுந்து கொள்கிறான். மிருகண்டுவும் மனைவியும் வந்து மகனைத் தழுவிக் கொள்கிறார்கள்.)

மிருகண்டு:- மகனே! பரம்பொருளின் அருள் கிடைத்துவிட்டதா? நாம் உய்ந்தோமா?

மார்க்கண்டேயர்:- ஆம் தந்தையே!

தர்மராஜன்:- (நாரதரைப் பார்த்து) உம்மை நான் கவனித்துக் கொள்கிறேன்.

நாரதர்:- இன்னும் நீ அறியாய். நான் சிவபக்தன். என்னை நீ ஒன்றும் செய்ய முடியாது.

தர்மராஜன்:- ஆம். உணர்ந்தேன். நீரும் வெல்லவில்லை. நானும் வெல்லவில்லை. ஐந்தெழுத்தே வென்றது.

பாடகர்:- 'காதலாகி' பாடுதல்.

* * *

உளவியல் சிறுகதை:-

# கறுப்புக்குரல்

1987 இல் ஒரு நாள்! பட்டினத்து வீதிகளில் மட்டுமில்லை தளிர்க்குடை போர்த்து நிழலுள் படுத்துக் கிடக்கும் கிராமத்து வீதிகளிலுந்தான் மானுடம் தொலைந்து போய் இருந்தது.

ஹர்த்தால்! ஏதோ ஒரு விடயத்திற்காக!! பாடசாலைக்கு மாணவர்கள் வரவில்லை. வெறிச்சிட்டுக் கிடந்த பாடசாலை வீதியில் ஓரிரு தலைகள் தென்படுகின்றன. ஓகோ! ஆசிரியர்கள் வருகிறார்கள், அரச உத்தியோகத்தர்கள்!

அவர்களால் இன்று என்ன செய்ய முடியும்? கதிரை, மேசை, வாங்கு, புல், பூண்டுகளுக்குக் கற்பிக்க முடியுமா? "எதிர்காலப் பாடங்களைத் திட்டமிட முடியும்" என்ற குரலை அமுக்கி விடுங்கள். ஆசிரியர் அறையில் இருந்து அலட்ட முடியும். அல்லது முன் விறாந்தையில் வட்டமாய் இருந்து "காட்ஸ்" அடிக்க முடியும்.

இரண்டரை மணிவரை ஆசிரியர்கள் பாடசாலையில் இருக்க வேண்டும் என்பது மேலதிகாரிகளின் உத்தரவு. இருந்து என்ன செய்தாலும் சரி!

"எங்களைப் பிணைக்கும் மௌனச் சரடே எங்கள் பேச்சு" என்று கூறிக் கொண்டிருக்கும் சுவர்களுக்கும் கொஞ்சம் சத்தம் கொடுத்துக் காற்றையும் கலகலக்கப் பண்ணி... அது இவர்களால் முடியுமா?

அன்றைய தினசரிகளை ஒருவர் வாசிக்க மற்றவர்களெல்லாம் சுற்றியிருந்து வாசிக்கப்படும் செய்திகளை விமர்சிப்பது ஒரு ரஸமான அநுபவம்.

"பொலிஸ்காரன் ஒருத்தன் சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருக்கேக்கை பொலிஸ் அதிகாரி பின்னாலை வந்திட்டாராம்..."

"பொலிஸ்காரன் பயந்திருப்பான், தன்னைச் சுடப்போறார் எண்டு..."

"ஓ... ஆனா அதிகாரி சொன்னாராம்... நீ பயப்பிடாதை. நீ சரியா ஒட்டுறியோ எண்டு பாக்கத்தான் என்னை அனுப்பினவை எண்டு"

பலத்த சிரிப்பொலி!

"அது சரியான ஞாயம். பொலிஸ்காரன் செய்யிறதைச் சரியாச் செய்யிறானோ எண்டு பாக்கிறதுதானே அதிகாரியின்ரை வேலை?"

மீண்டும் சிரிப்பு!

பேப்பர் தொடர்ந்து படிக்கப்படுகிறது.

"பேப்பரில இப்ப நல்ல செய்தியள் ஒண்டும் இல்லை. கொலை, கொள்ளை, லஞ்சம், ஊழல், பழிவாங்கல்... இதுகளும் அந்திரட்டி, கண்ணீர் அஞ்சலி, விளம்பரங்களுந்தான் பேப்பர்..."

"நாட்டிலை நடக்கிறதைத்தானே பேப்பர்காரன் போடுவான்... கலி முத்தின விஷயங்களை..."

"நாட்டிலை நடக்கிற ஒண்டிரண்டு நல்ல விஷயங்களும்கூடப் பேப்பர்காரன்ரை கண்ணிலை படுறேல்லை..."

"பேப்பரிலை வாற ஒண்டிரண்டு நல்ல விஷயங்களும்கூட வாசிக்கிற எங்கடை கண்ணிலை படுறேல்லை..."

"நாட்டிலை, வீட்டிலை, பள்ளிக் கூடத்திலை எல்லா இடமும் ஒரே கதைதான்..."

"ஏன்? பள்ளிக்கூடத்திலை என்ன நடந்தது?"

"லஞ்சமோ, ஊழலோ, அட்மிஷன் அற வீடோ?"

"இண்டைக்குக் காலமை ஸ்ராவ் றூமிலையே களவு நடந்தது. தெரியாதே உங்களுக்கு?"

"தெரியாது"

ஆசிரியர் சங்கத்தின் நிதியாளர் ஆசிரியர்களிடம் பணம் சேகரித்துக் கொண்டிருந்தார்.

ஒரு ஆயிரம் ரூபா நோட்டு! மேசையில் வைத்துப் பாரம் வைத்துவிட்டு, கூடத்துக்கு மிதந்து வந்து கொண்டிருந்த குங்குமப்பூ ஒன்றிடம் பணம் வாங்கச் சென்றார். இரண்டு நிமிடங்கள்தான்! அதிக நேரம் இல்லை. திருப்பி அறைக்குள் வந்தபோது, பணம் மேசையில் இல்லை.

எல்லா இடமும் தேடப்பட்டாயிற்று. நிதியாளரின் உதடுகள் நம்பிக்கையற்ற வரட்சியுடன் ஒரு புன்னகையுடன் கோண லாய் நெளிந்தன.

அவரை நோக்கி அவரே அலறுகின்ற நிலைமை போல் ஆகிவிட்டபோதும் 'நோட்டு' இல்லை. எப்படிப் போயிற்று? எங்கே போயிற்று? ஆசிரியர்களிலும் கள்வரா?

மதுபாவனை, சிகரெட், களவு, பொய்... மாணவர்மீது வன்முறை... எல்லாரும் ஒவ்வொரு முகமூடிகளை, பாதுகாப்புக் கவசங்களை அல்லது உள விளை யாட்டுக்களை இழுத்து விட்டுக்கொண்டு அமர்ந்திருக்கின்றார்களா?

யாரைச் சந்தேகிப்பது? எல்லாரையும் சந்தேகிப்பதா? அல்லது ஒருவரையும் சந்தேகிக்காமல் விடுவதா?

வேறு நாள் என்றால்...! அந்தப் பிள்ளை வந்தது. இந்தப் பெடியன் வந்து எட்டிப் பார்த்தவன்... பன்னிரண்டோ, பதின்மூன்றோ இரண்டும் கெட்டான் வயதிலை ஒண்டு இந்தப் பக்கமாய்ப் போனது என்று பிள்ளைகளின் தலையில் கட்டிவிடலாம் இலகுவாய்.

இன்று... பிள்ளைகள் ஒருவரும் இல்லை. ஆகவே...? நிரந்தரமாய்த் தாழ்கிற துயரம் தேங்கிய முகத்துடன் நிதியாளர்.

பணம் கிடைக்காவிட்டால்... அவர் சொந்தப் பணத்தில் அல்லவா போட்டுக் கட்ட வேண்டும்?

"சகடம் போன்ற வாழ்வை ஒரு மாதிரி இழுப்பதும்... தொழுவத்தில் வந்து படுப்பதும்..." என்று வாழ்வைச் சுமையாய் இழுக்கிற மனித மாடு அவர். ஆயிரம் ரூபா போட்டுக் கட்ட அவரால் முடியுமா?

பாவம் மனுசன்!

பதினெட்டு வயது மகன் ஒருவனை வீட்டில் 'அடைத்து' வைத்துக்கொண்டு பயந்து, பயந்து திரியும் மனுஷன். இந்தச் சில நிமிடங்களில் உடைந்து நொருங்கி உருக்குலைந்தே போய்விட்டார். அவரது இறுக மூடிய தடிப்பான இதழ்களில் எப்போதும் கோபமும் ஆக்ரோஷமும் ஒளிந்திருக்கும். இன்று அது வெளிப்பட்டே தெரிந்தது.

"அப்ப, ஆரோ... வாத்திமார்தான் எடுத்திருக்கினை"

"ஏன் வாத்தியார் எண்டாப்போலை என்ன கடவுள்மாரே? அவையும் மனுசர் தானே!"

"ஆசிரியர் எண்டால் பிள்ளையளுக்கு அறநெறியைப் போதிக்கிறவர்..."

"பிள்ளைகளிலை நடத்தை மாற்றம் ஏற்படுவதற்கான மாதிரியாய் வாழ வேண்டியவர்"

"நெடிதுயர்ந்த கொள்கையுடன் பிணைந்த குன்றமாய் இருக்க வேண்டியவர்"

"அவரே இப்பிடி ஆகிட்டால்..."

"உள வைத்திய நிபுணரே நோயாளியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்யிறாள் ஆகிட்டால்..."

"வேலியே பயிரை மேய்ஞ்சிட்டால்...?"

"ஆசிரியர் ஒரு கைகாட்டியப்பா... கைகாட்டி வழியைக் காட்டும். தான் போகத் தேவையில்லை"

"உயிரற்ற கைகாட்டிதான் அப்பிடித் தான் போகாமல் நிக்கும்... உயிருள்ள வழிகாட்டிகள் தாங்கள்தான் முன்னே போவார்கள்.."

"கைகாட்டியெல்லாம் தான் வழி காட்டினாப் போதும். போகத் தேவையில்லை எண்டு நினைச்சபடியாத்தான் இண்டைக்கும் சமுதாயம் இப்பிடிச் சீரழிஞ்சு போய்க்கிடக்கு..."

"ஆசிரியர் எண்ட உடனை, வைத்தியர் எண்ட உடனை ஏன் நீர் அவையை உயர்வாய்ப் பார்க்கிறீர்? அவையும் பிழை விடக்கூடிய மனுசர் எண்டு நினையும் பாப்பம்..."

"விடிவு தரப் புறப்பட்ட ஒளிப்பிளம்பே இருளாய்ப் போனால்?"

"மனுசன் உள ஆரோக்கியம் குறைஞ்சவனாகலாம். அது இயல்பு"

"அந்த உள ஆரோக்கியம் குறைஞ்ச ஆள் ஆரெண்டு தெரிய வேணும். எல்லாரையும் உடனை அங்கப் பரிசோதனை செய்யவேணும்..."

"அது சரியில்லை. ஓராள் எடுத்ததற்கு எல்லாரையும் சோதிக்கிறது சரியில்லை. அது அவையின்ரை சுய கௌரவத்தைப் பாதிக்கும்..."

ஒரு வெறியுடன் எல்லோரது முகத்திலும் வந்து அறையும் குளிர் காற்று!

இதுவரை பேசாமல் நிகழ்பவற்றை அவதானித்துக் கொண்டிருந்த கிருஷ்ணராசா மாஸ்டர் இப்போது வாய் திறந்தார். அடர்ந்த புருவங்களின் அடியில் தழல் வீசும் மேட்டு விழிகள்!

"நானும் இவ்வளவு நேரமும் பொறுமையாய்ப் பாத்துக் கொண்டிருந் தனான். எங்கை போறியள் பாப்பம் எண்டு! வாத்திமாரைச் சோதிக்கப் போறியளோ?" அவரது புருவங்கள் நெளிந்தன. பளபள வென்று பொலிஷ் போட்ட கருங்காலிக் கறுப்புப் புருவங்கள்!

"ஏன் சோதிச்சால் என்ன?"

"சோதிக்க வாற ஆள் ஆர்? அந்தாள் மட்டும் சுத்தமோ?"

"காசைத் துலைச்சவரை விடுவம்..."

"காசைத் துலைச்சதுக்கு என்ன புறாவ்? மேசையிலை நிதியாளர் காசு வைச்சவர் எண்டதுக்கு என்ன அத்தாட்சி? அவர் பொய் சொல்ல ஏலாதோ? வாத்திமாரைக் கேவலப்படுத்திறியள்! இழிவு படுத்திறியள்! வாத்திமாரிலை வடு ஏற்படுத்திறியள். நீங்களும் வாத்திமாராய் இருந்து கொண்டு..."

பரபரவென்று பொரிந்து தள்ளினார் அவர். உச்சத் தொனியில், உரப்பாய் சினமாய் வரும் அவரது வார்த்தைகள் செவிச் சவ்வில் ஒட்டிக்கொண்டு சுழல முடியாமல் தும்பியடிக்கிறது! அந்த உரப்புக்குப் பயந்து ஆசிரியரறை மௌன இருளில் மூழ்குகிறது... திடுதிப்பென்று வந்து கவிழ்ந்த மௌனம்!

இவ்வளவு ஆசிரியர்களும் பேசாமல் இருக்கும்போது... ஒரு குரல் 'கன கன' வென நெருப்பில் வைத்ததாவதேன்?

நாகரிகப் போர்வையில் ஒளிந்திருக்கும் காட்டுமிராண்டிக் குணங்கள் கேட்க ஆளில்லாத போது திமிறிக் கிளம்பும் வெட்கக் கேட்டை,

அந்த 'Id' இன் ஆசையை, கிருஷ்ணராசா மாஸ்டரால் மட்டும் ஏன் தாங்கிக்கொள்ள முடியவில்லை?

கிருஷ்ணராசா மாஸ்டர் களவெடுக்கக் கூடியவர் இல்லைத்தான்.

"எல்லோரையும் சோதிக்க வேண்டும்" என்பது அவரது முதுகுத்தண்டில் சாட்டை போல் விழுந்தது ஏன்?

ஏன்? ஏன்? ஏன்?
முன்பொரு நாள்...

நாக்கைத் தொட்டுப் பென்சில் கோட்டை அழித்தது போல் நினைவுகள் மங்கித் தெரிகின்றன.

பிசு பிசுவென்று ஒன்றிரண்டு தூறல். பிறகு மழை 'சோ' என்று ஊற்றிக் கொண்டிருந்த காலை.

"இந்த மேசையிலை என்ரை கண்ணாடிக் கூட்டை விட்டுப்போட்டன். காணேலை! ஆரும் மாறிக் கீறி எடுத்து உங்கடை பாக்கிலை வைச்சிட்டியளோ பாருங்கோ ஒருக்கா..."

வெள்ளொளி VIBGYOR ஆக உடைவது போலக் குரல் உடைந்திருக்கப் பலமாகக் கேட்டார் ராஜேஸ்வரன் மாஸ்டர். எல்லாரும் பார்த்துக் கொண்டனர் தங்கள் பைகளை! பக்கத்தில இருந்தவர்களின் பைகளையும்...!

"ஆ... இந்தா இருக்கு... கிருஷ்ணராசா மாஸ்டரின்ரை பையிலை..."

"பாவம் மனுசன் ஏதோ யோசனை யிலை தன்ரை கண்ணாடி எண்டு எடுத்து வைச்சிட்டு..."

"ராஜேஸ்வரன் சொறி..."

"இட்ஸ் ஓல் ரைற்..."

உள்ளே எலி பிராண்டுவது போல இந்த நினைவு அரிக்கிறது.

மேசையில் கிடக்கும் பொருள் களையெல்லாம் வாரி அள்ளி எடுத்துத் தனது பையில் வைத்துக் கொள்ளும் அந்த நோய் நிலை...

பாவம் கிருஷ்ணராசா மாஸ்டர்!

மனதில் ஓர் 'அந்தரம்' வருகிறபோது, தன்னை அறியாமலே அவ்வாறெல்லாம் செய்து கொள்கிறார்.

ஆசிரியர் அறைக் கலண்டரில் தேதிகள் தங்களுக்குள் ஏதோ 'நெருக்கீடு' வந்து சுருண்டு கொண்டிருக்கின்றன. கதிரைகள் கறுப்புக் குரலில் கிறீச்சிடு கின்றன. ஆசிரியர்கள் இனி வீடு செல்லப் போகிறார்கள் என்று அவை அழுகின்றன!

(வலம்புரி, 20.12.2002)

* * *

**நூலுருவில் தொகுக்கப்படாத கட்டுரைகள்** (சோலைக்குயில், விழிசைக்குயில் ஆகியவற்றில் வராதவை)

| | |
|---|---|
| 25.03.77 | இல்லறம் இனிக்க - (பூவும் பொட்டும் வானொலி நிகழ்வில் வாசிக்கப்பட்டது) |
| 20.12.79 | கேட்குமா ஒரு மழலைக்குரல்? - கலாவதி - பலாலி ஆசிரியர் கலாசாலை மலர் |
| 03.02.80 | விசித்திரமான ஞாபக சக்தி - ஈழநாடு |
| 09.03.80 | கல்யாணம் கசக்கிறதா? - ஈழநாடு |
| 13.04.80 | எங்கே நிம்மதி - ஈழநாடு |
| 31.08.80 | பிரபல்யம் பெறுங்கள் - ஈழநாடு |

தொடர் நவீனம்

# சிதைவுகளில் ஓர் உதிப்பு!

(ஏழு பெண் எழுத்தாளர்கள் ஈழநாட்டில் எழுதிய நாவலில் கோகிலா மகேந்திரன் எழுதிய அத்தியாயம்)

இந்த விடுமுறையில் உழைக்கும் பணத்தில் ஒரு மாதிரிக் கமலாவின் கழுத்துக்கும் அந்த மெல்லிய ஒற்றைப்பட்டுச் சங்கிலிக்கும் உள்ள உறவைப் புதுப்பிக் கலாம் என்று நினைத்திருந்தாள் மகேஸ்வரி. அது கடந்த இரண்டு வருட காலமாக ஒரு ஐந்நூறு ரூபா கடனுக்காக இராசேந்திர உபாத்தியாயர் வீட்டுப் பெட்டியில் தூங்குகிறது. அதைச் சிறை மீட்பதற்கான திட்டத்தின் முதற் கட்டமே உமைபாலனின் தோட்டத்தில் தோல்வியாகிவிட்டது!

இன்று காலையில் அவள் தாமதிக்காமல் தயாராகிவிட்டாள். இன்று வைரவப் பிள்ளையரின் தோட்டத்தில் நடுகையாம்! அவள் நேற்றுப் போல் ஆகிவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையில் முதலே சின்னம்மாக்காவிடம் கேட்டு அறிந்து கொண்டாள்.

'வைரவப் பிள்ளையர் கொஞ்சம் காசிலை கவனந்தான். மற்றும்படி நல்ல மனுஷன்' அவள் தனக்குள் நிறுத்துப் பார்த்துக் கொண்டாள்.

கொல்லன் பட்டடையாக அமளிப்படும் அந்த 'றோட்'டையும் காதைத் துளைத்து எரிச்சலைக்கிளறுகிற அந்த அரிசி மில்லையும் கடந்து 'சின்னம்மாக்கா செற்' வைரவப் பிள்ளையரின் தோட்டத்தில் இறங்கிவிட்டது.

"ஓ... ரீச்சர் வந்திருக்கிறா... இண்டைக்கு வேலைக்கு...!" வைரவப் பிள்ளையர் பாக்கு ஊறிய காவிப் பற்கள் முழுவதும் வெளியே தெரியச் சிரித்தார்.

"பள்ளிக்கூடத்திலைதான் ரீச்சர். இஞ்சை மற்றாக்களைப் போலத்தான் நானும். எனக்குச் சம்பளம் ஒரு வேளை கூடத் தரவேணுமோ எண்டு பயப்பிடாதேங்கோ"

மகேஸ்வரியும் சிரித்துக்கொண்டு கூறி விட்டு மும்முரமாக வேலையில் இறங்கி விட்டாள்.

வேகம்! எல்லாரும் கடும் வேகம்! கழுதை வாலில் தகரம் கட்டிய வேகந்தான்!

பகல் பதினொரு மணிக்கெல்லாம் 'அரை வாசித் தறை' நடுகையே முடிந்து விட்டது. வைரவப் பிள்ளையரே வியந்து போனார்.

"மத்தியானச் சாப்பாட்டுக்கு முந்தி நட்டு முடிச்சிடுவியள் போல! சின்னம் மாக்கா ஒரு 'செற்' கொணந்தால் அது 'செட்' தான்..." அவருக்கு மகிழ்ச்சி பிடிபட வில்லை. அரை நாள் கூலியுடன் விஷயம் முடிந்துவிடப் போகிறதே!

"எடி நிர்மலா, உந்தப் பாக்கை ஒருக்கா வெட்டிக் கொண்டா..." சின்னம்மாவுக்கு எந்த நேரமும் வாய் நிறையப் பாக்கு இல்லாவிட்டால் வேலையில் வேகம் குறைந்துவிடும்.

வாய்க்கால் நீரில் கையை அலம்பி விட்டு அந்தக் கூரான 'பீச்சாக் கத்தியை'ச் சின்னம்மாவிடம் வாங்கிப் பாக்கு வெட்டினாள் நிர்மலா.

வெட்டிவிட்டாள்!

பாக்கை மட்டுமல்ல... கையையும் சேர்த்து...! 'சுரீர்...' என்று ஏற்பட்ட வலியில் 'ஐயோ' என்று மெதுவாகக் கத்தியும் விட்டாள். அருகில் நின்ற மகேஸ்வரி நிமிர்ந்து பார்த்தாள். இரத்தம்... நல்ல செம்பருத்தி நிற இரத்தம்... கை முழுவதும் நனைந்து விட்டது.

நின்று நிதானிக்க நேரமில்லை. வெயிலுக்காகத் தலையில் போட்டிருந்த பாவாடையைக் கழற்றிக் கிழித்துக் கையைச் சுற்றி இறுக்கிக் கட்டிவிட்டாள். ஆழமான காயம் போல இருக்கிறது. வியர்வை நெடி அனலடிக்கும் அந்த ஊத்தைத் துணியையும் மேவிக்கொண்டு இரத்தம் குபீரென்று வெளியேறியது. நிற்சிந்தையளாக இருக்க மகேஸ்வரியால் முடியவில்லை.

"வாடி... உதிலை உந்த மில்லுக்குப் பக்கத்திலை சங்கரப்பிள்ளை டாக்குத்தரைக் கொண்டு மருந்து கட்டிக்கொண்டு வந்து... பிறகு நடுவம்...!"

நிர்மலாவைக் கையில் பிடித்துத் 'தரதர' வென்று இழுத்துக்கொண்டு போனாள் மகேஸ்வரி. "இப்ப மத்தியானம் பெருக்கு நேரம். கொஞ்ச நேரம் இரத்தம் வரும். அதுக்குப் பயந்தடிச்சு டாக்குத்தரிட்டை ஓடினம்...!"

தனக்குள் சொல்வது போல் வைரவப் பிள்ளையர் முணுமுணுத்துக் கொண்டதற்கு யாரும் பதில் சொல்லவில்லை.

'றோட்'டில் ஏறி டாக்குத்தரைக் கொண்டு மருந்து கட்டுவித்துக் கொண்டு திரும்பி வர அரை மணித்தியாலங்கூட ஆகவில்லை.

"சின்னி விரல்தானே! அதை உள்ளுக்கு மடக்கிக்கொண்டு தண்ணியைப் படவிடாமல் வேலையைச் செய்..."

கட்டளை இடுவது போல் நிர்மலாவுக்குக் கூறிவிட்டு மீண்டும் மும்முரமாக வேலையில் இறங்கிவிட்டாள் மகேஸ்வரி.

ஓர் இலைகூட அசங்கவில்லை. மூச்சு முட்டுகிற புழுக்கம். எல்லாவற்றையும் அலட்சியப்படுத்திவிட்டு அவர்கள் வேலை செய்ததில் பகல் இரண்டு மணிக்கெல்லாம் வேலை முடிந்துவிட்டது.

வெள்ளை அரிசிச் சோறும், கத்தரிக்காய் பால்கறியும், பிழிந்த தேங்காய்ப்பூச் சம்பலுமாக மத்தியானச் சாப்பாடு தோட்டத்தில் வைத்துப் பரிமாறப்பட்ட பிறகு வைரவப் பிள்ளையர் கேட்டார்.

"என்ன சின்னம்மாக்கா? அரைநாள் காசுதானே?"

"அதெப்பிடிப் பாருங்கோ... எட்டு மணிக்கு வந்து ஐஞ்சு மணிக்குப் போறத் துக்கு முழுக்காசு. இப்ப இரண்டு மணியாகுது..."

வாய்க்குள் இருந்த வெற்றிலையைத் துப்பாமலே பதில் தந்த சின்னம்மாக்காவின் பேச்சில் தெளிவில்லை.

"அப்ப என்ன? முழுக் காசு தரச் சொல்லிறியோ?" என்று கேலி கலந்த சிரிப்புடன் வைரவப் பிள்ளையர் கேட்டார்.

"எட்டு மணி தொடக்கம் இரண்டு மணி வரையிலை ஆறு மணித்தியாலம். முழுக் காசிலை மூண்டில் இரண்டு தரவேணும்... சாப்பிட்டு விட்டுக் கிணற்றடி மிஷின் தண்

ணீரில் முகம் கைகால் கழுவிக் கொண் டிருந்த மகேஸ்வரி பட்டென்று சொன்னாள். சின்னம்மாக்காவுக்கு இந்த மூன்றில் இரண்டு களைப் புரிந்து கொள்வது கடினம்.

"முழுக்காசு பன்ரண்டு ரூபா வெண்டால்.. ஏழு ரூபா வேண்டலாம்... என்ன பிள்ளை...?" என்று சின்னம்மாக்கா தனது ஐயத்தைக் கேட்க,

"இல்லை, இல்லை. எட்டு ரூபா தர வேணும்..." என்று மகேஸ்வரி நியாயத்தை நிலை நிறுத்தினாள்.

"சரி, போனால் போகுது... எட்டு ரூபாப் படிதாறன். எல்லாம் இண்டைக்கு ரீச்சர் வந்ததாலை வந்த நட்டம். ஆனால் ரீச்சருக்கும் நிர்மலாவுக்கும் ஐஞ்சு ரூபா தான் தருவன். அவை இடையிலை ஆஸ் பத்திரிக்கும் போட்டு வந்தவை..." என்றார் வைரவப் பிள்ளையர்.

"என்ன பிள்ளை? ஞாயம் சரியே?" அவிழ்ந்து தொங்கிய வெளுத்த மயிர்களை அள்ளி முடிந்துகொண்டு கண் அகலக் கேட்டாள் சின்னம்மாக்கா.

"படிப்பறிவு இல்லாத உங்களை ஒரு வேளை வெருட்டலாம். என்னை வெருட் டேலாது சின்னம்மாக்கா. நான் நேரத்தை வடிவாப் பாத்தனான். பக்கத்துத் தறை கொத்திக் கொண்டிருந்த ஒரு ஆளிட்டை போகேக்கையும் வரேக்கையும் நேரம் கேட்டனான். போகேக்கை சரியாய் பதினொரு மணி! வரேக்கை பதினொண்டு இருபத் தைஞ்சு..."

"ஓம்... கமலன் அண்ணை மணிக்கூடு கட்டியிருந்தார். அவரிட்டை இவ நேரம் கேட்டவதான்..." என்று நிர்மலா அவள் சொன்னதை உறுதி செய்தாள்.

"உங்களுக்குக் கணக்குப் பாக்கத் தெரியாட்டித் தெரிஞ்ச ஆக்களிட்டைப் போய்க் கேட்டுக்கொண்டு வாங்கோ... எங்க ளுக்குக் குறைஞ்சது ஏழு ரூபா எண்டாலும் தரவேணும்..." அவள் மிக ஆணித்தரமாகக் கூறிவிட்டாள்.

"தராட்டி?..."

"தராட்டி... நாங்கள் இவ்வளவு பேரும் இந்தத் தோட்டத்துக்குள்ள சத்தியாக் கிரகம் இருப்பம். ஒருத்தரும் வீட்டை போகமாட்டம்"

"........"

"அதுக்கு நீங்கள் மசியாட்டி... நாங்கள் நட்ட இந்தக் கண்டுகளைப் புடுங்கிப் போட் டிட்டுப் போறம். நீங்கள் மறுபடி ஆரெயும் கொண்டிச்சு நடுவியுங்கோ..."

வைரவப் பிள்ளையரும் இதுவரை எத்தனையோ தரப்பட்ட கூலிகளைக் கொண்டு தோட்டவேலை செய்திருப்பார். ஆனால் இப்படி...?

ஒரு பெரீய போராட்டத்திற்கே ஆயத் தமாய்...?

"அவள் கேக்கிறதிலை பிழை இல்லைத்தானே...!" என்ற எண்ணத்தை உலுக்கி உதறி எறிவது வைரவப் பிள்ளை யருக்குக் கடினமாகவே இருந்தது. அவரது மனச் சாட்சி உள்ளுக்குள் எழுந்து படம் விரித்தாடிற்று.

கொடுத்து விட்டார்! மகேஸ்வரி கேட்ட படியே காசெல்லாம் கொடுத்து விட்டார்!

ஆனாலும் அவர் நெஞ்சு உள்ளே திகிலுற்றது. இவ்வாறான போராட்டங்களை வளரவிட்டாலும் இவர்களுக்குக் கூலி கொடுக்கக்கட்டாது. அவர்கள் புறப்படு கையில் அவர் சின்னம்மாக்காவைத் தனியே அழைத்து,

"இனிமேல் என்ரை தோட்டத்துக்கு வரேக்கை உவ ரீச்சரைக் கூட்டிக்கொண்டு

வராதையணை. ஏன்... பொதுவாவே உவவை உன்னோடை நெடுக வைச்சிருந்தால்... உன்ரை சொல்லுக்கும் மதிப்பில்லாமப் போயிடும். தான் தான் எதுக்கும் முதலாளி எண்டு நிக்கிறாள். யோசிச்சுச் செய்..." என்று ஓதிவிட்டார். ஆனால் சின்னம்மாக்கா மசியவில்லை. மகேஸ்வரியின் போராட்டம் அவரை அதிரச் செய்து நடுக்கிவிட்டது என்பதைப் புரிந்து கொண்டாள் அவள். வீடு திரும்பும் வழியிலும் மகேஸ்வரி சொன்னாள்.

"ஆம்பிளையளுக்கு ஒரு நாள் கூலி இருபது ரூபா குடுக்கினம். எங்களுக்கு ஏன் குறையத் தரோணும்? தண்ணி மாறிறதிலும் பாக்க ஈரத்துக்கை நிண்டு நடுறது எந்த விதத்திலை சுகமான வேலை? நாங்கள் எங்களுக்கு இருபது ரூபா தரவேணும் எண்டு கேக்க வேணும்..."

"நான் நினைச்சனான் பிள்ளை, நீ உதுதான் சொல்லப் போறாயெண்டு..."

சரீரத்தை ஊடுருவி மனதில் உள்ளதை அறியும் 'எக்ஸ்றே' அறிவு தனக்குண்டு என்று நினைப்பது போலச் சொல்லிப் பெருமைப் பட்டுக்கொண்டு வரிசைக்குத் தலைமை தாங்கி முன்னால் நடக்கிறாள் சின்னம்மா.

(அடுத்த வாரம் தொடர்பவர் எஸ்.சிறீரஞ்சினி)

* * *

**நூலுருவில் தொகுக்கப்படாத கட்டுரைகள்** (சோலைக்குயில், விழிசைக்குயில் ஆகியவற்றில் வராதவை)

| | |
|---|---|
| 14.09.80 | எளிதில் களைப்படைந்து விடுகிறீர்களா? - ஈழநாடு |
| 13.01.82 | எங்களைப் பாதுகாப்பது யார்? - ஈழநாடு |
| ஆடி 82 | அபாயம் வரப்போகிறது பராக் பராக் - தாரகை |
| 07.09.82 | நுண்ணுயிர்க் கொல்லிகளைப் பாதுகாப்பதில் கவனம் தேவை - ஈழநாடு |
| நவ. 82 | துன்பந்தானா மனிதனின் எல்லை - சுடர் |
| 82-83 | ஓர் இந்துவின் உணவு - இந்து தருமம் |
| 1983 | நினைவாற்றல் வளரவேண்டுமா? - நவரசம் |
| மாசி 84 | ரஸமான இலக்கிய அநுபவம் - பத்திரிகையாளன் |
| 07.10.84 | தாயிருக்கும்போது தாய்ப்பாலைத் தவிர்ப்பதா? - வீரகேசரி |
| சித். 86 | நோ உடலின் முன்னறிவிப்பு - அறிவியல் கதிர் |
| புர. 93 | சமூகத்தின் உள ஆரோக்கியத்தைப் பேணுவதில் கலைகளின் முக்கியத்துவம் - வெளிச்சம் |
| சித். 97 | பெண்களுக்கு ஏற்படும் உளவியல் தாக்கங்களும் தீர்வுகளும் - ஐக்கியதீபம் |
| 25.02.98 | நகுலேஸ்வரத்தில் சிவராத்திரி - உதயன் |
| 24-02-00 | வள்ளுவர் நினைவு தினம் - வலம்புரி |
| பங்-சித்- 01 | கல்வி என்பது முன்னேற்றத்தின் அடிக்கல் - நான் |
| ஆடி - 01 | அநுபவம் தரும் உறுதியான வெளிப்பாடு - நான் |
| 24-03-04 | நிறைவாழ்வு பற்றியதோர் வினா - திரு. கா. கதிர்காமத்தம்பி நினைவு தீபம் |

சிறுவர் கதை

# குளிராது

மாலுவின் கரங்கள் குளித் தொடங்கிய போதுதான் பிரச்சினையே உருவாயிற்று. அவர் பெயர் மாலதி! 'மாலு' என்று வீட்டிலே செல்லமாக அழைப்பார்கள். இரவு படுக்கப் போகும் நேரத்தில் மாலு சிணுங்க ஆரம்பித்தாள். அப்பா இன்னும் வேலையில் இருந்து வீட்டுக்கு வரவில்லை. நேரம் இரவு ஒன்பது மணியாகிறது.

"நான் இண்டைக்கு நித்திரை கொள்ளமாட்டன். எனக்குக் கால் குளிருது" கோபத்துடன் கத்தினாள் மாலு.

"நேரத்துக்குப் படுக்க வேணும்" அம்மாவும் விடுவதாக இல்லை. "எனக்குக் கால் குளிருது" அடம்பிடித்தாள் மாலு. அம்மாவுக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. ஆறுதலாக ஒரு கொட்டாவி விட்டுக் கொண்டாள்.

"உடம்பைச் சுருட்டிக்கொண்டு படு! நான் காலை உருவி விடுறேன். கம்பளிப் போர்வையாலை போர்த்து விடுறேன்."

அம்மா தனக்குத் தெரிந்ததைச் சொன்னாள். அப்படியே செய்துவிட்டு அம்மா தன்பாட்டில் நித்திரையாகிப் போனாள். வெளியே கார்த்திகை மழை பொழிந்து தள்ளிக் கொண்டிருந்தது. மாலுவும் கண்ணை மூடினாள். நித்திரை வரவில்லை.

மாலுவின் விளையாட்டுப் பொம்மைகள் நிலைமையைக் கண்டு கவலையடைந்தன.

"நாங்கள் மாலுவை எங்களோடை கூட்டிக்கொண்டு போவம். அவளின் கை, கால் குளிர் மாற ஏதாவது செய்வம்" என்று பொம்மை முயலிடம் கூறியது பொம்மை யானை.

பொம்மை முயல் மாலுவின் படுக் கையில் துள்ளி ஏறி, மாலுவின் கையைப் பிடித்து உலுப்பியது. அவள் கண்களைத் திறந்து பார்த்தாள்.

"என்ன வேணும் முயல்குட்டி!" என்று கேட்டாள்.

"எனக்கு ஒண்டும் வேண்டாம். நீ எங்க ளோடை வா! நாங்கள் உன்ரை கால் குளிர் மாறப் பண்ணுவம்" என்று கூறிக் காதை ஆட்டியது முயல்.

மாலு படுக்கையை விட்டுக் குதித்தாள்.

"நான் வேறை நல்ல உடுப்புப் போட வேணுமா? அம்மாவுக்குச் சொல்ல வேணுமா?" என்று கேட்டாள்.

"ஒண்டும் வேண்டாம். உன்ரை உடுப்பு அழகாத்தானே இருக்கு! நீ இப்பிடியே வா! அம்மா எழும்ப முதல் நாங்கள் உன்னைக் கொணந்து விடுவம்." என்றது முயல்.

முயலின் தலைமையில் பயணம் ஆரம் பமானது, இராணுவ வீரனின் உடுப்புப் போட்ட பொம்மை, யானை பொம்மை, ரெடிபியர், 'சீனு' என்று மாலுவால் அழைக்

கப்படும் பொம்மை, பிள்ளைப் பொம்மை, மணியடிக்கும் குரங்குப் பொம்மை எனப் பலரும் மாலுவுடன் புறப்பட்டனர்.

விரைவாக நடந்து ஒரு சிறு கதவடிக்கு வந்து சேர்ந்தனர். யானைப் பொம்மை கதவைத் தட்டியபோது, சிரித்துக்கொண்டு ஒரு தேவதை கதவைத் திறந்தது. தேவதை போட்டிருந்த அழகான நிலம் கூட்டும் நீல நிறச் சட்டையில் மேல் இருந்து கீழாகப் பவுண் தெறிகள் போடப்பட்டி ருந்தன. தேவதையின் அழகான நடையைப் பின்தொடர்ந்து அனைவரும் பெரிய மண்ட பத்தினுள் நுழைந்தனர்.

மாலுவுக்கு ஆச்சரியம் தாங்க முடிய வில்லை. அறையைச் சுற்றி ஆயிரக் கணக்கான விளையாட்டுப் பொம்மைகள் அடுக்கப்பட்டு இருந்தன.

"இதெல்லாம் யாருக்கு?" என்று விரிந்த கண்களுடன் கேட்டாள் மாலு.

"ஒரு விளையாட்டுப் பொம்மையும் வாங்க வசதியில்லாத பிள்ளைக்கு யார் கொடுத்தது என்று தெரியாமல் கொடுக்க...." என்று தேவதை கண் சிமிட்டியபடி பதில் அளித்தது.

"யார் கொடுத்தது என்று தெரியாமல் எப்பிடி இஞ்ச வந்தது?" மாலு விடாப் பிடியாகக் கேட்டாள்.

"நல்ல உள்ளம் படைத்த பெரிய மனிதர்கள் எங்களுக்குப் பார்சல் மூலம் அனுப்புவார்கள். யார் அனுப்புவது என்று எங்களுக்குத் தெரியாது. நாங்களும் குழந் தைகளுக்குப் பார்சல் மூலம் அனுப் புவோம்." என்று கூறித் தன் தோகையை விரித்தது தேவதை.

"தேவதை பறக்கப் போகிறதே!" என்று மாலு நினைக்க முதலே மீண்டும் தோகையை மடித்து விட்டு,

"சரி, இப்போது நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டபடி மாலதிக்கு அருகில் வந்தது. தேவதையின் உடலில் வீசிய நறுமணம் அவளைக் கிறங்க வைத்தது.

"என்னட்டை நிறையப் பொம்மை இருக்கு. நான் ஏழைப்பிள்ளை இல்லை." என்று உண்மை கூறினாள் மாலு.

"நீ அரிச்சந்திரன் போல இருக்கிறாய். உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது" என்று கூறிய தேவதை தொடர்ந்து,

"உன்னிடம் அளவுக்கு அதிகமாய் பொம்மைகள் இருந்தால், அதில் ஒன்றி ரண்டை எங்களுக்குத் தரலாம்" என்றது.

"தருவேனே!" என்று முறுவலித்தாள் குழந்தை.

"சரி, நீ நல்ல பிள்ளை. இப்போது நீ இங்கே உள்ள பொம்மைகளோடு விளை யாடலாம்" என்றது தேவதை.

முன்பக்கம் பூனையின் முகம் கீறப்பட்ட மெத்தென்றிருந்த சப்பாத்துச் சோடி ஒன்றை எடுத்துத் தன் காலை அதற்குள் நுழைத்தாள் மாலு. அவளுடைய கால் சப்பாத்தைவிடச் சிறிதாக இருந்ததால் நடக்க முடியவில்லை. கால் குளிராக வேறு இருந்தது. அதைக் கழற்றிவிட்டு ஒரு சோடித் தவளைப் பொம்மைக்கு அருகில் போனாள். பச்சைப் பிளாஸ்ரிக்கால் செய் யப்பட்டிருந்த தவளைகளுக்கு ஒரு பக்கத்தில் சாவி இருந்தது. சாவியை முறுக்கி விட்டாள். அவை மாலுவின் பாதங்களின் மேல் ஏறிக் குதித்து விளையாடின.

"நல்லா இருக்கு" மாலு மலர்ந்தாள். கால்கள் கொஞ்சம் வெப்பமாகிய உணர்வு ஏற்பட்டது. தவளைகள் குதிப்பதை நிறுத் தியவுடன் கால்கள் மீண்டும் குளிர்ந்து கொண்டன.

உடல் முழுவதும் நிறைய இறகு களைக் கொண்டிருந்த குயில் பொம் மைக்கு அருகில் போனாள். அது தனது இறகுகளால் மாலுவின் காலை வருடித் தேய்த்து விட்டது. சிறிது நேரம் நன்றாக இருந்தது. திரும்பவும் கால் குளிர்ந்து விட்டது.

"என்னுடைய நடனத்தைப் பார் மாலு" என்று சொல்லி ஒரு தஞ்சாவூர்ப் பொம்மை

ஆடத் தொடங்கியது. தன்னை மறந்து அந்த நடனத்தைப் பார்த்தபடி இருந்தாள். அவளுக்குத் தெரியாமலே கால்கள் சூடேறிவிட்டன.

"கால் குளிரேல்லை" என்று சொல்லிக் கொண்டு கீழே பார்த்தபோது, ஓர் ஒட்டகப் பொம்மை அவளின் காலுக்கு மேல் படுத்துக் கிடந்தது.

"உனக்கு முதுகிலை ஒரு 'சிப்' இருக்கு. என்னத்துக்கு?" என்று கேட்டாள் மாலு. "பொதி சுமக்க" என்று அழுதது பொம்மை.

"நான் பாலை வனத்திலை இருக்கிற ஆள். எப்பவும் சூடா இருப்பன். பாலை வனத்திலை நீர் கிடைக்காது. கானல் நீர்தான் தெரியும் என்று சொல்லுவினம். ஆனால் நான் உனக்குத் தந்த வெப்பம் கானல் நீரா மறைஞ்சிடாது" என்று கூறிப் பல்லைக் காட்டியது. சற்று நேரத்தில் மாலுவின் கால்களிலேயே நித்திரையாகிப் போய்விட்டது.

"உனக்கு இந்த ஒட்டகத்தைப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டது தேவதை. "ஓ" என்று சிரித்த மாலு தனது கால்களில் குளிர் போய்விட்டதை உணர்ந்தாள்.

"காலையில் எழும்பிய உடனே அழுக்கு உடுப்புகளையெல்லாம் ஒட்டகத் தின்ரை 'சிப்பை' இழுத்து அதற்குள் போட்டு வைக்கலாம்" என்று கூறியது தேவதை. "அப்படியா?" என்று கேட்ட மாலு,

"நான் என்ரை இராணுவ வீரன் பொம்மையையும் ரெடி பியரையும் உங்க ளுக்குத் தரப்போறன். பொம்மை இல்லாத பிள்ளையளுக்குப் பார்சலிலை அனுப் புங்கோ" என்று முடித்தாள்.

நன்றியும் வணக்கமும் கூறிவிட்டுத் தன் அணியுடன் புறப்பட்டாள் மாலு. முயல் பொம்மையின் தலைமையில் யானையும், குரங்கும், சீனுவும் மாலுவுக்குத் துணை யாய் வந்தனர். விடிய முதலே எல்லோரும் வீட்டுக்குள் நுழைந்து விட்டனர். மாலு தன் கட்டிலில் போய்ப் படுத்துக்கொண்டாள். அம்மா இன்னும் எழுந்திருக்கவில்லை.

சில நாட்களின் பின் மாலுவுக்கு ஒரு பார்சல் வந்தது. அதில் ஓர் ஒட்டகப் பொம்மை முதுகில் 'சிப்'புடன் இருந்தது. மாலுவுக்கு இனிக் கால் குளிராதே!

(இந்தக் கதையைப் படிக்கும் பிள்ளைகள் கானல் நீர் என்பது என்ன என்பது பற்றியும், அரிச்சந்திரன் யார் என்பது பற்றியும் ஆசிரியரோடு கலந்துரையாடலாம்.)

(தமிழ் முற்றம் - டிச. 2014)

* * *

**நூலுருவில் தொகுக்கப்படாத கட்டுரைகள் (சோலைக்குயில், விழிசைக்குயில் ஆகியவற்றில் வராதவை)**

| | |
|---|---|
| 07-10-07 | சைவப்புலவர் சு. செல்லத்துரையின் "அரங்கப் படையல்கள்" வெளியீட்டுரை |
| 04-05-08 | எளிமைப்பனி போர்த்திய இமயம்.... "ஆனந்தத்தேன்" - பண்டிதர் க. சச்சிதானந்தன் நினைவு மலர் |
| 02-08-10 | "யார்க்கெடுத்துரைப்போம்" திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரை நினைவு வெளியீடு |
| 24-03-11 | ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு - மூன்றாம் பாகம் - பண்டிதர் சி. அப்புத்துரை - பதிப்புரை |
| 23.06.11 | பண்ணிசைமணி - திரு. சீ.கனகசபை நினைவுமலர் |
| தை 13 | "திருவெம்பாவை" - சிட்னி முருகன் மலர் |
| 22-04-13 | "பகலிரவாய்ப் பாடுபட்ட ஆசிரியர்" திரு. கதிர்காமர் சுப்பிரமணியம் நினைவுமலர் |

**சிறுவர் கவிதை**

# அவை காட்டும் வழி

சிற்றெறும்பு சேர்ந்து சேர்ந்து
உணவைக் காவிச் செல்லுது
தேசம் வாழ நாமும் கூடிச்
சேர்ந்து சேவை செய்குவோம்.

தேனீக் கூட்டம் தமது வேலை
தம்மைப் பங்கு போட்டுமே
திறமையாகச் செய்வதை நாம்
தினமும் பார்க்க வில்லையா?

காகம் தனக்குக் கிடைக்கும் உணவைத்
தனித்தே யுண்ப தில்லையே
காகா என்று கரைந்து கரைந்து
களி கொண்டுணவை யுண்ணுமே.

தனக்கு உணவு தந்த வர்க்காய்த்
தனது உயிரைத் தானுமே
கொடுக்கும் நன்றிக் குணமதனைக்
கொண்ட நாயைக் கண்டோமே.

(ஈழநாடு, 10.09.1989)

* * *

**நூலுருவில் தொகுக்கப்படாத கட்டுரைகள் (சோலைக்குயில், விழிசைக்குயில் ஆகியவற்றில் வராதவை)**

| | |
|---|---|
| சித் 14 | வகை கூறல் சில சிந்தனைகள் - நான் |
| 2014 | தமிழர் கலாசாரம் மாறவேண்டியதும் கூடாததும் - மாருதப்புரவீகம் - மலர் I |
| 06-04-14 | "மிகிரெயின் தலையிடியில் இருந்து விடுதலை" - தா. மகேஸ்வரி நினைவு மலர் |
| 2014 | கொழும்பு றோயல் கல்லூரி - நவரசம் - கலைஞர் ஆசிச் செய்தி |
| 2015 | "சிறுவர் பாதுகாப்பு" - சாந்திக வெளியீடு |
| 2015 | அண்ணா தொழிலதிபர் மலர் - "வாடா மல்லிகை" அணிந்துரை |

**கவிதை**

# மனதால் என்னை மணந்தாள்

நிலவைப் பிடித்து உலகில் நிறுத்தி
உலவ விட்ட முகம்!
மலரை எடுத்து மதுவை அகற்றிப்
பாலில் தோய்த்த அகம்!
குயிலைக் கொணர்ந்து சோகம் விரட்டிக்
கூவ வைத்த குரல்!
மயிலை மயக்கிப் போதை ஏற்றி
ஆட விட்ட எழில்!
கனவில் கலங்கிக் கவிதை பாடும்
கரிய பெரிய விழி!
நினைவில் நனைந்து இனிமை குழைத்து
நளினம் மொய்த்த மொழி!
அன்னம் பார்த்து வண்ணம் தீட்டி
அழகு பார்த்த நடை!
பொன்னை வார்த்து உயிரைக் கொடுத்துப்
பொலிய விட்ட உடை!
வகிடு பிரித்து மலர்கள் சூட்டி
வளர விட்ட சடை!
முகிலைப் பிடித்து எண்ணெய் தேய்த்து
நெளிய விட்ட குழல்!
இனிமை நிரப்பித் தேனில் அமிழ்த்திச்
சிவக்க விட்ட இதழ்
எனக்கே சொந்தம் எனவே இறைவன்
படைத்து விட்ட சிலை!
மனதால் என்னை மணந்தாள் எனக்கு
மகிழ்வு சேர்க்கும் கலை!!

(18.02.79, ஈழநாடு)

* * *

**இசைப்பாடல்**

# வாசிப்பு மாருதம்

வாசிக்கும் சமூகம் ஒன்றை வந்தனை செய்வோம் -அதை
நேசிக்கும் பிள்ளைகளை நிமிர்த்தி மகிழ்வோம்
பாட சாலைகளில் நூலகம் வைப்போம் -அங்கு
தேடுதற் கரியபல நூல்கள் குவிப்போம்

(வாசிக்கும்)

புத்தகங் களெமது நண்பர் களாகும் -இதை
சித்தத்தில் கொண்டு நாங்கள் செம்மை யடைவோம்
மொத்தத்தில் வாசிப் பெம்மைப் பூரணமாக்கும் -இது
வித்தகர் கண்டுகொண்ட விந்தை யாகும்

(வாசிக்கும்)

வாசிக சாலை சிறைச் சாலையை மூடும் -நாட்டில்
வானுயர் மனங்கள் தாமே திறந்து கொள்ளும்
வெற்றியைக் காட்டுகிற ஆயுதம் அது -அதைப்
பற்றிப் பிடித்திடுதல் புத்தி யல்லவோ?

(வாசிக்கும்)

மாமேதை சரித்திரங்கள் தெரிய வேண்டுமா? -உனக்கு
மாபெரும் தத்துவங்கள் புரிய வேண்டுமா?
ஆளுமை விருத்தியை நீ அடைய வேண்டுமா? -உடன்
சூழும்நூ லகத்தினையே சுற்றி வருவாய்

(வாசிக்கும்)

பால் போன்ற புத்தகங்கள் பார்க்கலாமே -அட
பழம் போன்ற நூல்களையும் காணலாமே
கழி வில்லா நூல்களையே தெரிவு செய்தல் -ஒரு
கலை யாகும் வாசிப்பின் களிப்பும் கூடும்

(வாசிக்கும்)

காணொலிக் கற்றலென்ற நிலை வந்தது -இப்போ
பேணும் மின்னூலகப் போக்கு வந்தது
காரிருள் பேரொளியே வாசிப் பென்பது -நாங்கள்
மாருத மாகமனம் திறந்து பெறுவோம்

(வாசிக்கும்)

(2019)

* * *

கோகிலாவின் டயறி

# நிரந்தர வீடு

வீடு என்றால் சொர்க்கம் என்பது தமிழ் மொழி சார்ந்த பொருள். வீடு பேறடைதலே பிறவிப் பயன் என்று எமது சமயம் கூறும். கி.மு 6000ம் ஆண்டளவில் வால்கா நதிக் கரையில் ஹிந்தோ ஐரோப்பியர் வாழ்ந்த காலம் மனித சரித்திரம் ஆரம்பமாகும் காலம். உடை அணிந்திருக்காத, பச்சை உணவை வேட்டையாடி உண்கிற, கல் ஆயுதங்களைப் பயன்படுத்திய இந்த ஆதி மனித இனம் இயற்கையின் மடியில் கற்கு கைகளிலேயே வாழ்ந்தது. அதுதான் அவர்களின் வீடு. 'மமொத்' போன்ற பெரிய விலங்குகளின் தோலால் கூடாரம் அமைத்து, அந்த விலங்கின் எலும்புகளைத் தூண்களாக்கி வாழ்ந்தும் இருக்கிறான் மனிதன்.

மாஸ்லோவின் தேவைக் கூம்பின் அடிப் படையில் பார்த்தாலும் ஒட்சிசன், நீர், உணவு, நித்திரை போன்ற விடயங்களே மனித வாழ்வுக்கு அவசியமான அடிப்படைத் தேவைகளாகும். வீடு என்பது ஒருவகையில் பாதுகாப்புத் தேவை எனலாம். இன்று ஒரு வருடைய வீடு, அது அமைந்திருக்கும் இடம் ஆகியவை அவரது அந்தஸ்தைக் குறிக்கும் அடையாளமாகக் கருதப்படுகிறது.

பொற்கலந்தம்பை வைரவர் கோயிலுக் குக் கிழக்கே இருந்த ஐந்து பரப்புக் காணியில் நான் பிறந்தபோது இருந்தது ஒரு மண்வீடும், ஒரு கிடுகுக் கொட்டிலுமே. காணியின் வடக்குப் பக்கமாக இருந்த மண்வீடு அம்மப்பாவால் கட்டப்பட்டிருக்க வேண்டும். தனது உறவினர்கள் அந்த ஐந்து பரப்புக் காணியையும் கூடக் கள்ள உறுதி எழுதி அபகரித்துக் கொள்வார்கள் என்ற பயம் அவருக்கிருந்ததாகவும், அதனால் இரவு நேரத்தில் யாரும் உட்பு காதபடி முள்ளுக் கொப்புகள் கொண்டு வந்து மண் சுவருக்கு மேல் வைத்திருப்பார் என்றும் சின்னம்மாவின் ஞாபகம் கூறும். எனக்கு அவரைத் தெரியாது. நான் பிறந்த போது இத்தாவும் சின்னம்மாவும் அந்த மண் வீட்டில் இருந்தார்கள். அதற்கு அருகில் ஒரு மண் குசினியும் இருந்தது. மேற்குப் புறம் அமைக்கப்பட்டிருந்த கிடுகுக் கொட்டிலில் தான் அம்மா அப்பாவும் நானும் வாழ்ந் தோம். 1947 இல் அம்மப்பா காலமான பிறகு, இத்தாவையும் சின்னம்மாவையும் பொருளாதார ரீதியாகக் கவனிக்கும் பொறுப்பும் அம்மா, அப்பாவிடமே வந்தது.

காணியின் மேற்குப் புறம் வரிசையாகப் பல தென்னைகள் இருந்தன. வீட்டுக்குக் கிழக்கே இரண்டு தென்னைகள் நின்றன. ஊரவர் எல்லோரும் தேடி வந்து வாங்கும் தேன்பலா, செம்பாட்டு மாமரம், கமுக மரங்கள், கொய்யா, எலுமிச்சை, தோடை, மாதுளை, வெற்றிலை, கறிவேப்பிலை என்று ஓர் அழகிய சோலைக்குள் அந்தக் குடிசை இருந்தது. 1952 இல் இந்தக் கிடுகுக் கொட் டிலுக்கு முன் ஒரு கதிரையில் பிடித்தபடி என்னை நிற்க வைத்து எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்று இப்போதும் என்னிடம்

உள்ளது. 'ஸ்மோக்கிங்' வேலைப்பாடு கொண்ட "கவுண்" போட்டிருக்கிறேன். ஆசையம் மாவும், முருகையா அண்ணாவும் பின்னணி யில் காணப்படுகிறார்கள். (சின்னம்மா விழிசிட்டி சிவஞான வித்தியாசாலையில் எஸ்.எஸ்.சி முடித்தவுடன் ஒரு வருடம் தொண்டர் ஆசிரியராக வேலை செய்த வராம். அந்தக் காலத்தில் பாடசாலையில் நடந்த இலவச தையல் வகுப்பில் சேர்ந்து படித்திருக்கிறார். அவ தைத்த சட்டையாம் அது.)

மிக நீண்ட காலமாக விழிசிட்டியில் நாங்கள் வாழ்ந்த கல்வீடு 1954 இல் அப்பா கட்டியது. இதுவரை மிக வரட்சியாக இருந்த அப்பாவின் வாழ்வு எனது வருகையுடன் மிக மகிழ்வாகி விட்டதன் வெளிப்பாடாக அந்த வீடு கட்டுதல் அமைந்திருக்கலாம். 22.04.1954 இல் நாளுக்கு அத்திபாரம் வெட்டியிருக்கிறார்கள். அன்றைய நாள் செலவாக 25/- பதிவு செய்திருக்கிறார் அப்பா.

கல்வீடு கட்டப்பட்ட காலத்தில் அதில் ஏறி விளையாடிய பொழுதுகள் எனக்கு நல்ல ஞாபகமாய் உள்ளன. தெல்லிப் பழைச் சந்தியில் இருந்த இரங்கநாதன் கடையில் ஏழு ரூபாவுக்கு ஒரு பக்கற் சீமெந்து வாங்கிக் கட்டிய வீடு!

மாவிட்டபுரத்தில் வசித்த நடேசு ஆசாரிதான் வீட்டுக்கு நிலையம் போட்டது! வடக்குப் பக்கம் மூன்று அறைகளும் கிழக் குப்பக்கம் "குசினி'யும் சேமிப்பு அறையும் "ட' வடிவ விறாந்தையும் கொண்டமைந்த தெற்கு வாசல் வீடு. மர வேலைகள் முழுவதுக்கும் பொறுப்பாக இருந்த நடேசு ஆசாரி பூநூல் அணிந்து எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்படு வார். வீடு கட்ட வந்து போன பல வேலை யாட்களில் இந்த நடேசு ஆசாரிதான் என்னுடன் பேச்சுக் கொடுப்பது எனக்கு ஞாபகம். என்னிடம் கேள்விகள் கேட்பார். "ஆள் கெட்டிக்காரி" என்று சொல்வார். தானும் பல குட்டிக் கதைகள் சொல்வார். வேலை ஏதோ நடந்து கொண்டிருக்கும். 28.05.54இல் வளை வைத்தாயிற்று. 27.10.54இல் குடிபுகுதல் முடிந்தது.

இந்த வீட்டின் முதலாவது பெரிய அறை சாமி அறை. அதுவே அப்பாவின் அறையும் கூட. அப்பாவின் இரண்டு பெரிய புத்தக அலுமாரிகளும் சுவாமிப் படங்களும் அதற்குள் இருந்தன. (அதில் ஓர் அலுமாரி இன்னும் என்னிடம் உள்ளது). அப்பா படுக்கும் கட்டிலும் அதற்குள் இருந்தது.

இரண்டாம் அறை சின்னம்மாவுக்கும் இத்தாவுக்கும் வழங்கப்பட்டது. பிற்காலத் தில் (இத்தா இறந்த பிறகு) அது சின்னம்மா குடும்பத்தின் அறையாகியது. மூன்றாம் அறைக்கு மூன்று கதவுகள். நிலம் மண் ணாகவே விடப்பட்டிருந்தது. அது "Sick room". பெண்கள் மாதவிலக்கு நாட்களில் அதற்குள் போய்விடுவர். அங்கிருந்த 'கோர்க்காலியில்' சேமிக்கப் பட்ட நெல்லு, குரக்கன், சாமி, தவிடு, புண்ணாக்குப் போன்ற பல பொருள்கள் இருக்கும். கிழக்குப் புறக் கதவைத் திறந்து மாட்டுக் கொட்டில் போகலாம். அங்கே ஆடு, மாடு நிற்கும். பிற் காலத்தில் மாட்டுக் கொட்டில் பெரிய 'ரியூசன் செட்' ஆகியிருந்தது. வடக்குப் புறக் கதவைத் திறந்து, வீட்டின் வடக்குக் கோடியால் நடந்து மலசல கூடத்திற்குப் போகலாம். புதியது ஒன்றும், பழையது ஒன்றுமாய் இரண்டு மலசல கூடங்கள் இருந்தன. திரிகையில் அரிசி, உழுந்து திரித்தல், அரிவாளில் பலாக்காய் வெட்டுதல் போன்ற வேலைகளையும் அம்மா, இத்தா ஆகியோர் இந்த மூன்றாம் அறையில் இருந்தே செய்வர். அரிசி இடிப்பது, வறுப்பது மாட்டுக் கொட்டிலுக்குள் நடக்கும்.

நாலாவது அறை குசினி. அதற்குள் பொருள்கள் வைக்கும் சுவர் அலுமாரி

இருந்தது. சிறிய அளவில் சேமிக்கப்படும் உணவுப் பொருள்கள் அதற்குள் இருக்கும். சமையற் பாத்திரங்கள் வைக்கும் கொங்கிறீற் தட்டும் இருந்தது. புகைக் கூடும், மூன்று அடுப்புகளும் இருந்தன. தயிர்ப் பானை வைக்கும் உறி, பனாட்டு வைக்கும் உமல் ஆகியவையும் அடுப்புக்குப் பக்கத்தில் இருக்கும். அம்மி வைப்பதற்கான சதுர வடிவ இடம் ஒன்றும், அம்மி கழுவும் நீர் வெளியே செல்லும் வழியும் அமைக்கப்பட்டிருந்தன.

ஐந்தாவது அறையில் ஒரு சாப்பாட்டு மேசையும் சில கதிரைகளும் இருந்தன. ஆயினும் நாங்கள் அதில் இருந்து சாப்பிடுவது குறைவு. எல்லாரும் குசினிக் குள் நிலத்தில் பலகை போட்டிருந்துதான் சாப்பிடுவோம். விருந்துக்கு வருபவர்கள் மட்டும் அந்த மேசைக்கு அழைத்துச் செல லப்படுவார்கள். பிற்காலத்தில் சின்னம்மா வாங்கிய ஒரு பெரிய சாப்பாட்டு மேசை ஹோலுக்குள் இருந்தது. ஐந்தாம் அறை யிலும் ஒரு சுவர் அலுமாரி இருந்தது. மேலே ஒரு பரண் இருந்தது. பெட்டி, கடகம், பாய் போன்ற பனை ஓலைப் பொருள்கள் அதில் வைக்கப்பட்டிருக்கும். சின்னமுத்து, கொப்பிளிப்பான், கூகைக் கட்டு போன்ற வைரஸ் தொற்றுகள் ஏற்பட்டால் அம்மா அவர்களை ஐந்தாம் அறையில் தனிமைப் படுத்துவது வழமை.

இந்த வீட்டை அமைப்பதற்கு அப்பா 10,000/- செலவு செய்திருக்கிறார். வீடு குடி புகுதல் சடங்கின் போது சி.கணபதிப் பிள்ளை ஆசிரியர்தான் (கல்வியங்காடு) அதிக அளவாக 50/- அன்பளிப்புக் கொடுத்தது பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வீடு கட்டி முடிந்த கையோடு (06.01.55 இல்) அப்பா தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியா சாலையின் அதிபராக நியமிக்கப்பட்டார். வாழ்வின் நேர் வட்டங்கள் மேலெழத் தொடங்கி விட்டன.

வீட்டின் தெற்கு வேலிக்கு அருகில் நின்ற நாவல் மரத்தின் பதிந்த கிடையான கிளையில் ஒரு ஊஞ்சல்! அதற்கு ஒரு தென்னை மட்டைப் பலகை. மாலை நேரத்தில் ஊரப் பிள்ளைகள் எல்லாம் எங்கள் வீட்டில் ஊஞ்சல் விளையாட்டு! ஊஞ்சல் ஆடுவதற்கு ஒரு விதி. ஆடுபவர் பாடவேண்டும். மற்றவர்கள் சுற்றி நின்று தாளம் போடுவோம். ஆட்டியும் விடுவோம். பாட்டின் ஒரு வரியைத் திருப்பிப் பாட முடியாது. பாட்டு முடிய இறங்க வேண்டும். அடுத்த முறை ஏறினால் அன்று பாடாத வேறு பாட்டுப் பாடவேண்டும். நீண்ட நேரம் ஊஞ்சலில் இருக்க வேண்டும் என்றால் நிறையப் பாட்டுக்கள் தெரிந்திருக்க வேண்டும். பாட்டைப் பிழையாகப் பாடினால் இறக்கிவிடுவார்கள். பாட்டின் பிழை சரியில் சந்தேகம் என்றால் அப்பா தீர்ப்பாளர். அப்பா வீட்டில் இல்லை என்றால் பாட்டை எழுதி வைத்து அடுத்த நாள் நேர்மையான தீர்ப்பு வழங்கப்படும். இந்த விளையாட்டின் விதிக்கான மூலம் அம்மா என்று நினைக் கிறேன். நாங்கள் விளையாடி விளையாடிப் பாடமாக்கிய பாட்டின் மூலங்கள் பல. இந்த விளையாட்டில் பொதுவாக அதிக நேரம் ஆடுபவராக நமசிவாய மாமாவின் மகள் தேவி மச்சாள் இருப்பார். எங்கள் வீட்டிலும், பப்பா (பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை) வீட்டிலும் கிராமஃபோன் இருந்தது. அதில் இருந்த பி.யூ.சின்னப்பா, பகவதி, தியாகராஜ பாகவதர் போன்றோரின் பாடல்கள் எல்லாம் பாடம். வளவுக்கு இறைக்கும் போது அப்பாவும் ஆசையப் பாவும் பாடும் பாடல்களை, தேவாரங்களைப் பாடமாக்கலாம். வைரவர் கோயில் பஜனையில் பாடப்படும் தேவாரங்கள் பாடமாக்கலாம். ஒன்றும் இல்லாவிடடால் திருக்குறள் பாடலாம் என்று விதி அமைத் தோம். அதற்கென்ன? இரண்டு வரி பாடி விட்டு இறங்குவதுதானே!

இந்த வீட்டு முற்றத்திலும் அயலில் இருந்த மாங்கொல்லையிலும் (அது எங்கள்

சாணி இல்லை) நாங்கள் விளையாடிய விளையாட்டுக்களின் வகைகளை எண்ண முடியாது. மாபிளை வைத்தே பல விளை யாட்டுக்கள் கண்டுபிடிப்போம். மாபிள்களை ஒரு நேர்கோட்டில் அடுக்கிவிட்டு அதைச் சுற்றி ஓர் எல்லை (boundary) போடுவோம். சிறிது தூரத்தில் ஒரு கோடு வரைந்து அதில் நின்று ஒரு மாபிளால் கோட்டு மாபிள்களை அடிப்போம். எல்லை தாண்டும் மாபிள்கள் அடித்தவருக்குச் சொந்தம். எல்லா மாபிளும் அடித்து முடியும் வரை விளையாட்டுத் தொடரும். அதிக மாபிள் பெற்றவர் வெற்றியாளர். குறிக்கு எய்தும் திறமையை அதிகரிக்கும் எளிய விளை யாட்டு இது.

குண்டுக்காய் போடுவது இன்னொரு விளையாட்டு. ஒரு நேர்கோட்டில் இரண்டு, மூன்று அடி இடைவெளியில் மூன்று சிறு குழிகள் போடுவோம். ஆரம்ப ஸ்தானத்தில் இருந்து எறியும் மாபிள் முதலில் முதற் குழியில் விழ வேண்டும். அதில் தோய்ந் தால் அவ்விடத்தில் போய் நின்று அடுத்த குழியை இலக்கு வைக்கலாம். மூன்றாவது குழி முடியத் திரும்பி வர வேண்டும். இப்படியே வந்து போய் பத்துக் குழிகளைத் தன் மாபிளால் முதலில் தோய்ந்து முடிப்பவர் வெற்றியாளர். மாபிள் குழியில் விழாவிட்டால் அடுத்த நபர் விளையாடுவார். இந்த விளையாட்டில் எத்தனை பேரும் சேரலாம். தனது மாபிளின் நிறத்தைப் பார்த்து வைத்தால் சரி. நாங்கள் தோயப்போகும் வழியில் இன்னொருவரின் மாபிள் இருந்தால் அதை அடித்துத் தொலைவுக்கு அனுப்பி விட்டு எமது மாபிள் நிற்குமிடத் திலிருந்து தொடரலாம். நான் விளையாடும் போது பொதுவாக மற்றவரது மாபிளை அடித்துத் துரத்தாமல் எனது மாபிளைத் தோய்ந்து முடிக்கவே விரும்பு வேன். முன்வீட்டுச் சத்தியமூர்த்தி விளை யாடும் போது எமது மாபிள் வழியில் அகப்பட்டால் மிகத் தொலைவிற்கு அடித்து அனுப்பி விட்டுத் தான் மறுவேலை பார்ப்பார். ஒருவரது ஆளு மையின் பெரும் பகுதி சிறுவயதிலேயே தீர்மானிக்கப்பட்டு விடுவது உண்மைதான். சத்தியமூர்த்தி பாவம்! சிறு வயதிலேயே தாயை இழந்து விட்டார்.

பலர் கூடினால் திருவிழாக்கள் பலவும் புதிதளித்தல் முறையில் விளையாடப்படும். விஜயதசமி விளையாடினால் இரு வெட்டில் மூன்று துண்டு என வாழைக் குட்டிகள் பலவும் துவம்சமாகும். சுவாமி தூக்கிக் கொண்டு போகும்போது அதற்குச் சிறிய மரச் சிலைகள் வைத்திருந்தோம். மேளம், நாதஸ்வரம், மணி, மந்திரம், சங்கு, சேமக் கலம் எல்லாம் வாய்மூலம் ஒலிக்கப் படும். உடல் அசைவுகள் பிரமாதமாய் இருக்கும். பிற்காலத்தில் நாடகமும் அரங்கியலும் ஒழுங்காகப் படித்தபோது இந்த அநுபவம் ஞாபகம் வரும்.

மாங்கொட்டை போடுதல், கிளித்தட்டு, எட்டுப்பெட்டி, றைற் ஓர் றோங் (Right or Wrong), ஒளித்துப் பிடித்தல், கயிறடித்தல் என்று நன்றாக இருட்டும்வரை விளையாட் டுக்கள் தொடரும். அதற்கு மேல்தான் உடல் முகம் கழுவிப் படிப்பு!

ஒருவரும் விளையாட வராத நாட் களில் நான் தனித்தே விளையாடுவேன். வளவில் உள்ள ஒவ்வொரு பாத்தியும் ஒரு வீடு என்று கற்பனை பண்ணி நான் வியாபாரி ஆவேன். முதல் நாள் இறைப்பின் போது வாய்க்கால் மண்ணில் செய்து காய வைத்திருந்த மண்வடை, மண் மோதகம், மண் வாய்ப்பன் (வடிவத்தில் வேறுபாடு தெரியும்) ஆகியவற்றை ஒரு ஓலைப் பெட்டியில் எடுத்துக்கொண்டு வியாபாரம் தொடங்குவேன். செவ்வரத்தம் பாத்தியில் காய்ந்த செவ்வரத்தம் பூக்கள் விழுந் திருக்கும். செவ்வரத்தை மரத்தோடு நான் பேசுவேன். "அம்மா இண்டைக்கு எத்தனை இறாத்தல் செத்தல் மிளகாய் தரப்

போறியள்?" தடியும் சிரட்டையும் வைத்துக் கட்டிய தராசு என்னிடம் இருக்கும். ஒரு சிறு கல்லு ஒரு இறாத்தல் படியாக இருக்கும். ஏதோ மாதிரி நிறுத்து எடுத்துக் கொள்வேன். "இரண்டு இறாத்தல் இருக்கம்மா. இப்ப மிளகாய் மலிவுதானே. நாலு ரூபா தரலாம். காசு தாறதோ? வடை மோதகம் ஏதும் வாங்கப் போறியளோ? அப்படி எண்டா அதைக் கழிச்சு மிச்சக் காசு தரலாம்..." என்று உரையாடல் தொடரும். சின்னக் கமுகம் பிஞ்சுகள்தான் காசு.

அடுத்த வீடு நந்தியாவட்டை நிற்கும் பாத்தி. "அம்மா, உப்பு வாங்க வந்திருக் கிறன். உங்களுக்கு எப்பவும் பண்டமாற்றுத் தானே விருப்பம் என்ன? இண்டைக்கு எண்ணட்டை வடை, வாய்ப்பன், மோதகம், மிளகாய்.. கன பொருள் இருக்கு..." இப்படியே வளவு முழுவதும் வியாபாரம் தொடரும். தென்னம் பாத்திகளில் விழுந்திருக்கும் குரும்பட்டி களைத் தேங்காய் என்று பெற்றுக் கொள்வேன். கொய்யாவின் கீழ் விழுந்தி ருக்கும் அணில் அரித்த பிஞ்சுகள் கொய் யாப்பழமாக வாங்கப்படும், எலுமிச்சம் பிஞ்சுகள் தோடம்பழமாக வாங்கப்படும். இடையில் சலிப்பு வந்தால் கொய்யா மரத்தில் அல்லது சாய்ந்த வெள்ளைக் கௌளித் தென்னையில் ஏறி நித்திரை செய்வதாக நடித்துப் பிறகு இறங்கி வியாபாரம் தொடரும். கொய்யா மரத்தில் ஏறி இருந்தால் வடக்குப்பக்க ஒழுங் கையால் போகிற வருகிறவர் களையும் பார்க்கலாம். அம்மா கண்டால் "பொம்பி ளைப்பிள்ளை, மரத்திலை ஏறாதை. இறங்கு" என்று சொல்லுவா! அப்பா கண்டால் "கவனம், விழுந்திடாமல் மரத்தைப் பிடிச்சுக் கொண்டிரு" என்று சிரிப்பார்.

இந்த வீட்டில் நான் பிறந்தபோது ஐந்து பேர் வாழ்ந்தோம். 1968 இல் சின்னம்மா திருமணம் செய்து சித்தப்பா வந்தபின் அறுவரானோம். 1968 இறுதியில் தம்பி ஜனார்த்தனன் பிறந்தபோது எழுவரானோம். 1974இல் பாப்பா பிறந்ததால் எண்மர் ஆனோம். இடையிடை நான், சின்னம்மா, சித்தப்பா ஆகியோர் படிப்பு, வேலை நிமித்தம் வரணி, கண்டி, கொழும்பு என்று போய் வந்தாலும் வீட்டின் நிரந்தர அங்கத்தவர் எண்ணிக்கை அதிகரித்தே வந்தது. 1977 இல் எனது திருமணத்தை ஒட்டி இந்த வீடு சற்றுப் பெருப்பிக்கப் பட்டது. விறாந்தையை ஒரு 'ஹோல்' ஆக்கி, இன்னொரு அறையும் புதிய விறாந்தையும் போடப்பட்டன. புதிய அறை திருமணத்தின் பின் எமக்காயிற்று. 05.05.1977 இல் எமது திருமணம் நடந்தபின் நாம் ஒன்பது பேர் அவ்வீட்டில் வசித்தோம். 02.07.1977 இல் இத்தா காலமாக எண் ணிக்கை எட்டாகக் குறைந்தது. 1980 இல் மகன் பிறக்க மீண்டும் நவதானியம்!

20.10.1990 இல் அளவெட்டிக்கு இடம் பெயரும் வரைதான் இந்த வீடு எமது சொர்க்க பூமியாக இருந்தது.

* * *

**நூலுருவில் தொகுக்கப்படாத கட்டுரைகள் (சோலைக்குயில், விழிசைக்குயில் ஆகியவற்றில் வராதவை)**

| | |
|---|---|
| 2015 | "பாதுகாப்புக் கவசம் முதல் உன்னத ஆளுமை வரை" உலக உளநல நாள் தொகுப்பு - வடமாகாணம் - "உன்னத ஆளுமையால் உலகையே வெல்வோம்" |
| ஆனி 15 | "பெண்களின் உளவலிமை" - வானவில் |
| 14-07-15 | "நிறைவான வாழ்வு" - சரஸ்வதியம் - திருமதி சரஸ்வதி சின்னப்பு நினைவு மலர் |
| ஆடி - மார்கழி 15 | "பரீட்சைகளை எதிர்கொள்ளலில் அறிகை முறைமைகள்" - நான் |

# இத்தா

மெலிந்து வெளிறிய உடலில் குறுக்குக் கட்டுத்தான் உடுப்பு! கணவர் சுப்பிரமணியம் 1947 இல் காலமாகி விட்டதால், நான் பிறக்கும்போதே விதவையாய் இருந்த இத்தா, கணவரை இழந்த கைம்பெண் வெள்ளைச் சேலை தான் உடுக்க வேண்டும் என்ற சம்பிர தாயத்தையும் ஒருபோதும் மீறியதில்லை. வீட்டிலே கொஞ்சம் மண்ணிறமாகிப் போன வெள்ளைச் சேலை. வெளியே செல்லும் போது கொஞ்சம் வெள்ளையாய் இருக்கும் வெள்ளைச் சேலை! அவ்வளவுதான் வித்தியாசம்.

இத்தாவை எப்போதும் நினைவூட்டுவது அந்தக் கடுக்கன். இப்போதைய 'ஜிப்சி' போல... ஒன்றல்ல... ஐந்து!

நீள்வட்டமாய் நடுவில் மொத்தமாய், ஓரங்களில் ஒடுங்கி... ஐந்து பெரிய வளை யங்கள்! அந்த ஐந்திலும்கூட நடுவில் தொங்குவது பெரிதாய், அடுத்து வருவது கொஞ்சம் சிறிதாய்... அடுத்தது இன்னும் சிறிதாய்... அப்படி ஓர் ஒழுங்கு! அவ்வளவு பாரத்தைப் பல வருடங்களாய்த் தாங்கித் தாங்கி... இப்போது அறப்போவது போலப் பெரிய துவாரத்துடன் அசையும் காது! (எண்பது வருடங்களுக்கு மேலும் அற வில்லை!) கழுத்திலே ஓர் ஒற்றைக் கல்லு அட்டியல்!

இவரின் தமக்கையார் "சின்னக்காவின் இத்தா". அவவும் அதே காதணியுடன்! நான் அறிந்த பருவத்தில் "சின்னக்காவின் இத்தா" கொஞ்சம் கூனிப்போய் ஒரு பொல்லுடன் வருவார். இத்தாவின் "முதுகெலும்பு" இறுதி வரை நிமிர்ந்தே இருந்தது.

வாழ்விலும் 'பெரீய' பாரங்களைச் சுமந்தவர். ஒன்பது பிள்ளைகளைப் பெற்று அவர்களில் ஆறு பேரை இளம் வயது களிலேயே - அதாவது பிள்ளைப் பராயங் களிலேயே - பறி கொடுத்தார். அவர்களில் ஐந்து பேர் ஆண்கள். ஒருவர் பெண். அவர்கள் வாழ்ந்திருந்தால் எனக்கு ஐந்து மாமாமார். ஐந்து மாமிமார். பல மச்சான் மச்சாள்மார் இருந்திருக்கும்! ஆறு பிள்ளைகள் வருத்தம் வந்து ஒன்றுக்குப் பின் ஒன்று சாக, எஞ்சியது அம்மாவும் ஆசையம்மாவும், சின்னம்மாவும்!

இத்தாவின் கைத்தோலைத் தடவிப் பார்த்தால், மெது மெதுவாய்ச் சுருக்கம் விழுந்து அருமையாய் இருக்கும். அவ என் கையைப் பிடித்து நடக்கும்போது நான் அவவின் கைத்தோலைத் தடவியபடி!

எனது சிறுவயதில் இத்தா அவித்துத் தந்த 'வெள்ளைப் பிட்டும் சம்பலும்' மாதிரி, அவ சுட்டுத்தந்த 'சர்க்கரை ரொட்டி' மாதிரி... நான் இதுவரை உலகின் எந்த மூலையிலும் சாப்பிட்டதாய் இல்லை. அப்படி ஒரு ருசி! அது அவ கைராசியால் வரும் ருசி!

காலையில் நாலு மணிக்கு எழுந்து உரல், உலக்கையில் அரிசி இடிப்பு நடக்கும். இடித்த அரிசியை அரித்து, வறுத்துப் பிட்டு அல்லது இடியப்பம் அவித்து நாங்கள் பாடசாலைக்குப் போக முதல் உணவு தயாராகிவிடும். சமையலுக் குத் தேவையான விறகு எல்லாம் முதல் நாளே 'விறகு அம்பாரத்திலிருந்து' எடுத்துப் புகைக் கூட்டுக்குக் கீழே அடுக்கி ஆயத்தமாக வைத்திருப்பார்கள்.

06.03.1892 இல் பிறந்த இத்தாவின் பெயர் சின்னாச்சிப்பிள்ளை. இவரது அக்கா வள்ளிப்பிள்ளை, தங்கை இளையபிள்ளை, தம்பி கதிரிப்பிள்ளை என்று 'பிள்ளை' குடும்பத்தை நிலை நிறுத்துவதில் கவன மெடுத்துப் பெற்றோர் பெயர் வைத்திருந் தாலும் 'இத்தா' படிக்கவில்லை. அவருக்குக் கையெழுத்துப் போடவும் தெரியாது. பெரு விரல் ஒப்பந்தான் வைப்பார். தம்பி கதிரிப் பிள்ளை மிகப் பிரபலமான பண்டிதர். அவர் எப்படிப் படித்தார் என்று பார்த்தால், ஆரம் பத்தில் தனிப்பட்ட ஆண்களின் திண்ணைப் பள்ளியில்தான் படித்துள்ளார். ஆகவே பெற்றோர் பெண் பிள்ளைகளை அவ்வாறு அனுப்பாமல் இருந்த காரணம் ஓரளவு புரிகிறது. இத்தாவின் நுண்மதி சிறந்தது. சந்தைக் கணக்கு, கடைக் கணக்கு எல்லாம் மனக் கணிதமாகவே பார்த்து முடித்து விடுவார். தான் படிக்கவில்லை என்பது பற்றி 'இத்தா' கவலைப்பட்டதாக எனக்கு நினைவில்லை. அம்மா சொன்ன ஞாபகமும் இல்லை. குடும்பத்தைக் கொண்டு நடத்தும் ஆளுமை அவரிடம் இருந்ததை நான் அவதானித்துள்ளேன். - தம்பக்கிரிக் காணியில் வரகு விதைத்து அறுவடை செய்வித்து வீட்டுக்குக் கொண்டுவரும் அளவுக்கு!

1966ம் ஆண்டு என்று நினைக்கிறேன் - நான் க.பொ.த உ/த படித்துக் கொண்டிருக் கிறேன். யூன் 24ம் திகதி! மாலையில் நிறுவியவர் நினைவு நாளும் பரிசளிப்பும், காலையில் அதற்கான கலந்துரையாட லுக்குக் கட்டாயம் போகவேண்டும். நான் மாணவர் தலைவி வேறு! வழக்கமாக எட்டு மணிக்கு வருகிற முத்துசாமியின் கார் வரவில்லை. பார்த்துப் பார்த்து நின்றுவிட்டு 8.15 மணியளவில் நான் நடக்கத் தொடங்கு கிறேன். 8.30க்குப் பாடசாலை ஆரம்பித்து விடும். இது இத்தாவுக்குப் பதற்றத்தை உண்டாக்கியிருக்க வேண்டும். அவர் படலையில் வந்து, நான் குஞ்சரக்கா வீட்டு முச்சந்தியைத் தாண்டும்வரை பார்த்துக் கொண்டு நின்றுவிட்டுத் திரும்பியிருக்கிறார். 'பெல்' இல்லாமல் வீட்டின் வடக்குப் புற ஒழுங்கையால் வந்து திரும்பிய 'சைக்கிள்' ஒன்று அவரைத் தொடுமளவு நெருங்கி விட்டது. அது இரண்டாவது பதற்றமாக இருந்திருக்க வேண்டும். அவவுக்குப் பாரிச வாதம் வந்து, உடனேயே மூளாய் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். அங்கே ஓர் அறையில் தங்கி நின்று சிகிச்சை பெற்றார். அம்மா, சின்னம்மா, ஆசையம்மா மாறி மாறி அவவுடன் நிற்பார்கள். சனி, ஞாயிறில் நானும் நின்ற ஞாபகம். ஏ.எல் நோட்ஸ் கொண்டு போய் வைத்துப் படித்துக் கொண்டிருப்பேன். டாக்டர் சம்பந்தர் வந்தால் "என்ன படிக்கிறீர்?" என்று கேட்டு வாங்கிப் பார்ப்பார். வைத்தியர் களுக்கு அப்படி எல்லாம் கேட்க நேரமிருந்தது! ஒரு தனியார் வைத்தியசாலையில் இரண்டு வாரம் அறையில் தங்கி நின்று வைத்தியம் செய்யும் பொருளாதார வசதி ஒரு ஆசிரியர் குடும்பத்துக்கு இருந்தது! கட்டிலுக்குப் பக்கத்தில் ஒரு கயிறு கட்டி அந்தக் கயிற்றில் பிடித்தபடி நடக்க அவருக்குப் பயிற்சி கொடுத்ததும் (physiotherapy ) அவர் முழுமையாக நடக்கக் கூடிய நிலைக்கு வந்ததும் கொஞ்சம் காலை இழுத்துத்தான் - பெரிய விடயம்! அதற்குப் பிறகு பத்து வருடங்களுக்கு மேல் அவர் சுகமாக வாழ்ந்தார். நடந்து திரிந்து தன் வேலைகளைச்

செய்யுமளவு, தெளிவாகக் கதைக்குமளவு, குணமடைந்திருந்தார்.

இத்தா தன்னுடைய பிள்ளைகளை எப்படி வளர்த்தார் என்று அவரது அந்தக் காலத்திற்குப் போய்ப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசை. அவரது கணவர் சுப்பிரமணியம் (கட்டைச் சுப்பர் என்று ஊரவர்களால் அழைக்கப்பட்டவர்) ஒரு விவசாயி. பெரிய உற்சாகமாக உழைத்துப் பணம் சேர்க்கும் விவசாயி என்றும் இல்லை. அப்படி இருந்தும் தனது கணவர் மேல் மிகுந்த அன்பு கொண்டவர் இத்தா என்று அம்மா சொல்லும் சம்பவங்களிலிருந்து நான் ஊகித்திருக்கிறேன். அவர் கோபம் வந்தால் சாப்பிடாமல் படுத்து விடுவாராம். இத்தா கால்மாட்டில் இருந்து அவரைச் சாப்பிடும்படி கெஞ்சுவாவாம். ஆறு பிள்ளை களை இறக்க விட்டு (போதிய மருத்துவப் பராமரிப்பு இல்லாததால்?) மிஞ்சிய மூன்று பெண் பிள்ளைகளையும் ஒருவரில் ஒருவர் கடும் பாசம் கொண்டவர்களாக வளர்த் திருந்தார். அம்மா, சின்னம்மாவைத் தன் மகள் போலவே தன்னுடன் வைத்துக் கொண்டார். என்னை விடவும் அவவுக்குச் சின்னம்மா மீது பாசம் அதிகம் என்பதற்கு என்னால் பல சம்பவங்களை உதாரண மாகக் காட்ட முடியும். ஆயினும் அது எனக்குப் பிரச் சினையாக இருந்ததில்லை. ஆசையம்மா திருமணமாகி வேறு வீட்டில் வாழ்ந்தாலும் ஒரு நாளுக்கு இருமுறை கட்டாயம் தன் சகோதரிகளைச் சந்திப்பார். அவர்கள் மூவருக்குள்ளும் இரகசியங்கள் இருக்காது. எல்லா விடயங்களையும் மூவரும் மனம் திறந்து பேசிக் கொள்வார்கள். ஒருவருக்கு வருத்தம் என்றால் மற்றவர் தாங்கிக் கொள்ளமாட்டார். அவர்கள் தங்களுக்குள் 'அடிபட்டு' ஒருநாளும் நான் பார்த்த ஞாபகம் இல்லை. இத்தகைய சகோதர பாசம் வரும்படி படிக்காத, 'இத்தா' எப்படிக் குழந்தை வளர்ப்புச் செய்தார் என்பது எனக்கு இன்னும் அதிசயமாகவே இருக்கிறது.

எனக்குச் சகோதரர்கள் இல்லை. இந்த மூன்று சகோதரிகள் மீது எனக்கு எப்போதுமே எல்லையற்ற பொறாமை உண்டு. பொறாமை என்பது கோபமும் பயமும் கலந்த உணர்வு என்று சென்ற வாரமும் ஆசிரிய உளவளத் துணையாளர்களுக்குக் கற்பித்தேன். எனக்கு வருத்தம் வரும்போது யார் என்னைக் கவனிக்கப் போகிறார்கள் என்ற பயமும் இந்தப் பொறாமைக்குள் உண்டு!

இத்தாவுக்குப் பிறகு 'ஆடு மாட்டில் பால் கறக்கும்' வேலையை எங்கள் வீட்டில் யாரும் செய்யவில்லை. செம்பைக் கழுவி, முழங்காலுக்கு இடையில் வைத்துக் கொண்டு இரண்டு கையாலும் 'விர் விர்' என்று பால் கறக்கும் அழகு இத்தாவுக்குக் கைவந்த கலை. நான் அதைப் பார்த்துக் கற்றுக் கொள்ளவில்லை. ஆனால் கவனமாக ரசித் ததால் நாடகப் பயிற்சி வகுப்புகளில் புதி தளித்தல் செய்யப் பயன்பட்டது.

இத்தா இறந்த பிறகும் எங்கள் வீட்டில் ஆட்டுக்குட்டிகள் நின்றன. அவற்றுக்கு உணவு போடும் வேலையை அப்பாவும், கணவரும் செய்தார்கள். ஆட்டுக் குட்டி களுடன் விளையாட எனக்குப் பிடிக்கும். மகனும் சிறு வயதில் விளையாடுவான். ஆயினும் ஆட்டில் பால் கறக்க யாரும் முனையவில்லை. பால் முழுவதும் குட்டி களுக்கே!

05.05.1977 இல் எங்கள் திருமணம் நடந்தபோது இத்தா படுக்கையாகிவிட்டா. மூன்றாம் அறைக் கட்டிலில் படுத்திருந்தா. தாலி கட்டும் நேரம் அவவைத் தூக்கிக்

கொண்டு வந்து சாய்மனைக் கதிரை ஒன்றில் இருத்தினார்கள். சிறிது நேரம் இருந்து பார்த்தா. பின் திரும்பக் கொண்டு போய்ப்படுக்க வைத்து விட்டார்கள். அப்போது சின்னம்மா குடும்பம் கண்டியில் வேலை செய்தபடியால் இத்தாவைப் பரா மரிக்கும் பொறுப்பை அம்மாதான் எடுத்துக் கொண்டா. ஆசையம்மாவும் நாள்தோறும் வந்து உதவி செய்வதுண்டு.

02.07.1977 இல் காலமான இத்தா கடைசியாக என்னோடு எதைப்பற்றிக் கதைத்தா என்று யோசித்துப் பார்க்கிறேன். நினைவு வர மறுக்கிறது. இத்தா ஒரு போதும் என் மனம் புண்படும்படி ஒரு வசனமும் பேசியதில்லை என்பது மட்டும் மிக அழுத்தமாக நினைவுக்கு வருகிறது.

"பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறான்" என்பது ஒரு பழைய சினிமாப் பாடல் வரி!

20.09.2018

* * *

**நூலுருவில் தொகுக்கப்படாத கட்டுரைகள் (சோலைக்குயில், விழிசைக்குயில் ஆகியவற்றில் வராதவை)**

| | |
|---|---|
| 17-11-15 | திருமதி சு. சிவமலரின் "உன்னால் முடியும்" - கவிதைத் தொகுதி - அணிந்துரை |
| 01-12-15 | கலையார்வனின் "கடல் கடந்த நாட்கள்" - அணிந்துரை |
| 10-05-16 | சைவப்புலவர் சு. செல்லத்துரையின் சிலப்பதிகார நாடகங்கள் - அணிந்துரை |
| 26-06-16 | "கதிரேசர் என்ற கவின்மிகு கலைஞர்" - தினக்குரல் |
| 21-08-16 | பகீரதி கணேசதுரையின் "ஆரண்ய வாசம்" - கவிதைத் தொகுதி - அணிந்துரை |
| 22-09-16 | சிவமகாலிங்கத்தின் "சமயவாழ்வியல்" - அணிந்துரை |
| 25-09-16 | "அகத்திலே அன்பினோர் வெள்ளம்" - திருமதி ச. கனகேஸ்வரன் அந்தியேட்டி மலர் |
| டிச 16 | "கீறல்" - மலரன்னையின் சிறுகதைத் தொகுப்பு - அணிந்துரை |
| 16-12-16 | "சிரித்த முகம் கொண்ட செம்மை மனிதர்" - திரு. கா. சரவணமுத்து நினைவுமலர் |
| 26-05-17 | "விழித்தட்டில் மறையாத உருவம்" திருமதி வரதலட்சுமி கதிர்காமத்தம்பி நினைவுமலர் |
| 24-10-17 | "மருந்து மறையுமா?" திரு. ப. சேனாதிராஜா நினைவுமலர் |
| டிச 17 | மாலினியின் "நிழலும் நிஜமும்" - கவிதைத்தொகுதி அணிந்துரை |
| 2018 | "கரை தொடாத அலைகள்" சித்தார்த்தனின் கவிதைத் தொகுப்பு - அணிந்துரை |
| 08-04-18 | "வில்லிசைப் பாடல்கள்" - சைவப்புலவர் சு. செல்லத்துரை - பதிப்புரை |
| 18-06-18 | "அறிவிலே தெளிவு தந்த நல்லாசிரியர்" - "நளா அமிர்தம்" - செல்வி அ. நளாயினி மணிவிழா மலர் - வாழ்த்துரை |
| ஒக் 18 | "மனுவுக்கு மனு" செ. அன்புராசா அடிகளின் கவிதைத் தொகுப்பு - அணிந்துரை |

**விமர்சனம் :**

# யாழ் மருத்துவக் கல்லூரி நாடகங்கள் ஒரு பார்வை (1994)

சிறந்த கலைகள் யாவுமே வாழ்வின் ஒரு பகுதியைப் பார்ப்பது போன்ற மாயத் தோற்றத்தை (illusion) ஏற்படுத்துவன. 03.05.94 மண்டபம் முற்றாய் நிரம்பி வழிந்ததோர் முன்றலில், கைலாசபதி கலையரங்கில், எமது வாழ்வை ஐந்து வெவ்வேறு கோணங்களில் இருந்து பார்த்த உணர்வை ஏற்படுத்தின மருத்துவக் கல்லூரி மாணவர்கள் வழங்கிய நாடகங்கள். கலைக்குப் பின்னால் எப்போதும் இருப்பது மன நெருக்கடி. இருப்புக்கும் எதிர்பார்ப்புக்கும் உள்ள மோதல் என்ற சுந்தர ராமசாமியின் கருத்தை எல்லா நாடகங்களிலுமே தெளி வாகக் காண முடிந்தது.

தெளிவு பெற்ற மதியினாய் என்ற நாடகம் ஒரு வலுவான எழுத்துருவைக் கொண்டிருக்காவிடினும் அதனோடு பொருந்தி வந்த பாடல்களும் அவற்றின் தெரிவு முறையும் அற்புதமாகத் தனிக் குரலில் பாடப்பட்ட வகையும் அழகாய் அமைந்தன. “ஏது புத்தி ஐயா”, “மோகத்தைக் கொன்றுவிடு”, “எங்கும் உதிரம், எங்கும் தசைகள்” போன்ற பாடல்கள் கவனிப்புக்கு உரியன. கால் வழங்காதவர் நன்றாக நடித்தார். அவரது மனப் போராட்டம், வேறு இரு நடிகர் ஊடாகவும் அவர் தெளிவு பெறல் நாலு நடனக்காரர் ஊடாகக் காட்டப்பட்ட உத்தி நன்று. ஆனாலும் இந்த மனமாற்றம் மிக அவசரமாய் உளவளத் துணையாளரின் பழுக்காநிலை ஆலோசனையாய் வந்து அமைவது ஏற்றுக் கொள்ளத்தக்கதாய் இல்லை. அதிக உணர்ச்சி வசப்பட்ட நடிப்பு - சினிமாத்தனமாக இருந்ததும் ஒரு குறை எனலாம்.

பூமாலையில் இளம் தம்பதிகளுக்கு இடையில் ஏற்பட்ட வேதனையும் மனக் கசப்புந்தான் அதன் ஆனந்த உணர்வாகப் பரிணாமம் பெறுகிறது. நாலு நிமிட முன்னுரையின் பின் தோன்றும் இரு குடும்பங்கள்! அவர்களுக்கு இடையிலான முரண் - ஓர் அழகான சங்கீதம் போல நிகழ்த்திக் காட்டப்பட்டது. “எனக்குள் இருக்கும் என் சுயத்தினை நீங்கள் காதலிக்கவில்லை” என்று சாந்தி சொல்வது அறிவு ரீதியாக உண்மையாக இருக்கலாம். ஆனால் நாற்பது வருடமாக உணர்வு பூர்வமாக வாழ்ந்த தம்பதியினரின் வாழ்வின் முன்னால் இந்த அறிவுப் பார்வை மிக மட்டமாகத் தாழ்ந்து போய் விடுகிறது. மேலை நாடுகளில் தேவைப்படுவது போல, எமக்கும் Marriage Counseling தேவையோ என்று நினைத்துப் பார்த்த பலர் தம்மோடு இப் பாத்திரங்களை இணைத்துப் பார்க்க (identify) முடிந்தமையே நாடகத்தின் வெற்றியாகும். பூமாலை நாயகியின் மிக மென்மையான நுண்ணிய நடிப்பு மட்டுமல்ல முள்ளுக் கம்பியால் சிறைப்படுத்தப்பட்ட பெண்ணின் குறுகிய கால நடிப்பும் கூடத்தான் நன்றாக இருந்தது. பூக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை என்பதைக் கூறி “மனிதர்

களையும் அப்படி அப்படியே ஏற்றுக் கொள் ளுங்கள்" என்பதில் சிறியதோர் பிரசாரத்தனம் தெரிந்தாலும் நாடகம் ஏதோ வகையில் மனதைத் தொட்டுவிடுகிறது. கடுமையான கோபம் வந்த பிறகும் சாந்தி யால் எப்படி அவ்வளவு மென்மையாக நடக்க முடிகிறது? வாழ்வின் உடைவைக் காட்டும் குறியீடு நன்று. மொத்தத்தில் பூமாலைக்கு ஒரு சபாஷ் சொல்வோம்.

விடியலைத் தேடும் விட்டில் பூச்சிகள் என்ற நாடகத்தில் ஒரு கலைத்துவ முழுமை தென்படவில்லை. பாட்டியின் நடிப்பு, வாயினால் எழுப்பிய பொம்மர் சத்தம், பட்ட மரத்தைப் பிடுங்கி எறிய மனமில்லை என்ற குறியீடு, பாட்டி பேரன் வந்திட்டான் என்று கும்மாளமிடும் கற்பனை ஆகியவை இந்த நாடகத்தின் பிளஸ் போயின்ற்ஸ். ஒரு பாத் திரத்தைச் சுற்றும் கதையும், முரண் இல்லாத நிலையும், காட்சி முடிந்தும் உறைநிலை கலையாத கவலையீனமும் இந்நாடகத் தைப் பின்தள்ளி விட்டன.

சமகாலத்துச் சமூகத்தின் பொதுப் பிரச்சினையை மேடையில் மிக அழகாய்க் கொணர்ந்தது 'புயல் வரைந்த சித்திரங் கள்'. பல நடிகர்கள் தத்தமது பாத்திரத்தை நன்குணர்ந்து சிறப்பாக நடித்த நாடகம் என்ற புகழ் இதற்குத் தகுதியானது. அம்மாவைத் தேடும் மகன், வைத்தியர் தள்ளி நிற்கச் சொல்லும் கிழவன், மகனை இழந்த தகப்பன், நிவாரணத்துக்கு வரட்டாம் எனும் எடுபிடி, யார் குறைவு நடிப்பில்? இப்பிரதியில் தெளிவு குறைவு. காத்திரத் தன்மை போதாது.

'அருமருந்தன்ன' பலமுறை தொடப் பட்ட ஒரு கருப்பொருளை மீண்டும் தொட்டுப் பார்த்தது. சிலுவைகளுக்கு முன்னால் மாணவர் மண்டியிடுதல் போன்று அமைந்த நாடகத் தொடக்கம் நன்றாக இருந்தது. கற்பனையில் ஒரு சிறப்புத் தென்பட்டது. அம்மா நன்றாக நடித்த இந்த நாடகத்தில் இறுதிப்பாகம் முற்றிலும் தெளித்த போதனையாகி அதன் தரத்தைக் குறைத் துவிட்டது. இசையின் இயைபின்மையும் இந்த நாடகம் முன்னுக்கு வருவதைத் தடுத்துவிட்டது.

மொத்தத்தில் மாலை 5 மணி முதல் இரவு 8 மணிவரை எமது நேரத்தை மிகப் பயனுள்ள முறையில் ரசித்துச் செலவு செய்ய உதவிய மருத்துவ மாணவர் களுக்குப் பார்வையாளர் சார்பில் ஆழ்ந்த நன்றி சொல்வோம்

* * *

**நூலுருவில் தொகுக்கப்படாத கட்டுரைகள் (சோலைக்குயில், விழிசைக்குயில் ஆகியவற்றில் வராதவை)**

| | |
|---|---|
| ஒக் 18 | "புரிந்துணர்வுச் சிகிச்சையாகும் வாசிப்பு" - தெல்லித்தென்றல் தெல்லிப்பழை நூலக வெளியீடு |
| தை 19 | "முதுமையின் முழுமை" - மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் "மக்கள் எழுச்சிப் பணி" மலர் |
| யூலை 19 | "சந்தோஷம் கொண்டாடினோம்" - 1994 க.பொ.த உ/த மாணவர் வெளியிட்ட "நாம் வாழ்ந்த மகாஜனா" மலர் |
| செப். 19 | "மாணவர்களின் உணர்வு நுண்மதியை மேம்படுத்தல்" - யாழ் இந்து மகளிர் கல்லூரி - சக்தி மலர் |
| ஒக் 19 | "பிள்ளைகளின் தாங்கு திறனை அதிகரித்தல்" - தெல்லித் தென்றல் - 2 சிறப்புமலர் |

உளவியல் கட்டுரை

# மாணவர்களின் உணர்வு நுண்மதியை மேம்படுத்தல்

"உதுகளின்ரை தலைக்கை களிமண். கத்திக் கத்திப் படிப்பிச்சும் ஒரு பிரயோசனமும் இல்லை" என்று பல ஆசிரியர்கள் சொல்ல, "எல்லாருக்கும் நுண்மதி இருக்கு. 100% அடைவு மட்டம் காட்டவேணும், இல்லாவிட்டால் எழும்பி நிண்டு விளக்கம் சொல்ல வேணும்" என்று அதிகாரிகள் ஆசிரியர்களை மிரட்ட பிள்ளைகளின் நுண்மதி இடையில் எங்கோ அகப்பட்டு நசிந்து போகிறது.

நுண்மதி பற்றி ஏராளமான வரை விலக்கணங்கள் இருந்தாலும் காரணம் காணும் திறன், பிரச்சினை தீர்க்கும் ஆற்றல் ஆகியவற்றுக்கும் நுண்மதிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. உலகத்தில் இதுவரை பதியப்பட்ட நுண்மதிக் கணிப்பீடுகள் '263' வரை உச்சங்கள் பலவற்றைத் தொட்டிருக் கிறது. அவ்வாறான உச்ச நுண்மதி கொண்டமைந்தோரில் பலர் விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், சங்கீத விற்பன்னர்கள் என்றவாறு அமையும்.

தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் தன்மை, மொழியைப் பாவிக்கும் திறன், வெளி தொடர்பான விளக்கம், உடலை உச்ச மாகப் பாவிக்கும் தன்மை, இயற்கையுடன் வினைத்திறன் மிக்க தொடர்பு, தன்னை அறியும் ஆற்றல், ஏனைய உயிர்களுடன் உறவு கொள்ளும் பண்பு, சங்கீதத்தைப் புரிந்து கொள்ளும் அல்லது பாவிக்கும் திறன் போன்ற பல விடயங்கள் நுண்மதியோடு தொடர்புபடும்.

| | சுயம்<br>சுய விழிப்புணர்வு | சமூகம்<br>சமூக விழிப்புணர்வு |
|---|---|---|
| அடையாளம் காணல் | 1. உணர்வை இனம் காணல்<br>2. செம்மையான சுய மதிப்பீடு<br>3. சுய நம்பிக்கை | 1. ஒத்துணர்வு<br>2. நிறுவனங்கள் சார் விழிப்புணர்வு<br>3. சேவை மனப்பாங்கு |
| | சுய முகாமை | உறவுகளின் முகாமை |
| சீராக்கல் | 1. சுய கட்டுப்பாடு<br>2. வெளிப்படைத் தன்மை<br>3. இசைவாக்கம்<br>4. சாதனை, உந்தல்<br>5. புதிதாகத் தொடங்கும் தன்மை | 1. ஊக்கமளிக்கும் தலைமைத்துவம்<br>2. மற்றவர்களை வளர்த்தெடுத்தல்<br>3. மற்றவர்களில் தாக்கம் செலுத்தல்<br>4. மாற்றங்கள் கொண்டுவரும் ஊக்கி<br>5. முரண்பாட்டு முகாமை<br>6. உறவுகளைக் கட்டி எழுப்பல்<br>7. குழு வேலையும் ஒத்துழைப்பும் |

நாங்கள் பொதுவாகப் பேசுகின்ற இந்த நுண்மதிக்கு வேறாக உணர்வு நுண்மதி (E.Q) என்ற விடயமே ஒருவரது வாழ்வின் வெற்றிக்கு மிக அவசியமானது என உளவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மனிதர்களின் உணர்வு நுண்மதிக்கு ஒரு தற்சார்புக் கூறும் சமூகம் சார் கூறும் இருக்கின்றன. அந்த இரண்டு நிலையிலும் அடையாளம் காணலும் சமப்படுத்தலும் முக்கியமாகின்றன. ஆகவே உணர்வு நுண்மதி யன்னல் ஒன்று மேற்கண்டவாறு அமையும்.

எமது மனதில் தோன்றும் உணர்வு களையும் உணர்ச்சிகளையும் அடையாளம் கண்டு பெயரிடுதல் அவ்வளவு இலகு வானதில்லை. உலகில் 36% ஆன வளர்ந் தோரால் மட்டுமே இதைச் செய்ய முடிகிறது. ஆகவே பிள்ளைகளுக்கு அவர்களின் மாணவப் பருவத்திலேயே தமது உணர்ச் சிகளை இனம் கண்டு பெயரிடவும் அந்த உணர்வுக்குள் தாம் இருப்பதை ஒத்துக் கொள்ளவும் கற்றுக் கொடுக்க வேண்டும். கோபம், வெறுப்பு, பயம், குற்ற உணர்வு, சந்தோஷம், எரிச்சல், பொறாமை, கவலை, வெட்கம், ஆச்சரியம், ஈடுபாடு, அன்பு போன்ற உலகப் பொதுவான, செறிவு கூடிய உணர்ச்சிகளை அடையாளம் காண முதலில் கற்றுத் தரலாம். மனம் முதிர்ச்சி அடையும்போது ஏனைய சிக்கலான உணர்வுகளை அல்லது உணர்வுக் கலவைகளை இனம் காண முடியும்.

எமது உணர்ச்சிகளை அடையாளம் காண முடியும்போது மற்றவர்களின் உணர் வுகளை விளங்கிக் கொள்வதும் அவர்க ளுக்கு ஒத்துணர்வு காட்டுவதும் இலகுவா கிறது. இன்னொருவருடைய சப்பாத்துக் குள்ளே எமது காலை வைத்து அது எப்படி இருக்கிறது என்று உணர்ந்து கொள்ளப் பார்ப்பது போன்றதே ஒத்துணர்வு என்பர். பாடசாலைப் பருவத்திலேயே மற்றவர் களுக்கு ஒத்துணர்வு காட்டப் பழகிக் கொள்ளலாம்.

வாழ்க்கையில் மாற்றம் ஒன்றே மாறாத விதி என்று சொல்வார்கள். எம்மைச் சுற்றி உள்ள சூழல் மாறிக் கொண்டிருக்கும். மனிதர்கள் மாறுவார்கள். பழக்க வழக்கம் மாறும். இந்த மாற்றங்களை ஏற்றுக் கொள் ளத்தான் வேண்டும். ஆயினும் அந்த மாற்றத்துக்கு முகம் கொடுக்கக்கூடிய திட்டம் ஒன்றுடன் மாற்றங்களை அர வணைக்க முற்பட்டால் உணர்ச்சிகளைச் சமநிலை யில் பேணுவது எளிதாகும்.

சுய விழிப்புணர்வு என்ற தொடரில் அடுத்ததாக எம்மை நாமே செம்மையாக மதிப்பீடு செய்யக்கூடிய நிலைமை எப்போதும் இருக்க வேண்டும். மற்றவர்கள் எம்மைப் பற்றி என்ன சொல்கிறார்கள் என்பதை விட நாம் எம்மைப் பற்றி என்ன நினைக்கிறோம் என்பது உளநலத்தில் மிக முக்கியமான விடயம். சுய நம்பிக்கையுடன் எமது சொந்தப் பலங்களையும் பலவீனங்களையும் அறியும் முறைமைகளையும் சிறு வயதில் இருந்தே பயின்று வருதல் நல்லது.

நாள்தோறும் நாங்கள் பல்வேறு தரப்பட்ட மனிதர்களுடன் பழகவேண்டி நேரலாம். இவர்கள் ஒவ்வொருவரும் என்னென்ன நோக்கங்களுடன் எம்மை அணுகுகின்றனர் என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ள முயல வேண்டும். அதே நேரம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டு, மற்றவர்களால் சீண்டப்படக் கடினமானவர் ஆகவேண்டும். இதற்கும் நீண்ட காலப் பயிற்சி அவசிய மாகும்.

வீட்டிலும், பாடசாலையிலும், வேறு இடங்களிலும் பிள்ளைகள் மனிதர்களுடன் பழகும்போது பலரிடமிருந்து பல்வேறு வேண்டுதல்கள், கட்டளைகளை எதிர் கொள்ள நேரிடலாம். “வயதிலை கூடின ஆக்கள் சொன்னால் பணிஞ்சு நடக்க வேணும்.

எதிர்த்துக் கதைக்கப்பிடாது" என்பதை ஒரு பொது அறிவுறுத்தலாக நாம் பிள்ளைகளுக்குச் சொல்வதுதான் சில வேளை பிள்ளைகளின் உணர்வு நுண் மதியைக் கடுமையாகப் பாதிக்கும் பாதைக்குப் பிள்ளை செல்ல வழி வகுக்கலாம். யார் என்ன கேட்டாலும், யார் என்ன கட்டளை இட்டாலும், "நான் செய்வது பொருத்தமானதா? என்னால் முடியுமா? எனது மனச் சாட்சிக்குச் சரியா?" ஆகிய விடயங்களை ஆராய்ந்து, "ஆம்" சொல்லப் பிள்ளைக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். பெற்றோராக இருந்தாலென்ன ஆசிரியராக இருந்தாலென்ன "போதைப் பொருள்" வாங்கி வரும்படி அல்லது "சிகரெட்" வாங்கி வரும்படி கேட்டால், "இல்லை" என்ற பதிலை உறுதியாகச் சொல்லப் பிள்ளை பழக வேண்டும். பொருத்தமான இடங்களில், "இல்லை" என்று மறுக்கத் தெரிகிற பிள்ளைகள் துஷ்பிரயோகத்திற்கு உட்படும் சந்தர்ப் பமும் குறைவானது.

எங்களைப் பிழையான வழிகளில் இழுத்துச் செல்லும் நச்சு மனிதர்கள் எந்தச் சமூகத்திலும் இருப்பார்கள்தான். அவர்களை இனம் காண்பதும், சற்றுத் தொலைவில் அவர்களை வைத்துக் கொள்வதும் அவசியம்.

மனிதர்கள் வளர்ந்து வரும்போது பல விடயங்களையும் கற்றுக்கொள்ள முனையும் போது தவறுகள் விட நேரிடலாம். தெரிந்தும் செய்யப்படலாம். தெரியாமலும் செய்யப் படலாம். அவை எமது பிரக்ஞைக்கு வரும் போது அந்தத் தவறை ஏற்றுக் கொள்ளலாம். மீண்டும் ஒரு முறை அந்தத் தவறைச் செய் யாதிருக்க முனையலாம். ஆயினும் அவசியமற்ற குற்ற உணர்வுக்குள் போக வேண்டிய தில்லை. இதையும் பிள்ளைகள் பழக வேண்டும். நூறு வீதச் செம்மையை எம்மிடமும் எதிர்பார்க்க வேண்டியதில்லை. பிறரிடமும் எதிர்பார்க்க முடியாது. முடிந்தவரை திறமையாகவும் செம்மையாகவும் செயற்படல் என்ற இலக்கே வெற்றி தருவது.

"ஈவது விலக்கேல்" என்பது ஔவை மொழி. தமிழ் இலக்கியத்தில் 'கர்ணன்' என்ற சிறப்புப் பாத்திரம் ஈகையின் சிறப்பை வலியுறுத்த மிக அழகாகப் படைக்கப் பட்டது. கொடுப்பது நல்ல பழக்கம் என்பதைப் பிள்ளைப் பருவத்திலேயே புரிந்து கொள்ளலாம். கொடுக்கும்போது எதையும் திருப்பி எதிர்பார்க்காமல் கொடுத்தல் என்பது மிக முக்கியம். எமது சக நண்பர்களின் பிறந்த தினத்திற்கு நாம் கொடுக்கும் பரிசுப் பொருள்கள் எமது உணர்வு நுண்மதியை அதிகரிக்க உதவும் என்று கொள்ளமுடியாது. ஏனெனில் அங்கே ஓர் எதிர்பார்ப்பு இருக்கலாம்.

கோபம் எல்லோருக்கும் வரும்.வரலாம். அந்தக் கோபத்தின் பின்புலத்தில் ஒரு நீதிக்கான போராட்டம் இருக்கிறபோது அதைத் 'தார்மீகக் கோபம்' என்பர். உளவியல் அதைத் தொழிற்படுநிலைக் கோபம் என்று கூறும். அந்தக் கோபம் காரணமாக எழும் செயற்பாடுகள் மனிதகுல நன்மை சார்ந்து இருக்கும். ஆயினும் கோபம் நீண்ட நாள் நிலைத்திருப்பதும், பழிவாங்கும் எண்ணத்தை நோக்கி நகர்வதும் எப்போதும் ஆபத்தானவை, உணர்வு நுண்மதி வளர்ச்சியைப் பாதிப்பவை என்பதைக் குழந்தைகளுக்குச் சொல்லித்தர வேண்டும்.

பக்கத்தில் இருப்பவரோடு, எம்மோடு படிப்பவரோடு, சம வயதினரோடு, எம்மோடு வேலை செய்பவரோடு எம்மை ஒப்பிட்டுக் கொள்வது மனதின் சகஜமான பழக்கந் தான். அந்த ஒப்பீடு தேவை இல்லை என்றாலும் நாம் அதைச் செய்து "எம்மிடம் என்ன இல்லை" என்பதை வரிசைப்படுத்திக் கொள்வது வழமை. இதற்கு மறுதலையாக எம்மிடம் என்ன எல்லாம் இருக்கிறது என்று எப்போது எண்ணிப் பார்த்தோம்? எமது

வரப்பிரசாதங்களை எப்போது பட்டியற் படுத்தினோம்? "எமக்கு இரண்டு கண்ணும் இருக்கிறது" என்பது முதல், "எமக்கு மூன்று வேளையும் சாப்பாடு கிடைக்கிறது" என்பது வரை எமது கொடுப்பனவுகளை எண்ணிப் பார்க்கவும் அதுபற்றிப் பேசவும் எழுதவும் பிள்ளைகள் பழகிக் கொள்வது உணர்வு நுண்மதி விருத்திக்குப் பெரிதும் உதவும். அந்த வரப்பிரசாதங்ளை நாம் பெறுவதற்குக் காரணமாக இருந்தவர் களுக்கு நன்றி கூறுதல், நன்றிக் கடிதம் எழுதல், அவர் களைப் பற்றி நினைத்தலும், பேசலும், எழுதுதலும் ஆகியவை அடுத்த படி நிலையில் எமக்கு உதவும். இவ்வாறு நேரான சுய உரையாடலை ஊக்குவிக்கும் செயற்பாடு களில் பழக்கத்தை அதி கரிக்கும் போது, மறையான சுய உரையாடல் பெருமளவு குறைந்துவிடும்.

தொழில்நுட்பச் சாதனங்களின் வளர்ச்சி இந்த நூற்றாண்டில் உச்சத்துக்கு வந்து கொண்டிருக்கிறது. இன்னும் அது வளரும். தொழிற்படு நிலையில் நாம் அதை அறிய வேண்டும், பயன்படுத்தத் தெரிய வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆயினும் அதன் பாவனையை மட்டுப்படுத்தல் எமது உள நலனுக்கு மிக அவசியம். இரவு நித்திரைக்குச் செல்வதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பதாகவே தொழில்நுட்பச் சாதனங்கள் அனைத் தையும் நிறுத்திவிட வேண்டும். படுக்கை யிலும் அது எமக்கு அருகில் தொழிற்பட்டுக் கொண்டிருப்பது அவசியமில்லை. முடிந்த வரை மனிதர் களுடன் நேரடித் தொடர்பைப் பேணுவதே நன்மையானது.

குறிப்பாக நரம்புத் தொகுதியின் செயற் பாட்டுக்கும் பொதுவாக உடல், உள நலத்துக்கும் போதிய ஆழமான நித்திரை அவசியம். வளர்ந்தோருக்கான நித்திரை ஏழு மணி நேரம் முதல் ஒன்பது மணி நேரம் வரை மாறுபடலாம். இரவு வேளையில் தொடர்ச்சியான தூக்கமாக அமைவதும் அவசியம். மாணவர்களுக்கு அவர்களின் வயதைப் பொறுத்து நித்திரையின் தேவை இன்னும் ஓரிரு மணித்தியாலங்கள் அதிக மாகவே இருக்கும். ஆழ்ந்த தூக்கத்தின் பின்வரும் பகல் பொழுதுகளில் உணர்ச்சி களைச் சீராக வைத் திருத்தல் இலகு வானது. ஆகவே அநா வசியமாக நித்திரை யைக் குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடா திருப்பதே (இரவு வேளையில் இரண்டு, மூன்று சினிமா பார்த்தல்) நன்மையாகும்.

உடலின் செயற்பாட்டுக்கு நீர் மிக அவசியமானது. எமது நீர்த்தேவையைப் பூர்த்தி செய்யப் பானங்களை அருந்துவதும் தவறில்லை. அவை போசணைமிக்க பானங் களாயின் சிறப்பு. வீட்டில் தயாரிக்கப் படும் பழச்சாறுகள், மோர், இளநீர் போன்றவை சிறந்த பானங்களுக்கான உதாரணங் களாகும். ஆயினும் நாம் அருந்தும் சில பானங்கள் "கபீன்" எனும் பதார்த்தம் கொண்டவை. தேநீர், கோப்பி ஆகியவை சில உதாரணங்கள். கடையில் விற்கப்படும் சில தகரத்தில் அடைக்கப்பட்ட பானங் களில் "கபீன்" மிக அதிக செறிவில் உள்ளது. "கபீன்" பாவனையைக் குறைத்துக் கொள்வதே உணர்வு நுண்மதி விருத்திக்கு உகந்த தாகும்.

மேற்கூறிய விடயங்களை எல்லாம் பாடசாலை ஏதோ ஒரு வகையில் பிள்ளைகளுக்குக் கற்றுத் தருவது எதிர்காலச் சந்ததி சந்தோஷமாய் வாழ்வதில் உதவி புரியும்.

எமது மகிழ்வை எல்லைப்படுத்த நாம் யாரையும் எதையும் அனுமதிக்க வேண்டிய தில்லை.

(யாழ் இந்து மகளிர் கல்லூரியின் சக்தி மலரில் பிரசுரமானது - செப்டெம்பர் 2019)

* * *

கருத்தரங்கக் கட்டுரை

# நாவலரும் ஔவையாரும்

உலகிலே அதிகம் தற்கொலை செய்து கொள்வோர் பட்டியலில் இலங்கை இன்று நாலாவது இடத்தில் இருக்கிறது. அதிலும் வடக்கு மாகாணம் ஏனையவற்றை விட முன்னுக்கு இருக்கிறது. மனச்சோர்வு, பதகளிப்பு, மதுப்பாவனை, போதை, நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு என்று எவை எல்லாம் உளநலக் குறைவின் அறிகுறிகளோ, அவற்றில் நாம் முன்னணியில் இருக்கிறோம். வீதி விபத்துக்கள், வாள்வெட்டுக்கள், களவு என்று அமைதியற்ற வாழ்வு எமது இயல்பு என்றாகிவிட்டது.

இந்தப் பின்னணியில் மிக ஆரோக்கிய மான வாழ்வு என்பது எது என்பது பற்றி மிக ஆழமாக யோசித்த நாவலர் அவருக்கு வழிகாட்டிய ஔவை பாடல் ஆகிய விடயங் களைப் பார்க்க இருக்கின்றோம்.

சமூக நலன் பற்றிய சிந்தனையும் செயலும் ஒரு வகையில் நியூற்றனின் மூன்றாம் விதி போன்றது. நாம் எதைச் செய்கின்றோமோ அதுவே எமக்குத் திருப்பி வரும். "நான் இவ்வளவு பேருக்குச் சரியான திசையில் வாழ வழிகாட்டப் போகிறேன்" என்பது எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அந்தச் சுய கணிப்பு உள நலத்தில் மிக முக்கியமானது.

இன்றைய மிக நவீன உளவியல் சிகிச்சை முறை ACT (Acceptance Commitment therapy) எனப்படும். இப்போது தான் இம் முறை எங்கள் மத்தியில் மெல்ல அறிமுக மாகிறது. நடந்த, நடக்கின்ற விடயங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். பின்னர் அந்தக் கணத்தில் வாழ வேண்டும். நடந்து முடிந்த விடயங்களைத் திரும்பத் திரும்ப யோசிப் பதையும், எதிர் காலத்தில் நடக்கப் போவதை யோசித்துக் கவலைப்படு வதையும் விட்டுவிட்டு இன்று, இப்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை ஒழுங்காகச் சரியாகச் செய்வது என்பது அந்தச் சிகிச்சை முறையின் சுருக்கம்.

உளநல ஆரோக்கியக் குறைவோடு இருப்பவர்கள் மட்டுமல்ல நல்ல உள ஆரோக்கியத்தோடு இருப்பவர்களும் பின் பற்றக்கூடிய ஒரு நடைமுறை இது. கஷ்ட மான உணர்வுகளைத் தூக்கி எறிய வேண்டாம், துன்பமாய் இருக்கு, கவலை யாய் இருக்கு, பயமாய் இருக்கு என்று எதுவாய் இருந்தாலும் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்வோம். அதே நேரம் எமது இலக்குகளை எப்போதும் விழுமியத் திசையில் (Valued direction) அமைத்துக் கொள்வோம் என்கிறது இக்கொள்கை. விழுமியத் திசைதான் இங்கு மையக் கருத்து, சிந்திக்கும் சுயம் ஒன்று. அவதானிக்கும் சுயம் (Self) இன்னொன்று, அவதானிக்கும் சுயத்தை வலுப் படுத்துவோம் என்கிறது இச்சிகிச்சை.

இத்தகைய ஒரு வாழ்வை வாழ்ந்து வழிகாட்டியவர் நாவலர். அதற்கு ஆதாரமாக அறஞ்செய விரும்பு, ஆறுவது சினம் என்பவை முதல் கண்டொன்று சொல்லேல் ஞயம்படவுரை, சான்றோரினத்திரு, தக்கோனெனத்திரி, கெடுவது செய்யின் விடுவது கருமம், பிறன்மனை புகாமை அறமெனத் தகும் என்று ஏராளமான ஔவைக் கூற்றுக்களைக் கொண்டு நிமிர்ந்தார். நாள்தோறும் ஆத்மார்த்த பூஜை செய்துவந்தார்.

"அம்மை" என்பதன் திரிபாகிய "அவ்வை" என்ற சொல்லுடன் சிறப் புணர்த்தும் விகுதியாகிய "ஆர்" சேர்ந்து "அவ்வையார்" (அம்மையார்) எனும் சொல் பெண்களில் உயர்ந்தவர்களைக் குறிக்க வழங்கியது. ஔவையார் இருவர் அல்லது இருவருக்கு மேல் இருந்திருக்க வேண்டும் என்பது தமிழ் ஆய்வாளர் கருத்து. ஆகவே ஔவையாரின் இயற்பெயர் இன்னதென்று அறியக்கூடவில்லை. ஒருவர் 2000 ஆண்டு களுக்கு முன் வாழ்ந்தவர். மற்றவர் கி.பி 12ஆம் நூற்றாண்டில் கம்பர், ஒட்டக் கூத்தர் காலத்தில் இருந்தார். ஆகவே ஔவையார் என்ற சொல் ஒரு தனிப்பட்ட ஆளுமையைக் குறித்து நிற்கவில்லை.

யாழ்ப்பாணத்து நல்லூரிலே கார்காத்த வேளாளர் குலத்திலே, பாண்டி மழவர் குடியிலே பசுக்கொலைக்கஞ்சிப் பாரதம் சென்ற ஞானப்பிரகாசர் மரபிலே கந்தர் - சிவகாமியம்மை தம்பதியினருக்குப் பிறந்த ஆறு ஆண்பிள்ளைகளில் இளையவராக (பெண்கள் அறுவர்) 18-12-1822இல் உதித்து, சைவசமயத்திற்கும் தமிழுக்கும் எனத் தன் வாழ்வை அர்ப்பணம் செய்து 05-11-1879 இல் சிவபதப்பேறு பெற்ற தனி ஆளுமை ஆறுமுக நாவலர்.

ஒரு சமூகம் எப்பொழுதெல்லாம் நெருக்கீடுகளுக்கும் அனர்த்தங்களுக்கும் உள்ளாகிறதோ அப்போதெல்லாம் அதன் உளநலம் குன்றிப் போகிறது. விழுமியங்கள் சரிந்து போகின்றன. சமூக ஒழுக்கம், ஒழுங்கு குலைந்து போகிறது. "நல்லொழுக்கத்தை வளர்த்தவர் நாவலரைப் போல் ஒருவருமில்லை" என்று பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் குறிப்பிடுமளவிற்கு இடர்ப்பட்டிருந்த சைவத் தமிழ் சமூகத்திற்கு ஒரு முன் மாதிரியாய் வாழ்ந்து காட்டிய ஆண்மகன் நாவலர். நாவலரின் கருத்துக்களை எதிர்த்தவர் பலர் இருக்கலாம். ஆனால் நாவலர் ஒரு சிறந்த ஒழுக்க சீலர் என்பதில் யாருக்கும் இன்று வரை மாற்றுக் கருத்து இல்லை. அதனால் தான் எனது தந்தையாருக்கும் அக்கால ஆசிரியர் பலருக்கும் அவர் முன்மாதிரியாய் அமைந்தார்.

ஐந்தாவது வயதிலேயே வித்தியாரம்பம் செய்து நல்லூரில் சிறிய தமிழ்ப் பள்ளிக்கூடம் வைத்துக் கற்பித்து வந்த சுப்பிரமணியபிள்ளை என்பவரிடம் தொடங்கிய கல்வி மிக விரிந்து, தமிழ் ஆங்கிலப் புலமையில் ஈடு இணையற்றவர் என்று மற்றவர் வியக்கும் வகையில் கற்றுத் தேர்ந்த நாவலர் ஔவையாரைக் கட்டாயம் படித்திருப்பார்.

"நாடா கொன்றோ" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் ஔவையாரால் பாடப்பட்டது எனக் குறிப்பிடப்படுகிறது. அப்பாடலின் உருவம், உள்ளடக்கம், மொழி நடை ஆகியவற்றுக்கும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் அமைப்புக்கும் உள்ள வேற்றுமையை யாரும் இலகுவில் புரிந்து கொள்வர்.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும் மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை

திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒரு வாசகமென்றுணர்".

எனப் பாடும் ஔவையார் சங்க காலத்திற்கும் பிந்தியவராகவே இருத்தல் முடியும். ஔவை என்றால் மூதாட்டி, தாய் என்றெல்லாம் பொருள் படலாம். ஔவை எனப்பட்ட முதிர்ந்த பெண் புலவர்களை எல்லாம் நாவலர் படித்திருப்பார்.

சங்ககால நூல்கள் மேல் நாவலர் அதிகம் அக்கறை கொள்ளவில்லை என்று அவர் மேல் ஒரு குறை உண்டு. பிற்கால ஔவையார் மீது அவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகியவற்றிற்கு அவர் உரை எழுதியுள்ளார்.

ஒருவர் வாழ்வு பற்றிய விமர்சனம் அவர் எதைச் செய்தார் என்று பார்ப்பதாக அமைய வேண்டும். எதைச் செய்யவில்லை என்று சுட்டுவது பொருத்தமற்றது. பாரதியார் ஏன் விஞ்ஞானப் புனைகதை எழுதவில்லை என்று கேட்க முடியுமா? அவருக்கு அதில் ஈடுபாடு இல்லை என்பதே தெளிவான பதில். சங்க கால நூல்களின் உள்ளடக்கத்தில் நாவலருக்கு ஈடுபாடு இல்லாமல் இருந் திருக்கும். ஆனால் பிற்கால ஔவையாரின் விழுமிய வாழ்வுக் கருத்துக்கள் அவரை அதிகமாக ஈர்த்திருந்தன. அதைச் சார்ந்து அவர் கட்டுரை, வினாவிடை, நீதிவாக்கியம், கதை எல்லாம் எழுதினார்.

நாவலர் தனது பாடநூல்களில் எழுதியுள்ள கதைகளில் பல ஔவையாரின் அறக் கருத்துக்களோடு மிகவும் பொருந்தி வருவதை அவதானிக்கலாம்.

"தந்தை தாய் பேண்" என்ற வார்த்தை அவரது ஆழ்மனதில் எவ்வளவு தூரம் ஊடுருவி இருந்தது என்பதற்குப் "பாட் டனுக்குக் கஞ்சி வார்த்த ஓடு பிதாவுக் கான" கதை நல்ல உதாரணம். அதே போல "இந்தப் பணம் செல்லுமோ செல்லாதோ என்பதைச் செட்டியாரிடம் கேளுங்கள்" கதை "பையலோடு இணங் கேல்" அவரிடம் ஆழப் பதிந்ததன் அடை யாளம்.

நாவலர் ஔவையாரின் நூல்கள் சில வற்றிற்குச் செய்துள்ள உரை "புத்துரைப் பதிப்பு" எனலாம். மூல நூலாசிரியர் அல்லது உரையாசிரியர் கருத்துக்கேற்பப் பதிப்பா சிரியர் தாமே ஒரு புத்துரை எழுதிப் பதிப் பிப்பது புத்துரைப் பதிப்பு எனப்படும். நாவலர் நீதிநூல், புராணம், சமயம், சிற்றிலக்கியம் போன்ற பொருண்மைகளில் பதிப்பித்திருக் கிறார். அவற்றில் நீதி நூல் பதிப்புக்கள் ஔவையாரோடு அவரைப் பிணைத் துள்ளன.

விழுமியக் கருத்துக்களைத் தெளிவா கவும், திட்பமாகவும் விளக்கும் வகையில் திருக்குறளுக்கு அடுத்தாற் போல் போற் றத்தக்கவை நீதி நூல்கள் ஆகும். எளிமை யாகவும், சுவைபடவும் கருத்துக்களை விளக்கும் வகையில் அவற்றை இணை யற்றவையாகச் செய்தவர், பிற்கால ஔவையார், ஆதி பகவனுக்குப் பிறந்த ஏழு பிள்ளைகளில் மூத்தவர் இந்தப் பிற்கால ஔவையார் என்பது கற்பனைக் கதை யாகவும் இருக்கலாம். சங்ககால ஔவையாரை அதியமானோடு பொருத்திப் பார்ப்பது போல, பிற்கால ஔவையாரை வள்ளுவரோடும் நாவலரோடும் பொருத்திப் பார்க்கும்படி ஒத்த சிந்தனைகள் பல உள்ளன.

சான்றோரிடை காணப்படும் ஒத்த எண் ணக்கருக்கள் காலதேச வர்த்தமானங் களைக் கடந்திருப்பது வெள்ளிடைமலை. ஏனெனில் சான்றோர்கள் எப்போது தோன்றியிருந்தாலும், எங்கு தோன்றியிருந்

தாலும் மனித முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டே நகருவர்.

ஔவையார் பிறர் வாழ்வில் வறுமை கண்டு தம் வாழ்வில் எளிமை பின்பற்றி யவர். ஔவையாரின் புகைப்படம் அல்லது வீடியோ எம்மிடம் இல்லாதிருக் கலாம். ஆனால் அவரது எழுத்தைப் படித்தவர் அவருக்குக் கொடுத்த ஓவியம் ஒரு வெள்ளைச் சேலையுடனும் தடியுடனும் எளிமையான தோற்றம் காட்டும் முதுமைப் பெண் என்பதே.

நவாலரது தோற்றம் தெரிந்த ஒன்று தான். இடுப்பில் கட்டிய வேட்டியுடன், மேலங்கி இல்லாமல் விபூதியும் உருத்திராக்கமுமாய் அவர் காட்டும் எளிமையான தோற்றம் அவருக்கு முந்திய ஔவையாரை மட்டு மல்ல அவருக்குப் பிந்திய அன்னை திரேசா, அப்துல்கலாம், காந்தி போன்ற பலரை நினைவூட்டும். சான்றோர்கள் எப்போது பிறந்தாலும் எளிமையான தோற்றமே காட்டுவர்.

**நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்**
**ஆறில்லா வூருக்கழகுபாழ் - மாறில்**
**உடன் பிறப்பில்லா வுடம்பு பாழ் பாழே**
**மடக் கொடியில்லா மனை.**

என்ற ஔவையாரின் நன்னெறிப் பாடலுக்கு, விபூதியில்லாத நெற்றி பாழாகும். நெய் யில்லாத போசனம் பாழாகும். நதியில்லாத ஊருக்கு அழகு பாழாகும். மாறுபடாத சகோதரர் இல்லாத உடம்பு பாழாகும். (இல்லறத்திற்குத்தக்க) மனைவியில்லாத வீடு பாழாகும் என்று உரை எழுதினார் நாவலர்.

இப்பாடலில் குறிக்கப்பட்ட சில விடயங்கள் மனிதர்கள் நினைத்து மாற்றத் தக்கன. பல மாற்ற முடியாதன.

God grant me the serenity
To accept the things I cannot change
The courge to change the things I can and
The wisdom to know the difference.

என்பது Dale Carnegie இன் How to stop worrying and start living என்ற நூலில் நான் வாசித்த ஒரு பாடல்.

எமது உடலின் புறத் தோற்றத்தின் சில கூறுகளை எம்மால் மாற்ற முடியும். எளிமையான தோற்றம் அவற்றில் ஒன்று. நெற்றித் திருநீறு இன்னொன்று. நாம் உண்ணும் உணவு எது என்பதை எம்மால் மாற்ற முடியும். நாவலர் ஆரோக்கியமான சைவ உணவு உண்பவராகவே எப்போதும் இருந்தார். ஔவையாருடைய உணவு நெல்லிக்கனியோடு தொடர்புபடுவது. நீண்ட ஆயுளோடு தொடர்புபடுவது. தற்காலத்தில் நவீன வைத்தியர்கள் ஆரோக்கியமான வாழ்வு முறையியலில் ஆரோக்கியமான உணவுக்கும் ஆயுளுக்கும் உள்ள தொடர்பு பற்றி நிறையவே பேசுகிறார்கள்.

ஊருக்குள்ளே ஆறு ஓடுவது எம்மால் மாற்ற முடியாத ஒன்று. நல்லூரிலே ஆறு ஓட வைக்க நாவலர் எத்தனிக்கவில்லை. ஆனால் வறிய மாணவரின் மனதிலே கல்வி ஆறு ஓட வைத்தார். (இல்லறத்திற்குத் தக்க) மனைவியைத் தேடுவது கடினம் என்று கருதியோ என்னவோ நாவலர் இல்லறத்தில் புகவில்லை. ஔவையாரும் இல்லறத்தில் புகுந்ததாய் எந்த அவ தானமும் இல்லை.

நாவலர் தனது 45ஆவது வயதில் வெளியிட்ட விஞ்ஞாபனத்தில் கூறியுள்ள சுயசரிதைக் குறிப்பு. "நான் இல் வாழ்க்கை யில் புகவில்லை. இவைகள் எல்லாவற்றிற் கும் காரணம் சைவ சமயத்தையும், அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டுமென்ற பேராசையாகும்"

என்கிறார். இல்லற வாழ்வில் இருந்து அதைச் செய்ய முடியாது என்று அவர் கருதியிருக்கலாம். ஆயினும் திருமணம் செய்து மகிழ்வான இல்லற வாழ்வில் இருப்பவர்கள், உளநலத்தோடு இருப்பதற் கான வாய்ப்பும் அதனால் சமூகப்பணி வினைத்திறனுடன் செய்யும் வாய்ப்பும் அதிகம் என்றுதான் நவீன உளவியல் ஆய்வுகள் கூறுகின்றன.

**மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**
**மன்னரிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்**
**தன் தேசமல்லாற் சிறப்பில்லைச் சான் றோர்க்கு**
**சென்றவிட மெல்லாம் சிறப்பு.**

என்ற ஔவையாரின் வாக்குண்டாம் பாடலுக்கு "அரசனையும் குற்றந்தீரக் கற்ற வித்துவானையும் ஆராய்ந்து பார்த்தால் அரசரிலும் வித்துவானே சிறப்பை உடைய வனாவான். அரசருக்கு அவனுடைய தேசத் தில் அல்லாமல் (அந்நிய தேசத்திலே) சிறப்பு இல்லை. வித்துவானுக்கு (அவன்) போன தேசங்கள் எல்லாவற்றிலும் சிறப்பு உண்டாகும் எ-று.

இ-ம் "அரசனிலும் வித்துவானே சிறப் புடையவன் எனலாம்." என்று நாவலர் உரை எழுதினார்.

தான் எழுதியபடியே கல்விக்கு முதன்மை கொடுத்து வாழ்ந்து காட்டினார். பாடசாலை யில் இலக்கிய இலக்கணத்துடன் கணிதம், தருக்கம், வைத்தியம், வாணிகம், வேளாண்மை, சிற்பம் முதலியவற்றைப் படிப்பிக்க ஒழுங்கு செய்தமை கல்வியில் அவர் செய்த புரட்சி எனலாம்.

"மாணவருக்கு போதனாமொழி தமிழ் மொழியாக அமைய வேண்டுமென்பதில் நாவலரைப் போல் உணர்ந்தவர் வேறொரு வருமில்லை" என்று பேராசிரியர் சு. வித்தி யானந்தன் அவர்கள் குறிப்பிடுகிறார்.

வறியவர்க்கு உதவி செய்து வாழ வேண்டும். பிறருக்கு உணவு இட்ட பிறகே உண்ணவேண்டும். பொருளைத் தீமையற்ற நல்ல வழியிலே தேட வேண்டும் என்று தெளிவுபடுத்தி அவ்வாறு தேடிப் பெற்ற செல்வத்தை ஒருவருக்குப் பயன் படாமல் புதைத்து வைக்கக்கூடாது என்றும் அறிவித் திருக்கிறார் ஔவையார். நாவலர் அவற் றையும் வாழ்ந்து காட்டினார்.

"பண்ணின் புகலும் பனிமொழியாய்" என்ற ஔவை பாடலுக்கு (நன்னெறி) உரை எழுதிய நாவலர், "கடவுளிடத்து மன மழுந்தப் பெற்றவர், எத்துணைப் பெருந் துன்பங்களுக்கும் அஞ்சார்" என்று கூறினார்.

உண்மையில் நாவலரிடம் அஞ்சா நெஞ்சம் இருந்தது. அது பல்வேறு சந்தர்ப் பங்களில் வெளிப்பட்டிருக்கிறது. இராம நாதபுரம் வழியாகப் போவோர் இராமநாத புரத்து மன்னனைத் தரிசித்து அவர் புகழ் பாடிப் பரிசு பெற்றுச் செல்வதே வழமை. அவ்வாறு செய்யாவிட்டால் பல பிரச்சி னைகள் வரலாம் என்பது பலருக்குத் தெரியும். அதை மறுத்துத் தலை நிமிர்ந்து நின்றார் நாவலர். அந்தத் தாங்கு திறனுக்கு இறை நம்பிக்கை ஒரு முக்கிய காரணி.

போர், சுனாமி போன்ற அனர்த்தங்களின் பின் எமது நாட்டில் உளவியலாளர் கள் "மனவடு"' பற்றி அதிகம் பேசுவது பலருக்குத் தெரியும். "நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு" என்ற உளப்பிரச்சினை வருவதற்கு ஒருவர் கட்டாயம் மனவடுவுக்குரிய நெருக்கீட்டுச் சம்பவம் ஒன்றையாவது அனுபவித்திருக்க வேண்டும். உயிர் அச்சுறுத்தல் கொண்ட சம்பவங்கள் அவ்வாறு அமையும் என்று

கூறுவார்கள். ஆனாலும் அந்தச் சம்பவம் நிகழும் போது ஒருவர் தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக உணரவேண்டும். நம்பிக்கை யற்ற நிலை இருக்க வேண்டும். ஒருவரும் உதவமாட்டார்கள் என்ற கையறு நிலை இருக்க வேண்டும். மிகப் பயங்கரமான அலார விளைவுகள் உடலிலும், உள்ளத்திலும் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது ஏனைய நிபந்தனைகள். கடவுள் நம்பிக்கை நூறுவீதம் உள்ள ஒருவருக்கு இங்கு சுட்டப்பட்ட நிபந்தனை களில் இரண்டு - நம்பிக்கையற்ற நிலை, ஒருவரும் உதவ மாட்டார்கள் என்ற நிலை - தோன்றாது. கடவுள் எப்படியாவது உதவுவார் என்று அவர்கள் நம்பினால் அது மனவடுவுக்கு எதிரான பெரிய தாங்குதிறனைத் தரும் என்று கூறப்படுகிறது. நாவலரின் அஞ்சா நெஞ்சத்திற்கு அந்த நம்பிக்கை எவ்வளவு தூரம் கைகொடுத்தது என்பது புரிந்து கொள்ளக்கூடியதே.

ஔவை பாடலுக்கு நாவலர் எழுதிய உரையோடு அவர் வாழ்வு பொருந்திப் போகவில்லையோ என்று பலரும் சந்தேகிக்கும் பாடல் "சாதி இரண்டொழிய" எனும் பாடல். சொல்லுமிடத்துப் பூமியிலே (உயர்வாகிய சாதியென்றும், இழிவாகிய சாதியென்றும்) சாதி இரண்டேயல்லாமல் வேறில்லை. (அவ்விரண்டு சாதியரும் யாவரெனின்) நீதி தவறாத நல்வழியிலே நின்று கொண்டு முறைமையோடு கொடுத்த வரே உயர்வாகிய சாதியார். கொடாதவரே இழிவாகிய சாதியார். உண்மை நூலின் உள்ள கிரமம் (இதுவேயாம்) எ-று.

ஒருவரின் பாரம்பரியக் கூறுகள் அவரின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும் என்பதால் அவர் அவ்வாறு கூறியிருக்கலாம். நாவலர் வாழ்ந்த காலத்தில் சொந்தத்திற்குள் ஒரே ஊருக்குள் திருமணம் செய்யும் நடைமுறைகளே அதிகம் இருந்தன. அதனால் மது அருந்தும் குழுமம், புகைப்பிடிக்கும் கூட்டம், மாமிசம் உண்ணும் பிரிவு, உளநலம் குறைந்த பிரிவு என்று அவர் கருதியிருக்கலாம்.

ஔவையார் பாடலுக்குப் பிற்காலத்தில் பலர் உரை எழுதியுள்ளனர். சொக்கன் இப்பாடலுக்கான தனது உரையை இவ்வாறு எழுதுகிறார். சாதிகள் இரண்டு உள்ளன. நீதியினின்றும் தவறாத ஒழுங்கின்படி தமக்கு உள்ளவற்றில் பகுத்துண்டு வாழ்பவரே உயர்ந்த சாதியினர். தருமம் செய்யாதவரே இழிந்த சாதியினர். இதுவே அறநூலில் கூறப்பட்டுள்ள உண்மை என்பது அவரது உரை. ஆறுமுக நாவலர் உரையின் இருந்து அவர் சிறு மாற்றங்களைக் கொண்டு வருகிறார்.

பெண்கள் தொடர்பான ஔவை பாடலுக்கு நாவலர் எழுதிய உரை தற்காலத்தில் பெருமளவுக்கு வேறுபடுத்தப்பட்டு விட்டது.

தையல் சொற்கேளேல் என்ற ஆத்திசூடி வரிக்கு "(உன்) மனைவியுடைய சொல்லை நீ கேட்டு நடவாதே" என்பது நாவலரின் உரை. "மனைவி சொல் கேட்டு ஆராயாமல் நடவாதே" என்று இணையத்தில் இப்போது காணப்படும் உரை கூறுகிறது. ஔவையார் எதைச் சொன்னார் என்பது தெரியாது. இல்லற சுகம் தருகிறாள் என்ற ஒரே காரணத்திற்காக அவள் சொல்வது எல்லாவற்றையும் கேட்டு அடிமையாக நடக்க வேண்டியதில்லை என்று கருதியிருக்கலாம். அந்தக் காலத்தில் பெண் கல்வி மிகக் குறைவாகவே இருந்தது. கல்வி அறிவு குறைந்தவர் சரியான கருத்துக்களைக் கூறமாட்டார் என்பது இன்றும் கூடப் பொருந்தும் கூற்றாகக் கொள்ளலாம்.

"பேதைமை என்பது மாதர்க் கணிகலம்" என்ற வரிக்கு நாவலர் "அறியாமை என்று சொல்லப்படும் குணமானது பெண்களுக்கு ஆபரணமாகும்" என்று சொல்லியிருப்பதும் பால்நிலை சமத்துவம் பேசப்படும் காலத்தில் சர்ச்சைக்குரிய ஒன்றுதான்.

சில பாடல்களுக்கு நாவலர் முதல் நிலைக் கருத்துக்கு அப்பால் இரண்டாம் நிலையில் அடைப்புக்குள் கொடுக்கும் விளக்கம் மிகவும் நம்பத்தக்கது. "பீரம் பேணி பாரம் தாங்கும்" "முலைப்பால் குறைவற உண்டு வளர்ந்தவன் பாரமான சுமையைச் சுமப்பான்." தாய்ப்பால் ஆறு மாதம் வரை கொடுத்தல் வேண்டும்; பின்னரும் எவ்வளவு தாலம் முடியுமோ அவ்வளவு காலம் கொடுத்தல் வேண்டும்; ஆகியவை இன்று வைத்தியர்களால் விதந் துரைக்கப்படும் விடயங்கள். இதற்கு அடுத்த நிலையில் நாவலர் கூறும் விளக்கம், "முன்னே காரணங்களைக் குறைவறக் கொண்டவன் பின்னே பெரிய காரியங்களையும் வருத்தமின்றி முடிப்பான்" என்பது, உளவியல் ரீதியாக மிகமிகச் சரியான ஒன்று. பிள்ளைப் பருவத்தில் தேவைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும் போது (உணவு, நீர், வளி, நித்திரை, அன்பு, காப்பு, கணிப்பு) பிற்கால ஆளுமை சிறப்புறும் என்பதை நாவலர் சொன்ன முறை அற்புதமானது. நாவலரது பதிப்புக்களும் அவரது உரைகளும் சமகாலத்திலும் முக்கியம் பெறுகின்றன. அவுஸ்திரேலியாவில் இவ்வாண்டு தமிழ்ப் போட்டிகளில் பிள்ளைகள் ஆத்திசூடியை நாவலர் உரையோடு கூறுமாறு கேட்கப்பட்டதாக அறிகிறேன்.

ஆயினும் அவரது பதிப்புக்களில் ஒரு குறை இருந்தது. பதிப்புரை இல்லாததால் இவர் தம் பதிப்புமுறை, பதிப்புக் கொள்கை, முந்தைய பதிப்புக்கள் பற்றிய விபரம், பதிப்பில் செய்துள்ள மாற்றம் ஆகிய வற்றை இவர்தம் கூற்றாக அறிய முடியவில்லை என்று மோ. கோ. கோவை மணி குறிப்பிடுவார். ஓலைச்சுவடியில் உள்ள நூல்களை எப்படியாவது பிழையின்றி அச்சேற்றம் செய்துவிட வேண்டும் என்பது மட்டுமே நாவலரின் நோக்காக இருந்திருக்கலாம். இப்போது விடயங்கள் அவ்வாறு தான் இணையத்தில் ஏற்றப்படு கின்றன.

மொத்தத்தில் நாவலர் ஔவையார் பாடல் ஊடாகவும், சமூகத்தில் அறம் சார்ந்த விழுமியங்களைப் பரப்பவே முயன்றார். மிக நவீன உளச்சிகிச்சை முறையான ACT "ஏற்றுக்கொண்டு அர்ப் பணிப்புடன் செயற்படுதல்" என்ற சிகிச்சை முறையானது தனது ஆறு படிநிலைகள் ஊடாக விழுமிய வாழ்வை வற்புறுத்துகிறது. அதை 150 வருடங்களுக்கு முதலே வற்புறுத்தி எமது சைவத்தமிழ் சமூகத்தை உடல், உள, சமூக, ஆன்மிக நலத்துடன் வாழ நெறிப் படுத்திய நாவலர் பெருத்த பாராட்டுக்கும் வணக்கத்துக்கும் உரியவர் என்பதில் சந்தேகமில்லை.

**பயன்பட்ட நூல்கள் :**


- கலைக்களஞ்சியம் தொகுதி - II
- ஆத்திசூடி, கொன்றைவேந்தன் - நாவலரின் திருத்தப்பட்ட உரை
- பாலர் பாடம் IV - நாவலரின் பதிப்பு
- The happiness trap - Dr. Russ Harns
- How to stop worrying and start living - Dale Carnegie.


(09-12-2017இல் நடைபெற்ற ஆறுமுக நாவலர் மகாநாட்டில் கருத்தரங்கவுரை. இந்துமத அலுவல்கள் அமைச்சு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தியது)

* * *

விசேட தேவை தொடர்பான கட்டுரை

# விழிப்புல வலுவிழந்தோருக்கான உதவிகளும் சீர்மியமும்

விழிப்புல வலுவிழந்தோர் எனப்படுவோர் யார்? 20 சென்றி மீற்றருக்கும் 200 மீற்றருக்கும் இடையில் உள்ள பொருள்களை மூக்குக் கண்ணாடியின் துணை கொண்டும் கூடத்தெளிவாகப் பார்க்க முடியாதோரும், பார்வைக் கோணம் $20^0$யை விடக் குறைவாக இருப்போரும் சட்டப்படி விழிப்புல வலுவிழந்தோர் அல்லது மாற்றுவலு உடையோர் என அழைக்கப்படுவர்.

உலகத்திலே பல வகையான குருடர்கள் இருக்கின்றனர். எந்த வகையான தொழிலும் செய்து சம்பாதிக்க முடியாதவர்களைப் பொருளாதாரம்சார் குருடர்கள் எனலாம். ஒரு தொழிலிற்கூட நிலைத்து நின்று பணிபுரிய முடியாதவர் களைத் தொழில்சார் குருடர்கள் எனலாம். சாதாரண பாடசாலைக் கற்றல் முறைகளில் கற்க முடியாதவர்களைக் கல்விசார் குருடர் எனலாம். ஆயினும் சமூகம் இவர்கள் யாரையும் 'குருடர்' என அழைப்பதில்லை. உடல் உறுப்பில் ஒரு குறை உடையோரையே அவ்வாறு அழைக்கிறது. ஆகவேதான் ஒரு நாகரிக சமூகத்தில் அவர்களைச் சுட்டுவதற்கு அந்தச் சொல் பயன்படுத்தப்படாமல், விழிப்புல வலுவிழந்தோர் அல்லது மாற்று வலுவுடையோர் என்ற சொற்றொடர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மிக ஆரம்ப காலத்தில் வலுவிழந்தோரைச் சமுதாயம் ஒருவகைப் பயத்துடன் பார்த்தது. சிறிது காலத்தின் பின்னர் அவர்களை அனுதாபத்துடன் அணுகியது. மேலும் நாகரிகம் வளர வளரச் சமூகம் அவர்களை ஏற்றுக்கொண்டது. அதன்பின் அவர்களுக்கு அளவுக்கு மீறிய மதிப்புக் கொடுக்கத் தொடங்கியது.

நாங்கள் மாற்று வலுவுடையோரைச் சகல விதத்திலும் சமத்துவத்துடன் ஏற்றுக் கொள்வதே சிறந்தது என்பது உளவியலாளர்களின் கருத்தாகும். விழிப்புல வலுவிழந்தோர் பலர் மற்றவர்களில் தங்கியிருப்பதற்குக் காரணம் சமூகம் அவர்களை நடத்தும் முறைமையே தவிர, அவர்களின் வலுவிழப்பல்ல என்பது ஊன்றிக் கவனிக்க வேண்டிய உண்மையாகும். உணர்வுகள், மொழி, அசைவுகள் ஆகியவற்றின் முதல் ஆசிரியர்களான பெற்றோர் இவ்விடயம் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்த வேண்டும். விழிப்புல வலுவிழந்த பிள்ளை ஒன்று குடும்பம் ஒன்றிற் பிறக்கும் போது அக்குழந்தை மற்றைய குழந்தைகளைப் போலவே சொந்தக்காலில் நிற்கக்கூடியது என்ற நம்பிக்கை பெற்றோர்களுக்கு ஏற்பட வேண்டும். கற்றலுக்கான போதிய தூண்டல்கள் அன்புடன் வழங்கப்படல் வேண்டும். எந்த வகையிலும் அக்குழந்தை புறக்கணிக்கப்படக்கூடாது. எல்லாக் குழந்தைகளையும் போலவே உணவு, நீர், ஒட்சிசன், நித்திரை, புலன் தூண்டல், அன்பு, பாதுகாப்பு, கணிப்பு என்ற அடிப்படைத் தேவைகள் அனைத்

தையும் பெற்றுக் குழந்தை வளர்ந்து வர வேண்டும். புலன் தூண்டல் தேவை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப் படலாம். இக்குழந்தை விழிப்புலன் தூண்ட லைப் பெற முடியாது என்பதால் ஏனைய புலன்களான காது, மூக்கு, நாக்கு, தோல் என்பவற்றின் உணர்திறனைச் சிறப்பாக வளர்த்தெடுக்க உதவலாம்.

தொடர்ந்து வளரும் இப்பிள்ளை முன் பள்ளிக்கும் பாடசாலைக்கும் செல்லும் போது இப்பிள்ளைக்கான கல்வி விசேட முறையில் வழங்கப்படும். அதே சமயத்தில் பிள்ளையின் சுய கணிப்பு உயர்வில் மிக முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். பாடசாலையில் நடைபெறும் எல்லா விதமான இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் இப்பிள்ளை கலந்து கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். அதே சமயத்தில் விழிப்புல வலு விழந்த பிள்ளை என்ற அனு தாபத்திற்காகப் பரிசு வழங்குவது தவிர்க் கப்பட வேண்டும்.

மொத்தமான விழிப்புல வலு விழப்புக்களில் 49% ஆனவை பிறப்பிற்கு முன்பான காரணிகளில் தங்கியுள்ளன. பிறக்கும் போதே அந்த நிலையில் இருக்கும் பிள்ளை, இருந்த ஒன்றை அல்லது அனு பவித்த ஒன்றை இழந்து போன, இழப்புத் துயரைப் பெறுவதில்லை. அது அனு கூலமான விடயம். கர்ப்பமாக இருக்கும் தாய் ஜேர்மன் சின்னமுத்துவாற் பாதிக் கப்படுதல், குழந்தை பிறக்கும் போதே வலுவிழப்பைக் கொண்டிருப்பதற்கு ஒரு முக்கிய காரணியாகும். குழந்தை பிறந்த பின்னர், கண்ணிற் காயமேற்படுதல், கண் நஞ்சூட்டப்படுதல், மூளை, விழித்திரை, கபச் சுரப்பி ஆகியவற்றில் ஏற்படக்கூடிய கட்டி கள், மைய நரம்புத் தொகுதியில் ஏற்படும் சில நோய்கள் போன்றவை விழிப்புல வலு விழப்புக்குக் காரணமாகலாம். ஆயினும் மேலும் பலரது விழிப்புல வலுவிழப்புக்குக் காரணம் தெரியாமலும் உள்ளது.

ஆகவே ஒரு தாய் கர்ப்ப முற்றி ருக்கும் போது ஜேர்மன் சின்ன முத்துவுக்கு எதிராக நிர்ப்பீடனம் செய்து கொள்வதும், கர்ப்பிணித் தாயும் பிறந்த பின் குழந்தையும் வேறு தொற்று நோய்கள் தொடர்பாகப் போதிய தவிர்த்தல் வழி களைப் பின் பற்றிக் கொள்வதும், பிறந்தவுடன் குழந்தை யின் கண்ணை நன்கு பரீட்சித்துப் பார்த்துக் கொள்வதும். பின் காலத்திற்குக் காலம் கண் பார்வையை மதிப்பிட்டுக் கொள்வதும், கண்ணிற் காயங்கள் ஏற்படுமிடத்து ஆலோ சனை பெற்றுக் கொள்வதும் விழிப்புல வலு விழப்புக்கான நிகழ்தகவைப் பெருமளவு குறைக்க உதவும் வழிமுறைகளாகும்.

குறிப்பிட்ட சில ஆயுதங்கள், விளை யாட்டுப் பொருள்கள், வெடிமருந்துகள் போன்ற வற்றைக் குழந்தைகள் பாவிக்க முடியாத வகையிற் சட்ட ரீதியாகத் தடை செய்வதும் இவ்வகையில் உதவலாம். ஆய்வுகூடத்தில் மாணவர்கள் பரிசோதனைகளைச் செய்யும் போதும், வளர்ந்தவர்கள் தொழிற்சாலை களிற் பணிபுரியும்போதும் கண் பாதுகாப்புக் கவசங்களை அணிதலும் சட்ட பூர்வமாக உறுதிப்படுத்தப்படலாம்.

குறும்பார்வை, நீள்பார்வை, அஸ்ரிக் மற்றிசம், வெள்ளெழுத்துப் போன்ற பிரச் சினைகள் பார்வைக் குறைபாடுகள் எனப்படும். கண் வைத்திய நிபுணர் ஒருவர் சிபார்சு செய்யும் மூக்குக் கண்ணாடியால் இவை சரி செய்யப்படலாம். இவை விழிப்புல வலு விழப்பு என்ற பதத்தினுள் அடக்கப்படுவ தில்லை.

வேறு சிலர் நிறங்களை வேறு பிரித்து அறிய முடியாதவர்களாக இருப்பர். இது பாரம்பரியத்துடன் தொடர்புடைய ஒரு

குறைபாடு. இதுவும் மற்றும் மாலைக்கண், வாக்குக்கண் போன்ற பிரச்சினைகளும் கண்ணில் வரக்கூடிய பல்வேறு நோய்களும் விழிப்புல வலுவிழப்பு என்ற பிரிவுக்குள் வருவதில்லை. ஆயினும் கண்ணில் ஏற்படும் சில நோய்கள் விழிப்புல வலுவிழப்பை ஏற்படுத்தலாம் என்பதை மறந்து விடமுடியாது.

சில மனிதர்களுக்கு இருள், ஒளி இயைபாக்கம் கடினமானதாக இருக்கலாம். செறிவு கூடிய ஒளியில் இருந்து ஒளிச் செறிவு மிகவும் குறைந்த இடத்திற்குச் செல்லும் போதோ அல்லது மறுதலையாக வரும் போதோ சிறிது நேரத்திற்குப் பார்வை இல்லாது போவதான உணர்வு ஏற்படலாம். ஆயினும் சிறிது நேரத்தின் பின் அந்த இயைபாக்கம் நடந்துவிடும். வேறு சில மனிதர்கள் ஒளி அச்சம் உடையவர்களாக இருப்பர். ஒளி இருக்கும் இடங்களை இவர்கள் தவிர்க்க முனைவதால் பார்வையிற் பிரச்சினை இருப்பது போன்ற தோற்றப்பாடு காணப்படலாம். ஆயினும் இவையும் கூட விழிப்புல வலுவிழப்புடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் இல்லை எனக் கொள்ளலாம்.

குழந்தை ஒன்று பிறந்தவுடனேயே ஒளிக்கு உணர்வுள்ளதாக இருக்கும். ஏறத்தாழ எட்டாவது வாரத்தில் உலகம் முழுவதையும் கண்களால் அளக்கும்.

**விழிப்புல வலுவிழப்பு ஆரம்பிக்கும் போது அல்லது இருக்கும் போது அவதானிக்கக் கூடியவை.**

ஒருவருக்கு விழிப்புல வலுவிழப்பு இருக்கலாம் என்ற ஊகத்தை ஏற்படுத்தக் கூடிய சில அவதானங்கள் பின்வருமாறு:

**1. நடத்தைசார் அவதானங்கள்**

1) கண்களை அடிக்கடி துடைத்தல் அல்லது கசக்குதல்
2) ஒரு கண்ணை மூடுதல், தலையைத் திருப்பிப் பார்த்தல் அல்லது தலையை முன்னே தள்ளிப்பார்த்தல்
3) அடிக்கடி கண்வெட்டுதல்
4) புத்தகத்தை மிகக் கிட்டப்பிடித்து வாசிக்க முனைதல்
5) கண்ணைச் சுருக்குதல்.
6) சிறுபொருள்களில் தடக்கி விழுதல்

**2. தோற்றம் சார் அவதானங்கள்**

1) கண்மூடி இருத்தல்
2) கண் சிவத்திருத்தல்
3) கண் மடல் வீங்கி இருத்தல்
4) நீர்ப்பிடிப்புள்ள கண்ணாக இருத்தல்

**3. சம்பந்தப்பட்ட நபர் சொல்லக்கூடிய முறைப்பாடுகள்**

1) கண் கடித்தல் அல்லது எரிதல்
2) முற்றாகப் பார்க்க முடியாதிருத்தல் அல்லது தெளிவு குறைந்து வருதல்
3) தலையிடி அல்லது தலைச்சுற்று
4) வயிற்றுப் புரட்டல்
5) பொருள்கள் இரண்டு இரண்டாகத் தெரிதல்

மேலே கூறப்பட்ட அவதானங்கள் விழிப்புல வலுவிழப்பின் போது காணப்படலாமாயினும், இந்த அவதானங்களைக் கொண்டிருப்போர் எல்லோருக்கும் விழிப்புல வலுவிழப்புத்தான் பிரச்சினை என்ற தவறான முடிவுக்கு வந்து விடக்கூடாது. உதாரணமாகத் தலையிடி ஒருவருக்குப் பல்வேறு காரணங்களில் ஏற்படலாம். ஆகவே தலையிடி உள்ள எல்லோரும் கண் பிரச்சினை உடையவர்கள் என்று முடிவுக்கு வந்து விடக் கூடாது.

## விழிப்புல வலுவிழப்பு இருக்கும் போது ஏற்படக்கூடிய பிரச்சினைகள்:

எமது உடலின் முக்கிய புலன் அங்கங்களான கண், காது, நாக்கு, மூக்கு, தோல் ஆகியவை பார்வை, கேட்டல், சுவைத்தல், மணத்தல், தொடுகை, அமுக்கம், குளிர், சூடு, நோ ஆகியவற்றை உணர்தல் ஆகிய தூண்டல்களின் வழி செய்திகளை நரம்புத் தொகுதிக்கு அனுப்பும். கற்றல், கற்பித்தல் செயற் பாட்டின் இந்தத் தூண்டல்கள் முக்கிய மானவை. மேலே கூறப்பட்டவற்றில் பார்வை, கேட்டல், தொடுகை ஆகிய மூன்றும் கற்றலில் மிக முக்கியம் பெறும். விழிப்புல வலுவிழப்பு உடையோருக்கு இந்த மூன்றில் ஒன்று கிடையாது போகிறது. அதனாற்றான் அவர்கள் அசைதல், வாசித்தல், அறிவைப் பெறுதல் போன்ற சில விடயங்களிற் சவாலை எதிர்கொள்கின்றனர். ஆயினும் அவை சவால்களே தவிர, முடியாத விடயங்கள் இல்லை.

ஏனைய மனிதர்களோடு ஒப்பிடும் போது பார்வை வழி வரக்கூடிய அனுபவங்களின் பரப்பும் வகையும் குறைதல், அசைவுக் குறைவினாற் சூழலை அறிதல் குறைவாக இருத்தல், சூழலுடன் தொடர்பு குறைவாக இருத்தல், தற்செயலாகவும், சுயமாகவும் நடைபெறும் கற்றல் அனுபங்கள் குறைவாக இருத்தல், சமூக ஊடாட்டங்களின் எண்ணிக்கை குறைவாக இருத்தல், மனிதர்களின் முகக் குறிப்புக்கள், உடல் மொழிகள், அசைவுகள் போன்றவற்றாற் பெறப்படும் செய்திகள் கிடையாது போதல், நிற வேறுபாடு தெரியாது இருத்தல் போன்ற இடர்களை இவர்கள் எதிர்கொள்ள நேரிடலாம்.

ஆயினும் இவையாவும் பொருத்தமான முறையிற் கையாளப்படக்கூடிய பிரச்சினைகளேயாகும்.

## கல்வி தொடர்பான ஆலோசனைகள்:

விழிப்புல வலுவிழந்த பிள்ளைகள் சாதாரண பாடசாலைகளில் அவர்களின் வயதுக்குரிய வகுப்பில் அனுமதிக்கப்பட வேண்டும். பிள்ளை கேட்கும் போது மட்டுமே விசேட உதவி வழங்கப்பட வேண்டும்.

பாடசாலையில் ஒரு விசேட தேவைக்குரிய பயிற்சிபெற்ற ஆசிரியர் இருக்க வேண்டும். அவர் பிள்ளைக்குத் தேவையான விசேட பொருள்களை வழங்க வேண்டும். ஏனைய ஆசிரியர்கள் இப் பிள்ளைக்கான கற்பித்தலை எவ்வாறு செய்ய வேண்டும் என்ற விடயத்தில் அவர் ஏனைய ஆசிரியர்களுக்கு வழிகாட்ட வேண்டும். அதே நேரத்தில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர் இப்பிள்ளையை அடிக்கடி தரிசித்துக் குறைகளைக் கேட்டறிந்து பொருத்தமான உதவிகளைச் செய்யலாம்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் விழிப்புல வலுவிழந்த பிள்ளைகள் ஏறத்தாழ எல்லாக் கற்கை நெறிகளிலும் ஈடுபடுகின்றார்கள். பல்கலைக்கழகக் கற்கைநெறி தொடங்கும் போதே இவர்களுக்கென விசேடமான ஆரம்ப நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. இந்நிகழ்வுகளின் போது இவர்களது பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டு, பொருத்தமான சமூக நிறுவனங்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது. அத்துடன் வாசிப்பு மெஷினிற்றர், குளிர் ஒளி விளக்கு, தட்டச்சுப் பொறி, பிறேயிலர், சுருக்கெழுத்துப் பிறெயிலர், ஒலிப்பதிவுக் கருவி, ஒலிப்பதிவுக் கருவிப் பிரதி எடுப்பான் போன்ற விசேட உபகரணங்களுக்கான வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படுகின்றன. இதை விடவும் அவர்களுக்கு உதவும் தொண்டர் மாணவர்களும் நியமிக்கப் படுகிறார்கள். வெவ்வேறு வகுப்புக்களுக்கும், நூல் நிலையங்களுக்கும் ஆய்வு கூடங்களுக்கும் செல்

வதற்கு இந்தத் தொண்டர்கள் உதவுகிறார்கள். அதேபோல நூலகத்தில் இவர்கள் தமக்குத் தேவையான நூல்களைப் பெற்றுக் கொள்ளவும் அவற்றிலிருந்து பொருத்தமான பகுதிகளைப் பிரதி செய்து கொள்ளவும் பகுதிகளை வாசித்துக் காட்டத் தேவையான வாசிப்பாளர்களும் நியமிக்கப்படுகிறார்கள். விழிப்புல வலுவிழந்த மாணவர்களுக்கு எவ்வாறான உதவி வழங்கப்படுகிறது என்ற தகவலும் பல்வேறு பல்கலைக் கழகங்களாலும் வருடந்தோறும் விளம்பரப் படுத்தப்படுகின்றன.

விழிப்புல வலுவிழந்த பிள்ளைகள் சிறு வயதில் ஒரு தனியான விசேட பாடசாலையிற் கற்பிக்கப்படலாம். அப்படிப்பட்ட ஒரு பாடசாலையிற் பிள்ளை தங்கியிருந்தும் கற்கலாம். ஆயினும் சாதாரண பாடசாலைக்குச் செல்வதை விட இது சிறந்தது என்பதற்குச் சான்று இல்லை.

**சீர்மியர் கவனிக்கக்கூடிய விடயங்கள்**

பிள்ளையின் உடலும் கண்ணும் குறிப்பிட்ட காலத்துக்கொருமுறை பரீட்சிக்கப்படுவதைச் சீர்மியர் உறுதிப்படுத்தலாம். உடல் சம்பந்தமாக வருகின்ற நோய்களோ அல்லது உணர்வுகளுடன் தொடர்புடைய பிரச்சினைகளோ உடனுக்குடன் அணுகப் பட்டுத் தீர்க்கப்பட வேண்டும். இல்லாவிடில் ஒரு நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நெருக்கீடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்த விடயத்தில் சீர்மியரின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருக்க வேண்டும். கோபம், பயம், கவலை போன்ற சிறு உணர்வுப் பிரச்சினைகள் கூட உடனுக்குடன் கவனிக்கப் படுவது அவசியம்.

பிள்ளையின் கல்வி நிலையும் அடிக்கடி மதிப்பிடப்பட வேண்டும். அதில் ஒரு சரிவு காணப்படுமானால், பிள்ளையின் உளநலத்தில் ஏதாவது தாக்கங்கள் இருக்கின்றனவா என்பது குறித்து அவதானிக்கப் பட்டுப் போதிய உதவி வழங்கப்பட வேண்டும். பிள்ளையின் தனிப்பட்ட வாழ்க்கைச் சரிதை, சமூக நிலை, பெற்றோரின் விருப்பங்கள் ஆகிய வற்றையும் சீர்மியர் அறிந்து வைத்திருந்தால் உதவி செய்வது சுலபமாக இருக்கும்.

பிள்ளையின் கருத்துருவாக்கம், மொழி விருத்தி, மொழிக்கையாட்சி ஆகிய விடயங்களிற் குறைபாடு இருக்கிறதா என்பதைச் சீர்மியர் அருகிருந்து ஆசிரியர்களோடு சேர்ந்து அவற்றைச் செம்மைப்படுத்தலாம்.

சாதாரண பிள்ளைகள் போலவே இவர்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். முக்கியமாக உடற்பயிற்சி கொடுக்கப் பட வேண்டும். ஆபத்தற்ற பாதுகாப்பான சூழலில் ஓடுதல், பாய்தல், எறிதல் என்பன செய்யப்படலாம். உடல் ஆரோக்கியம் சிறக்கும் போது உளச் சமநிலையைப் பேணுவது சுலபமாகும். இவர்களைத் தூர இடங்களுக்கு அழைத்துச் சென்று முகாமிடுவதும், வெளிக்களச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதும் நன்று.

இவர்களின் உற்றுக் கேட்கும் ஆற்றலையும், தொடுகைப்புலன் ஆற்றலையும் நன்கு விருத்தி செய்யலாம். அதற்கான தூண்டல்களும் சந்தர்ப்பங்களும் தாராளமாக வழங்கப்பட வேண்டும்.

தமது வாழ்வில் தம்முடன் வாழ்ந்த பெற்றோர்கள் அல்லது முக்கிய நபர்களைப் போலவே தமது உணர்வுகளை இவர்கள் வெளிப்படுத்துவர். தமது எதிர் காலம், தொழில், திருமணம், குழந்தைகள் போன்ற விடயங்களில் இவர்கள் அதிக பதற்றத்துடன் காணப்படலாம். அவ்வாறு அவதானிக்குமிடத்து சீர்மிய நுண்திறன்களையும் சாந்த வழி முறைப் பயிற்சி

களையும் பாவித்து அவர் களை ஆற்றுப் படுத்த வேண்டும். அவர்களைப் பதற்றப் படுத்தும் விடயம் தொடர்பான இலக்கு களை நிர்ணயம் செய்யச் செய்து பொருத் தமான தீர்வுகளை அவர்கள் காண வழிப் படுத்தலாம்.

பிறப்பில் இருந்தே பார்வை இல் லாமல் இருப்பவர்களைவிட, இடையிற் பார்வை இன்றிப் போனவர்களும், முற்றாகவே பார்வை இல்லாதவர்களை விடச் சிறிதளவு பார்வை இருப்பவர்களும் அதிக உளப் பாதிப்பு அடைவது அவதானிக்கப்பட் டுள்ளது. இருந்த பார்வை இல்லாது போவது ஒரு வகையில் இழப்புத்துயர். சீர்மியர் பொருத்தமான இழப்புச் சீர்மியப்படி முறை களினூடு அவர்களை அழைத்துச் செல்ல வேண்டும்.

இவற்றைத் தவிர சாதாரண மனிதர் களுக்கு வருகின்ற எந்த ஒரு உளப் பிரச்சி னையோ, உளநோயோ இவர் களுக்கும் வரலாம். அப்படி வரும்போது வழமை போலவே அவை இனங் காணப்பட்டுப் பொருத்தமான சீர்மிய உதவி வழங்கப்பட வேண்டும். அல்லது உள வைத்திய நிபுண ரிடம் பாரப்படுத்தப்பட வேண்டும். இவர் களால் நிறங்களை இனங்காண முடியாது என்பதாற் சித்திரச் சிகிச்சையை (Art Therapy) இவர்களுக்கு வழங்குவது கடின மாக இருக்கலாம். ஏனைய அனைத்துச் சிகிச்சை முறைகளையும் வழமை போலவே வழங்கமுடியும்.

மாற்று வலுவுடையோர் அனை வரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ் வதை உறுதி செய்வோம்.

(வாழ்வகம் - நிறுவுநர் நினைவுச்
சிறப்பு மலரில் பிரசுரமானது - 2008)

* * *

**நிகழ்த்தப்பட்ட உரைகள் சில - முன்னர் பதியப்படாதவை**

| | |
|---|---|
| 1982 ஆடி | மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் - 'மங்கையர்க்கரசி' |
| 1982 | மகாஜனா உயர்தர மாணவர் மன்றம் - "நினைவாற்றல்" |
| 15.12.82 | மனித சொரூபங்கள் வெளியீட்டுவிழா - மகாஜனா மண்டபம் - ஏற்புரை |
| 27.12.82 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தேசியசேவை - 'புலால் மறுத்தல்' |
| 28.12.82 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தேசியசேவை - 'மங்கையர்க்கரசி' |
| 1983 சித் | பொற்கலந்தம்பை வைரவர் ஆலயம் |
| 1983 ஆடி | சடைச்சப்பை வைரவர் கோயில் - 1. அன்பு 2. விருந்தோம்பல் 3. இடுக்கண் |
| 1983 ஆடி | விழிசிட்டி ஞானவைரவர் ஆலயம் |
| 16.12.83 | குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் கோயில் - பெரியபுராணத்தில் பெண்மணிகள் |
| 15.01.84 | குரும்பசிட்டி மதி அகடமி - 'தமிழர் திருநாள் ஒரு பண்பாட்டு நோக்கு' |
| 25.01.84 | விழிசிட்டி சிவகுருநாதர் ஆலயம் - அன்பும் சிவமும் |
| 28.01.84 | விழிசிட்டி சிவகுருநாதர் ஆலயம் - இடுக்கண் வருங்கால் |
| 25.03.84 | ஈழநாடு வெள்ளிவிழாவை ஒட்டி மகவம் நடத்தும் கருத்தரங்கு - மகாஜனா மண்டபம் - "ஈழநாடும் இலக்கியமும் - புனைகதை" |
| 29.03.84 | வீமன்காமம் ம.வி - 'மகவம்' ஏற்பாட்டில் தசம் அவர்களின் பாராட்டு வைபவம் 'புனைகதைகளில் தசம்' |

# தமிழ் வளர்ச்சியில் இசையும் கலையும்

திராவிட மொழிகளில் மிகப் பழமை யானது தமிழ். "கன்னடமும், களி தெலுங் கும், கவின் மலையாளமும், துளுவும் உன் னுதரத் துதித்தெழுந்து" என்று மனோன் மணியம் சுந்தரனார் பாடினார். தன்னிட மிருந்து பல மொழிகள் தோன்றக் காரண மாய் இருந்த, செம்மொழி அந்தஸ்தைப் பெற்று விட்ட ஒரு மூத்த மொழி சில காலத் தின் பின் வழக்கொழிந்து போய்விடுமோ என்ற ஓர் அச்ச நிலை இன்று தோன்றி யிருக்கிறது. குறிப்பாகத் தமிழர் புலம் பெயர்ந்து வாழ்கின்ற மேற்கத்தைய நாடு களில் தமிழ் வளர்ச்சி என்பது பெரும் சவா லாக எழுந்து நிற்கிறது. இத்தகைய ஒரு நிலையில் தான் இசையும் கலையும் ஒரு மொழியின் வளர்ச்சியில் எவ்வளவு முக்கிய மானவை. அவற்றை எவ்வாறு நாம் வினைத் திறனுடன் பாவிக்க முடியும் என்ற விடயங் களை நுனித்து நோக்க வேண்டியுள்ளது.

கலை என்பது ஒரு சமூக அழ கியல் நிகழ்வு. சமூகத்தின் பண்பாட்டினுள் நிலை கொண்டு நிற்பது. பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறை. ஆகவே கலை என்பது ஒரு சமூகத்தினையும் அதன் பண்பாட்டையும் மொழி மூலம் எடுத் துரைக் கும் உயிர்ப்பு மையம்.

இயற்கையில் ஒழுங்கற்றிருக்கும் அழகை ஒழுங்குபடுத்தித் தருவது கலை என்றும் கூறலாம். ஆகவே அது புலன்களை நுண் உணர்வுடைய தாக்குவதற்குப் பயன் படுகிறது. ஒரு சமூகத்தின் உயர்மட்ட அங்கீ காரம் பெற்ற கலைகள் செந்நெறிக் கலை கள் ஆகின்றன. ஒரு நீண்ட பாரம்பரியம் கொண்ட தமிழ் மொழியில் செந்நெறி இசை வடிவங்கள், நடன வடிவங்கள், நாடக வடிவங்கள் அனைத்தும் உள்ளன. கலை வடிவங்களைச் சமூகத்தின் முன் வைப்ப வர்கள் கலைஞர்கள். உன்னதமான கலை ஞர்களிடம் ஒரு படைப்பாக்கத் திறனும் உந்தலும் எப்போதும் இருக்கும். புதிய வடிவங்களைப் படைக்கும்போது ஒரு அழ கியல் திருப்தியும் ஆனந்தமும் வரும். அது மொழி தொடர்ந்து வளர்வதற்கு உறு துணையாகவும் இருக்கும்.

முத்தமிழில் முக்கியமானது இசை. அது பக்தி யோகத்தின் முக்கிய பகுதி. "ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமு தாய்" என்று கூறி கடவுளே இசை வடி வானவன் என்று உறுதி செய்தார் சுந்தரர். பக்தி மார்க்கக் காலத்தில் இசை தமிழ் மொழியைப் பரப்புவதில் முக்கிய பங் கெடுத்தது என்பது "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்" என்ற கூற்றிலிருந்து தெளிவாகிறது. கோயில், மொழியையும் பண்பாட்டையும் அடுத்த தளத் திற்குக் கொண்டு செல்லும் முக்கிய நிறு வனம். கோயிலைச் சுற்றிப் பண்ணென்ற

இசைபாடும் அடியார்களும், ஆடல் நங்கை யரும் அதிகம் காணப்பட்ட நிலையை "பாடுவார் பசி தீர்ப்பாய், பரவுவார் பிணிக ளைவாய்'', "ஆடுமீன் அன்புடையீர்'' ஆகிய தொடர்கள் சுட்டுகின்றன.

இசைக்கு ஆதாரமாய் இருப்பது கவிதை. கவிதை என்பது ஒரு மொழியின் ஓசைகளையும் சொற்களையும் படிமங் களையும் பயன்படுத்தி ஓர் உணர்ச்சியை வெளிப்படுத்தும் இலக்கிய வடிவம். "தெள் ளத் தெளிந்த தமிழில் உண்மை தெரிந் துரைப்பது கவிதை'' என்றார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. நல்ல கவிதை களின் கருத்தில் எப்போதும் ஒரு நாடு கடந்த மொழி கடந்த தன்மை இருக்கும். அதனால் பத்து நூற்றாண்டு கழிந்தாலும் அது புத்தம் புதிதாய்ப் பொலியும். சுட்டுப் பொருளுக்கும் அப்பால் எட்டிப் புதிதோர் இடத்தைத் தொடும். நல்ல கவிதையின் உணர்ச்சியைக் கேட்பவர் அல்லது படிப் பவர் தன் வாழ்வில் எப்போதாவது வேறு வடிவத்தில் உணர்ந்திருப்பார். அதனால் அது உள்வாங்கப்படும் போது மனம், மொழி, மெய்கள் ஒருங்கிணைந்து, ஒருங்கிசைந்து உட்செல்கிறது. ஆகவே அது இலகுவில் மறக்கப்படுவதில்லை.

நினைவாற்றல் பற்றிப் பேசுகின்ற விஞ்ஞானிகளும், உளவியலாளர்களும் நினை வுகளோடு உணர்வுகள் சம்பந்தப்படுகிற போது அவை மறக்கப்படுவதில்லை என்று கூறுகிறார்கள். மூளையின் 'ஹிப்போ கம்பஸ்', 'அமிக்டலா' ஆகிய பகுதிகள் நினைவாற்ற லுக்குப் பொறுப்பாக இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட விடயத்தோடு சம்பந்தப்பட்ட புலன் சார்ந்த விடயங்கள் அறிகை, உணர்வுகள், எண்ணங்கள், உடற் றொழிலியல் கூறுகள் ஆகிய அனைத்தும் சேர்ந்து ஒரு வலைப் பின்னலாக மூளையில் பதிவாகிறது. ஆகவே தான் மொழியோடு உணர்வு சேர்கிற போது அது நீடித்து நிலைக்கும் கற்றலாகிறது.

ஆபிரிக்காவின் சில பகுதிகளில் தமிழ் பேசப்படுவதில்லை. ஆனால் சில பாடல் களை மட்டும் வணக்கத் தலங்களில் ஒலிக் கும் மொழியாக இருக்கிறது. ஆகவே ஒரு மொழி அழியும் போது கூட இறுதிவரை நின்று பிடிப்பது இசையாகிறது.

கலைகளுக்குப் பின்னால் எப்போதும் இருப்பது ஒரு மனநெருக்கடி. இருப்புக்கும் எதிர்பார்ப்புக்கும் உள்ள மோதல். அதனால் தான் படிப்போருக்கும் கேட்போருக்கும் இன்பம் தருவதாக இசையும் கலையும் உள்ளது. அவுஸ்ரேலியாவில் கூட தமிழ்ப் பாடசாலைக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கையை விட தமிழ் இசை (சினிமா இசை) கேட்க அல்லது தமிழ் நாடகம் பார்க்கப் போகின்றவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதை மனங் கொள்ள வேண்டும். ஆகவே நாம் செய்யத் தக்கது என்ன?

இசை ஆசிரியர்கள், நடன ஆசிரி யர்கள் முழுமையாகத் தமிழில் பேசி, எழு திக் கற்பிக்க வேண்டும். நாடக ஆசிரியர் கள், நெறியாளர்கள் மொழி வளர்ச்சி தொடர் பான பிரக்ஞையுடன் நாடகங்களைச் செய்ய வேண்டும். தமிழ் கற்பிக்கப்படும் இடங்களில் கவிதை, இசை, தமிழ்க் கலை கள் ஆகி யவை இன்னும் பரவலாக, உணர்வு பூர்வ மாக அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

(தமிழ் எழுத்தாளர் விழா மலர் - சிட்னி, அவுஸ்திரேலியா - 2013 அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கம்)

* * *

## Essay on Values

# Value Education for a Successful Life

What is a successful life? One may think of a number of definitions for it, but the following is a satisfactory one. To laugh often and much, to win the respect of intelligent people and the affection of children, to earn the appreciation of honest critics, to endure the betrayal of false friends, to appreciate beauty, to find the best in others, to leave the world a bit better whether by a healthy child, a garden pitch or a redeemed social condition, to know that even one life has breathed easier because you lived is a successful life.

To know that many lives have breathed easier because you lived you need values in life. The easier way to give values to children is through their Education. Education is teaching them to behave as they do not behave earlier. Education helps in the growth of children. Growth is not something that happens overnight. It ia a day by day continuous process. It does not happen by itself. Nor can anyone else do it for us. If one does not assume full responsibility, in shaping his life, the world will shape his destiny for him. So it is our responsibility to shape the life of our children, without in anyway minimizing the importance of material accomplishment. One must agree that the great accomplishments is to be a person who is at peace with himself, and where wholesomeness diffuse peace, comfort, and good will, to the men and women with whom he associates. If one has earned values through his education, he will be at peace for ever but what is worrying us all is the fact that the human race is going more towards destruction of the race. How to help people to become better and pure in heart?

How to arouse love for men and women? How to make a desire to become active fighter for the ideals of humanism and human progress?

In 1900 the atheists were 0.2% in the world. In 2000 the percentage had gone upto 21.3. What will be expected in 2100?

In south Asian countries the percentage of heart diseases has grown from 1% to 10% of the population. In the past generation only the retired people got heart diseases. Now young adults of age 30 or 35 are getting it. And in the next generation adolescents are going to get it.

So the human race needs some gift. Of all the gifts or knowledge the greatest is the knowledge with values.

All over the world the Educationists and psychologists identify, more and, more aggressive children in schools. Children with angry behavior patterns later, develop as antisocial adults. Anger is an unpleasant emotion with high effect. The most important reasons for aggression are cognitive deficit and absence of inhibitory or self control statements. Antisocial adults usually have irrational, illogical and disturbed beliefs. So these things can be learnt.

If a person is healthy and educated she will culture the following five values.

**1. PEACE**

Peace in its purest form, is inner silence filled with the power of truth. Peace is the prominent characteristic of what we call a civilized society, and the character of a society can be seen through the collective consciousness of its members.

Peace is the foundation of many other values and it has been a consistent experience that all children are concerned about a peaceful world, even those who may actively fight.

The teachers all over the world who are interested in values are almost invariably finding the peace activities to be relevant and interesting while teachers appreciate the way the activities help to reduce resistance and lack of motivation in certain students.

**2. LOVE**

Love is the principle which creates and sustains human relations with dignity and depth. Spiritual love takes one into silence and that silence has the power to unite, guide and free people. Love is the bed rock for the believe in equality of spirit and person hood. When love is combined with faith that creates a strong foundation for initiative and action. Love is a catalyst for change, development and achievement. Love is not simply a desire, a passion, an intense feeling for one person or object, but a consciousness which is simultaneously selfless and self fulfilling. Love can be for one's counting, for a cherished aim for truth, injustice, for ethics, for people, for nature, for service or for God.

**3. TRUTH**

Truth means there are no contradictions, or discrepancies, in thoughts, words or actions. To be honest to one's real self and to the purpose of a task earns trust and inspires faith in others. Truth is never to misuse that which is given in trust.

When a person is truthful he or she feels clear inside. A person worthy of confidence is honest and true. Truth is the awareness of what is right and appropriate in one's role, one's behavior and one's relationship with others.

There is no hypocrisy or artificiality which relates confusion and mistrust in the minds and lives of others. Truth makes for a life of integrity because the inner and outer selves are a mirror image.

## 4. RIGHT CONDUCT

Truth in action is Right Conduct. We receive informations through the five senses, smell, taste, touch, hearing and sight. When this information is referred to the conscience the resulting action will be beneficial. Every action is preceded by thought. If the thought is consciously seen and noted, aims to help and is unselfish the action will be good for both oneself and others. If the mind is busy or we are day dreaming the action may be useless, clumsy or harmful to ourselves and others. Right conduct leads to peace and happiness in life.

## 5. NON-VIOLENCE

For the non violent person the whole world is his family. When values are practiced life is lived without harming or violating anything else. It is the highest achievement of human living encompassing, respect for all lives. Non violence is living in harmony with nature and not hurting by thought word or deed.

Living in a way which causes as little harm as possible to oneself, other people, animals, plants and the planets is a sign of a well integrated, well balanced personality. Such a person has an understanding of the spiritual aspect of humanity and is in touch with an inner happiness which is permanent and part of one's real nature.

Education forms and Laws are in process in Sri Lanka, but the real law lives in the kindness of our hearts. If our hearts are empty no law or political reform can fill them.

Our tasks must be to free ourselves by widening our circles of compassion to embrace all living beings and of all nature. The only way to do this is to Educate children with values. But Rome was not built in a single day. We all hope for a better future and start with a smile.

(மானிப்பாய் சத்திய சாயி வித்தியாலயம் பரிசளிப்பு விழா மலர் - 23-10-2014)

* * *

**கௌரவப் பட்டங்கள் :**

| | |
|---|---|
| "இலக்கிய கலாவித்தகர்" | "கலைச்சுடர்" |
| "சமூக ஒளி" | "கலைப்பிரவாகம்" |
| "சமூக திலகம்" | "கலாபூஷணம்" |

**பெற்றோரியம் :**

# போதைப் பொருள் பாவனை பற்றிப் பிள்ளைகளுடன் பேசுதல்

அண்மைக் காலமாகத் திடீரென எமது பிரதேசங்களில் போதைப்பொருள் பாவனையும், மதுப்பாவனையும் அதிகரித்துள்ளமை மிகக் கவலை தரும் விடயமாக ஆகியுள்ளது. குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் பல்வேறு வடிவங்களில் இவற்றை உள்ளெடுக்கத் தொடங்கியிருப்பது சமூகத்தை ஆபத்தின் விளிம்பை நோக்கி எடுத்துச் செல்லத்தக்கது.

போதைப்பொருள் பாவனையைச் சமூகத்திலிருந்து அப்புறப்படுத்தும் நல்ல முயற்சியில் ஈடுபடுகின்ற அனைவரும் பெற்றோருடையதும், பாதுகாவலருடையதும் ஆதரவைப் பெற்றுக் கொள்வது மிக அவசியம். பிள்ளைகள் இவ்விடயங்கள் பற்றித் தமது நம்பிக்கைக்குரிய பெரியவர்களிடமும், பெற்றோர்களிடமும் கதைக்க விரும்புகிறார்கள் என்றே ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆகவே என்ன கதைப்பது? எப்படிக் கதைப்பது? எப்போது கதைப்பது என்பன பற்றிப் பெரியவர்களாகிய நாங்கள் தெளிவாகவும், ஆயத்தமாகவும் இருப்பது அவசியம்.

**விடய அறிவு**

போதைப்பொருள் பாவனை பற்றிப் பத்து வயதுக்கு மேற்பட்ட எல்லாப் பிள்ளைகளுடனும் பெற்றோர் பேசுதல் வேண்டும். போதைப் பொருளைப் பாவிக்கத் தொடங்கிய பிறகு மிகச் சங்கடமான நிலையில் இருந்து பேசுவதை விட அவர்கள் அதைப் பற்றிச் சிந்திக்க முதலே பேசுவது சிறந்த தடுப்பு முறையாக அமையும். பிள்ளைகளோடு விடயத்தைப் பேச ஆரம்பிக்கும் முன்னர் அவ்விடயம் பற்றி விரிவாகவும், சரியாகவும் விஞ்ஞான பூர்வமாகவும் தெரிந்துகொண்டு பேசத் தொடங்க வேண்டும்.

மதுவையோ அல்லது போதைப் பொருளையோ பாவிப்பவர்களில் 70% மானோர் அவற்றைத் தமது நண்பர்களூடாகவே பெற்றுக் கொள்கிறார்கள்.

பாரிய உளநோய் ஒன்றுக்காக ஒருவர் மருத்துவ நிபுணரிடம் வருகிறார். அதற்கு முதல் மாதத்தில் அவர் போதைப் பொருள் ஏதாவது பாவித்திருப்பாரா என்று மருத்துவர் கேட்பார். ஏனென்றால் அவ்வாறு பாவித்திருந்தால் அவருக்குப் பாரிய மனநோய் வருவதற்கான சாத்தியக்கூறு மற்றவர்களை விட இருமடங்காக ஆகிறது. ஆகவே போதைப் பொருளைப் பாவிப்பதன் மூலம் நாம் பாரிய மனநோய்க்கு உள்ளாகும் ஆபத்தையும் உருவாக்கிக் கொள்கிறோம்.

போதைப் பாவனையாளர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பும் மிக அதிகம். இது அவர்கள் சிறைச்சாலையில் வாடும் நிர்க்கதிக்கு அவர்களைத் தள்ளி

விடலாம். அதீத போதைப் பாவனையால் இறந்து போகக்கூடிய சாத்தியமும் உண்டு.

எந்தவொருவரும் எந்த நேரத்திலும் போதைக்கு அடிமையாகலாம். "எனது பிள்ளை ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டார்" என்ற ஊகத்தோடு கவனிப்பின்றி இருக்க வேண் டாம். போதையைப் பாவிக்கத் தொடங்கிய பின்னர், அது அவர்களுக்குப் பிரச்சினை தரு கிறது என்று உணர்ந்தாலும் அதன் பாவ னையைக் கட்டுப்படுத்துவதில் உள்ள சிரமம் காரணமாக அதனைத் தொடர்ந்து பாவித்து வருவர். அவர்களின் வாழ்வில் போதையே மையப்பொருளாக மாறுவதால் படிப்பு, வேலை, உளநலம், மனித உறவு கள், வாழ்க்கைத்தரம் போன்ற வாழ்வின் கூறுகள் அனைத்தும் பாதிக்கப்படுகின்றன. காலப்போக்கில் போதைக்கான ஒரு தாங்கு திறனையும் அவர்கள் வளர்த்துக் கொள்ளக் கூடும். ஒரு குறிப்பிட்ட விளைவைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் மேலும் மேலும் அதிக போதையைப் பாவிக்க நேரிடலாம். போதையை நிறுத்த அவர்கள் முயற்சி செய்கின்ற போதும், சில உடல் ரீதியான குணங்குறிகள் தோன்றி அதைத் தடுத்து விடும்.

மைய நரம்புத் தொகுதியில் போதைப் பொருள் ஏற்படுத்தும் விளைவுகளின் அடிப் படையில் அவற்றை மூன்று முக்கிய பிரிவு களில் அடக்கலாம்.

1. தூண்டிகள்
2. மந்தமாக்கிகள்
3. மாயப்புலன் உணர்வு காட்டிகள்

தூண்டிகள் பொதுவாக மைய நரம் புத் தொகுதியின் தொழிற்பாட்டைத் தூண்டும். அம்பிரமீன், எக்ஸ்ரசி, கொகேயின், கபீன், நிக்கோற்றின் ஆகியவை இதற்குள் அடங்கும்.

மந்தமாக்கிகளோ மறுதலையாக மைய நரம்புத் தொகுதியின் செயற்பாட்டை மந்தப் படுத்தும். மது, கனாபிஸ், நித்திரைக் குளிசை கள், ஹெரோயின், மெதடோன் போன்றவை இப்பகுதியில் வரும்.

மாயப்புலன் உணர்வுக் காட்டிகள் புலன்சார் உள்வாங்கலில் மாற்றங்களைக் கொண்டுவரும். நேரம், வெளி பற்றிய உணர்வு களிலும் மாற்றம் வரலாம். கெராமின், எல்எஸ்டி, கனாபிஸ், மஜிக் மஸ்றும் போன்றவை இந்த வகையில் வரும்.

சில போதைப் பொருள்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வகுதிக்குள் வந்திருப்பதை அவதா னிக்கலாம். உதாரணமாகக் கனாபிஸ் ஒரு மந்தமாக்கி. ஆனால் அது அதிக அளவில் பாவிக்கப்படும்போது மாயப்புலன் உணர் வுக் காட்டியாகவும் மாறலாம்.

போதைப் பொருள்கள் எல்லாமே ஆபத் தானவை என்பது மிக முக்கியமான உண்மை யாகும். போதைப் பொருளைக் கலந்து பாவித்தல், குறிப்பாக மதுவுடன் வேறு பொருள்களைச் சேர்த்தல் மிகமிக ஆபத் தானது. ஒரு போதைப்பொருளின் தூய்மை பற்றியோ அதன் செறிவு பற்றியோ ஒரு வரும் உத்தரவாதம் வழங்க முடியாது. ஒரு போதைப்பொருளை முன்பு பல தடவை பாவித் திருந்தாலும்கூட இம்முறை அது என்ன விளைவை ஏற்படுத்தும் என்று ஒரு போதும் எதிர்வுகூற முடியாது.

**பிள்ளைகளை எங்களோடு பேச வைப் பதற்கான வழிகள்.**

**1. அவர்கள் வாழ்வின் பகுதியாகுங்கள்**

உங்கள் பிள்ளைகளுடன் பேசுவதற் காகத் தரமான நேரத்தை ஒதுக்குவதை

உறுதிப்படுத்துங்கள். அவர்கள் அக்கறை கொள்ளும் விடயங்களில் நீங்களும் அக் கறை கொள்ளுங்கள். விடயங்களைக் குறைக் கவும், ஒன்றாகச் சேர்ந்து கொள்வதற்கும் நேர அட்டவணை தயாரித்துக் கொள் ளுங்கள். எந்தவொரு புதிய விடயத்தையும் பிள்ளைகள் செய்யத் தொடங்கும் போது "எனது பெற்றோர் அல்லது பாதுகாவலர் இது பற்றி என்ன நினைப்பார்கள்?" என்ற கேள்விக்கு விடை தேடிக்கொண்டே இருப் பார்கள். ஆகவே அவர்கள் எந்தச் சந்தர்ப் பத்திலும் போதைப் பொருள் பாவிப்பதை நீங்கள் முற்றாகவே விரும்பவில்லை அல்லது ஏற்றுக் கொள்ளவில்லை என்ற செய்தியை அவர்களுக்கு மிகத் தெளிவாகவும், உறுதி யாகவும் கூறி வைக்க வேண்டும்.

நண்பர்களிடமிருந்து போதைப் பொருள் எடுப்பதற்கான அழுத்தம் இருக்கின்ற போதும் அதை மறுப்பதற்கு உங்கள் ஆதரவு இருக்கிறது என்று தெரிந்தால் அதை மறுப் பது அவர்களுக்கு இலகுவாக இருக்கலாம். அவர்கள் எந்த நேரத்திலும் யாருடன் இருக் கிறார்கள், எங்கு செல்கிறார்கள் என்று கேட்கப் பயப்பட வேண்டாம். குடும்பம் முழு வதும் ஒன்றாகச் சேர்ந்து நேரத்தைச் செல வழிப்பது முக்கியம். கதைப்பதற்கும், ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவதற்கும் வேறு விடயங் களை ஒன்றாகச் சேர்ந்து செய்வதற்கும் முயற்சி செய்க.

**2. அவர்கள் சொல்வதைச் செவி மடுப்போம்.**

பிள்ளைகள் சொல்வதைக் கேட் பதில் நீங்கள் ஒரு விருப்பத்தைக் காட்டு கின்ற போதுதான் நீங்கள் சொல்வதைக் கேட்பதற்கும் அவர்கள் தயாராகிறார்கள். அவர்களுடைய கருத்துகளுக்கு நீங்கள் மதிப்பளிக்கிறீர்கள் என்பதைக் காட்டுவதற் குக் குடும்பம் தொடர்பான தீர்மானம் எடுத்த லின்போது அவர்களின் ஆலோசனையைக் கேளுங்கள். மேலதிக கலந்துரையாடலை நிறுத்தும் வகையில் இடையீடு செய்ய வேண்டாம். தங்களது பிரச்சினைகளையும் தங்களது அபிப்பிராயங்களையும் சொல் வதற்கு அவர்கள் மனதில் சௌகரியமாக உணரவேண்டும்.

**3. மாதிரியாக வாழ்ந்து காட்டுங்கள்**

"நான் சொல்வதைச் செய், என்னைப் போலச் செய்யாதே" என்பது ஒருபோதும் சரிவராது. நீங்கள் போதை பாவிப்பவராக இருந்தால் நீங்கள் சொல்வதை உங்கள் பிள்ளைகள் கேட்பார்கள் என்று எதிர் பார்க்க வேண்டாம். உங்களது நடத்தை உங்கள் பிள்ளைகளில் ஏற்படுத்தும் செல் வாக்கைக் குறைத்து மதிப்பிட வேண்டாம். குறிப்பாகப் புகைத்தல், மது பாவனை, போதைப்பொருள் பாவனை ஆகியவை உங்களிடம் இருந்தால் பிள்ளைகள் உங் களைவிட அதிகம் பாவிப்பதற்கான வாய்ப்பு அதிகமாகும்.

**4. நேர்மையாக இருங்கள்.**

உங்களுக்குத் தகவல்கள் தெரிந்திருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியம். ஆனால் எல்லாம் தெரியும் என்பது போலப் பாசாங்கு செய்ய வேண்டாம். "எனக்கு இது தெரியவில்லை, ஆனால் தெரிந்துகொள்ள முயற்சி செய்வேன்" என்று கூற எப்போதும் ஆயத்தமாக இருங்கள். நீங்கள் எங்கே நிற்கிறீர்கள் என்பதில் நேர்மையாகவும் தெளிவாகவும் இருந்தால் உங்களோடு நேர்மையாக இருப்பது உங்கள் பிள்ளை களுக்கும் இலகுவாக இருக்கும்".

### 5. சரியான நேரத்தைத் தேர்ந்தெடுங்கள்

இயற்கையாக எழும் சந்தர்ப்பத்தைப் பார்த்து விடயத்தை கதைப்பதற்குரிய சரியான நேரத்தை தேர்த்தெடுத்துக் கொள்ளுங்கள். அது எல்லோரும் ரீ.வி பார்க்கும் நேரமாக இருக்கலாம். பாடசாலையில் படிக்கும் இன்னொரு மாணவரைப் பற்றிக் கதைக்கும் சந்தர்ப்பமாக இருக்கலாம். கதைப்பதற்குச் சற்றுக் கடினமான இன்னொரு பிரச்சினை பற்றிய கதையின் ஒரு பதில் போல் அமையலாம்.

### 6. அமைதியாக இருங்கள்

அமைதியாக இருப்பது முக்கியம். உங்கள் செயற்பாடுகள் தர்க்க ரீதியானதாக அமைதல் வேண்டும். அதீத எதிர்வினை காட்ட வேண்டாம். கோபப்பட்டால் நச்சு வட்டங்கள் ஆரம்பித்துவிடலாம். கருத்துப் பரிமாறல்களுக்கான சந்தர்ப்பம் எப்போதும் திறந்திருக்க வேண்டும். போதை பற்றி விரிவுரை நிகழ்த்த வேண்டாம். போதை பாவிப்பாளர்களைக் கேலி செய்ய வேண்டாம், குற்றஞ்சாட்ட வேண்டாம். நீங்கள் அதிகமாக உணர்ச்சிவசப்படுவீர்களானால் மேலதிகமான கலந்துரையாடலுக்கான சந்தர்ப்பம் மூடப்பட்டுவிடும் என்பதை மறக்க வேண்டாம்.

### 7. முரண்பாடு ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

மனிதர்களுக்கிடையில் முரண்பாடு இருக்கும்போது பிரச்சினையைத் தீர்ப்பது கடினமாகும். அவர்களின் பக்கத்தை நீங்கள் பார்க்க முனையும் அதே நேரத்தில் உங்களைப் பற்றி அவர்கள் விளங்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை உற்சாகப்படுத்துங்கள். தர்க்கம் ஒன்று தொடங்குவதற்கான அறிகுறி தென்பட்டால் உரையாடலை அவ்விடத்தில் நிறுத்தி இருவரும் சுமுகமான மனநிலைக்குத் திரும்பிய பிறகு மீண்டும் உரையாடலைத் தொடங்கலாம்.

### 8. தொடர்ந்து பேசுங்கள்

ஒருமுறை நீங்கள் உரையாடல் ஒன்றைத் தொடங்கினால், அதைத் தொடர்வது முக்கியம். உங்கள் பிள்ளைகளோடு போதைப் பொருள் பற்றிப் பேச எப்போதும் ஆயத்தமாக இருப்பதை உறுதிப்படுத்துங்கள். பிள்ளைகள் அத்தகைய பழக்கங்களை ஆரம்பிக்கும் முன்னரே அதைப்பற்றிப் பேசுவது முக்கியமானது.

### 9. தெளிவான எல்லைகளைப் பேணுங்கள்.

அநேகமான இளைஞர்கள் ஒரு உரையாடலின் போது தெளிவான அடிப்படை விதிகளைப் பேண விரும்புகிறார்கள். உரையாடலுக்கான அடிப்படை விதிகளை அவர்களே முன்மொழிய அனுமதிக்கலாம். அவர்களே முன்மொழியும் விதிகளை அநேகமாக அவர்கள் மீறமாட்டார்கள். விதிகள் முன்வைக்கப்பட்டபின் அவற்றை மீற வேண்டாம் என்பதில் உறுதியாக இருங்கள். விதிகளை உடைத்து விடுவதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி விளக்கிக் கூறுங்கள். அவர்கள் மதுப் பாவனைக்கு அல்லது போதைக்கு அடிமையாகக்கூடிய சூழலில் அவர்களுக்கு உதவ முன்வாருங்கள். சந்திதோறும் முளைத்திருக்கின்ற பெட்டிக் கடைகள், பாக்குக் கடைகள் பற்றி மிகுந்த அவதான மாக இருக்குமாறு கூறுங்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று அவர்களை அழைத்து வர வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால் அது இரவு நேரமாயினும் நீங்கள் அதைச் செய்வீர்கள் என்று உறுதி பூணுங்கள். ஆயினும் அப்படியான சூழலில் அவர்கள்

மாட்டிக் கொள்வதை நீங்கள் விரும்ப வில்லை என்பதையும் குவியப்படுத்துங்கள்.

**10. நேரான விடயங்களில் குவியப் படுத்துங்கள்.**

அவர்கள் செய்யும் நல்ல விடயங் களைப் பாராட்டுங்கள். அவர்கள் தங்களைப் பற்றி நல்ல சுய கணிப்புக் கொள்வதை உறுதிப்படுத்துவதோடு அவர்களுக்கு நீங் கள் மரியாதை கொடுப்பதையும் இன்னும் அவர்களை அன்பு செய்வதையும் உணரச் செய்யுங்கள்.

**உங்கள் பிள்ளை போதை பாவிக்கிறாரா என்பது எப்படித் தெரியும்?**

உங்கள் பிள்ளை போதை பாவிக் கிறார் என்று நீங்கள் சந்தேகப்பட்டால் அவர் களிடம் நேரே கேட்பது சிறந்தது. அவர்கள் அதை மறுக்கிறார்கள். ஆயினும் நீங்கள் சந்தேகிக்கிறீர்கள் என்றால் பின்வரும் கேள்வி களுக்கு விடை தேட முயலுங்கள்.

1. உங்கள் வீட்டில் வித்தியாசமான குளி சைகள், திரவங்கள் அல்லது பாக்கு வகைகள், தூள் ஏதாவது அடிக்கடி காணப்படுகின்றதா?
2. உங்கள் பிள்ளையின் பாடசாலைப் பெறு பேறுகளில் திடீர் வீழ்ச்சி காணப்படு கின்றதா?
3. ஒழுங்குபடுத்தப்பட்ட இணைப்பாட விதானச் செயற்பாடுகள் சிலவற்றை அவர் தானாக நிறுத்திவிட்டாரா?
4. ஊக்கம் குறைந்து எந்நேரமும் சோர் வாக இருக்கிறாரா?
5. அவரது நண்பர் குழாமில் காரணமில் லாத மாற்றம் ஏற்பட்டுள்ளதா?
6. பிள்ளைகள் கண்கள் கண்ணாடி போல் தோன்றுகின்றனவா?
7. திடீர் திடீரெனக் கடும் உணர்வு மாற் றங்களுக்கு உட்படுகிறாரா?
8. குடும்பத்துடன் செலவிடும் நேரத்தைக் குறைத்துக் கொண்டுள்ளாரா?
9. வீட்டில் காசு அல்லது பெறுமதியான பொருள்கள் மறைந்து போகின்றனவா?
10. உங்கள் பிள்ளையின் சாப்பாட்டு முறை அல்லது பழக்கவழக்கங்கள் திடீரென மாற்றம் அடைந்துள்ளதா?
11. அடிக்கடி அந்தரத்துடன் பதகளிப்பு நிலையில் காணப்படுகிறாரா?
12. ஒழுங்கான நித்திரையில் பிரச்சினை கள் இருக்கின்றனவா?
13. அடிக்கடி கோபப்பட்டு ஆக்கிரோச வெளிப்பாடு காட்டுகிறாரா?

இவற்றின் பல கேள்விகளுக்கு "ஆம்" என்ற விடையை நீங்கள் பெற்றால் உங்கள் சந்தேகம் உண்மையாக இருக்கலாம்.

**உங்கள் பிள்ளை போதை பாவிக்கிறார் என்றால் என்ன செய்வது?**

1. அவர்களோடு உரையாடுங்கள்
2. உதவி தேடிப் போகத் தயங்க வேண் டாம்.

உளவளத்துணையாளர் ஒருவரின் உத வியை நாடுங்கள் அல்லது உங்கள் குடும்ப வைத்தியரிடம் செல்லுங்கள்.

**பிள்ளைகளோடு எப்படிக் கதைப்பது?**

பொதுவாக நீங்கள் பிள்ளைகளோடு அதிக நேரம் செலவிட ஆயத்தமாக இருக்க வேண்டும். அவர்களின் நண்பர் களைப் பற்றிப் பேச வேண்டும். பாட சாலையிலும் ரியூசனிலும் நாள்தோறும் என்ன நடை பெறுகின்றது என்று கேட்டறிய வேண்டும். என்ன, என்ன விளையாட்டுக்களில் அவர்கள்

ஈடுபடுகின்றார்கள்? எந்த விடயங்கள் அவர்களுக்கு விருப்பமாக இருக்கின்றது போன்ற விடயங்களை அடிக்கடி கலந்துரையாட வேண்டும். நீங்கள் அவர்களில் அதிக அக்கறை காண்பிக்கிற போது உங்களின் கருத்துக்களுக்கு பிள்ளைகள் மதிப்பளிப்பார்கள்.

பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்?, யாரோடு நண்பராக இருக்கிறார்கள் என்று அறிய விரும்புவதால் அவர்களிடம் உங்களுக்கு "நம்பிக்கையில்லை" என்று அர்த்தப்படமாட்டாது. அவர்களின் வாழ்க்கையைச் சிறப்பாக்க விரும்பும் அக்கறை இருக்கின்றது என்பதே அர்த்தம் ஆகும். நீங்கள் கதைக்கும் போது விடயங்களை மிகைப்படுத்திக் கூறாமல் இருப்பதும், பிழையான தகவல்களை முன் வைக்காமல் இருப்பதும் அவசியமாகும். உங்கள் பிள்ளைகளுக்கு இவ்விடயத்தில் உதவுவதற்கு நீங்கள் போதை பற்றிய அறிவில் நிபுணராக இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை.

நீங்கள் கதைக்கும் போது பிள்ளைகள் முன்வைக்கக்கூடிய சில வசனங்களும் அதைத் தொடர்ந்து நீங்கள் எப்படிக் கதைக்கலாம் என்பதும் கீழே தரப்படுகின்றது.

1. **பிள்ளை** - "ஆரோ எடுத்தினம் நல்லா இருக்கு எண்டு சொல்லிச்சினம். நானும் எடுத்துப் பாப்பம் எண்டு நினைச்சிட்டன்"

**பெற்றார்** - அவர்கள் மீதான உங்கள் அக்கறையை முன்வைத்து போதை தொடர்பாக அவர்கள் எதிர்காலத்தில் என்ன செய்யப் போகிறார்கள் என்ற தீமானத்தைக் கேளுங்கள். போதை பாவிப்பதால் ஏற்படும் தீமை பற்றியும், ஆபத்துக்கள் பற்றியும் கதையுங்கள். போதையைப் பாவிக்கும்படி அவர்கள் நண்பர்களால் அழுத்தப்படுகின்றார்களா என்று கவனியுங்கள். எதிர்காலத்தில் வாழ்வில் வேறு அழுத்தங்கள் வரும்போது அவற்றைக் கையாள அவர்கள் பழகிக் கொள்வதற்கு இந்தச் சந்தர்ப்பம் உதவக் கூடும் என்று கூறுங்கள். இதைப் போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் நீங்கள் எவ்வாறு நடந்து கொண்டீர்கள் என்பதை நேர்மையாக முன் வையுங்கள்.

2. **பிள்ளை** - "குறிப்பிட்ட அந்தப் பொருளை ஒருக்காப் பாவிக்க ஆசையாய் இருந்தது".

**பெற்றார்** - "போதைப் பொருள் பாவித்தால் எப்படியிருக்கும் என்று நீங்கள் நினைத்தீர்கள்?" "ஏன் குறிப்பிட்ட அந்தப் பொருளைத் தெரிவு செய்தீர்கள்?" போன்ற கேள்விகள் பயனுள்ளதாக இருக்கும். வேறு பொருள்களையும் அவர்கள் பாவித்துள்ளார்களா என்று அறிந்து கொள்ளப் பாருங்கள்.

3. **பிள்ளை** - "என்ர நண்பர்கள் எல்லாரும் பாவிக்கினம். நான் ஏன் எடுக்கக் கூடாதெண்டு நினைச்சன்"

**பெற்றார்** - போதை சம்பந்தமான உங்கள் உணர்வை தெளிவாகச் சொல்லுங்கள். உங்கள் பிள்ளை போதை பாவிக்கக் கூடாது என்று ஏன் விரும்புகிறீர்கள் என்று கூறுங்கள்.

"நண்பர்கள் பாவிப்பதனால் அது பாதுகாப்பானதாக இருக்கும் என்று நினைத்தீர்களா?" "நண்பர்களுக்கு இதன் தீமைகள் பற்றி எல்லாம் தெரியுமா?" என்று

கேளுங்கள். போதையைக் கண்டபடி பரிசோதித்துப் பார்ப்பதில் உள்ள ஆபத்துக் களை எடுத்துக் கூறுங்கள். ஒரு கூட்டத்தினரைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவதை விட ஒவ்வொரு விடயத்தலும் சொந்தத் தீர்மானம் எடுப்பது எவ்வளவு முக்கியம் என்பதை எடுத்துக் கூறுக.

**4. பிள்ளை** - "அதை எடுத்தபோது எனக்கு நல்லாயிருந்தது"

**பெற்றோர்** - என்ன நெருக்கீட்டின் விளை வினால் அவர் இதை எடுக்க முயற்சி செய் கிறார் என்று ஆராயுங்கள். வேறு ஒரு பிரச்சினை பற்றிப் பிள்ளை கதைக்க முற் பட்டால், அதைத் தீர்ப்பதில் உதவப் பாருங் கள். மனம் சந்தோசமாக இருப்பதற்கான, அல்லது மனதைத் தளரச் செய்வதற்கான ஆபத்தற்ற முறைகளைப் பற்றி விளக்குக.

**5. பிள்ளை** - "இதை எடுக்கிற போது, எனது பாடசாலைப் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை, வாழ்க்கைப் பிரச்சினை எல்லாம் மறந்து போகுது...."

**பெற்றோர்** - பிரச்சினைகளைச் சமாளிப் பதற்கு அவர் போதை எடுப்பது தொடர்பான உங்கள் அக்கறையைக் கூறுங்கள். பிரச்சி னைகள் இருந்தால் அவை பற்றிக் கதைக்க விருப்பம் என்று கூறுங்கள். நிலைமையை நன்றாக ஆக்குவதற்கு என்ன செய்யலாம் என்று கேளுங்கள். "போதையின் அனுபவம் குறைந்தபிறகு பிரச்சினைகள் திரும்ப வந்த னவா? இல்லையா?" என்று கேளுங்கள். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொருத் தமான வழிகள் பற்றிக் கலந்துரையாட உங்களுக்கு விருப்பம் என்று கூறுங்கள்.

**6. பிள்ளை** - "அது எனக்கு அதிக நம்பிக் கையைத் தருகிறது".

**பெற்றோர்** - ஒருவரின் சுய கணிப்பை உயர்த்துவதற்குப் போதை தேவையில்லை என்பதை உறுதியாகக் கூறுங்கள். சமூகத் தில் சிக்கலான நிலைகளை எதிர் கொள்ள வேண்டியேற்பட்ட உங்கள் அனுபவங்க ளைக் கூறவும். நீங்கள் கையாண்ட வழி முறைகளை எடுத்துக் கூறவும். நேரான விளைவுகளைத் தந்த சந்தர்ப்பங்களையும் எதிர்விளைவுகளைத் தந்த சந்தர்ப்பங் களையும் ஒப்பிட்டுப் பேசவும். உங்கள் பிள் ளையின் நம்பிக்கை, சுய கணிப்பு ஆகிய வற்றை உயர்த்த என்ன செய்யலாம் என் பது பற்றிக் கலந்துரையாடவும்.

**7. பிள்ளை** - "நீங்களும் பாவிக்கிறீர்கள் தானே"

**பெற்றார்** - "இந்தத் தாக்கத்திற்கு நீங்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும். இது உண்மையானால் நீங்கள் மனம் திறந்து அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். போதைப் பொருள் தீமையானது என்று தெரிந்த பின்னர் நீங்கள் பாவிக்கவில்லையென்று கூறவேண்டும். இன்னும் பாவிப்பதாக இருந் தால் இன்றுடன் நிறுத்திக் கொள்கின்றேன்" என்றோ, "மருத்துவர் உதவியை நாடி யுள்ளேன்" என்றோ கூறவேண்டும். நீங்கள் முக்கிய வகை மாதிரி என்பதை மறக்க வேண்டாம்.

பெற்றோர்கள், பிள்ளைகள், ஆசிரியர் கள், உளவளத் துணையாளர்கள், மருத்துவர்கள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் இணைந்தோமானால் எமது சமூகத்தைக் காப்பாற்ற முடியும்.

**(துர்க்காபுரம் மகளிர் இல்லம் 32ஆவது ஆண்டு விழா சிறப்பு மலரில் பிரசுரமானது - 2014)**

* * *

நிறுவனம் : கலை இலக்கிய அமைப்பு

# தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் கடந்து வந்த பாதை

கலை இலக்கியக் களம் தோற்றம் பெற்ற வலிகாமம் வடக்கு வளமுள்ள இலக்கியப் பிரதேசமாய் இருந்தது. மாவைப் பண்டிதர் க.சச்சிதானந்தன் முதல் இலக்கண வித்தகர் இ.நமசிவாய தேசிகர் வரை வாழ்ந்துகொண்டிருந்த பிரதேசம். நான் அப்போது கற்பித்துக் கொண்டிருந்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு ஒரு நீளமான, கனதியான இலக்கியப் பாரம்பரியம் இருந்தது. கல்லூரி ஸ்தாபகர் தெ.அ.துரையப்பாபிள்ளை அவர்களே பாரதியோடு ஒப்பிட்டுப் பேசப்படுபவர். அவருக்குப் பிறகு கவிஞர் சின்னப்பா, கவிஞர் செ.கதிரேசர் பிள்ளை, வித்துவான் சிவபாதசுந்தரம், மகாகவி உருத்திரமூர்த்தி, அ.செ.முருகானந்தன், அ.ந.கந்தசாமி, தசம், புலவர் ம.பார்வதிநாதசிவம் என்று புகழ் பூத்த எழுத்தாளர்களின் பின்னணி எமக்கு உந்து சக்தியாய் இருந்து கொண்டிருந்தது. 1984ம் ஆண்டு மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர், ஆசிரியர், முன்னாள் ஆசிரியர் என்ற குடும்பத்தில் ஐவருக்குத் தேசிய சாகித்திய விருது கிடைத்தது. பிரம்மஸ்ரீ வ.குகசர்மா, புலவர் ம. பார்வதிநாதசிவம், கவிஞர் செ.கதிரேசர்பிள்ளை, வேல் அமுதன், செ.சிவசுப்பிரமணியம் (விழிசைச் சிவம்) ஆகியோரே அந்த ஐவரும் ஆவர்.

கலை இலக்கியச் செய்திகளுக்குப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன. நூல் வெளியீடுகள் தரமான விமர்சனங்களுடன் அரங்கேறின. குரும்பசிட்டி சன்மார்க்க சபை, யாழ் இலக்கிய வட்டம் போன்ற அமைப்புக்கள் நீண்ட காலமாய் இயங்கிக் கொண்டிருந்தன. வாழ்க்கை அமைதியுடனும் திருப்தியுடனும் ஓடிக் கொண்டிருந்ததால் இலக்கியம், கலை பற்றிப் பேசுவது வீண் விரயம் என்று யாரும் கருதாத காலம். சமூகத்தில் ஒரு பொருளாதார ஸ்திரத் தன்மை இருந்தது. அரச உத்தியோகத்தில் இருந்தவர்களுக்கு அவர்களது சம்பளம் குடும்பத்தை நடத்தப் போதுமானதாக இருந்தது. ஆகவே ஓய்வு நேரத்தை பயனுள்ள வழியில் செல விட்டார்கள். ஒவ்வொரு நிமிடமும் பணத்துக்குப் பின்னால் ஓடவேண்டிய தேவையோ, மனப்பாங்கோ இருக்கவில்லை.

ஆயினும் 1983 கலவரத்தின் பின் தமிழ் மக்கள் மனங்களில் பெரும் சஞ்சலம் ஏற்பட்டிருந்தது. நாங்கள் பலர் எழுதிக் கொண்டிருந்த ‘சுடர்’ சஞ்சிகை கலவரத்தோடு நின்றுவிட்டது. அந்தத் துயரையும் சஞ்சலத்தையும் கலை, இலக்கியங்களூடு கொட்ட வேண்டும் என்ற உந்தல் பலரிடமும் ஏற்பட்டிருந்தது. கலை, இலக்கியம் செய்பவர்கள் பலரும் மென்மையான இதயம் கொண்டவர்கள். அநீதியும், அதர்மமும் அவர்கள் மனதை இலகுவில் பாதிக்கும். ஆனால் வன் முறைக்கும் அவர்களுக்கும் எட்டாத தூரமாக இருக்கும். இந்த வகையில் காத்திரமான உள்ளடக்கத்தைக் கொண்டு, உணர்வுகளைப் பிரதிபலிக்கும் கவிதைகள், சிறுகதைகள் வரத் தொடங்கி

யிருந்தன. குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் பேசப்படும் நாடகங்கள் சில மேடையேறியிருந்தன. அவற்றைப் பற்றி விரிவாகக் கலந்துரையாடும் ஆசை பலரிடமும் இருந்தது. முக்கியமாக இனப் பிரச்சினை தொடர்பான ஒரு நெருக்கீடு, வெளிப்படுத்தும் சிகிச்சை முறைகளை வேண்டி நின்றது எனலாம்.

இத்தகைய ஒரு பின்னணியில்தான், தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் தோற்றம் பெற்றது.

1986ம் ஆண்டின் நடுப்பகுதி. சோழகக் காற்று வீசுகிற அருமையான மாலை வேளை. எமது தெல்லிப்பழை விழிசிட்டி வீட்டின் முன் ஒரு மோட்டார் சைக்கிள் வந்து நிற்கிறது. கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களும், திரு. அநு. வை. நாகராஜன் அவர்களும் இறங்கி வருகிறார்கள். நான் அப்போதே ஓர் எழுத்தாளராக அறியப்பட்டிருந்த போதும், எங்களிடம் பிள்ளைகளை ரியூசனுக்கு அனுப்புவதற்காகவே பலர் என்னைத் தேடி வருவது வழக்கம். இவர்களும் யாருக்கோ 'ரியூசன்' சொல்லிக் கொடுக்குமாறு கேட்க வந்திருக்கிறார்கள் என்றுதான் நான் ஊகித்தேன். ஆனால் வந்தவர்கள் கலை, இலக்கியம் பற்றிப் பேசினார்கள். வலிகாமம் வடக்கின் வளமான கலை இலக்கியப் பாரம்பரியங்களை அடுத்த சந்ததிக்குக் கடத்தும் நோக்கில் ஓர் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று கூறினார்கள். தாங்கள் இதுபற்றித் தெல்லிப்பழையில் வசித்து வரும் விரிவுரையாளர் நா. சுப்பிரமணியன் அவர்களுடன் ஏற்கனவே கலந்து பேசியிருப்பதாகவும் கூறினார்கள். திரு. நா. சுப்பிரமணியன் அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராக இருந்தார். எனது சிறுகதைத் தொகுதிகளின் வெளியீட்டு விழாக்களில் விமர்சனம் செய்திருந்தார். என்னையும் எனது கணவரையும் இந்த அமைப்பில் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்கள். இப்படி அவர்கள் இருவரும் சைவப் புலவர் சு.செல்லத்துரை, பண்டிதர் சி.அப்புத்துரை, குறமகள் போன்ற பலரது வீடுகளுக்குச்சென்று பேசியிருக்க வேண்டும்.

இத்தகைய கலந்துரையாடல்களின் பின் நாங்கள் சிலர் 05.09.1986 இல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் கூடினோம். கலை இலக்கியக் களம், தெல்லிப்பழை என எமது அமைப்புக்குப் பெயர் சூடிக் கொண்டோம். பெயர்த் தெரிவின் முக்கிய பங்கு திரு. நா.சுப்பிரமணியன் அவர்களிடம் இருந்த ஞாபகம்.

கலை இலக்கியத் துறையில் உயர்ந்த ரசனையைப் பேணுதல், தகுதி வாய்ந்த கலை இலக்கியவாதிகளைக் கௌரவித்தல், புதிய தலைமுறைக் கலை இலக்கியகாரரை வளர்த்தெடுத்தல் போன்ற நோக்கங்களை எமக்காக இனங்கண்டோம்.

பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, காங்கேயன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ.சிவஞானசுந்தரம் ஆகியோரை அவர்களது ஒப்புதல்களுடன் நிறுவனத்தின் காப்பாளர்களாக அமைத்துக் கொண்டோம்.

கலாநிதி நா.சுப்பிரமணியன் அமைப்பின் தலைவராகவும், நானும் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரையும் இணைச் செயலாளராகவும், திரு. அநு. வை. நாகராஜன் நிதியாளராகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டோம். களம், இயல் இசை, நாடகம், ஓவியம் என்ற நான்கு துறைகளிலும் பணியாற்றும் என்ற இலக்குடன் திருமதி. வ. இராமலிங்கம் (குறமகள்) இயற்குழுத் தலைவராகவும், திருமதி. த.சிதம்பரநாதன் இசைக்குழுத் தலை வராகவும், கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத் துரை நாடகக்குழுத் தலைவராகவும், கலாகேசரி ஆ.தம்பித்துரை சிற்ப, ஓவியக் குழுத் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

சைவப்புலவர் சு.செல்லத்துரை, பண்டிதர் சி.அப்புத்துரை, திரு. க.பால சுந்தரம், திரு. கி.மகேந்திரராஜா, திருமதி. கௌ.சுப்பிர மணியன் ஆகியோர் மத்திய குழு உறுப்பி னராகத் தெரிவு செய்யப்பட்டனர். இந்த அமைப்போடு சம்பந்தப்பட்டவர்கள் அனை வரும் ஆசிரியர், அதிபர், பல்கலைக்கழக விரிவுரையாளர், கல்வி அதிகாரி என்று கல்வித்துறையோடு சம்பந்தப்பட்டவர்களா யும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மத்திய குழு அங்கத்தவர் ஒவ்வொரு வரும் ரூபா இருபத்தைந்து அங்கத்துவப் பணமாகச் செலுத்தினோம். சாதாரண அங் கத்தவராக வலி வடக்கைச் சேர்ந்த பலர் அமைந்தனர். அவர்களில் கணிசமானோர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரி யர்களாயும் மாணவர்களாயும் அமைந்தமை கவனத்திற்குரியது. சாதாரண அங் கத்தவர் ரூபா பத்து அங்கத்துவப் பணமாகச் செலுத் தினர். ஒரு வருடத்துக்கு ஏறத்தாழ ஆயிரம் ரூபா மட்டும் கொண்டு அமைப்புத் தனது பணிகளை ஆரம்பித்தது.

1986இல் யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவையும் யாழ் பல்கலைக் கழக நுண் கலைப் பீடமும் இணைந்து நாடகக் களப் பயிற்சியுடன் கூடிய டிப்ளோமா வகுப்பை நடத்தினார்கள். அங்கு பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சு.வித்தியானந் தன், குழந்தை ம.சண்முகலிங்கம், கலாநிதி சி.மௌனகுரு, திரு. வி.வி.வைரமுத்து என்று பல்வேறு வகையான நாடகத்துறை நிபுணர் களும் இணைந்து பயிற்றுநர்களாக இருந் தார்கள். இவ்வகுப்பிற்கு நானும் தெரிவு செய்யப்பட்டுப் பயிற்சி பெற்றேன். இதுவும் தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களத் தின் நாடகத்துறை விரிவாக்கத்திற்குப் பெரிதும் உதவியது.

கலை இலக்கியக் களம் செயற்படத் தொடங்கிய பின்னர் பத்திரிகைகள் அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துச் செய்தி களைப் பிரசுரித்தன.

17.09.1986 இல் களத்தின் முதலாவது ஒன்றுகூடல் தெல்லிப்பழை யூனியன் கல் லூரியின் பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது. எமது மத்திய குழு உறுப்பினர் திரு. க.பாலசுந்தரம் அவர்களே யூனியன் கல்லூரி அதிபராக இருந்தமை யாலும், பஸ்ஸில் வருபவர்களும் சுலபமாக வரக் கூடியவாறு கல்லூரியின் அமைவிடம் தெல்லிப் பழைச் சந்திக்கு அருகில் இருந்தமை யாலும் ஆரம்பகால ஒன்றுகூடல்கள் யாவும் யூனியன் கல்லூரியிலேயே இடம் பெற்றன.

முதலாவது ஒன்றுகூடல் மதுரகான நாதஸ்வரமணி திரு. செ.சிதம்பரநாதன் குழுவினரின் நாதஸ்வர இசையுடன் ஆரம்ப மானது.

யுத்தகாலக் கட்டாய இடப்பெயர்வோடு நிறுவனமும் இடம்பெயர்ந்து அளவெட்டி, மருதனார்மடம், இணுவில், தாவடி, கொழும்பு, அவுஸ்திரேலியா என்று பல இடங்களிலும் தனது ஒன்றுகூடல்களை நடத்தி மீண்டும் சொந்த ஊருக்கு வந்து 09.09.2017 இல் தனது தொண்ணூற்று நான்காவது ஒன்று கூடலைத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி யின் புதிய மண்டபத்தில் நடத்தி மகிழ்ந்தது.

களத்தின் வெற்றிகரமான நூறாவது நிகழ்வு 26.01.2019 இல் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. களத்தின் யாப்பின்படி இறையடி சேர்ந்த அல்லது புலம்பெயர்ந்த மத்திய குழு உறுப்பினர்களுக்குப் பதிலாக வேறு உறுப்பினர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். புதிய அங்கத்தவர்கள் பலர் சேர்ந் துள் ளனர். நான் இன்றுவரை இதன் செயலா ளராக இருக்கிறேன். எனது கணவர் மத்திய குழு உறுப்பினராக இருக்கிறார்.

26-01-2019

* * *

**பண்பாடு, கலாசாரம்:-**

# தமிழர் கலாசாரம் மாற வேண்டியதும் கூடாததும்

கலாசாரம் என்ற சொல் லத்தீன் மொழியில் 'கல்சரா' என்ற சொல்வேரில் இருந்து தோன்றிய தாகும். உரோம எழுத்தாளர் 'சிசீரோ' தான் இந்தச் சொல்லை முதன்முதலில் பாவித்த வராகக் கருதப்படுகிறார். அப்போது 'ஆத் மாவைப் பயன்படுத்தல்' என்ற அர்த்தத்தில் அது பயன்பட்டது.

கி.பி 17ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இந்தச் சொல் பரவலாகப் பாவிக்கப்பட்டி ருக்கிறது. அக்காலத்தில் இச்சொல் மனிதர் களை மெய்ப்படுத்தல் - குறிப்பாகக் கல்வி யினூடு மேம்படுத்தல் என்று அர்த்தப்பட்டி ருக்கிறது. 18ம், 19ம் நூற்றாண்டுகளிலும் மனிதர்களின் முழுமை பற்றிக் குறிப்ப தற்கே அது பெரும்பாலும் உபயோகிக்கப் பட்டது. 'எட்வேட் ரைலர்' என்ற விஞ்ஞானி உலகளாவிய மனித ஆற்றலைக் குறிக்க இந்தச் சொல்லைக் கையாண்டுள்ளார்.

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் 'மானிடவியல்' கற்கைகளின் மையப் பொரு ளாகக் 'கலாசாரம்' மாறியது. குறிப்பாக அமெரிக்காவில் இது பற்றிய பல கற்கை கள் அறிமுகமாயின. ஒரு சமூகம் தனது முன்னோர்களிடமிருந்து எவற்றையெல்லாம் கற்றுக்கொள்கிறதோ அவற்றின் தொகுப் பைக் குறிப்பதாக இச்சொல்லின் அர்த்தம் மாறத் தொடங்கியது.

இன்று கலாசாரம் என்ற சொல் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இனக் குழுமத்தின் மொழி, சமயம், கலை கள், இலக்கியம், தத்துவம், விளையாட்டு கள், உணவு முறைகள், உடை, கட்டிட அமைப்பு முறை, சடங்குகள், விழாக்கள், ஆபரணங்கள், நம்பிக்கைகள், எண்ணங் கள் போன்ற பல விடயங்களின் கூட்டு மொத்தம் என்ற கருத்தோடு உலா வருகிறது.

இந்தப் பின்னணியில் தமிழர் கலா சாரம் என்பதைப் பார்க்க வேண்டியுள்ளது. உலகில் இன்று வாழ்கின்ற இனக் குழுமங் களில் மிக ஆதியான சிலவற்றுள் தமிழ் இனமும் ஒன்று என்பது பெருமைக்குரியது தான். ஆயினும் அது தன் கலாசார அடை யாளங்களை விரைவில் இழந்துவிடுமோ என்ற நிஜமான பயமும் ஆய்வாளர் மத்தியில் தோன்றியுள்ளது.

கலாசாரத்தின் எல்லாக் கூறுகளையும் எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே பேணி வரமுடியுமா? பேண வேண்டுமா? என்றால் 'இல்லை' என்பதுதான் பதில். அதற்காக எல்லாவற்றையும் கைநழுவ விடுவதும் அறி யாமை.

மனிதன் ஒரு விலங்குதான். ஆரம் பத்தில் அவன் விலங்குகளுக்குச் சமமாகத்தான் வாழ்ந்தான். விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி யோடு சமாந்தரமாக ஏற்பட்டதுதான் நாகரீக வளர்ச்சி. நாகரீகம் என்பது மனித சமூக மேம்பாட்டுடனும் பிரபஞ்ச இருப்புடனும்

சம்பந்தப்பட்டது. உதாரணத்திற்கு உடை என்ற கலாசாரக் கூறை எடுத்துக் கொள் வோம். ஆரம்பத்தில் உடை இன்றி வாழ்ந்த மனிதன் காலப் போக்கில் குளிர், வெயில், பாதுகாப்பு, மானம், அழகு என்று பல கார ணங்களுக்காக அதை அணியக் கற்றுக் கொண்டான்.

தமிழர் பட்டுச்சேலை, நூற்சேலை உடுக்கும் காலம் வந்தது. தமிழருடைய கலாசார உடை சேலை, பாவாடை, தாவணி, வேட்டி, சட்டை என்று வந்தது. இது நாகரீக வளர்ச்சி யின் உச்சம். முழுமையான உடை ஒன்றை ஒரு சமூகம் தனக்கென வகுத்துக் கொண்ட நிலை. திரும்பவும் அரை, குறை ஆடைக் குச் செல்வது கூர்ப்பின் பின் செல்வதாகும். பாலியல் கவர்ச்சி மிகுந்த ஆடைகள் சமூ கப் பிறழ்வுகளை உருவாக்க வகை செய்யும். ஆகவே தமிழர் தம் கலாசார உடையைக் காப்பாற்றுவது எமது கடமை.

சங்க காலத்தில் தமிழ்ப் பெண்களின் நிலை மிகச் சிறப்பாக இருந்ததை எமது இலக்கியங்கள் சுட்டுகின்றன. அவர்கள் மிகச் சுதந்திரமாகக் கடலில் நீந்தி விளை யாடினர். பந்து விளையாடினர். சிற்றில் இழைத்து விளையாடினர். கிழங்கு, பயறு, உழுந்து ஆகிய தானியங்களைக் கொண்டு கொக்கான் விளையாடினர். ஆகவே கொக் கான் விளையாடுவது வீட்டிற்குத் தரித்திரம் என்ற நம்பிக்கை தமிழர் கலாசாரக் கூறாக இருக்க முடியாது. சிறு பிள்ளைகள் அத்த கைய விளையாட்டில் ஈடுபடும்போது உள் ளங்கையின் சிறு தசைகள் விருத்தியடை யும். தினைப்புனம் காத்தல், நிலத்தைத் தோண்டுதல், பயிர் விளைவித்தல், நெல்லுக் குற்றுதல் என்பன போன்ற பல வேலை களைச் சங்க காலப் பெண்கள் செய்தனர். விடியற் காலையில் எழுந்து முற்றம் கூட்டு தல் போன்ற இல்லத்திற்குச் செய்யவேண் டிய பணிகளிலும் அவர்கள் ஈடுபட்டனர். வீட்டிற்குள்ளே பூட்டப்பட்டு வாழ்ந்தவர் களாக அவர்கள் இருக்கவில்லை. அதே நேரம் உறவில் இருந்து தவறுதல் பெரும் குற்றம் என்ற நம்பிக்கை பழைய தமிழ்ச் சமூகத்தில் இருந்தது. ஆண் தவறினாலும் குற்றம், பெண் தவறினாலும் குற்றந்தான். ஒருவனுக்கு ஒருத்தி என்ற உறுதியோடு அன்பான இல்லற வாழ்வில் ஈடுபடும் தமிழர் கலாசாரத்தை எந்தக் காலத்திலும் விட்டு விடக் கூடாது.

பெண்கள் நீராடிய பின் அகிற்புகை இடுதல், கூந்தலை நீளமாக வளர்த்துப் பின் னுதல், கொண்டையிடுதல், கொண்டையிற் பூமாலையணிதல் ஆகியவை தமிழர் கலா சாரங்கள். செயற்கையான வாசனைத் திரவியங்களைப் பாவிப்பதால் உடலுக்கும் சூழலுக்கும் ஏற்படும் தீயவிளைவுகளைப் பற்றி விஞ்ஞானிகள் எச்சரிக்கத் தொடங்கி விட்ட நேரத்தில் இயற்கையோடு ஒட்டிய எமது கலாசாரக் கூறுகளைப் பின்பற்றி உட லுக்குச் சந்தனம் பூசிக் கொள்வது சிறந் ததே.

பொன், வெள்ளி, மணி, பவளம், முத்து, சங்கு ஆகியவற்றால் ஆன நகை அணிதல் எமது பண்பாடு. ஆயினும் இன்றைய சூழ லில் தங்க நகை அணிவது உயிரைக் கொடுக்கும் நிலையை உருவாக்குவதால் காலத்தின் கோலம் கருதித் தங்கத்தைத் தவிர்த்து ஏனையவற்றைப் பயன்படுத்த லாம்.

ஒரு சமூகத்தில் பலதரப்பட்டவரும் இருப்பார். பணக்காரர் இருப்பார், அதிகாரம் உடையோர் இருப்பார், கற்றார் இருப்பார். ஒரு பிரச்சினையின் போது பலரும் பலவித கருத்துக்களை முன்வைப்பர். யார் சொல்வது இறுதியில் சட்டபூர்வமாக ஏற்கும் முடிவாக இருக்க வேண்டும்? "அறிவுடையோர் சொன்ன வழி அரசனும் செல்வான்" என்பதே எமது

பண்பாடு. முறையாகக் கசடறக் கற்ற சான்றோர்களின் கருத்துக்களைக் கேட்டு நடக்கும் சமூகம் உயரும்.

தானியங்களும், காய்கறிகளும், பழங்களுமே எமது கலாசார உணவுகள். இந்த மூன்று உணவுக் கூறுகளையும் அதிகளவு சாப்பிட்டு வந்தால் நோய் வராது என்றுதான் இன்று வைத்திய நிபுணர்களும் கூறுகின்றனர். இருக்கும் உணவை அடுத்தவருக்குக் கொடுத்து உண்ணலும் எமது பண்பாடு.

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று"

என்பது குறள். மிக அரிதாகக் கிடைத்த நெல்லிக்கனியைத் தான் உண்ணாது ஔவை என்ற பெண் புலவருக்குக் கொடுத்த அதியமான் இந்தக் கலாசாரக் கூறை மிகத் தெளிவாகச் சுட்டும் பாத்திரம். இன்று நாம் என்ன செய்கிறோம்?

உலகம் முழுவதும் எமக்குக் கிடைக்குமாயினும் பழிக்குரிய செயல்களைச் செய்யாதிருப்பதே தமிழர்தம் கலாசாரம். போதைப் பொருள் பாவனை, மதுப் பாவனை, புகைத்தல், சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் எதிரான துஷ் பிரயோகங்கள், களவு, கொலை, வாள்வெட்டு என்று சான்றோர் பழிக்கும் செயல்களை எந்தத் தயக்கமும் இன்றிச் செய்யும் ஒரு இனமாக எப்படி மாறினோம்? தமிழர் என்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விடயம். உயர்ந்த கலாசார அடையாளங்களே ஏனைய சமூகத்தினர் மத்தியில் எம்மைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்யும். எவ்வளவோ சிரமப்பட்டு முன்னைய தலைமுறையினர் எம்மிடம் கையளித்திருக்கும் பண்பாட்டுக் கூறுகளை ஓடும் தண்ணீரில் போட்டுவிட முடியாது.

கண்ணூறு பார்த்தல், நிமித்தம் பார்த்தல், குறிசொல்லல் போன்ற சில வழக்கங்கள் எமது கலாசாரக் கூறுகளில் காணப்பட்டாலும், அவற்றுக்கு விஞ்ஞான ஆதாரம் இல்லாதிருப்பதால் கல்வி முன்னேற்றத்துடன் மெல்ல அழிந்து போகும். அறிவு விருத்தியோடு விலக வேண்டியவற்றை விட்டுவிடவும் வேண்டுந் தான்.

(மாருதப்புரவீகம் - 2014)

* * *

**நிகழ்த்தப்பட்ட உரைகள் சில – முன்னர் பதியப்படாதவை**

| | |
|---|---|
| 20.04.84 | கீரிமலை மண்டபம் - சிவநெறிக்கழக ஏற்பாட்டில் சாகித்தியப் பரிசு பெற்றோருக்கான பாராட்டு விழா - 'நாடகத்தில் கதிரேசர் பிள்ளை' |
| 12.05.84 | பொற்கலந்தம்பை வைரவர் ஆலயம் - 'மானுடம்' |
| 19.05.84 | ஒல்லுடை வைரவர் கோயில் - 'புண்பட்டவன் பண்பட்டவன்' |
| 19.05.84 | குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சபை மண்டபம் - புனிதம் புனர்வாழ்வு இயக்கம் நடத்திய 'முரண்பாடுகளின் அறுவடை' அறிமுக அரங்கு - பதிலுரை |
| 25.05.84 | புளியடி ஞானவைரவர் ஆலயம் - விழிசிட்டி - உள்ளத்தால் பொய்யாதொழுகல் |
| 05.07.84 | கீரிமலை சிவன் கோயில் - ஆனி உத்தரத் திருவிழா - பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவருக்கான அறக்கருத்து - (பலாலி ஆசிரியர் கலாசாலை உபயம்) - 'சமயவாழ்வில் பெண்கள்' |

விருந்தினர் உரை

# சிறுவர் காப்பகம்

நிகழ்வின் தலைவர் அவர்களே, உப தலைவர் அவர்களே, நிகழ்வை நெறிப்படுத்தும் செயலாளர் அவர்களே, இல்லத்தின் நிர்வாகி களே, மேற்பார்வை யாளர்களே, அவையில் கூடியிருக்கும் அறிஞர்களே, பிள்ளைகளே அனைவருக்கும் வணக்கம்.

மாகளிற்றின் திருமுகம் படைத்த கடவுளை நினைந்து கைதொழுது, "கொடை, காதல், வீரம், நிறைகின்ற தென்னர் கொடை யாக வந்த கொடியே தமிழென்ற பெயர் கொண்ட அமிழ்தே" என்று கூறித் தமிழ்த் தாயை வணங்கி என் உரையை ஆரம்பிக் கிறேன்.

தந்தை, தாய், சகோதரர் என்று வாழும் சாதாரண குடும்ப அமைப்பிலிருந்து பிரிக் கப்பட்டுப் பல பிள்ளைகள் (வெவ்வேறு குடும்பங்களில் இருந்து வந்தவர்கள்) ஒன் றாக ஒரே கூரையின் கீழ் வாழ்கின்ற இடம் காப்பகம் அல்லது இல்லம் எனப்படும். இது ஒரு வகையான விசேட கூட்டுக் குடும்ப அமைப்பு எனலாம். இத்தகைய இடங்களில் வளரும் பதினெட்டு வயதுக்குட்பட்ட சிறு வர்கள் காப்பகச் சிறார்கள் எனப்படுவர். உரும்பிராய் கருணை இல்லம் அத்தகைய ஒரு காப்பகம்.

தாய் தந்தையரோடு வாழும் சாதாரண பிள்ளைகளின் வளர்ச்சி, விருத்தி, உளநலம் ஆகியவற்றோடு ஒப்பிடுகையில் காப்பகங் களில் வாழும் சிறுவர்களின் நிலை பாதிப் புக்கு உள்ளாவது உலகம் முழுவதிலும் பொதுவான ஒரு அவதானமாக இருக் கிறது. "நிறுவனமயப்படுத்தப்பட்ட பிள்ளை கள்" தொடர்பாக உலகில் பல ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இல்லத் தின் காப்பாளராகவோ அல்லது மேற் பார்வையாளராகவோ ஒரு புதியவர் வருகிற போது பிள்ளை அவரோடு ஆழமான அன்பைக் காட்ட முன் வருவதும், பின்னர் அவர் அந்த இடத்தை விட்டு நீங்கும் போது ஆழ்ந்த மனவேதனை அடைவதும், இவ்வாறு பல தடவை நிகழ்ந்த பின் யாருடனும் உறவு கொள்வதைத் தவிர்க்கப் பார்ப்பதும் இவர் களின் பொதுவான பிரச்சினையாகும். இவை எல்லாவற்றையும் மனதில் கொண்டு 2010 ஆம் ஆண்டு சைவ வித்தியா விருத்திச் சங்கம் வெளியிட்ட "சைவ வித்தியா" என்ற மலரில் நான் எழுதிய, காப்பகச் சிறுவர்களின் உள நலம் கட்டுரையில், ஒரு பிள்ளை காப்பகத் தில் வளர வேண்டும் என்ற முடிவு அப்பிள்ளை யின் வாழ்வில் ஆகக் கடைசித் தெரிவாக அமைய வேண்டும் என்று குறிப்பிட்டிருந் தேன்.

எனினும் இன்று எமது பிரதேசத் தில் யதார்த்தநிலை சற்று வித்தியாசமாக இருப்பதை நாம் எல்லோரும் அவதானிக்கி றோம். நல்ல கல்வி அறிவு பெற்று உயர்ந்த

பதவிகளில் பணியாற்றும் பெற்றோருடன் பொருளாதார வசதி மிகுந்து வாழ்கிற பாடசாலை மாணவர்கள் பலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப் படுகிற அளவுக்கு உளநலம் பாதிக்கப் பட்டுச் சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். மதுபானம், புகைத்தல், போதைப்பொருட் பாவனை என்று ஆண் பிள்ளைகள் அலைவதையும், இனம் தெரி யாதவர்களுடன் காதல், துஷ்பிரயோகத் திற்குட்படுதல் என்று பெண் பிள்ளைகள் கஷ்டப்படுவதையும் நாளாந்தச் செய்தி களாக நாம் பார்க்க முடிகிறது. இத்தகைய நிலைமைகள் இவர்களின் கல்வியைப் பாதித்து, வாழ்க்கையையும் முற்றாகவே நாசம் செய்வதை நாம் அவதானிக்கிறோம். ஆனால் பெற்றோரது அன்பும், அனுசரணை யும் இல்லாமல் மற்றவரது கவனிப்பில் வாழும் "கருணை இல்லப் பிள்ளைகள்" யாரும் இத்தகைய ஒரு பிரச்சினையோடு சந்தி சிரிக்கும் இடத்திற்கு வரவில்லை என்பது உற்று நோக்கத்தக்க விடயம். ஆகவே "வீட்டில் உள்ள பிள்ளைகளை எல்லாம் கொண்டு வந்து காப்பகத்தில் விட்டு விடுங்கள்" என்று தான் இனிச்சொல்ல வேண்டுமா (அப்படிச் செய்து விடாதீர்கள்) என்று தோன்றுகிறது.

பெற்றோரியம் என்பது கடினமான பணி. மிக வேகமாக வளர்ந்து வரும் அறிவு சார் துறை, சொந்தப் பிள்ளைகள் ஓரிரு வரை ஒழுங்காக வளர்த்து ஒரு நல்ல பிர ஜையாகச் சமூகத்தில் விடுவதே பெரும் சவால் நிறைந்த விடயமாக மாறிவரும் நிலை யில் எண்ணிக்கையில் அதிகமான பல்வேறு பாரம்பரிய இயல்புகளைக் கொண்ட பிள்ளை களின் பாதுகாவலராகிப் பெற்றோருக்குரிய பொறுப்பை நிறை வேற்றுவது மிகவும் கடின மான பணி. அதைச் செய்பவர்கள் மிகவும் பாராட்டுக்குரியவர்கள் என்பதில் ஐயமில்லை.

சைவ வித்தியா விருத்திச் சங்கத் திற்கு இன்று 90 வயதுக்கு மேலாகிறது. ஒரு காலத்தில் 187 பாடசாலைகளையும் ஒரு ஆசிரிய கலாசாலையையும் பரிபாலித்து வந்த அந்நிறுவனம் 1961 இல் அரசு பாடசாலை களைப் பொறுப்பேற்ற பின் சைவச் சிறுவர் இல்லத்தை நிர்வகிப்பதோடு தன் பணியை எல்லைப்படுத்திக் கொண்டது. திருநெல் வேலி யா/ முத்துத்தம்பி மகா வித்தியால யத்துடன் இணைந்தாற் போல் ஆண் பிள் ளைகளுக்கென்றும் பெண்பிள்ளை களுக் கென்றும் தனித்தனியாகச் சிறுவர் இல்லங் களை 1930 ஆம் ஆண்டு முதல் நடத்தி வந்த இந்துபோர்ட் சு. இராசரத்தினம் ஐயா அவர்கள், அப்பிள்ளைகளுக்கான உணவு, உடை, கல்வி ஆகியவற்றை இலவசமாக வழங்கி வந்தார். அவரது காலத்தின் பின் பல்வேறு கரடுமுரடான பாதைகளைக் கடந்து இன்று தெளிவான பாதையில் பயணிக்கும் அவ்வில்லத்துடன் உரும்பிராய் கருணை இல்லமும் இணைந்துள்ளது. கருணை இல்லப் பிள்ளைகளின் இன்றைய நிலையைப் பார்க்கிற போது,

**"வந்துகு விந்து**
**வளரும் இளையவர்கள்**
**சிந்தை தெளிந்து**
**திருமனிதர் ஆம்படிக்காய்**
**ஆண்டாண்டு காலம்**
**அரைக் கணமும் தாழாது**
**வேண்டும் பணிகள்**
**எவையும் விரைந்தெடுக்க**
**நிற்கும் வலிமைநெடிது"**

என்று மகாகவி பாடிய கவிதை நினை வுக்கு வருகிறது. கவனிக்க யாருமற்றி ருந்த பிள்ளைகளில் பலர் சிந்தை தெளிந்து திருமனிதர் ஆகியிருப்பதை இன்றைய அவர்களின் மேடை நிகழ்வுகள் எடுத்துக் காட்டின. குறிப்பாகச் சில பிள்ளைகளின் பேச்சு, கவிதை வாசிப்பு, நடிப்பு ஆகியவை

விதந்து பாராட்டும் அளவுக்கு உயர்தரத்தை எட்டியிருந்தன. இவர்களைக் கவனிக்கிற நிர்வாகத்தினரும் பணியாளர்களும்

**"கட்டியெழுப்பிக் கவனித்துக் காதலெல்லாம்**
**கொட்டிப் புதுக்கிக் கொடுக்கும் திறன் அரிது"**

இந்நிகழ்வுக்கு என்னைப் பிரதம விருந்தினராக அழைத்தமைக்கு நன்றி கூறி பிள்ளைகள் அனைவரதும் வாழ்வு சிறக்க வாழ்த்தி அமைகின்றேன்.

**(25-05-2016 அன்று சைவ வித்தியா விருத்திச் சங்கக் கருணை இல்லம் நடத்திய புத்தாண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆற்றிய உரையின் சுருக்கம்)**

* * *

**நிகழ்த்தப்பட்ட உரைகள் சில – முன்னர் பதியப்படாதவை**

| | |
|---|---|
| 12.07.84 | சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற மகாஜன ஆசிரியர், பழைய மாணவர், பாராட்டு விழா (அப்பா உட்பட) - மகாஜனா மண்டபம் - நன்றியுரை |
| 06.08.84 | அளவெட்டி குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் ஆலயம் - "இருவகை விருந்து" |
| 16.09.84 | இளவாலை ஆனைவிழுந்தான் பிள்ளையார் ஆலயம் - "இறை நம்பிக்கை" |
| 30.09.84 | கருகம்பனை நாகராஜேஸ்வரி அம்மன் ஆலயம் - "அன்பின் வழியது உயிர்நிலை" |
| 17.10.84 | அதிபர் 'தசம்' பிரியாவிடை உரை - மகாஜன மண்டபம் |
| 26.10.84 | விழிசிட்டி சிவகுருநாதர் ஆலயம் - "வழிபாடு ஏன்?" |
| 23.06.85 | மாவிட்டபுரம் கிளானை வைரவர் ஆலயம் - 'மணிவாசகர் காட்டிய வழி' |
| 19.01.86 | புற்றளை ம.வி. - அறிமுகவிழா நூல் அறிமுகம் - நூலாசிரியர் உரை |
| 21.05.89 | மகவம் - ஊரெழு மதி அக்கடமி மண்டபம் - சிறுகதைப் பட்டறை - வளவாளர் - 'சிறுகதை இலக்கியம் என்றால் என்ன? சிறுகதை எப்படிப் பிறக்கிறது?' |
| 08.03.90 | யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் நடத்தும் சர்வதேச பெண்கள் தினம் - கைலாசபதி அரங்கு - 'பெண்கள் மீதான சமுதாய அழுத்தம்' - கருத்துரை |
| 10.06.90 | யூனியன் கல்லூரி மாணவருக்கு - 'ஞாபகம்' |
| 20.07.91 | கலை இலக்கியக் களம் - கவிஞர் கதிரேசர் பிள்ளை நினைவுநாள் - மகாஜன மண்டபம் - அஞ்சலி உரை |
| 31.01.97 | கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு - நூல் வெளியீடு - இராமநாதன் கல்லூரி - ஏற்புரை |
| 21.11.97 | GT2 உதவியுடன் கிராமிய சமூக மனிதாபிமான அமைப்பு வலுவூட்டல் பட்டறை - 'தொடர்பாடல் நுட்பங்களும் அணுகுமுறையும்' - கண்டி வீதி அலுவலகம், யாழ்ப்பாணம் |
| 09.01.98 | தெல்லிப்பழை சைவப்பிரகாசா - புதிய மண்டபத் திறப்புவிழா - தலைமையுரை |
| 17.02.98 | ஏழாலை ம.வி. உயர்தர மாணவர் ஒன்றியக் கருத்தரங்கு - "மாணவர் பாடசாலையில் பற்று வைத்தல்" |

**வாழ்வியல் :**

# வாழ்வின் அமைதி

**நல்லவனாய் வாழ்ந்தாலும் நிம்மதியில்லை**
**கள்வனாக மாறினாலும் காண்பது தொல்லை**
**அல்லும் பகல் பாடுபட்டும்**
**அமைதி என்பதில்லை சொல்லப்போனால்**
**துன்பந்தானே மனிதனின் எல்லை.**

என்பது ஒரு பழைய சினிமாப் பாடல்.

மனிதனுடைய சராசரி வாழ்வுக் காலம் இன்று ஏறத்தாழ 80 வருடங்கள் ஆக உயர்ந்து விட்டது. மருத்துவ வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்கள் ஆகியன மனிதனை அதிக காலம் வாழ வைப்பதில் வெற்றி கண்டுள்ளன. ஆனால் எத்தனை பேர் தங்களது வாழ்வுக் காலத்தின் பெரும் பகுதியை அமைதியாக. மகிழ்வாக, நிம்மதியாக வாழ்ந்து முடிக்கின்றார்கள் என்று பார்த்தால் அந்த எண்ணிக்கை வரவர அருகி வருகிறது. உலகம் முழுவதிலும் மனச்சோர்வின் நூற்று வீதம் அதிகரித்து வருகிறது. அடுத்த தசாப்த காலத்தில் மனச்சோர்வு தடிமன் போல மிக வேகமாகப் பரவும் ஆபத்து இருக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. (அது தொற்று நோய் இல்லாவிட்டாலும்) வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் இத்தகைய உள நலப்பிரச்சினைகள் கையாளக்கடின மானவையாகத் தான் இருக்கின்றன.

"நிம்மதியான வாழ்வு" என்பது தான் எதிர்காலத்தில் மனிதர்களின் இலக்காக ஆக வேண்டி இருக்கின்றது. வேறு என்ன தான் இருந்தாலும் - செல்வம், கல்வி, வேறு வசதி வாய்ப்புக்கள் எல்லாம் இருந்தாலும் - அமைதி இல்லை என்றால் வாழ்வு வெறுமையாகி விடும். மற்றதெல்லாம் தேடியது, அமைதியும் சந்தோசமும் வரும், வரவேண்டும் என்பதற்காகத்தானே!

வாழ்வின் அமைதி, உள நலத்தோடு தொடர்புடையது என்பது தெளிவு. உள நலமும், மன அமைதியும் ஒன்று கொன்று நேர்விகித சமனானது என்றும் கூறலாம். உளநலம் திருப்தியாக, அடிப் படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஆரோக்கியமான நிறை உணவு, குடிப்பதற்கு சுத்தமான நீர், சுவாசிக்க மாசற்ற வளி, நிம்மதியான நித்திரை செய்ய ஒரு பாதுகாப்பான இடம் என்பவற்றோடு அன்புத் தேவையும், கணிப்புத்தேவையும் பூர்த்தியாக வேண்டும். மிகச்சுவையான விதம் விதமான உணவு, ஒரு கட்டிலில் தான் படுக்க முடியும் என்றாலும் அதற்குப்பெரிய மாடிவீடு என்று எல்லாம் மனிதன் தேடிக் கொண்டு விடுகிறான். ஆனால் அன்புத் தேவையும், கணிப்புத் தேவையும் தான் அவனைச் சிக்கலில் தள்ளி விடுகின்றன.

கணிப்புத்தேவை பூர்த்தியாவது அவசியந்தான், அது அதிகார வேட்கை ஆகி

விடக்கூடாது. "என்னுடைய கருத்தே எப்போதும் இறுதியாக இருக்க வேண்டும்" "நான் சொல்வதையே எப்போதும் மற்றவர்கள் செய்ய வேண்டும்." என்று நினைத்து மற்றவர்களைப் புண்படுத்தி, துன்புறுத்திச் செயற்படுபவர்கள் ஒருபோதும் அமைதி பெறுவதில்லை.

மறுதலையாகத் தனக்குள் ஒரு விழுமியமும், ஒழுக்கப்பண்பும், கருணையும் நிறைந்த ஒரு மனிதரை உருவாக்கிக் கொண்டு அதனால் தனது சுய கணிப்பை உண்மையாக உயர்த்திக்கொள்பவர்கள், அமைதியாக இருக்கிறார்கள், இருப்பார்கள். தாம் ஏனைய பல மனிதர்களை விட மனிதத்துவத்தில் சிறந்தவர்கள் என்பது அவர்களுக்கு உண்மையாகவே தெரியும். அதைப் பிறர் சொல்ல வேண்டும் என்பது கூட அவசியமில்லை. அவர்களது அக மனம், ஆழ்மனம், மனச்சாட்சி ஆகியவை சொல்லும். காலப்போக்கில் உலகிற்கு அது புரியும். இல்லாவிட்டால் அப்துல்கலாமையும், அன்னை திரேசாவையும் உயர்ந்த மனிதர்கள் தான் என்று உலகம் ஒரே குரலில் ஒத்துக் கொள்ளுமா? வேறு பல மனிதர்களும் தான் "நான் அது செய்தேன், இது செய்தேன்" என்று மேடை மேடையாக வாய் கிழியக் கத்திக்கொண்டு திரிகிறார்கள். ஆனால் உலகம் அவ்வளவு விரைவில் எல்லோரையும் சான்றோர்கள் என்று ஏற்றுக் கொள்வதில்லை. சான்றாண்மையை நிலைநாட்டப் பல தசாப்தங்கள் செல்லும். அப்படி இல்லை என்று ஆவதற்கு ஒரு நாள், ஒரு சம்பவம் போதும். ஆகவே தான் மன அமைதியை நிலைநாட்டுவது பலருக்கும் பெருத்த சவாலாக இருக்கிறது.

தமக்குள் மன அமைதியுடன் வாழ்பவர்கள் தாமாக யாருக்கும் புத்திமதி சொல்லப்போவதில்லை. ஆயினும் அவர்களிடம் ஆலோசனை கேட்க ஆயிரக் கணக்கானோர் காத்திருப்பார்கள். அவர்களது உள்ளார்ந்த அமைதியை வெளியிலிருந்து யாரும் குழப்ப முடியாது என்பதால், அவர்கள் பெரும்பாலான நேரத்தில் சந்தோசமாகவும் அமைதியுடனும் இருப்பார்கள்.

அமைதியுடன் இருப்பவர்களுக்கும் எல்லா மனித உணர்வுகளும் இருக்கும், கோபம், பயம் போன்ற மறை உணர்வுகள் இவர்களுக்கும் வரலாம். ஆயினும் அந்த உணர்வுகளை அவர்கள் மிக ஆரம்பத் திலேயே இனங்கண்டு கொள்வார்கள். அந்த உணர்வுகளைக் கையாளும் முறை இவர்களுக்குத் தெரிந்திருக்கும். தொழிற்பட்டா நிலைக் கோபம் என்பது தமக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு தருவது என்று இவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும் என்பதால், கோபத்தைக் காட்டி இவர்கள் மற்றவர்களைப் பயமுறுத்துவதில்லை. அந்தக்கோபம் தமது சொந்த இதயத் துடிப்பு வேகத்தையும், குருதி அமுக்கத்தையும் உயர்த்த வல்லது என்பதை இவர்கள் தெளிவாக அறிவர்.

வாழ்வின் அமைதியை வேண்டுபவர்கள் மற்றவர்களோடு உறவாடுகையில் வாக்கு நேர்மை, செயல் நேர்மையைக் கடைப்பிடிப்பர், ஒப்புக்கொண்ட விடயத்தை, ஒப்புக்கொண்ட வகையில் ஒப்புக் கொண்ட நேரத்தில் செய்து முடிப்பர். தங்களால் அது முடியாது எனக்கண்டால், அல்லது தாங்கள் அதைச் செய்ய விரும்பவில்லை என்றால் அதை அவ்வாறு நேர்மையாகக் குறிப்பிடுவர்.

கவலைகள் பெரும்பாலும் மற்றவர்களுடனான ஒப்பீட்டினால் வருவது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவே நிம்மதி

யாக வாழ விரும்புவர்கள் தங்களை யாரு டனும் ஒப்பிடுவதில்லை. "எனது காலுக்குச் செருப்பில்லை என்று கவலைப்பட்டேன். தெருவில் கால்களே இல்லாத மனிதனைக் காணும் வரை" (I had the blues I had no shoes, until upon the street I met a man who had no feet) என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. நாங்கள் எங்களை எங்க ளோடு ஒப்பிட்டுக் கொள்ளலாம். எங்கள் சுயவளர்ச்சி கண்டு மகிழலாம். நாங்கள் செய்யும் நல்ல செயல்களுக்குச் சுய பாராட்டும் பரிசும் கூட வழங்கிக் கொள்ள லாம். ஆனால் இன்னொரு வரோடு நம்மை ஒருபோதும் ஒப்பிட வேண்டியதில்லை.

ஒரு கிராமத்தின் கோடியில் உள்ள மரத்தின் கீழ் முனிவர் ஒருவர் அமர்ந்திருக் கிறார். கிராம மக்கள் ஒவ்வொரு நாளும் அவரைத் தேடிக் கூட்டம் கூட்டமாகப் போகி றார்கள். அந்த நாட்டின் அரசனிடம் அவ் வளவு மக்கள் கூட்டம் வருவதில்லை. அரச னுக்கு ஒரு வகையில் இது பொறாமை யாக இருந்தது. அவன் அதை முனிவரிடமே கேட்டு விட எண்ணினான். ஒரு நாள் தானே முனிவர் அமர்ந்திருந்த மரத்தடிக்குச் சென் றான். "சுவாமி" என்றான். முனிவர் தியானம் கலைந்து கண்களைத் திறந்து பார்த்தார் "ஒரே ஒரு கேள்வி சுவாமி" என்றான் அரசன். "கேளப்பா" அவர் முகத்தில் சிறு புன்னகை! "என்னிடம் பெருமளவு செல்வம் இருக்கிறது. வீரம் இருக்கிறது. நினைத்த வுடன் எதையும் செய்யத்தக்க அதிகாரம் இருக்கிறது. இவை எதுவுமில்லாத அல்லது என்னை விட மிகக் குறைந்தளவிலுள்ள உங்களைத் தேடி. இவ்வளவு மக்கள் வருகிறார்கள். அந்த எண்ணிக்கையில் பாதி கூட என்னிடம் வரவில்லையே! ஏன்?" முனி வரின் முகத்தில் மீண்டும் ஒரு சிறு புன் னகை. "நீ உன்னை என்னோடு ஒப்பிடு கிறாய். நான் அப்படிச் செய்யவில்லை. அவ்வளவு தான் வேறுபாடு" என்று கூறி விட்டு மறுபடியும் தியானத்தில் மூழ்கி விட்டார்.

"சந்தோசமும் அமைதியும் கடை யில் விற்கப்படும் சரக்குகளல்ல விலை கொடுத்து வாங்குவதற்கு. அவை எமது மனதுக்குள்ளே இருந்து வருபவை" என்று தெரிந்தவர்கள், தங்களை யாருடனும் ஒப் பிடுவதில்லை, ஒப்பிட விரும்புவதுமில்லை.

எமது மகிழ்வுக்கு எமது உடலில் சுரக்கப்படும் "செறரோனின்" (Seratonin) என்ற நரம்பிணைப்புப் பதார்த்தத்திற்கும் தொடர் பிருக்கிறது என்று உளவியல் விஞ்ஞானம் கூறும். போதிய உடற்பயிற்சி செய்பவர்கள், தளர்வுப்பயிற்சிகள் செய்பவர்கள், யோகா வில் ஈடுபடுபவர்கள், தமது எண்ணங்களை முடிந்த வரை நேரானவையாக வைத்திருப் பவர்கள் தமது செறரோனின் அளவைக் கூட்டிக் கொள்கிறார்கள். தம்மைச் சூழ வுள்ள விடயங்களை நிறையவே இரசிப் பவர்களும், வாழ்வில் நன்றி சொல்வதற்கு நிறைய விடயங்களும் நிறைய மனிதர் களும் இருப்பதாக நினைப்பவர்களும் கூட அதைச் செய்து கொள்கிறார்கள். தாம் செய்யும் விடயம் எதுவாக இருந்தாலும் அதை முழுமனதுடன் இரசித்து விரும்பிச் செய்பவர்கள் மகிழ்வாக இருப்பதற்கு இதுவே காரணம்.

மற்றைய மனிதர்களை அன்பு செய்வதும், மகிழ்வாகவும் அமைதியாகவும் இருப்பதற்கான சிறந்த வழியாகும். உலகம் முழுவதும் இன்று தனியார் வாதம் நிறைந்த சுயநலப் போக்கை நோக்கி வேகமாக நகர் ந்து கொண்டிருக்கிறது (Individulization). கடிதங்களும் மின்னஞ்சல்களும் "அன்புள்ள" என்று தொடங்கினாலும் அன்பு என்பதன்

அர்த்தம் புரிந்து கொள்ளப் படுகிறதா? என்று தெரியவில்லை. ஒருவரது வளர்ச்சி, விருத்தி, மகிழ்ச்சி ஆகியவை மற்றொரு வருக்கு அவசியமாகும் நிலை தான் அன்பு. "அன்பு தான் வாழ்வு. அது தான் வாழ்வின் ஒரே ஒரு சட்டம். இன்றும் என்றும் அது உண்மையானது" என்றார் சுவாமி விவேகானந்தர். சுயநலம் என்பது இறப்புக்கு ஒப்பானது என்பதைப் புரிந்து கொள்ளாமல் மனிதர்கள் மேலும் மேலும் சுயநலம் மிக்கவர்களாக மாறி வருகிறார்கள்.

எந்த பிரதி பலனும் எதிர் பாராமல் மற்றவர் மீது நாம் அன்பு செலுத்தும் போது அது எம்மை நோக்கி ஏதோ ஒரு வகையில் திரும்பி வரும். இந்த உலகத்தினூடு நாம் ஒரு முறை தான் பயணம் செய்யப் போகிறோம். (பிறகு என்ன நடக்கும் என்ற யாருக்கும் தெரியாது). ஆகவே அந்தச் சிறு காலப்பகுதியில் விரக்தி உள்ள இடத்தில் நம்பிக்கையையும் இருள் உள்ள இடத்தில் ஒளியையும் மருள் உள்ள இடத்தில் மகிழ்வையும் உண்டாக்க முயல்வோம்.

விளக்கு ஒளியைத் தருமா தராதா என்று விவாதிப்பதை நிறுத்திவிட்டு ஒரு சிறு அகல் விளக்கையாவது ஏற்றுவோம்.

(பாரிஸ் மகாஜனா பழைய மாணவர் சங்கம் - வெள்ளிவிழா சிறப்பு மலர் - 2016)

* * *

**நிகழ்த்தப்பட்ட உரைகள் சில - முன்னர் பதியப்படாதவை**

| | |
|---|---|
| 08.03.98 | தமிழ்ப் பெண்களின் கண்ணோட்டத்தில் பெண்ணியம் - ஆய்வுக் கட்டுரைகளின் விமர்சன உரை - யாழ் பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கு |
| 23.04.98 | இயல்வாணன், சா.ஜெகதீஸ்வரி ஆகியோரின் 'பார்வை' வெளியீட்டுவிழா - சுன்னாகம் பொது நூலக மண்டபம் - வெளியீட்டுரை |
| 12.06.98 | மானிப்பாய் மெமோரியல் - 162வது ஆண்டு பரிசளிப்பு விழா - கௌரவ விருந்தினர் உரை |
| 28.06.98 | திருமறைக் கலாமன்றம் - முத்தமிழ் விழா - 'சிறுகதைகளில் கதாசிரியர்' - கருத்துரை |
| 13.09.98 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - இந்து மகளிர் கல்லூரி - 'கட்டுரை, நாடகம், உரைச்சித்திரம் தயாரித்தல்' |
| 30.07.99 | வசாவிளான் ம.ம.வி பெற்றோர்தின விழா - சிறப்பு விருந்தினர் உரை |
| 07.09.99 | சர்வதேச எழுத்தறிவு தினம் - வலிகாமம் வலயம் - மூளாய் சைவப்பிரகாசா - 'கல்வியால் ஏற்படும் ஆளுமை விருத்தி' |
| 11.10.99 | வட்டு மத்திய கல்லூரி - கல்விக் கண்காட்சி - சிறப்பு விருந்தினர் உரை |
| 11.10.99 | மானிப்பாய் மெமோரியல் முத்தமிழ் விழா - - சிறப்பு விருந்தினர் உரை |
| 27.10.99 | அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் - பரிசளிப்பு விழா - சிறப்பு விருந்தினர் உரை |
| 28.10.99 | ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித். - கல்விக் கண்காட்சி, நூலகக் கண்காட்சி, சிறுவர் பூங்காத் திறப்புவிழா - பிரதம விருந்தினர் உரை |
| 01.11.99 | தெல்லிப்பழை சைவப்பிரகாசா - பரிசளிப்பு விழா - சிறப்பு விருந்தினர் உரை |
| 28.12.99 | மருத்துவக் கல்லூரியின் நாடி சஞ்சிகை வெளியீடு - மருத்துவபீட மண்டபம் - மலர் ஆய்வுரை |

கல்லூரி அதிபர்
மகாஜனாவின் சிற்பி தெ.து.ஜெயரத்தினம் அதிபர் அவர்கள்

# பாதைகளின் பௌர்ணமி

ஜெயரத்தினம் என்ற அருமையான ஆளுமை பற்றி நினைக்கின்ற ஒவ்வொரு கணத்திலும் என் மனதில் வருவது ஷேக்ஸ் பியரின் கவிதை ஒன்று!

This is the man
His life was gentle and the
Elements so mixed in him that
Nature might stand up
And say to all the world
This is the man!

பல்லாயிரக் கணக்கான மனிதர்களின் பாதைகளுக்குப் பௌர்ணமி ஆகிய அந்த அற்புத மனிதர் பற்றி எத்தனை பேர் எத்தனை கட்டுரை எத்தனை கவிதை எழுதி விட்டார் கள்! இன்னும் இன்னும் எழுத எவ்வளவோ இருக்கிறது. இன்னும் இன்னும் ஆய்வு செய்ய எவ்வளவோ இருக்கிறது.

"சாம்ராஜ்ஜியங்களின் தலைவிதி இளைஞர் கல்வியில் தங்கியுள்ளது" என்ற அரிஸ்டோட்டலின் வார்த்தைகளுக்கு வடிவம் கொடுத்து தெல்லிப்பழையில் ஒரு "அம்பனைப் பல்கலைக் கழகம்" உரு வாக்கியவர் அவர்.

வருடந்தோறும் பரிசளிப்பு விழாவில் அவர் வாசிக்கின்ற அதிபர் அறிக்கையின் முற்பகுதி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பான அவரது தெளிவான சிந்த னையைச் சுட்டி நிற்கும்.

"வாழ்க்கையில் எவ்வளவு கீழான நிலையில் இருந்து வந்தாலும் ஒவ்வொரு பிள்ளைக்கும் அதனுடைய தகுதிக்கேற்பக் கல்வி கற்பிக்கப்பட வேண்டும். அது அப் பிள்ளையின் இயல்பான சமய கலாசாரப் பின்னணியில் வழங்கப்பட வேண்டும். நகர்ப் புறப் பாடசாலைகளின் கதவைத் தேடிச் சென்று தட்டமுடியாத பிள்ளைகளுக்குக் கல்வி அவர்களின் வீட்டு வாசல் கதவுக் குக் கொண்டு வரப்பட வேண்டும்." என்ற ஸ்தாபகரின் இலக்கினைத் தனது அதிபர் அறிக்கை ஒன்றில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு, அதற்குச் செயல் வடிவமும் தந்தார் அவர்.

"மகாஜனாக் கல்லூரி அதனைச் சுற்றி உள்ள சமூகத்தின் கலாசார பொருளாதார வாழ்வின் பிரிக்க முடியாத பகுதி ஆகி விட்டது" என்று மற்றொரு முறை அவர் தனது அதிபர் அறிக்கையில் குறிப்பிட்டி ருந்தார். பாடசாலை என்ற சமூக நிறுவனத் தின் வகிபங்கை உறுதிபடச் சுட்டிய உத்த மர் அவர்.

"கல்வியின் நோக்கம் வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வதே" என்பார்கள். ஜெயரத் தினம் அவர்களின் தலைமை அதை முழு வீச்சுடன் செயற்படுத்தியது எனலாம். பத்து வருடங்கள் அந்த அருமையான தலைமை யின் கீழ் மாணவியாக இருந்தது நான் செய்த தவம் என்று ஏராளமான மேடை களில் நான் குறிப்பிட்டதுண்டு.

நாங்கள் மாணவர்களாக இருந்த காலத்தில் க.பொ.த உயர்தர மாணவர் இரவு உணவு (A/L Dinner) வருடந் தோறும் நடைபெறும். இப்போது மாணவர்கள் நினைப்பது போல் அழகாக உடுத்திச் செல்வதும், ஆடுவதும், பாடுவதுந்தான் அதன் நோக்கமாக இருந்ததில்லை. அடுத்த வருடம் பல்கலைக் கழகம் செல்லப் போகிற ஏராளமான மாணவர்களுக்குப் பல்கலைக்கழக வாழ்வுக்கு ஆயத்தம் செய்யும் பயிற்சிக்களமாக அது அமையும். அதற்கு முதல் முள்ளுக் கரண்டியைத் தொட்டும் பார்த்திராத கிராமத்துப் பிள்ளைகளாகிய நாம் பலருடன் அமர்ந்து சாப்பாட்டைக் கையால் தொடாமல் சாப்பிடுவது எப்படி என்று பயின்று கொள்வோம். எங்காவது கோப்பையில் தட்டிச் சத்தம் வருகிறது என்றால் அதிபரின் பார்வை அந்தப் பக்கம் திரும்பும். உடனேயே அந்த மேசையில் அமர்ந்திருக்கும் ஆசிரியரோ அல்லது மாணவர் தலைவரோ அந்தப் பிள்ளைக்கு உதவி செய்வார்கள். அந்த நாளில் நாம் 'இரவுணவுப் பேச்சு' (Dinner speech) செய்வது எப்படி என்று பயின்று கொள்வோம். புதியவர்களை (அயல் பாடசாலை மாணவர்கள்) இரவுணவுக்கு வரவேற்பது எப்படி என்று கற்றுக்கொள்வோம். ஒவ்வொரு நாளுமே ஒரு பயில் களந்தான் மகாஜனாவில்!

ஒரு நல்ல தலைவருக்குரிய ஆளுமைக் கூறுகளாக இன்று ஐம்பதுக்கு மேற்பட்ட பண்புகள் ஆய்வாளர்களினால் இனம் காணப்பட்டுள்ளன. ஆயினும் அவற்றில் மிக முக்கியமான ஏழு பண்புகளும் ஜெயரத்தினத்தின் ஜெயத்தின் பின்னால் மறைந்திருந்தன என்பது மறுக்க முடியாத உண்மை.

அவரது தூர நோக்குப் பற்றிப் பார்த்தோமானால் மகாஜனா எந்த நிலைக்கு வரப்போகிறது என்று அவர் தெளிவான கனவு கண்டார் என்று கூறினால் மிகையில்லை. அதனால் அது தொடர்பான உற்சாகம் நிறைந்த எண்ணங்களுடன் நுணுக்கமான திட்டமிடலைச் செய்தார். திட்டங்களைச் செயற்படுத்தும்போது வெறுமனே மற்றவர்களிடம் வேலை வாங்குவதை மட்டும் அவர் செய்யவில்லை. அவர்களது நேரான உணர்வுகளைத் தட்டி மிக விருப்பத்துடன் செயலாற்ற வைத்தார்.

1970ம் ஆண்டு நான் பல்கலைக் கழகம் போவதற்கு முன்னால் அவரிடம் 'ஆட்டோகிராப்' வாங்கச் சென்றபோது அவர் எழுதிய வார்த்தை "May Success and Good luck attend all your efforts" என்பதாகும். அந்த நெஞ்சு நிறைந்த ஆசீர்வாதம் இன்றுவரை என்னைப் பின் தொடர்ந்து வெற்றி பெறச் செய்கிறது என்பது எனது தனிப்பட்ட நம்பிக்கை. அவர் எனக்கு எழுதிய நற்சான்றுப் பத்திரத்தில் மிக முக்கியமான வசனம் "She is easily one of the very best products of Mahajana College" என்பதாகும். இந்த இரண்டு பத்திரங்களையும் அவரது சொந்தக் கையெழுத்துடன் நான் அவுஸ்திரேலியா வரை கொண்டு வந்து எனக்கு அருகில் வைத்திருக்கிறேன் என்றால் ஒரு சாதாரண மாணவி மீது அவர் ஏற்படுத்திய நேர் உணர்வின் வலிமை எவ்வளவு பெரியது என்று நீங்கள் ஊகிக்கலாம்.

நல்ல தலைவரின் மற்றொரு ஆளுமைக் கூறு விடயங்களில் 'குவியம்' கொள்ளல் என்பர். நிறுவனத்தில் இருந்த ஒவ்வொருவரும் பெறுமதி மிக்க நேரத்தில் கருத்தூன்றும்படி செய்துவிடுவார். நான் இரண்டு வருடங்கள் கல்லூரியின் சிரேஷ்ட மாணவர் தலைவியாக இருந்தேன். ஒருவர் அப்பதவியில் இரு வருடங்கள் இருப்பது மிக மிக அரிது. அந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதில் ஒரு வருடத்தில் சிரேஷ்ட மாணவர் தலைவனாக ஜெயரத்தினம் அவர்களின் மூத்த புதல்வர் ஜெ.ஜெயக்

குமார் இருந்தார். பரிசளிப்பு விழா, இல்ல மெய்வல்லுநர் போட்டி போன்ற விசேட தினங்களில் மாணவர் தலைவர்களுக்குக் கடமைகள் ஒழுங்கு செய்யப்படும். மாணவர் அமைதியாக இருக்க வேண்டிய நேரங்களில் ஊசி விழுந்தாலும் சத்தம் கேட்கிற அமைதி நிலவும். ஆண் பிள்ளைகள் பக்கத்தில் சிரேஷ்ட மாணவர் தலைவனும் பெண் பிள்ளைகள் பக்கத்தில் நானும் அதிபர் கண்படும் இடத்தில் நிற்போம். பெண் பிள்ளைகள் தொடர்பாக ஏதாவது தாமதம் ஏற்படுகிறது அல்லது சிறு சத்தம் வருகிறது என்றால் அதிபரின் கண் என்னை நோக்கித் திரும்பும். தவறு எங்கே என்று கண்டு பிடித்து அதை உடனே சரி செய்து விடுவேன். அடுத்த நாள் பின்னூட்டல் நடைபெறும் மாணவர் தலைவர் கூட்டத்தில் அவர் எமது நல்ல பணியைப் பாராட்டத் தயங்குவதில்லை. அந்த நேர்மையான பாராட்டையும் அன்பையும் பெறுவதற்காகவே நாம் மிக விருப்புடன் செயற்பட்டோம்.

துணிவு என்பது அவரது மற்றொரு பலம். “பண்புகளில் மிக முக்கியமானது துணிவு என்று மிகச் சரியாகவே கருதப்படுகிறது. ஏனெனில் மற்றைய பண்புகள் எல்லாமே அதில் தங்கியுள்ளது” என்று வின்ஸ்ரன் சேர்ச்சில் ஒரு முறை குறிப்பிட்டார். எந்தப் பெரிய பாடசாலையோடு நாங்கள் போட்டிக்குப் போனாலும் முதலில் நடராஜப் பெருமானைத் தரிசிப்போம். பிறகு அதிபரிடம் ஆசி பெறச்செல்வோம். கவிஞர் செ.கதிரேசர் பிள்ளை அவர்களின் இரண்டு நாடகங்களில் நான் நடித்தபோது, இறுதி நிலைப் போட்டிக்காக மட்டக்களப்புக்குச் செல்ல முன்னர் அதிபரைச் சந்தித்தோம். கன்னத்தில் குழிவிழும் அந்த அழகான புன்னகையுடன், “நீங்கள் முதல் பரிசை வென்று வருவீர்கள் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை” என்று (ஆங்கிலத்தில் தான்) சொன்னார். ஆம்! நாங்கள் வென்று தான் வந்தோம். அவருடைய துணிவும் நம்பிக்கையும் மிக இலகுவில் மாணவர்களையும் ஆசிரியர்களையும் தொற்றிக் கொள்ளும்.

ஐந்தாம் வகுப்பில் முதன் முதலில் நான் மகாஜனாவில் சேர்ந்தபோது எனது வகுப்பு '5C'. தெற்குப் பக்கம் '5B'. வடக்குப் பக்கம் விளையாட்டுப் பொருள் சேமிப்பு அறை. வகுப்புக்கு நான்தான் மொனிட்டர்... வகுப்பில் ஆசிரியர் இல்லாவிட்டால் (அப்படி அமைவது குறைவு தான்) மாணவர்கள் உள்ளக விளையாட்டு விளையாட ஆரம்பித்து விடுவார்கள். அதற்கு நான் அனுமதித்து விடுவேன். சத்தம் வராமல் விளையாடினால் '5B' ஆசிரியர் நாகலிங்க மாஸ்டர் எட்டிப் பார்க்கமாட்டார். ஆனால் அதிபர் எந்த நேரத்திலும் மேற்பார்வைச் சுற்றுலாவில் வரக்கூடும். ஆகவே கடைசி வாங்கில் ஒரு மாணவரைச் ‘சென்றி’க்கு இருத்தி விட்டு விளையாடுவோம். ‘கொக்கான் வெட்டுதல்’, ‘டாக் டீக் டோக்’, ‘இலுப்பைக் கொட்டை சுண்டுதல்’ இப்படி விளையாட்டுக்கள் தான்! “அதிபர் அறையில் இருந்து யன்னல் ஊடாகப் பார்க்கிறார், வெளிக்கிடப் போகிறார்” என்று சென்றி அறிவித்தவுடன் எல்லாரும் மேசையில் அமர்ந்து ஒழுங்காகப் படித்துக் கொண்டிருப்போம். சிறுபிள்ளை விளையாட்டுத்தனம் இருந்தாலும் 1959 NPTA பரீட்சையில் மிக நல்ல பெறுபேறு எடுத்த வகுப்பு எங்களுடையது தான்!

நல்ல திருப்பங்களை நோக்கிக் கல்லூரியை முதலில் நகர்த்துபவராக அதிபர் அவர்கள் இருந்தார். அதைச் செய்வதற்குத் தேவையான அகப்புற நேர்மை அவரிடம் இருந்தது. தீர்மானங்களில் உறுதியாக இருந்தாலும் பார்வைக்கு எளிமையுடன் இருப்பார். அந்தத் தொப்பியும் சிரிப்பும் சுருண்ட மயிரும் அவரின் விசேட அடையாளங்கள். ஒரு நிறுவனத்தில் இருபது வீதமான மனிதர்களே எண்பது வீதமான

விளைவுகளை ஏற்படுத்துகிறார்கள் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. அந்த இருபது வீத மனிதர்களைத் தெரிவு செய்து அவர்களின் உச்ச வினைத் திறனை நிறுவனத்தின் வெற்றிக்குப் பாவித்தார்.

ஜெயரத்தினம் அவர்களின் கண்டிப்புப் பற்றியும் தண்டனை பற்றியும் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். நான் பத்து நீண்ட வருடங்கள் கல்லூரியில் படித்தேன். எட்டாம் வகுப்பிலும், க.பொ.த உயர்தரத்திலும் அதிபரிடம் நேரடியாக ஆங்கிலம் படித்தேன். ஒரு நாள்கூட அவர் என்னிடம் கண்டிப்பாக இருந்ததாக நான் உணர்ந்ததில்லை. அவருடைய கண்டிப்பு மாணவர்களின் நடத்தையைப் பொறுத்ததாகவே இருந்தது. இடம் மாறிய கோபத்தை வெளிப்படுத்துபவராகவோ செய்யாத குற்றத்திற்குத் தண்டனை வழங்குபவராகவோ நான் அவரைத் தரிசித்ததில்லை. மாணவர்கள் ஒழுங்காக இருக்கும் போது அவர் மிக அன்பாக இருப்பார். 1960ம் ஆண்டு பொன்விழாக் காலத்தில் ஆசிரியர்கள் எல்லாம் விழா ஆயத்தத்தில் ஈடுபட்டிருக்கும் போது நாங்கள் மைதானத்தில் நின்று விளையாடினால்கூட (வகுப்பு நேரம்) தொப்பியைக் கக்கத்தில் வைத்தபடி சிரித்துக் கொண்டு போய்விடுவார்.

அதிபருக்குச் சமாதான நீதவான் பட்டம் கிடைத்தபோது (அப்போது அது தகுதி யானவர்களுக்கு மட்டும் வழங்கப் பட்டது) கல்லூரிச் சமூகம் எடுத்த விழாவில் மாணவர்கள் சார்பில் நான் ஆற்றிய உரை என் வாழ்வில் ஒருபோதும் மறக்க முடியாத உரை. அது அவர் மனதையும் தொட்டிருந்தது என்று நம்புகிறேன்.

சொர்க்கம் இடைக்கிடை தன் அரிய பொக்கிஷங்களை மனிதர் மீது அள்ளி வீசுவதுண்டு. சொர்க்கத்தின் பேரழகாய்ப் பரிணமித்த ஒரு மனிதர் தெ.து.ஜெயரத்தினம் அவர்கள்!

சிட்னி, அவுஸ்திரேலியா
16.09.2013
(ஜெயரத்தினம் ஜனன சத மலரில் பிரசுரமானது

* * *

**சில விமர்சனங்கள்**

**கவிதைப்பட்டறை, அன்னை இல்லம், கிளிநொச்சி**

- மகாகவியின் பாடலைக் கோகிலா மகேந்திரன் அவர்கள் அபிநயத்துடன் வெளிப்படுத்தியது என்னைக் கவர்ந்த விடயம் - எஸ்.கோகிலவாணி
- கோகிலா மகேந்திரன் போன்ற அறிஞர்களை அழைத்தமை என்னைக் கவர்ந்தது. - வில்வராசன்
- கோகிலா அம்மாவின் உரைகள் அனைத்துமே என்னைக் கவர்ந்திருந்தது. - கோ.தமிழ்நதி
- பிரபல எழுத்தாளர் கோகிலா அம்மையாருடைய கவிதை பற்றிய கலந்துரையாடல் என் வாழ்வில் எழுத்துத் துறையில் பாரிய மாற்றமாக அமைந்தது. - எஸ்.ஆர்.ராம்கி 25-10-2015

**அறிவிப்பாளர்**

1982 - 1993 - மகாஜனக் கல்லூரி - இல்ல மெய்வல்லுநர் போட்டி (பல வருடங்கள்)

22.06.95 }
23.06.95 } தெல்லிப்பழைக் கோட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி - இராமநாதன் கல்லூரி மைதானம்

## கண்ணீர் அஞ்சலி

### மகாஜனக் கல்லூரி விஞ்ஞான ஆசிரியர் திரு. இளையதம்பி பஞ்சநாதன் அவர்கள் மறைந்தபோது

விஞ்ஞானம் என்பது பஞ்சநாதம். விண் தொட நிமிர்ந்த அடிநாதம். பண்பின் மறு பெயர் பஞ்சநாதம். அன்பின் உருவெனும் அமரகீதம்.

மகாஜனா ஈன்றெடுத்த மணிமகுடம். மாணவர் படைகொண்ட சாம்ராஜ்யம். பரீட்சை நடத்தும் பணி மேற்கொண்டு பகலிரவாய் உறங்காத பழ வேடம்.

ஆய்வுகூடம் உன் பெயரில் அழகு கொள்ளும். ஐயங்கள் உன் முன்னே தூள் தூளாகும். உலகெங்கும் உன் பெயரை உருப்போடும். உன் நாமம் எம் நாவில் நிலைத்து நிற்கும்.

மாறில்லாத புன்னகை மறைந்ததா? மாசில்லாத மனம் உறைந்ததா? மென்மை யான மொழி அழிந்ததா? மேன்மை என்னும் உயிர் ஒழிந்ததா?

உலகவாழ்வு நீர்க்குமிழி என்றெண்ணி, உயர்ந்த இடம் நீ தேடி அடைந்தாயோ? இறை நிழல் உனக்காய்க் காத்திருக்கும். எப்போதும் அது உன்னைப் பார்த்திருக்கும்!

07.05.2017

* * *

**பரீட்சகர்**

| | |
|---|---|
| 2.12.00 | சாந்திகம் - உளவளத்துணைப் பயிற்சி நிறைவு - வாய்மொழிப் பரீட்சை |
| 31.03.02 | சாந்திகம் - உளவளத்துணைப் பயிற்சியாளர் - 7வது அணி - நேர்முகப் பரீட்சை |
| 22.12.16, 18.12.19 | வட இல. சங்கீத சபை - நாடக கலாவித்தகர் பரீட்சை |
| 18.02.17, 02.03.17 | சாந்திகம் - வேலைக்கு ஆட்சேர்ப்பு - நேர்முகப் பரீட்சை |
| 17.10.17 | சாந்திகம் - உளவளத்துணையாளர், இணைப்பாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு - நேர்முகப் பரீட்சை |
| 24.10.17 | சாந்திகம் - செயற்றிட்ட முகாமையாளர், நிதிப் பணிப்பாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு - நேர்முகப் பரீட்சை |

அணிந்துரை

# வைத்திய நிபுணர் எஸ்.சிவதாஸ் அவர்களின் "நலமுடன்" நூலுக்கானது

"இன்பம் எங்கே இன்பம் எங்கே
என்று தேடு - அது
எங்கிருந்த போதும் அதை நாடி ஓடு"

என்ற ஒரு பழைய சினிமாப் பாடல் காதில் ஒலிக்கிறது.

உயிர்கள் எல்லாம் வாழ விரும்புகின்றன. தமது இனத்தை இப்பூமியில் தொடர்ந்து நிலை நிறுத்த விரும்புகின்றன. கூர்ப்பின் எந்த இடத்திலிருந்து "மகிழ்ச்சியாக வாழ விரும்புகின்றன" என்று கூறலாமா? தெரியவில்லை. நிச்சயமாக மனிதன் தோன்றிய காலத்திலிருந்து மகிழ்வைத் தேடித்தேடி அலைகிறான். இன்னும் அலையத்தான் போகிறான்.

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே "ஆராத இன்பம் அருளும் மலை போற்றி" என்று பாடிய மணிவாசகர் இறைவனால் மட்டுந்தான் இன்பத்தைத் தரமுடியும் என்பதில் தெளிவாக இருந்தார். குதிரை வாங்கக்கொண்டு சென்ற பொருள், மந்திரிப் பதவி எல்லாம் மறந்து குருந்த மர நிழலில் அமர்ந்துவிட்டது அதனால்தான்.

அரண்மனையில் மகிழ்வைத் தேடிக் காணாமல் தானே புத்தர் காவி உடுத்து வெளியே வந்தார்? ஆயினும் எந்தச் சமயத்தைப் பின்பற்றினாலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் பணத்திற்கும் அதிகாரத்திற்கும் பின்னாலேயே இன்பம் இருப்பதாக இன்னும் நம்பத்தான் செய்கின்றனர். அது உண்மைதானா?

வாழ்வு திருப்தியாக இருக்கும் போது ஒரு சந்தோசம் வருகிறது. சந்தோசம் என்பது ஓர் உணர்ச்சியா, மனநிலையா என்று விவாதிக்க வேண்டியதில்லை. ஏனென்றால் உணர்ச்சிகளே மன நிலையைக் கொண்டு வருகின்றன.

சந்தோசத்தை அளப்பது எப்படி? உடல் தொழில் ரீதியான முறை எதுவும் அதற்கு இல்லை. ஒருவர் சந்தோசமாக இருக்கிறாரா இல்லையா என்பதை அவரது நடத்தையை மட்டும் கொண்டு அளக்க முடியுமா? தொடர்ந்து சிரித்துக்கொண்டு தெருவில் ஓடுகிறவர் மகிழ்ச்சியாக இருப்பவரா? அல்லது பித்து நோய் நிலை உள்ளவரா?

மகிழ்ச்சி பற்றி ஒருவர் கூறுவதை எந்த அளவு ஒப்பீட்டு ரீதியில் சரியெனக் கொள்ள முடியும்? முள்ளுக் குத்தியவர் 'வலிக்குது' என நொண்டுகிறார். துப்பாக்கிக் குண்டு பாய்ந்தவர் "எனக்கு வலி தெரியவில்லை. இரத்தத்தைக் கண்ட பிறகுதான் ஏதோ நடந்து விட்டது என நினைத்தேன்" என்கிறார். இப்படிக் கூறப்பட்டதனால் முள்ளுக் குத்தும் வலி, துப்பாக்கிக் குண்டு பாயும் வலியை விடப் பெரியது என்று கொள்ளலாமா? இன்னொரு வகையில் மகிழ்ச்சி என்பது ஒரு தனிப் பிரமாணம் கொண்ட விடயம் போலத் தோன்றினாலும் அது அப்படி

இருப்பதில்லை. வாழ்வின் பல்வேறு கூறுகள் எங்கள் மொத்த மகிழ்ச்சியில் எத்தனை வீதம் பங்களிக்கின்றன என்று நாமே எமக்குள் கேட்டுப் பார்க்கலாம். குடும்ப அங்கத்தவருடனான உறவு, வேலை, பொழுது போக்கு, நண்பர்களின் தொடர்பாடல், உடல்பயிற்சி, சமூக வேலைகள் - இவை ஒவ்வொன்றும் மொத்த மகிழ்ச்சியில் எத்தனை வீதத்தைத் தருகின்றன என்று பார்த்தால் அது ஆளுக்காள் வேறுபடலாம். ஆகவே மொத்த மகிழ்வை அளப்பது என்பது பெரிய சிக்கலான விடயம்.

மகிழ்வு, கோபம், கவலை போன்ற உணர்வுகள் எல்லோருக்கும்தான் வருகின்றன. என்றாலும் சிலர் கடந்த காலத்தின் மகிழ்வான கணங்களை அதிகம் நினைவில் வைத்திருக்கின்றனர். அதற்காக அவர்கள் அதிகம் மகிழ்வாக இருந்தார்கள் என்று கூற முடியுமா?

அதிகளவு சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடும் தன்மை, உற்சாகமான மனப்பாங்கு ஆகியவற்றோடு குறைந்தளவு பதற்றம், குறைந்தளவு பகைமை உணர்வு, உணர்வுகளை விரைவில் சமநிலைக்குக் கொண்டு வரும் திறமை உள்ளவர்கள் பொதுவில் மகிழ்வாக இருப்பர் என்று சில உளவியலாளர் கருதுவர்.

ஆண்களைவிடப் பெண்கள், திருமணம் ஆகாதோரை விடத் திருமணம் ஆனோர், பிரிந்து வாழும் தம்பதியினரை விடச் சேர்ந்து வாழும் தம்பதியினர், அதிகாரிகளின் கீழ் தொழில் செய்பவர்களை விடச் சுயதொழில் செய்வோர், வேறு தொழில்களை விட ஆன்மிகம் சார்ந்த தொழில்களைச் செய்வோர் அதிக மகிழ்வுடன் இருப்பதாகச் சில உதிரி ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**"நாமார்க்கும் குடியல்லோம்**
**நமனை அஞ்சோம்**
**நரகத்தில் இடர்ப்படோம்**
**நடலை இல்லோம்**
**ஏமாப்போம் பிணியறியோம்**
**பணி வோமல்லோம்**
**இன்பமே எந்நாளும் துன்பமில்லை..."**

என்று அப்பர் பெருமான் கூறும்போது, கொய் மலர்ச்சேவடி இணையை மனதில் கொள்ளும் தியானத்தையே குறிப்பிடுகிறார். தியானமும் மற்றைய தளர்வுப் பயிற்சிகளும் இன்பத்தைக் கொண்டுவரும் என்று உளவியல் விஞ்ஞானம் இன்று முழுமையாக நம்புகிறது.

சிறுவயது முதல் புலன்கள் ஊடாக இன்பத்தை அநுபவிப்பதுதான் எமது முதல் அநுபவம். அழகான இயற்கைக் காட்சிகளில் ஆனந்தம் அடையாதார் யார்?

**"கண்களிரண்டும் அவன் கழல் கண்டு**
**களிப்பன ஆகாதே..."**

என்பது திருவாதவூரரின் கருத்து.

**"மண்ணிலே வந்த பிறவியே எனக்கு**
**வாலிதாம் இன்பமாம் என்று**
**கண்ணில் ஆனந்த**
**அருவிநீர் சொரிய..."**

என்று சேக்கிழார் கூறும்போது இப்பிறவியே ஒரு வரப்பிரசாதம் என்கிறார். வாழ்வின் வரப்பிரசாதங்களை நினைத்து மகிழ்ச்சி கொள்ளுங்கள் என்றுதான் உளவியலாளரும் கூறுவர்.

**"ஆனந்த சாகரத்தில் அமரர் முன்னே**
**அழகலையே ஊர்வசி நீ ஆடும்போது..."**

என்று பாடும் தாகூர் ஆடுதலின் இன்பம் பற்றிப் பேசுகிறார்.

**“பல்லவி பத்மநாதன் ஊதுகையில்,**
**பரவசம் ஏற்படும் உடம்பு**
**புல்லரித் தின்பநிலை தலைக்கேற,**
**புலனெலாம் செவிகொள நிற்போம்”**

என்று கவிஞர் சோ.ப. பாடும்போது இசை தரும் மகிழ்வை எடுத்துரைக்கிறார்.

"Happy the man and happy he alone
He who call today, his own"

என்ற ஆங்கிலக் கவிதை எதிர் காலத்தையும் கடந்த காலத்தையும் பற்றிப் பெரியளவு கருத்தில் எடுக்காது அன்றன்று தம் காரியங்களைக் கருத்தூன்றிச் செய்வோர் சந்தோசமாய் இருப்பதைக் கூறுகிறது.

**“கருணையைக் கொடுப்பது பெருந்தன்மை. அதைப் பெறுவது இழிவு”**

என்று தத்துவஞானி அரிஸ்டோட்டல் கூறியபோது கருணையிலும் ஓர் இன்பம் ஒழித்திருப்பதை எடுத்துரைத்தார்.

“சந்தோசம் உங்களை விட்டுப் போய் விட்டதென்றால், சந்தோசமாய் எழுந்து உட்கார்ந்து, சந்தோசமாய்ப் பேசி, சந்தோசமாய் இருப்பதாக நடிப்பதே சந்தோசத்தை மீளப் பெறும் வழி” என்று டெயில் கானேகி தனது நூல் ஒன்றில் குறிப்பிடுகிறார்.

மிகச் சிக்கலான இந்த விடயத்தை உளமருத்துவ நிபுணர் எஸ்.சிவதாஸ் அவர்கள் பார்க்கும் பார்வை மிக வித்தியாசமாய் இருக்கிறது. இவர் இவ்விடயத்தைப் பற்றிப் பல்வேறு கருத்தரங்குகளிலும் பேசிய போது நான் கேட்டிருக்கிறேன். அதிலும் யாழ்ப்பாணத்தில் அரச வைத்தியசாலையில் அவர் பேசிய பேச்சு மிக உன்னதமானது.

தனக்குத் தெரிந்த, தான் அறிந்த, தான் வாசித்த பல விடயங்களையும் மிக எளிமையான மொழியில் எங்கள் முன் படையல் செய்கிறார். அவரது கேள்விகள் ஒவ்வொன்றும் எங்களை மிக ஆழமாய்ச் சிந்திக்க வைக்கின்றன. சோலைக்குயில் ஆற்றுப்படுத்தல் மையத்திற்கான வருகை நிலை உள மருத்துவ நிபுணரின் நூல் என்ற வகையிலும் இந்த நூலின் வருகை எம்மை இரட்டிப்பு மகிழ்வு கொள்ள வைக்கிறது.

பொதுமக்கள் கையில் இது மிகப் பயனுள்ள நூலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. டாக்டர் எஸ்.சிவதாஸ் அவர்களிடமிருந்து இன்னும் பல அரிய நூல்களை நாம் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறோம்.

**சோலைக்குயில் ஆற்றுப்படுத்தல் மையம்,**
**70, பஸல்ஸ் ஒழுங்கை,**
**கொழும்பு - 06.**
மே 2009

* * *

**பட்டிமன்றம்**

1979 பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - “பெண்கள் உத்தியோகம் பார்ப்பது அவசியம் / அவசியமில்லை”

1983 மகாஜனக் கல்லூரி - விஜயதசமி - மாணவர் பட்டிமன்ற நடுவர் “கல்வியா / செல்வமா உயர்ந்தது?”

04.10.91 இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்தியது - ‘சமூக மாற்றத்தை முன்னெடுப்பதில் எமது ஆசிரியரின் பங்கு போதுமானதா?’

நூல் முன்னுரை :

# ஆசிரியர் ச. பொ. கனகசபாபதி அவர்களின் மாறன் மணிக்கதைகள் நூலுக்கானது

பிள்ளைகளை நோக்கி ஒரு நந்தவனம் வருகிறது. குழந்தையும் கொரில்லாவும், சுறா மீனும் பெண்மணியும், ஆமையும் எலியும், குழந்தையும் துருவக்கரடியும், புத்தியுள்ள கொக்கு, நன்றி மறவா டொல்ஃபின் ஆகிய சிறுவர் கதைகளைக் கொண்ட திருமிகு ச.பொ.கனகசபாபதி அவர்கள் எழுதிய சிறுவர் கதைத் தொகுதியே அது!

கதை சொல்லல் ஒரு கலை. கலை என்றால் என்ன? கலை என்பது ஓர் உணர்வினை அல்லது பெறுமானத்தினை வெளிப்படுத்துவதிலும் தொடர்புபடுத்துவதிலும் மனிதத்திறன் வெளிப்படும் முறைமையாகும் என்பார் Honigman. சிறுவருக்குக் கதை சொல்லல் மிகுந்த ஆற்றலை வேண்டி நிற்கும் ஒரு கலை.

மிக ஆதி காலத்திலேயே மக்கள் தங்களைக் கொண்டாடிக் கொள்ளவும் வணக்கங்களில் ஈடுபடவும், கடவுளுடன் இடைத் தொடர்பு கொள்ளவும் கதை கூறத் தொடங்கினர். காலப்போக்கிலே, எழுதப்பட்ட கதைகள் இலக்கியங்களாயின. கூறப்பட்ட கதைகள் ஆற்றுகைகள் ஆயின. இலக்கியங்கள் பின்னர் கவிதை, காவியம், சிறுகதை, நாவல், சிறுவர் கதை என விரிந்தன. ஆற்றுகைகள் வில்லுப் பாட்டு, கதாப் பிரசங்கம், நாடகம் என வடிவம் பெற்றன. கதைகள் சொல்லப்படாத சமூகங்கள் உலகில் இல்லை எனலாம்.

எல்லாவற்றையும் ஓட வைத்துக் கொண்டிருக்கும் ஓர் ஒழுங்கு குலைந்துவிடுமோ, உலகம் திடீரென இருண்டு விடுமோ, சமூக வாழ்வுக்கு எதிரான சக்திகள் சடுதியாகத் தலை தூக்குமோ போன்ற மனிதர்களின் ஆழ்மனப்பயங்களை விடுவிக்கக் கதை சொல்லல் பயன்பட்டு வந்தது. குழந்தைகளுக்குக் கதை சொல்லும்போது, குறிப்பாக அவர்கள் நம்பிக்கையூட்டப்பட வேண்டும். அந்த உளவியற் கருத்தை நன்கு அறிந்து ஆசிரியர் கதை சொல்கிறார். இந்த நூலின் எந்தக் கதையிலும் நல்ல பாத்திரம் நலிவடையும் துன்பியல் இடம்பெறவில்லை.

நல்லதோர் சிறுகதை அவர்களை மகிழ்வூட்டும். அவர்களுக்கு அறிவூட்டும். சமூகத்தில் பரந்துள்ள ஒரு பொதுப் பிரச்சினையை தனது கருப்பொருளாகக் கொண்டு அது தொடர்பான ஓர் ஆழ்ந்த செய்தியையும் அது தருமாயின் பல மாணவரிடம் மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தித் தன் இலக்கை அடைவதில் வெற்றி பெற்று விடும். முடிந்த போதெல்லாம் மனிதாபிமானத்துடன் தேவைப்பட்டோருக்கு உதவுதல் என்ற அருமையான விழுமியச் செய்தியை இந்நூலின் பல கதைகள் கொண்டுள்ளன. கதை சொல்லல் ஊடாகப் பிள்ளையின் மொழி அறிவு விருத்தி செய்யப்படுவதற்கும் விழுமியங்கள் வளர்த்தெடுக்கப்படுவதற்கும் அப்பால் அவர்களின் நெருக்கீடுகள் குறைக்கப்படும் என்பது உளவியல் அறிஞர் கருத்து.

சிறுவர்கள் ஒரு புதிய சூழல் அல்லது பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றபோது அவர்களது உடலிலும் உள்ளத்திலும் ஏற்படுகின்ற மாறுதல்கள் அல்லது எதிர் வினைகளே நெருக்கீடாக உணரப்படுகின்றன. இந்த நெருக்கீடுகள் நல்ல முறையில் கையாளப்படாத போது பல வருடங்களின் பின்னர் அவை உறவுச் சிக்கல்கள், களவுகள், கொள்ளை, மதுப் பாவனை, போதைப் பொருள் பாவனை, சமூகச் சீர்கேடுகள் போன்ற சமூகம் சார் வெளிப்பாடுகளாகத் தோற்றம் கொள்ளும் என நம்பப்படுகிறது. ஆகவே கதைகள் சீராக்கத்தில் பெரும் பங்கு வகிப்பவை.

நீண்ட காலம் போர்க் கொடுமைக்கு உட்பட்ட எமது நாட்டின் சிறுவர்களுக்குக் கதை சொல்லல் ஒரு குழுச் சிகிச்சை முறையாகவே கையாளப்படலாம். அதனால் தான் ஆசிரியரின் மாறன் மணிக்கதைகள் நூலை எமது பிரதேசப் பாடசாலைகளில் அறிமுகம் செய்துள்ளேன். இந்த நூல் அத் தேவைக்கு மிகப் பொருத்தமானது என்பது எனது கருத்து.

பெரியவர்களுக்கான கதை சொல்லிகள் எதை எப்படிச் சொன்னாலும் பெரிய தீமை வந்துவிடாது. ஆனால் சிறுவர்களுக்குக் கதை கூறுவது இலகுவான விடயம் இல்லை. கதைக் கருவும், கதைப்புலமும் அவர்களின் அநுபவப் பரப்புக்கு உட்பட்டதாய் இருக்க வேண்டும். அவர்களது விருத்திக்கும் வளர்ச்சிக்கும் தேவையான கற்பனை, தேடல் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். மொழியோ அவர்களுக்குப் புரியக்கூடிய எளிய தமிழாக இருக்கும் அதே நேரத்தில் இலக்கணம் வழுவாததாயும் இருக்க வேண்டும். மறந்தும் பேச்சு வழக்கைப் பயன்படுத்த முடியாது. ஏனெனில் சிறுவர் அதைச் சரியென்று மயங்குவர். இந்நூலின் ஆசிரியர் மிகக் கவனமாக மொழியைக் கையாளுகிறார்.

நாம் வாழும் உலகு இப்படி இருப்பதற்கு நாம் அனைவரும் பொறுப்பானவர்களே என்ற பிரக்ஞை உள்ளவர்களே எழுத்தாளர்களாகின்றனர். இந்த உலகை மேலும் சந்தோஷமாக்க எம்மால் முடியும் என்ற நம்பிக்கை ஆசிரியரின் பேனா முனையில் துல்லியமாகத் தெரிகிறது. அதனால் அவரது சிந்தனை மிக ஆக்கபூர்வமானதாக அமைந்து கிடக்கிறது. அன்பு பற்றிப் பேசுகிறபோது Einsteen சொன்னார். “Our task must be to free ourselves by widening our circle of compassion to embrace all living beings and all of nature". அவர் சொன்னது போல் இந்த இயற்கை முழுவதையும் அணைத்துக் கொள்ளும் தன்மை இந்தக் கதைகளில் காணப்பட்டு ஆசிரியர் ஒரு விலங்கியல் அறிஞர் என்பதை நினைவூட்டுகிறது.

இயற்கை தொடர்பான ஆசிரியருடைய புலக்காட்சி (Perception) கண்டறிதல் (Detection) பெயர்த்துத் தொகுத்தல் (Transduction) ஊடு கடத்தல் (Transmission) தரவு நிலைப்படுத்தல் (Information Processing) ஆகிய திறன்களை அவர் சிறப்பாகக் கொண்டிருப்பதால் இக்கதைகள் அற்புதமாக ஆக்கப்பட்டுள்ளன.

எங்கள் எல்லோருக்குமே ஒரு பாத்திரப் பசி இருக்கிறது. வாழ்வின் யதார்த்தத்தில் எங்களால் ஒருபோதும் வாழமுடியாத பாத்திரங்களைக் கதைகளில் காணவும், கதைகளில் சொல்லவும் நாம் விரும்பு கிறோம். டொல்ஃபினாக வாழ விரும்பும் பல்லாயிரக் கணக்கான சிறுவர்களின் பாத்திரப் பசியை இக்கதைகள் தீர்த்து விடவில்லையா?

சுதந்திர சமூகத்தில் பொறுப்புணர்ச்சியுடன் வாழப் பிள்ளையைத் தயார் செய்யும் இக்கதைகளை அம்மாமாரும் அப்பாமாரும் படிக்கலாம். ஆரம்பக்கல்வி ஆசிரியரும் படிக்கலாம். இலக்கியமாய் இருப்பது இவர்களூடாக அவைக்காற்றப் படலாம். உலகில்

கோடிக் கணக்கான பிள்ளைகள் பாடசாலை களில் இல்லாமல் தெருவிலும், வயலிலும், வேலைத் தளங்களிலும் உள்ளனர் அல்லவா? அவர்களுக்கும் இது உணர்வுடன் சொல்லப் படலாம்.

கதை என்றாலே சிறுவர்களின் மனத் தோட்டம் கொத்துக் கொத்தாய்ப் புஷ்பித்து விடும். அவர்களது புருவ மேடு களே அதைப் பிரதிபலிக்கும். கோயில் சிலை மாதிரி வெகு நேர்த்தியாகச் செய்யப்பட்ட இக்கதைகள் அவர்களுக்கு அருமையான பரிசுகள்.

பச்சை உடம்பில் பச்சை பச்சையாய்க் கொந்தளிக்கும் பற்பல உணர்வுகளுக்கும் இதம் தரும் கதைகளை எனது ஆசிரியர் எழுத அந்நூலுக்கு நான் முன்னுரை எழுது வது - எல்லோருக்கும் கிடைக்காத பேறு! மக்களை நேசிக்கும் மானிடத்தைத் தேடுவ தில் திக்கெல்லாம் ஒரு மனப்பயணம் மௌனமாய் நடக்கிறது எனக்குள்! சிறுவர் களே ஓடி வாருங்கள்! ஒரு நட்சத்திரம் மினுக்குகிறது!!

17.05.2004

* * *

**DBT பயின்று சான்றிதழ் பெற்றோர் - 2019 (8 மாதம்)**
**(15.01.2019 - 05.09.2019)**

01. திரு. ச.கருணாகரன்
02. திரு. வே. சசிகுமார்
03. திருமதி ஜெ. சுமதி
04. செல்வி சி. காருண்யா
05. செல்வி சி.கிருஷாளினி
06. திரு. அ.அஜந்தன்
07. செல்வி பு.இளையதம்பி
08. செல்வி க. சுவர்ணா
09. திருமதி. த.சத்தியதாசன்
10. திரு. பொ. சந்திரவேல்
11. திருமதி. ந.யோகராணி
12. திரு. த. தனேஸ்வரன்
14. திரு. த.சிவகுமாரன்
15. செல்வி கு. புவனராணி
16. செல்வி அ.நளாயினி
17. திருமதி. க.மாலினி
18. திருமதி. ஆ. இந்திராதேவி
19. செல்வி. ச. ஜனனி
20. செல்வி இ.தாட்சாயினி
21. திரு. க. கணேசராசா
22. செல்வி த. சரோஜாதேவி
23. செல்வி அ.சிவாணி
24. திருமதி. வி.முருகேசபிள்ளை
25. திரு. சி. ஜீவமுகுந்தன்

பதிப்புரை :

**கலாபூஷணம் பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களின்,**

# ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு மூன்றாம் பாகத்துக்கானது

பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள் ஒரு தமிழ்ப்புலவர். அவரது பாடல்கள் அருமை யானவை.

பாடத் தகுவன யாவுமுன்
பாடற் பனுவல்களாய்ச்
சூடத் தகுவன வாகின
சொற்றமிழ் வல்லவர்கள்
நாடத் தகுவன வாகின
நாற்றிசை வாழறிஞர்
தேடத் தகுவன வாயின
செந்தமிழ்ப் பாவலனே.

என்று ஒரு கவிஞன் பாடியது பண்டிதர் அப்புத்துரை அவர்களைப் பார்த்துத் தானோ என்று நான் நினைப்பதுண்டு. நான் இப்படிச் சொல்வது மிகையில்லை என்பதற் கான ஆதாரம் எனது தந்தையார் 'விழிசைச் சிவம்' அவர்கள் பண்டிதர் பற்றிக் கூறியது.

"பண்டிதரப்புத்துரையே நீ
பார் புகழ் ஞாயிறோ பனி மதியோ"

என்பது அவர் உணர்ந்து உரைத்துப் பார்த்து எழுதிவை.

கலை இலக்கியத் துறைகளில் உயர்தர இரசனையைப் பேணுதல், தகுதி வாய்ந்த கலை இலக்கியவாதிகளைக் கௌரவித்தல், புதிய தலைமுறைக் கலை இலக்கியக் காரர்களை வளர்த்தெடுத்தல் போன்ற தெளிவான நோக்கங்களைக் கொண்டு 05.09.1986 இல் ஆரம்பிக்கப்பட்டது தெல் லிப்பழைக் கலை இலக்கியக்களம். இரண்டு வருடங்களுள் இருபதுக்கு மேற் பட்ட ஒன்று கூடல்களை இயல், இசை, நாடகம், ஓவியம் ஆகிய நான்கு துறை களிலும் நடத்தி வலி வடக்குப் பிரதேசத் தில் ஒரு புதிய எழுச்சியை ஏற்படுத்தியது.

பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள் கலை இலக்கியக் களத்தின் இயல் துறைத் தலைவராக ஆரம்ப காலம் முதலே தொடர்ந்து பணியாற்றி வந்தவர். அதனால் ஒன்று கூடல்கள் மட்டுமல்ல தெல்லிப் பழைக் கலை இலக்கியக்கள வெளியீடு களாகப் பல நூல்கள் வெளிவரவும் உழைத் தவர். "அறுபது வயது இளைஞர் கலைப் பேரரசு" என்ற நூல் எமது முதல் வெளி யீடாக 1988 இல் பிரசுரமானது. 'தூவானம் கவனம்' என்ற எனது நாவல் களத்தின் இரண்டாவது வெளியீடாக மலர்ந்தது. தொடர்ந்து பண்டிதர் சி.அப்புத்துரை, சைவப் புலவர் சு.செல்லத்துரை, கலாநிதி நா. சுப்பிரமணியன், திரு.அநு.வை.நாகராஜன் போன்றோரால் எழுதப்பட்ட பல நூல்கள் காலத்துக்குக் காலம் வெளிவந்து கொண்டி ருந்தன.

எமது களத்தின் காப்பாளர்களில் ஒரு வரான சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமது அன்னையாரின் நினைவாகக் களத்திற்கு

வழங்கிய அறக்கட்டளை நிதியமும் 'கிரேக் கத்தின் தொல்சீர் அரங்கு' போன்ற சிறு நூல்கள் வெளிவர உதவின. 1993 இல் கலை இலக்கியக் களம் வெளியிட்ட 'கோலங் கள் ஐந்து' என்ற நாடக நூலில் பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களின் 'நா காக்க' என்ற நாடகம் இடம் பெற்றிருந்தது.

அடம்பன் கொடி தானும் திரண்டால் மிடுக்கென ஆய்ந்த அறிவினர் கூறிப் போந் தனர். தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தின் செயற்பாடுகளிலும் நல்ல பலர் சேர்ந்ததால் நன்மைகள் வாய்த்தன.

ஆயினும் போர் என்ற அரக்கன் நிறு வனங்களின் செயற்பாடுகளிலும் தாக் கத்தை ஏற்படுத்தினான். 1990ம் ஆண்டுடன் வலி வடக்குப் பிரதேசம் பெருமளவுக்கு அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போர் வையைப் போர்த்துக் கொண்டதால் மெல்ல மெல்ல மத்திய குழு உறுப்பினர்களும் மூலைக்கு ஒருவராய் இடம் பெயர நேர்ந்தது.

பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள் ஒரு கட்டத்தில் கொழும்புக்கு இடம் பெயர்ந்தார். அங்கிருந்து நூல்கள் பல எழுதிக் கொண்டிருந்தார். ஈழத்துத் தமிழ்ப் புலவர்களின் வரலாறுகள் செம்மையாகப் பேணப்படாமை அவர் மனதை உறுத்திக் கொண்டிருந்தது. "சரியான பதிவின்மை எங்கள் அறிஞர்களது பெரு நிதியமான நேரத்தை வீணாக்குவதற்கு அநுகூலமாகின்றது" என்று சிந்தித்துத் தானே அவற்றைச் செம்மை யாக எழுத முனைந்தார்.

ஈழத்துத் தமிழ்ப் புலவர்கள் வரலாறு பாகம் - I, பாகம் - 2 ஆகியவை அழகான தடித்த பச்சை அட்டையுடன் கொழும்பில் இருந்து வெளிவந்தபோது, தெல்லிப்பழைக் கலை இலக்கியக் கள இணைச் செயலர் என்கிற முறையில் அவற்றுக்குப் பதிப்புரை எழுதும் பேறு எனக்குக் கிடைத்தது. அவரது 80வது அகவை நிறைவை இந்த இரு நூல்களின் வெளியீடு மூலம் கொண் டாட முடிந்த திருப்தியைக் கலை இலக்கி யக்களம் கண்டது.

இப்போது பண்டிதர் அவர்களுக்கு 83 வயதாகின்றது. மேலும் ஒரு முறை இடம் பெயர்ந்து கனடாவில் வசிக்கிறார். ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு பாகம் -3 ஐ நிறைவு செய்திருக்கிறார். களத்தின் தற்போதைய தலைவராயிருப்பவர் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள். களத்தின் ஆரம்ப காலத் தலைவர் பேராசிரியர் நா.சுப்பிர மணியன் அவர்கள் கனடாவில் வாழ்கிறார். ஆகவே இந்நூல் கனடாவில் வெளிவருவது களத்திற்குப் பெரு மகிழ்வு தருவது.

பண்டிதர் அவர்களே,

**இதுவரை நீங்கள் செய்த**
**சேவையின் மீது ஆணை**
**இதுவரை அருளைப் பெய்த**
**இறைவன் மீது ஆணை**
**இதுவரை உங்களாலே**
**அறிவதன் உச்சி சென்ற**
**இதயங்கள் உம்மை வாழ்த்தும்**
**வாழ்க பல்லாண்டு என்றே.**

அவுஸ்திரேலியா 23.4.2011

* * *

**எழுத்துலகப் புனை பெயர்கள்**

- விழி
- விழிசைக்குயில்
- பசுந்தி
- பதுமலாஞ்சனை

**Front Page Note for a book :**

# "A Portrait of a young Artist"

**by : Siva Vijinthira**

"As a clever writer, Sivahami gives her careful observations of the world she belongs to. For her age, the writings show much maturity and when I went through them, satisfaction filled my mind. 'A New World' is an amazing story and the message it gives is very deep with an aesthetic tint while 'Ripe Royal Galas' is simple and touching.

(2005)

* * *

**ACT பயின்று சான்றிதழ் பெற்றோர் (6 மாதம்) - 2018**
**(01.07.2018 - 02.12.2018)**

01. செல்வி நா. கீர்த்தனா
02. திரு. த. சிவகுமாரன்
03. செல்வி சி. சுமதி
04. திரு. ச. கருணாகரன்
05. செல்வி பு. இளையதம்பி
06. திருமதி. த. ஞானச்சந்திரன்
07. செல்வி க. சுகர்ணா
08. திருமதி. த. சத்தியதாசன்
09. திரு. எம். தேவகாந்தன்
10. திருமதி. சி. சதா சகாயநாயகி
11. செல்வி அ. சிவாணி
12. திருமதி. சு. ஜனனி
13. திருமதி. சங்கமித்தா ஜெயக்குமார்
14. திருமதி. எஸ். பத்சலா
15. திருமதி. க. மாலினி
16. திரு. எஸ். தேவமுகுந்தன்
17. திருமதி. கே.அருந்தினி
18. திரு. பி. அச்சுதராஜா
19. திரு. சி. ஜீவமுகுந்தன்
20. செல்வி கே. கம்சியா
21. திருமதி. தே. மைதிலி
22. திருமதி. சி. சுபத்திரா
23. திருமதி. ப. தர்மகீர்த்தி

பதிப்புரை :

## சகோதரி யதீஸ்வரியின் பாலர் இலக்கிய நூலுக்கானது

### "ஆடிப் பாடுவோம்"

இலக்கியப் படைப்புக்கள் பல் வகைப்படும். அவற்றில் கடினமானது பாலர் இலக்கியம் என்பது பொதுவாக எல்லோ ராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். வய தானவர்கள் சிறுவருக்காக இலக்கியம் செய்யும் போது அவர்களின் வயதுக்கு மனதால் இறங்கி வரவேண்டி இருக்கும். அது கடினம். பாலரின் அனுபவம், சொற் களஞ்சியம், அவர்களைக் கவரும் விட யங்கள், அவர்களுக்குப் பிடித்தமான விட யங்கள் ஆகியவற்றை அவர்களில் ஒரு வராக இருந்து அவர்களுக்குள் இருந்து பார்க்கக்கூடியவராக எழுத்தாளர் இருக்க வேண்டும். அதே நேரத்தில் எழுத்தாளர் விரிந்த கற்பனை வளம் கொண்டவராகவும், எளிமையான மொழியில் சிறுவருக்கு அறி வூட்டக்கூடியவராகவும், அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்குத் துணை போகக் கூடியவரா கவும், அவர்களை முன்னோக்கி அழைத்துச் செல்லக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.

பெரியவர்களுக்கு எழுதும் போது மனதில் உந்தித் தள்ளிக்கொண்டு வருகிற எந்த விடயத்தையும் எந்த வடிவத்திலும் உணர்வுபூர்வமாகக் கொட்டித் தள்ளி விட்டுப் போய்விடலாம். ஆனால் சிறுவருக் காக எழுதும் போது ஒரு ஆசிரியருக்குரிய திட்டத்துடனும், கட்டுப்பாட்டுடனும் செயற் பட வேண்டும். "இதை நான் இப்படிச் செய் யலாமா?" என்ற கேள்வியை எப்போதும் உள்ளத்தில் தாங்கிய வண்ணம் இயங்க வேண்டும். ஆகவே தான் அது எளிதல்ல என்பதை எல்லோரும் ஒப்புக் கொள் கிறார்கள்.

இவ்வகையில் இலங்கையில் 1918 ஆம் ஆண்டளவில் திரு.ச. வைத்தியநாதர் என்பவரால் முதலாவது குழந்தைப் பாடல் படைக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதைத் தொடர்ந்து காலத்திற்குக் காலம் பல முயற் சிகள் செய்யப்பட்டிருந்தாலும் அது பெரிய அளவுக்கு வளர்ச்சி பெறவில்லை என்ற கசப்பான உண்மையை மறுத்துவிட முடியாது. உலகத்தின் குழந்தை இலக்கியத்தை அண் மிக்க முடியாமல் நாம் திணறிக் கொண்டி ருக்கின்றோம்.

வளர்ச்சி அடைந்த நாடுகளின் நூல கங்களில் குழந்தைகளின் ஒவ்வொரு வயதுக்கு முரிய ஏராளமான நூல்களைக் காணலாம். நூலகத்துக்கு வரும் ஆறு வயதுப்பிள்ளை நேரே "ஆறு வயது" என்ற பகுதிக்குச் சென்று தனக்குப் பொருத்த மான பல நூல்களில் விரும்பியதை எடுத்து ஆர்வத்துடன் படித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். எமது நாட்டில் அத்தகைய ஒரு நிலை எப்போது வரும் என நாம் ஏங்க வேண்டியுள்ளது.

இத்தகைய ஒரு பின்னணியில் அருட் சகோதரி யதீஸ்வரி அவர்களின் "ஆடிப் பாடுவோம்" என்ற இந்தப் பாடல் தொகுப்பு வெளி வருகிறது. மூன்று முதல் ஐந்து வயது வரையான பிள்ளைகளுக்கான பாடல்களை மழலைப் பாடல் என்றும் ஆறு முதல் ஏழு வயது வரையான பிள்ளை களுக்கான பாடல்களைப் பாலர் பாடல் என்றும், எட்டு முதல் பதினொரு வயதுக் குரிய பாடல்களைப் குழந்தைப் பாடல்

என்றும், பன்னிரண்டு முதல் பதினைந்து வயதுக்குரிய பாடல்களைச் சிறுவர் பாடல் என்றும் சொல்லும் மரபு இலங்கைத் தமிழர் மத்தியில் இருந்து வருகிறது. அந்த வகையில் இந்தத் தொகுதி ஒரு குழந்தைப் பாடல் தொகுதி என்ற வகையில் அடங்கும் என்று கருதுகிறேன்.

சகோதரி யதீஸ்வரி அவர்கள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பணிகளால் ஈர்க்கப்பட்டுத் துர்க்கா தேவஸ்தானத்தில் வந்து இணைவதற்கு முன்னரே "பூரணி", "நிவேதிதா", "மலை மகள்" என்ற புனை பெயர்களில் எழுதிக் கொண்டிருந்த ஒரு சகோதர எழுத்தாளராக நான் அவரை அறிந்திருந்தேன். அவர் தெல்லிப்பழைக்கு வந்த பின்னர் எமது நட்பு இறுக்கம் பெற்றது. பெண் துறவிக்குரிய எளிமையும் கருணையும் நிறைந்தவர். நீண்ட காலம் சிறுவர்களோடு வாழ்ந்ததால் அவர்களின் உள்ளங்களுக்குள் நின்று சிந்திக்கும் திறன் கொண்டவர்.

**"பாய்ந்து ஓடிக் கன்றுக் குட்டி**
**பாப்பா குடித்துத் தூங்குது"**

என்ற அவரது வரி ஒரு சிறு பிள்ளை கூறுவதுபோலவே இல்லையா? குருவிகளையும் அழகான விலங்குகளையும் தொட்டுப் பார்க்க விரும்புவது குழந்தையின் இயல்பு.

**"கிட்டே போய்த்தான் தொடுவமென்றால்**
**கீச்சிட்டோடிப் பறக்குது"**

என்று "பூரணி" கூறும் போது அவர் ஒரு சிறுமியாகவே மாறிவிடுவது தெரிகிறது.

"சின்னச் செடியை நகத்தினாலே கிள்ளக் கூடாது" என்று கூறும் போது அவர் ஒரு ஆசிரியருக்குரிய வகிபங்குக்கு மாறிவிடுகிறார். நல்ல விழுமியங்களைப் போதிக்கிறார்.

"நான்கு, நான்கு, நான்கு, நமக்கு வேண்டும் நான்கு என்று அறம், பொருள். இன்பம், வீடு பற்றிக் கற்பிக்கிறார்.

நூலின் இறுதியில் வரும் பாடல்கள் குழந்தைகளைக் கும்மி ஆடவும், கோலாட்டம் போடவும் தூண்டுகின்றன. "ஆடிப்பாடுவோம்" என்ற பாடல் அவர்களின் நடிப் பாற்றலை வளர்க்கத் துணை போகிறது.

இந்த அருமையான தொகுதியைத் தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களவெளியீடாகக் கொண்டு வருவதில் பெரு மகிழ்வடைகிறோம். அருட் சகோதரி அவர்கள் இன்னும் பல நூல்களை வெளி யிடவும் நீண்ட காலம் ஆரோக்கியத்துடன் வாழவும் அன்னை துர்க்காவின் அருளை வேண்டுகிறோம்.

03-07-2015

* * *

அண்மைக் காலமாக ஈழத்துப் பத்திரிகைகளில், சஞ்சிகைகளில், பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே காணப்படுகிறது. எண்பதுகளின் முற்பகுதியில் கணிசமான அளவு எழுதிக்கொண்டிருந்த பெண் எழுத்தாளர்கள் பிற்பகுதியில் மிகக் குறைவாகவே பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். இலக்கியப் பணிக்கு வாழ்க்கை இடைஞ்சலாக இருக்க முடியாது. வாழ்க்கையின் ஒரு கடமையேயாக இலக்கியப் பணியை மேற்கொள்ளலாம். ஈழத்து இலக்கிய உலகில் துணிவுடன் இலக்கியம் படைக்கும் - தொடர்ந்து நிலையாக இருக்கும் திருமதி. கோகிலா மகேந்திரன் பாராட்டுக்குரியவர்.

**பாகேசிறீ**

தை, மாசி - 1991 - சிரித்திரன்

**பின்னட்டைக் குறிப்பு :**

## கலாபூஷணம் சு. துரைசிங்கம் அவர்களின் "பாலன் வருகிறான்"சிறுவர் கதை நூலுக்கானது

கவிஞர் துரையர் என இலக்கிய உலகில் பரவலாக அறியப்பட்ட கலாபூஷணம் சு.துரைசிங்கம் அவர்களைக் கடந்த முப்பத்தைந்து வருடங்களாக அறிவேன். ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, பின்னர் அதிபராக உயர்ந்து வந்தவர் அவர்.

அவரது பதினாறாவது வயதில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவராக இருந்தபோது அவரது முதலாவது கவிதை வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து பல ஊடகங்களில் எழுதிக் கொண்டிருந்த அவர் 1972 இல் தனது தெருவிளக்கு என்ற கவிதை நூலினை வெளிக்கொணர்ந்தார்.

சிறுவர் பாடல் தொகுதிகள் மூன்று, சமயம் சார்ந்த நூல்கள் மூன்று, புவியியல் சார்ந்த நூல்கள் இரண்டு ஆகியவை இதுவரை வெளிவந்துள்ளன. 'கவிக் குரல்கள்' என்ற ஒலிப்பதிவு நாடாவும் 'இந்து தர்மத்தில் பத்துக்கள்' என்ற தொலைக்காட்சித் தொடரும்கூட இவரால் தயாரிக்கப்பட்டவை. "இந்து தர்மத்தில் பத்துக்கள்" மாணவர்களுக்கு மிகப் பயனுள்ள தயாரிப்பாக அமைந்ததோடு மூன்று முறை தேசிய தொலைக்காட்சியில் தொடர்ந்து ஒளிபரப்பாகிய பெருமையும் பெற்றது.

2004ம் ஆண்டு கலாசார அமைச்சு இவருக்குக் 'கலாபூஷணம்' விருதை வழங்கிக் கௌரவித்தது. தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பதும் மற்றைய எழுத்தாளர்களை எழுதத் தூண்டுவதும், சக எழுத்தாளர்களுடன் நல்ல உறவைப் பேணுவதும் எப்போதும் மனிதாபிமானத்துடன் வாழ்ந்து காட்டுவதும் இவரது சிறந்த ஆளுமைக் கூறுகளெனத் துணிந்து கூறலாம்.

* * *

**வாழ்வின் முதலாவது தேசிய பட்டப் பரிசு**

தமிழ் மறைக் கழகம் நடத்திய அகில இலங்கைத் திருக்குறள் மனனப் போட்டி - வயது ஏழு (1957)

# யா/தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலை பரிசளிப்பு விழா - அதிபர் அறிக்கை 1995

மாண்புமிகு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே.மகேந்திரன் அவர்களே,

திருமதி. ப.கார்த்திகேசு அவர்களே,

மேதகு கு.ஜெயராஜ தேவன் அவர்களே,

உயர்திரு. எஸ்.தம்பிராஜா அவர்களே,

ஆசிரியர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, அபிமானிகளே, மாணவர்களே, அனைவருக்கும் வணக்கம்.

குவளை மலர்போல் மலர்ந்திருக்கும் ஆர்வக் கண்களோடும், நேசிக்க வைக்கிற இனிமையான முகங்களோடும், அருமையான இந்த இளமாலைப் பொழுதிலே இங்கு கூடியிருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்பதில் நான் பெருமகிழ்வு அடை கிறேன்.

தெல்லிப்பழைக் கோட்டத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே.மகேந்திரன் அவர்கள் இன்று இங்கே பிரதம விருந்தினராய் வருகை தந்துள்ளார். எமது கோட்டத்தையும் இடம்பெயர்ந்து இன்னலுறும் எமது பாடசாலையையும் தனிப்படக் கவனிக்க ஒரு பிரதிக் கல்விப் பணிப்பாளர் இல்லையே என்ற எங்கள் நீண்ட நாள் ஆதங்கத்தைத் தீர்க்க இவ்வருடத்தில் வந்து சேர்ந்த நற்சேவையாளர் அவர். பார்வைக்கு எப்போதும் புன்சிரிப்புடனும் சாந்தமாகவும் தோற்ற மளிக்கும் அவர் தன் கொள்கைகளிலும் திட்டங்களிலும் விடாப்பிடியானவர். விவசாயத் துறையில் விசேட திறன் கொண்டவர். எமது பாடசாலை மீது தனிப்பட்ட அக்கறை கொண்டவர். எந்தப் போட்டியில் எங்கள் பாடசாலை கலந்து கொள்கிறபோதும் "உங்களுக்கு எத்தனை பரிசு கிடைத்தது?" என்று கேட்டு உற்சாகப்படுத்துவார். இன்றைய மிக நெருக்கடியான சூழலில் நாம் இந்த விழாவை மிக அடக்கமாக, பாடசாலை மட்டத்தில் தான் கொண்டாடுகிறோம் என்று தெரிந்தும் தமது பன்முகப்பட்ட வேலைகளுக்கு மத்தியில் இவ்விழாவுக்கு வர இன்முகத்துடன் சம்மதம் தந்தார். அவரை வாருங்கள் வாருங்கள் என வரவேற்பதில் பெருமகிழ்வு அடைகிறேன். அவரது கைகளால் பரிசு பெற எமது மாணவர்கள் கொடுத்து வைத்தவர்கள்.

எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் பலரும் "எப்படியும் வாழலாம்" என்று வாழ்பவர்களாய் இல்லாமல், "இப்படித்தான் வாழவேண்டும்" என்று வாழ்பவர்களாய் இருப்பது எமக்குக் கிடைத்த ஒரு பெரும் பேறாகும். கடமையுணர்வும், இலட்சியப்பற்றும் கொண்ட எங்கள் பழைய மாணவி திருமதி. ப.கார்த்திகேசு அவர்களில் ஒருவர். தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியின் நல்லாசிரியையான அவர் எங்கள் பாடசாலை மீது மிகுந்த

அக்கறை கொண்டவர். நிறுவியவர் நினைவுநாள் பேருரை நிகழ்த்த இங்கே வருகை தந்துள்ளார். அவரை "வாருங்கள் சகோதரி" என உளம் பொங்க வரவேற்றுக் கொள்கிறேன்.

இந்த இடத்தில் இப்பாடசாலை போதிய வசதிகளோடு சிறப்பாக நடைபெறுவதற்கு இக்கட்டிட உரிமையாளர்களாகிய ஆரம்ப நீதிமன்ற உத்தியோகத்தர்கள் பேருதவி புரிந்துள்ளனர். நீதிபதி கு.ஜெயராஜதேவன் அவர்கள் எமக்கு வேண்டிய நேரத்தில் போதிய ஆலோசனைகள் வழங்குவதுடன் எமக்கு உதவியாகவும் இருந்து வருகிறார். இத்தகைய மனம் எல்லோருக்கும் அமைவதில்லை. அவர் இங்கு சிறப்பு விருந்தினராய் வருகை தந்திருப்பது எமக்கு மிகுந்த மனநிறைவைத் தருகிறது. அவரை "வாருங்கள் ஐயா" என மனம் நிறைய வரவேற்கிறோம்.

எம்மைச் சூழ உள்ள அற நெஞ்சங்கள் பல தொடர்ந்து எமக்கு உதவ முன்வருகின்றன. அவர்களில் ஒருவர்தான் சுன்னாகம் ராஜா மருந்தக உரிமையாளர் திரு. எஸ். தம்பிராஜா அவர்கள். அவர் சென்ற வருடம் எமது இல்ல மெய்வல்லுநர் போட்டிக்குத் தேவைப்பட்ட பரிசுப் பொருட்களை நல் இதயத்துடன் அன்பளிப்புச் செய்தார். அவரும் இங்கு சிறப்பு விருந்தினராக வந்திருப்பது எமக்கு உற்சாகமூட்டுகிறது.

இன்றைய பரிசளிப்புக்குத் தேவையான பொருள்களில் ஒரு பகுதியை எங்கள் பழைய மாணவர் சங்க உபதலைவரும் தெல்லிப்பழைக் கோட்ட நிதி உதவியாளருமாகிய திரு. சு. வெற்றிவேலாயுதம் அவர்களும் சுன்னாகம் சக்தி மருந்தக உரிமையாளர் திரு. எஸ். அருணகிரிநாதன் அவர்களும் மனம் நிறைந்து அன்பளிப்புச் செய்துள்ளனர். அவர்களையும் நாங்கள் நன்றியுடன் வரவேற்றுக் கொள்கிறோம்.

எம்முடன் சேர்ந்து இயங்குகிற வறுத்தலை விளான் அ.மி.த.க பாடசாலை அதிபர் ஆசிரியர்களையும் எமது பழைய மாணவர் சங்க மத்திய குழு உறுப்பினர்களையும் தமது பிள்ளைகள் பரிசு பெறுவதைப் பார்த்து மகிழ வந்த பெற்றோரையும் பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் அவர்களையும் முன்னாள் அதிபர்களையும் நலன் விரும்பிகளையும் எமது ஆசிரியர் மாணவர் அனைவரையும் வாழ்த்தி வரவேற்பதில் நான் பூரிப்படைகிறேன்.

**பாடசாலையின் ஆரம்பகாலம்**

புன்னாலைக் கட்டுவனில் இருந்து வந்து தெல்லிப்பழையில் செந்தண்மையோடு வாழ்ந்த அந்தணகுல திலகரும் அறிவாற்றல் மிக்கவரும் ஆசார சீலருமாகிய பிரம்மஸ்ரீ க.சுந்தரமூர்த்தி ஐயர் அவர்கள் தமது உதார குணத்தினால் இவ் வித்தியாலத்தை 1900ம் ஆண்டில் ஆரம்பித்துப் பல பெரியவர்களின் ஆதரவுடன் தமது இல்லத்தில் நடத்தி வந்தார்.

ஐயர் அவர்கள் சிவபதம் அடைந்த பின் அவர்களது சுவீகார புத்திரராகிய பிரம்மஸ்ரீ அ. தியாகராசையர் அவர்கள் தாம் இவ்வித்தியாலத்தில் ஓர் ஆசிரியராகக் கடமையாற்றிய படியாலும் பொருளாதாரக் கஷ்டம் இருந்தபடியாலும் இவ்வித்தியாலத்தைக் கொண்டு நடத்த முடியாமல் இடர்ப்பட்டார். அக்காலத்தில் இவ் வித்தியாலத்தின் பொறுப்புக்களை ஏற்று ஐயர் அவர்களது நோக்கத்தைப் பாதுகாத்தவர் மகாஜனக் கல்லூரியின் ஸ்தாபகரும் கல்வி அறிவு, ஒழுக்கங்களில் சிறந்தவருமாகிய தெ. அ. துரையப்பா பிள்ளை அவர்கள். இவரே தெல்லிப்

பழையில் இப்பாடசாலை இடப்பெயர்வுவரை இருந்த இடத்திற்கு இதனைக் கொணர்ந் தார். அவர்களும் அவருக்குப் பின் மகாஜனாவின் சிற்பி தெ. து. ஜெயரத்தினம் அவர்களும் இப்பாடசாலையின் முகாமைக் காரராக விளங்கிப் பாடசாலையை வளர்த்தனர். இப்பாடசாலை அதிபர்களில் மிக நீண்ட காலம் சிறப்பாகப் பணியாற்றிய அதிபராகத் திரு. செ.சிவசுப்பிரமணியம் அவர்கள் இருந்தார். அவர் 1952-1971 வரை இங்கு அதிபராக இருந்த காலத்தில் மாணவர் தொகை 400 வரையில் இருந்துள்ளது. 1960 இல் இப்பாடசாலை வச்சிர விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடி ஒரு மலரையும் வெளி யிட்டிருந்தது.

**இடம்பெயர்ந்த பாடசாலைகளின் இடர்**

1992ம் ஆண்டில் போர் அனர்த் தத்தின் விளைவாக வலி வடக்கில் இருந்து பல பாடசாலைகள் இடம்பெயர வேண்டிய தாயிற்று. பாடசாலைகள் இடம் பெயர்ந்தது மட்டுமன்றி, அந்தப் பாடசாலைகளில் கற்பித்த ஆசிரியர்களும் மாணவர்களும் தத்தமது சொந்து வீடுகளை விட்டு வெளி யேறினர். இவ்வாறு இடம்பெயர்ந்த எமது பாடசாலையும் பல இடர்கள் மத்தியில் யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியால யத்தில் இயங்க வேண்டி வந்தது. 1994ம் ஆண்டு மூன்றாம் தவணை முதல் எமது புதிய வாழ்வை இந்த இடத்தில் ஆரம்பித்தோம். 23.01.95 முதல் முன்னைய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த.துரைசிங்கம் அவர்களின் பணிப்பின் பேரில் வறுத்தலைவிளான் அ.மி.த.க பாடசாலையும் எங்களுடன் சேர்ந்து இயங்குகிறது.

இடம் பெயர்ந்து உணவு, உடை, உறைவிடம், அன்பு, பாதுகாப்பு போன்ற அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப் படாத நிலையில் பல பிரச்சினைகளுக்கு மத்தியில் பாடசாலைக்கு வரும் மாணவரிடத்தில் கவலை, பயம், அங்கலாய்ப்பு, குழப்பம், சோர்வு, அஞ்சி ஒதுங்கும் சுபாவம், கலகலப்பற்ற தன்மை, சகமாணவர் ஆசிரியர் ஆகியோருடன் உறவுகளில் குறைபாடுகள் போன்ற பல உணர்ச்சிப் பிரச்சினைகள் இருக்கும் என்று உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

அவர்கள் அடைந்த அறிவாற்றல், கல்வி, பேச்சுத்திறன்களில் பின்னடைவு, கற்றல் இடர்பாடுகள், சிந்திக்கும் தன்மையில் அமுக்கம், மறதி, கருத்தூன்ற முடியாமை, ஞாபக சக்தியும் கிரகிக்கும் தன்மையும் குறைதல் போன்ற பாதிப்புக் களை எமது பாடசாலை மாணவர்களிடமும் அவதானிக்க முடிகிறது. இப்பிரச்சினை களுக்கு இடையில்தான் இங்கு கற்றல் கற்பித்தல் நடைபெறுகிறது. இங்கு உள்ள பாடசாலைகள் தமது பெறுமதி மிக்க ஆவணங்களைப் பாதுகாப்பான இடத் திற்குக் கொண்டுசெல்லுமாறு அண்மை யிலும் எமக்கு ஆலோசனை வழங்கப் பட்டது. இப்போது எமது பாடசாலை மாணவரின் குடும்பங்கள் பல இப் பிரதேசத்தை விட்டு அச்சம் காரணமாக இடம் பெயர்ந்துள்ளன. ஆயினும் நாம் வேறு ஒரு பொருத்தமான இடம் தேடுவதில் உள்ள கடினத்தன்மை காரணமாகத் தொடர்ந்தும் இங்கேயே இயங்கி வருகிறோம்.

இப்புதிய இடத்திற்கு வந்த பின்னர் திணைக்களத்தின் உதவியினால் மூன்று வகுப்பறை கொள்ளக்கூடிய ஒரு தற் காலிகக் கொட்டகை அமைத்துள்ளோம். இந்தத் திறந்த மண்டபம் மழை பெய்யும்போது மூன்று பக்கத்திலுமிருந்து தூவானத்தையும் வெயில் காலத்தில் பக்க

வெயிலையும் பெறும். அதற்காகக் கிழக்குப் புறத்தில் எமது சொந்தச் செலவில் ஒரு கிடுகுத் தட்டி மறைப்பு அமைத்துள்ளோம். உதவி அரச அதிபர் அலுவலகத்தின் உதவியுடன் மலசல கூடத்தைத் துப்புரவு செய்து ஆசிரியர் மாணவர் பாவனைக்கு ஏற்றதாக்கியுள்ளோம்.

இன்னும் எமது பாடசாலையின் பொருள்கள் பாதுகாப்பிற்காக இந்த வளாகத்தைச் சுற்றி அவசரமாக ஒரு வேலி அமைக்க வேண்டி உள்ளது. கிழக்குப்புற வேலி மட்டும் எமது சொந்தச் செலவில் செய்து முடித்தோம். மற்றைய மூன்று பக்க வேலிகளும் அமைக்கப்பட வேண்டி உள்ளன. கிணறு ஒன்று இருந்தபோதிலும் அதனைப் பாவிப்பதற்கு முன்னர் இறைத்துச் சுத்திகரித்துக் குளோரின் இட்டுக் கப்பி போடவேண்டி உள்ளது. இப்போது எமது மாணவர் அயல் வீட்டுக் கிணற்றையே நீருக்காக நம்பி உள்ளனர். மாணவர் விளையாட்டு நிகழ்வுகளில் பங்கு பெறுவதற்காக ஒரு விளையாட்டு மைதானம் ஆயத்தம் செய்யப்பட வேண்டும். இவ்வருடம் எமது இல்ல மெய்வல்லுநர் போட்டியை அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் நடத்தினோம்.. தளபாடங்கள் எமக்குப் போதிய அளவு இருந்தபோதிலும் வறுத்தலை விளான் அ.மி.த.க பாடசாலை எம்மோடு இணைந்து இயங்கத் தொடங்கிய பிறகு அவர்களது மாணவர்களும் எமது தளபாடங்களையே பாவிப்பதால் தளபாடப் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. வேலி, கிணறு, தளபாடம், விளையாட்டு மைதானம் ஆகிய தேவைகளை நிறைவேற்றப் பெருமளவு நிதி தேவைப்படுகிறது. பழைய மாணவர் சங்கம் எமக்கு உதவ ஆயத்தமாகிறது. திணைக்களத்தின் மூலம் மற்றொரு தங்காலிகக் கொட்டகை இவ்வருடம் கிடைக்க இருக்கிறது. எமது கரும்பலகைத் தேவைகளையும் கணித விஞ்ஞான பாட உபகரணத் தேவைகளையும் வருட ஆரம்பத்தில் திணைக்களம் நிறைவேற்றித் தந்துள்ளது. நீண்ட காலமாக ஒரு வர்த்தக ஆசிரியர் இல்லாதிருந்த குறையைப் போக்கப் (திரு. ம.முரளீதரன் அவர்களைக் கழக ஆசிரியராக நியமனம் செய்துதர) பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளார். அனைத்துக்குமாக அவருக்கும், வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களுக்கும் திணைக் களத்திற்கும் நாம் நன்றி உடையோம்.

**கல்விச் சமநிலை**

போர்ச் சூழலில் பாடசாலைகள் பல இடம் பெயர்ந்துள்ள நிலை ஏற்படும்போது மாணவர்கள் பெரிய கல்லூரிகளுக்குப் போக விரும்புகிறார்கள். இதனால் சிறிய பாடசாலைகள் பல மூடப்பட்டுவிட்டன. இன்னும் பல சிறிய பாடசாலைகள் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றன. ஒரு பாடசாலையை மூடுவது மிக இலகுவானது. ஆனால் மீண்டும் அப்படி ஒரு நிறுவனத்தை உருவாக்குவது மிகக் கடினமானது. ஆகவே கல்வி உயர் அதிகாரிகள் இது பற்றிச் சிந்திக்க வேண்டும். பெரிய கல்லூரிகளில் மாணவர் எண்ணிக்கை அளவின்றிப் பெருகுவதைக் கட்டுப்படுத்திச் சிறிய பாடசாலைகள் வளர உதவுவதே சமுதாயத்தில் ஒரு கல்விச் சமநிலை தோன்ற வழிவகுக்கும் என நாம் நம்புகிறோம்.

**இடமாற்றம் பெற்ற ஆசிரியர்**

இவ்வருட ஆரம்பத்தில் எங்கள் தமிழ் ஆசிரியை திருமதி. ம.மகேஸ்வரன் அவர்கள் கட்டுவன்புலம் ம.விக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இவர் பல வருடங்கள் இப்பாடசாலையில் நல்ல தமிழ்ப்பாட ஆசிரியராகப் பணி புரிந்தவர். இவரது காலத்தில் எமது மாணவர்கள்

க.பொ.த சா/த இல் தமிழ், சமயம் ஆகிய பாடங்களில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றிருந்தனர். ஆயினும் மாணவர் தொகை குறைந்த நிலையில் இவரது இடமாற்றத்தை எம்மால் தடுக்க முடியாது போயிற்று.

**புதிய ஆசிரியர்கள்**

இவ்வருட ஆரம்பத்தில் சங்கீத ஆசிரியை திருமதி. ந.செல்வராணி வவுனியாவில் இருந்து இடமாற்றம் பெற்று இங்கு வந்துள்ளார். இவர் சங்கீதப் போட்டிகளில் எமது மாணவர்களை உற்சாகத்துடன் பங்குபற்றச் செய்து வருகிறார். பகுதிநேர ஆங்கில ஆசிரியராக திரு. எஸ். அருளானந்தசிவம் அவர்கள் இவ்வருட ஆரம்பத்தில் இங்கு இடமாற்றம் பெற்று வந்தார். துர்க்கா தேவஸ்தானத்தின் பணிகளுடன் நெருங்கிய தொடர்புடைய இவர் எமது பாடசாலையின் மாணவர் ஒழுக்கத்துக்கான பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளார். இந்த இரு ஆசிரியர் களையும் நாம் அன்புடன் வரவேற்றுக் கொள்கிறோம்.

**கல்வித்துறை**

இப்போது இப்பாடசாலையில் உள்ள மாணவர் எண்ணிக்கை 106. கடந்த ஓரிரு ஆண்டுகளில் இப்பாடசாலை வேறு பாடசாலைகளுடன் சேர்ந்து இயங்க நேர்ந்ததால், புதிய மாணவர்களை அனுமதிக்க முடியாத நிலை இருந்தது. பாடசாலை அமைந்துள்ள இடம் இராணுவ எல்லையை அண்மித்திருப்பதாலும், இந்தப் பிரதேசத்தில் இடம் பெயர்ந்த இன்னும் பல பாடசாலைகள் அருகருகே இயங்குவதாலும் மாணவர் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிக்கும் வாய்ப்பு இல்லாதிருக்கிறது.

இப்போதுள்ள கற்பிக்கும் திறனுள்ள ஆசிரியர் தொகை ஒன்பது. பதினொரு வகுப்புகள் இருப்பதாலும் தமிழ், வாழ்க்கைத்திறன், சுகாதாரம், வர்த்தகம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் இல்லாததாலும் நாலு தொண்டர் ஆசிரியர்கள் பணி புரிகிறார்கள்.

**பொதுப் பரீட்சைகள்**

பாடசாலை இடம் பெயர்ந்த நிலையில் இங்கு படித்த விவேகம் கூடிய மாணவர் பலரும் பெரிய கல்லூரிகளை நோக்கித் தற்காலிகமாக இடம் மாறி விட்டனர். 1994ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சா/த பரீட்சையில் செல்வி. அ.யசோதா க.பொ.த உ/த கற்பதற்குக் தகுதி பெற்று யூனியன் கல்லூரிக்குச் சென்றுள்ளார்.

1994 இல் நடைபெற்ற இடைநிலைக் கல்வித் தேர்வுக்குத் தோற்றிய எட்டு மாணவர்களில் ஒருவர் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி அடைந்தார். முதனிலைத் தேர்வுக்குத் தோற்றிய பதினொரு மாணவர்களில் க.தர்சினி ஐந்து பாடங்களில் 366 புள்ளிகளைப் பெற்றமை சிறப்பாகக் குறிப்பிடக் கூடியதாகும். இன்னொரு மாணவி 315 புள்ளிகளையும் மற்றொருவர் 298 புள்ளிகளையும் பெற்றுச் சிறப்பான சித்தி பெற்றனர்.

**சமயத்துறை**

வாரந்தோறும் வெள்ளிக் கிழமை களில் கூட்டுப் பிரார்த்தனைகளும் திங்கள், புதன் கிழமைகளில் நற்சிந்தனைகளும் நடைபெறுகின்றன. சமய விழாக்கள் அனைத்தும் குறிப்பாக நவராத்திரி விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. நவ ராத்திரிக் காலங்களில் எமது மாணவர்கள் மிகுந்த பக்தி சிரத்தையுடன் வழிபாடுகளை ஆற்றுவர். சென்ற வருட விஜயதசமி விழாவினைக் கலைநிகழ்வுகளுடன் நாம்

வெகு சிறப்பாக இம்மண்டபத்தில் கொண்டாடினோம். இவ்வருடம் சம்பந்தர் குருபூஜையைச் சிறப்பாகச் செய்து மாணவர் அனைவருக்கும் அன்னதானம் செய்தோம். இந்தக் குருபூஜை உபயத்தை எங்கள் பழைய மாணவியும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரை யாளருமாகிய திருமதி. கலா பொன்னம் பலம் அவர்கள் ஏற்றிருந்தார். அவருக்கு எமது நன்றி. சைவ பரிபாலன சபைப் பரீட்சைக்கு வருடந்தோறும் எமது மாணவர்கள் தோற்றுகிறார்கள். சென்ற வருடம் (1994) நடந்த பரீட்சையில் பலர் "A" தரத்தில் சித்தி பெற்றுள்ளனர. "A" தரத்தில் சித்தி பெற்றோருக்கு இன்று பரிசு வழங்கி ஊக்குவிக்கிறோம். சமயத் துறைக்குப் பொறுப்பாக எமது ஆசிரியை செல்வி. மோ.பரமபதி அவர்கள் அமைந்து வெகு சிறப்பாகத் தொழிற்படுகிறார்.

**விளையாட்டு**

எமக்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லாதபோதும் விளையாட்டுத் துறையில் எம் பாடசாலை மாணவர்கள் அதிக சிரத்தையுடன் ஈடுபடுகின்றனர். சென்ற வருடம் நடைபெற்ற கிளித்தட்டுச் சுற்றுப்போட்டியில் எங்கள் பெண்கள் குழு ஒன்று அரை இறுதிப் போட்டிவரை சென்றது. இவ்வாண்டு நடைபெற்ற 13 வயதுக்குட்பட்டோருக்கான கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் எங்கள் மாணவன் அ.இலங்கேஸ்வரன் 200 மீற்றர் ஓட்டத்தில் பரிசு பெற்றார். விளையாட்டு நிகழ்வுகளுக்குப் பொறுப்பாகத் திருமதி. க.தவக்குமார் மிகச் சிறப்பாகத் தொழிற் படுகிறார்.

**இணைபாடவிதானச் செயற்பாடுகள்**

பாடசாலை மட்டத்தில் மாணவர் களின் இணைப்பாடவிதானச் செயற்பாடு களை வெளிக்கொணரும் நோக்கத்துடன் பல முயற்சிகளை மேற்கொண்டோம். இவ்வருடம் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் பெரிய கல்லூரிகளுடன் போட்டி யிட்டு நாங்கள் மூன்று முதலிடங்களையும் மூன்று இரண்டாமிடங்களையும் பெற்றுக் கொண்டதை நான் இங்கு விசேடமாகக் குறிப்பிடவேண்டும். முக்கியமாகச் சிறுவர் நாடகப் பிரிவு 2 இல் கோட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றது எமக்குப் பெரு வெற்றியாகும். மாவட்ட மட்டத்திலும் நாங்கள் முதலிடத்தைப் பெறப்போகிறோம் என்று பயந்த சிலர் எமது நாடகத்தில் நடித்த மாணவர்களின் எண்ணிக்கை தவறானது எனச் சுட்டிப் போட்டிப் பொறுப் பாளருக்குக் கடிதங்கள் எழுதியுள்ளனர். இது பார்வையாளரின் தீர்ப்பைத் தெளிவாகக் காட்டுகிறது. ஆனால் நடித்த மாணவர் எண்ணிக்கையில் தவறு இல்லை எனப் போட்டிப் பொறுப்பாளர் தெரிவித் துள்ளார். ஆகவே நாங்கள் கணிசமான கவனத்தை ஈர்த்துள்ளோம். அதுவே மாவட்டத்திலும் எமது வெற்றியாகும். எனது உதவியுடன் நாடகத்தைத் திறம்பட நெறி யாள்கை செய்த எங்கள் தொண்டர் ஆசிரி யர்கள் செல்விகள் க.வசந்தா, இ.காயத்திரி ஆகியோரை இச்சந்தர்ப்பத்தில் நான் பாராட்ட விரும்புகிறேன். நாடக மேடை யேற்றத்தில் உதவிய ஏனைய ஆசிரியர் களுக்கும் எமது நன்றி.

இதனைவிடச் செல்வி. க.தர்சினி - வாசிப்பு பிரிவு 2 இல் முதலிடம் பெற்றார். செல்வி. க.தனுஷா தனி அபிநயப் பாடல் பிரிவு 1இல் முதலிடம் பெற்றார். திருக்குறள் மனனம் பிரிவு 1 இல் க.சுபாங்கி இரண்டாம் இடம் பெற்றார். கிராமிய இசைக்குழு பிரிவு 2 உம் இரண்டாம் இடம் பெற்றது. க.அருள்ஜினி ஆக்க இசையில் 2ம் இடம் பெற்றார். இவர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

ஆங்கில தினப் போட்டிகளில் பங்கு பெற எமது மாணவர்கள் தயாராகி வருகிறார்கள்.

**ஆசிரியர் கழகம்**

ஆசிரியர் நலன்களில் அக்கறை கொண்டு சேவையாற்றுவதற்காக ஆசிரியர் கழகத்தைச் சென்ற ஆண்டு புனர் அமைப்புச் செய்துள்ளோம். இக்கழகம் ஆசிரியர் சுக துக்கங்களில் பங்கு கொள்கிறது. இடம் மாறிச் சென்ற எங்கள் ஆசிரியர்கள் செல்வி. மு.புவனேஸ்வரி, திருமதி. பு. பாலசுப்பிரமணியம், திருமதி. ம.மகேஸ்வரன் ஆகியோருக்கு நல்ல முறையில் பிரியாவிடைகள் நடத்தியது. இடைவேளை நேரத்தில் ஆசிரியர்களுக்குத் தேநீர் வழங்கும் ஒழுங்கையும் இவ்வருடம் செய்துள்ளது. இதன் தலைவராகத் திருமதி. ப.சரவணபவன் அவர்களும் செய லாளராகத் திருமதி. கே.சறோஜினிதேவி அவர்களும் பொருளாளராகத் திரு. த. தயாளீஸ்வரன் அவர்களும் நல்ல முறையில் செயற்படுகின்றனர்.

**பழைய மாணவர் சங்கம்**

சென்ற ஆண்டு வரை இப்பாடசாலை ஒரு முறையான பழைய மாணவர் அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் பலர் மிக நல்ல குடும்பங்களில் இருந்து வந்தவர்கள். இன்று மிக உயர்ந்த நிலைகளில் இருக்கிறார்கள். இவர்களை நிறுவனமயப்படுத்தின் அவர்களால் பாடசாலைக்குப் பேருதவி கிடைக்கும் என்பதைக் கருத்திற் கொண்டு முதலில் ஒரு தற்காலிக மத்திய குழுவை அமைத்து அதன் மூலம் ஓரளவு அங்கத்தினரைச் சேர்த்துக்கொண்டு 1994 டிசம்பரில் ஒழுங்கான பொதுக்கூட்டம் ஒன்றைக் கூட்டி நிர்வாக சபை ஒன்றைத் தெரிவு செய்தோம். இச்சபை அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு ஒன்றின் மூலம் ஒரு தொகைப் பணத்தைத் திரட்டி நிரந்தர வைப்பில் இட மும்முரமாக உழைத்து வருகிறது. இதன் மூலம் கிடைக்கும் வட்டிப் பணத்தில் எமது காவலாளிக்குரிய வேதனத்தையும் தொண்டர் ஆசிரியருக் கான அன்பளிப்புகளையும் வழங்கலாம் என்பது அவர்களின் திட்டமாகும். இச் சீட்டிழுப்பின் முதற்பரிசினைத் தந்து உதவத் தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானம் பெரு மனதுடன் ஒத்துக் கொண்டிருக்கிறது. அதன் தலைவி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு நாங்கள் ஆழ்ந்த நன்றிக்கடன் உடையோம். ஏனைய பரிசுகளை எமது பழைய மாணவர் வி.நாராயணசர்மா, தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், பழைய மாணவர் என். சிவபாலகணேசன் ஆகியோர் தந்துதவ முன்வந்துள்ளனர். இவர்கள் அனை வருக்கும் நாம் கடப்பாடு உடையோம். பழைய மாணவர் சங்க நிர்வாக சபை மாதந்தோறும் கூடுகிறது. இதன் இணைச் செயலாளராகத் திருமதி. க.தவக்குமார், திரு. என்.சிவலிங்கம் ஆகியோரும் பொருளாளராகத் திருமதி. ப.சரவணபவன் அவர்களும் சிறப்பாகத் தொழிற்படு கின்றனர்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி உப அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன் அதே கல்லூரி விரிவுரையாளரும் எமது பழைய மாணவியுமான செல்வி. ப. நாகரத்தினம், தேசிய சேமிப்பு வங்கிப் பிராந்திய முகாமையாளர் திரு. ந.சிவபாலகணேசன் ஆகியோர் மாதந்தோறும் பழைய மாணவர் சங்கத்தினூடாகத் தொண்டர் ஆசிரியர் களுக்கான அன்பளிப்பை வழங்குகின்றனர். அவர்களுக்கு எமது ஆழ்ந்த நன்றி உரியது.

**பாடசாலை அபிவிருத்திச் சபை**

கல்வி அமைச்சின் புதிய அறிவிப்புக்கு அமையப் பாடசாலை அபிவிருத்திச் சபை கலைக்கப்பட்டு மீண்டும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அமைக்கப்பட வேண்டும். இப்போதைய சபையின் செயலாளராகப் பிரம்மஸ்ரீ கு.செந்தில்நாத சர்மா அவர்களும் பொருளாளராகத் திருமதி. இ.ஜே.எஸ்.ஆர். இராஜகுணநாயகம் அவர்களும் சிறப்பாகத் தொழிற்படுகின்றனர். ஆயினும் பெற்றார் அனைவரும் மிக விரைவில் கூடி இதனைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கமாக மீண்டும் புனரமைப்புச் செய்ய இருக்கின்றனர்.

**பாடசாலை நூலகம்**

“வாசிப்பவனே பூரண மனிதனாகிறான்” என்ற வாக்கியத்தை மனதில் கொண்டு இவ்வருட ஆரம்பம் முதல் ஏறத்தாழ 50 நூல்களைக் கொண்ட ஒரு சிறு நூலகத்தை ஆரம்பித்துள்ளோம். மாணவர்கள் தமது ஓய்வு நேரங்களில் மிக ஆர்வத்துடன் இந்த நூல்களைக் கேட்டு வாங்கி வாசிக்கிறார்கள். பெற்றார், பழைய மாணவரிடமிருந்து இந்த நூலகத்திற்கு அன்பளிப்பு நூல்களை எதிர்பார்க்கிறோம்.

**மாணவரின் கற்றலுக்கான ஊக்கிகள்**

பொருளாதார வளம் குறைந்த குடும்பங்களில் இருந்து வரும் மாணவரிடையே கற்றலுக்கான ஊக்கம் குறைவாக இருப்பதால் அவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வராதிருப்பதை அவதானித்தோம். அவர்கள் வரவை ஒழுங்குபடுத்துவதற்காக அவ்வப்போது பாடசாலையில் உணவு, உடை, சவர்க்காரம், பென்சில், கொப்பி போன்ற பொருள்களை இலவசமாக வழங்குகிறோம். இவற்றைச் சமுதாயத்தில் உள்ள நல்ல மனம் படைத்த நிறுவனங்களில் இருந்தும் தனியாரிடமிருந்தும் பெற்றுக் கொள்கிறோம். அண்ணா கோப்பித் தொழிலதிபர் திரு. நடராஜா, புத்தூர் தொலைக் கல்வி நிலையத்தின் சிரேஷ்ட போதனாசிரியர் திருமதி. தே.துரைராஜா ஆகியோர் இது தொடர்பாகக் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். இதன் மூலம் மாணவர் வரவை ஓரளவு ஒழுங்கு படுத்தியுள்ளோம்.

**பாடசாலை நிர்வாகமும் நன்றியுரையும்**

இப்பாடசாலையில் பிரச்சினைகள் எதுவுமின்றி நல்ல முறையில் என்னால் நிர்வாகம் செய்யக் கூடியதாக இருப்பது எனக்கு மன நிறைவைத் தருகிறது. நான் செய்ய விரும்புகிற எந்த ஒரு விடயத்திலும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பு எனக்குப் பூரணமாகக் கிடைப்பது நான் செய்த புண்ணியம் என்றே கருதுகிறேன். இச் சந்தர்ப்பத்தில் நான் அவர்களுக்கு நன்றி சொல்லாவிடின் நானே பண்பற்றவள் ஆவேன். உப அதிபர் திரு. பா. சந்திரசேகரன் தொடக்கம் தொண்டர் ஆசிரியர் திரு. ம. முரளீதரன் வரை அனைத்து ஆசிரியர்களும் இன்று இவ்விழாச் சிறக்கத் தமக்குத் தரப்பட்ட பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி முடித்துள்ளனர்.

சிரேஷ்ட கணித ஆசிரியை திருமதி. ப.சரவணபவன் நிர்வாக விடயத்திலும் அலுவலக முகாமைத்துவத்திலும் எனக்குப் பேருதவியாக இருந்து வருகிறார். தொண்டர் ஆசிரியர்கள் திரு. ம.முரளீதரன். செல்விகள் க.வசந்தா, இ.காயத்திரி, க.தயாரஞ்சிதம் ஆகியோர் எதுவித பிரதிபலனும் எதிர்பாராது இப்பாடசாலைக்குச் செய்யும் சேவையை நான் மனதாரப் பாராட்டி அவர்களின் வாழ்வு சிறக்கும் என இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்த விரும்புகிறேன்.

கோட்டத்தில் எங்கள் பழைய மாணவர் திரு. சு.வெற்றிவேலாயுதம்

அவர்களும் திரு. க.தர்மேசன் அவர்களும் இருப்பது இப்பாடசாலையின் நிர்வாகத்தை எனக்குப் பல வழிகளில் இலகுவாக்கித் தருகிறது என்பதை நான் சுட்டியே ஆகவேண்டும். அது மறைக்க முடியாத உண்மை. அவர்களுக்கு நன்றி கூறுவது என் கடனாகும்.

எங்களுடன் சேர்ந்து இயங்குகிற வறுத்தலை விளான் அ.மி.த.க பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் எம்மோடு முடிந்தவரை ஒத்துழைக்கிறார்கள். நீர் எடுக்கும் எவர்சில்வர் குவளை ஒன்றை இன்று அவர்கள் எமக்கு அன்பளிப்புச் செய்துள்ளனர்.

எமது மாணவர்கள் வசதி குறைந்த குடும்பங்களில் இருந்து வருகிறார்கள். ஆயினும் பண்பு நிறைந்தவர்கள். அவர்களிடம் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர நாம் எம்மால் முடிந்தவரை முயலுவோம் என்று கூறி, பெற்றார், பழைய மாணவர், மாணவர் அனைவருக்கும் என் வாழ்த்துக்களையும் நன்றியையும் வணக்கத்தையும் சொல்லி அமைகின்றேன்.

வணக்கம்.

* * *

## சோலைக்குயில் அவைக்காற்றுக் களம்

**வடமா/ கஅ/பண்/2019/52**

**தொலைநோக்கு :**

மக்கள் தமது வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்களையும் கஷ்டம் தரும் உணர்வு களையும் மானுட முன்னேற்றத்துக்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்த உதவுதல்.

**பணிக்கூற்று :**

**உதவி தேவையானோருக்கு**

1. கற்பிப்பதன் மூலமும்
2. கலை, கலாசார, ஆன்மிக அனுபவங்களைக் கொடுப்பதன் மூலமும்
3. சுய விழிப்புணர்வைப் பெற வழிகாட்டுவதன் மூலமும்
4. பிரச்சினைகளின் குவியத்தை இனம் காணச் செய்வதன் மூலமும்
5. வெற்றிகரமான வாழ்வுக்கு இட்டுச் செல்வதன் மூலமும்
6. உளவளத் துணைச் செயற்பாடுகளின் மூலமும்

அவர்களை ஊக்கப்படுத்தி ஆறுதலாயிருத்தல்.

## நிகழ்த்தப்பட்ட விரிவுரைகள் (முன்னர் வராதவை)

21.08.94 யாழ் பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகு - பாத்திரமேற்று நடித்தல்
28.08.94 யாழ் பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகு - மாணவர் உளவளத்துணை
19.09.94 யாழ் பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகு - வலுவூட்டல்
15.03.97 சாந்திகம் உளவளத்துணையாளர் பயிற்சி - 'அமர்வுகள்'
22.03.97 சாந்திகம் உளவளத்துணையாளர் பயிற்சி - 'ஒத்துணர்வு'
29.03.97 சாந்திகம் உளவளத்துணையாளர் பயிற்சி - 'கார்ல் றொஜெர்ஸ் கொள்கை'
05.04.97 சாந்திகம் உளவளத்துணையாளர் பயிற்சி - 'இலக்கு நிர்ணயம்'
28.06.98 } கிராம அபிவிருத்திச் சங்க, மாதர் அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி -
15.08.98 } 'பொதுசனத் தொடர்பும் கிராம மட்டத்தில் தொடர்பு சாதனங்களின் முக்கியத்துவமும் - சங்கானைப் பிரதேச செயலகம்
13.07.99 UNFPA Seminar on reproductive health - 'Setting goals', 'Action plan'
15.08.99 தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்தும் இலங்கை அதிபர் சேவை ஆட்சேர்ப்புப் பரீட்சைக் கருத்தரங்கு - இந்துக் கல்லூரி - 'முன்பள்ளிப் பருவ வளர்ச்சி'
11.09.99 சங்கானைக் கோட்டம் - Forut அனுசரணை - சுகநலக் கருத்தரங்கு - 'அக அமைதி', 'உளநலம் என்றால் என்ன?'
18.09.99 மேற்படி கருத்தரங்கு - "உளப் பிரச்சினை உள்ள மாணவர்களைக் கையாளுதல்"
24.09.99 வலி கிழக்குப் பிரதேச செயலகம் - திருநெல்வேலி விவசாயப் பண்ணை - 'ஆரோக்கியமான சமூகம் ஒன்றின் உருவாக்கத்தில் மகளிர் கல்வியின் அவசியம்'
26.09.99 மேற்படி கருத்தரங்கு - 'சமூகப் பிரச்சினைகளும் மகளிர் பங்களிப்பும்'
28.12.99 சங்கானை பிரதேச செயலகம் - INS அனுசரணை - 'சமூக அபிவிருத்திக்கான கல்வி'
11.04.00 மாணவர் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி -வலிகாமம் - இராமநாதன் கல்லூரி "மனித உறவுகளை விருத்தி செய்தல்"
21.10.00 }
22.10.00 } Palaly Teacher's-College--"Work-on-lesson-planning-&-presentation.
19.11.00 வலி மேற்குப் பிரதேச செயலகம் - கிராமமட்டத் தலைமைத்துவப் பயிற்சி "கிராம மட்டத்தில் தொடர்பு சாதனங்களின் முக்கியத்துவம்"
17.12.00 வலி தெற்குச் சனசமூக நிலையங்களின் சமாசம் - சமூக அபிவிருத்திக் கருத்தரங்கு - யூனியன் கல்லூரி - மருதனார் மடம் - "இளைஞர் பிரச்சினையும் அவற்றைத் தீர்க்கும் முறைகளும்" "தொடர்பாடல்"
27.12.00 }
31.12.00 } SLEAS போட்டிப்பரீட்சைக் கருத்தரங்கு - நெல்லியடி மகளிர் கல்லூரி
28.12.00 சர்வோதயம் - முன்பள்ளி ஆசிரியர் கருத்தரங்கு -நெல்லியடி -"சிறுவர் உரிமைகள்"
27.01.01 சாந்திகம் -"கோப உணர்வும் அதனைக் கையாளும் உபாயங்களும்"
29.01.01 Work Shop with Medical faculty students -"handling handicapped children"
11.08.01 INS கருத்தரங்கு - சங்கானை பிரதேச செயலக மண்டபம் -"திட்டமிடல்"
17.09.01 }
18.09.01 } Medical Faculty - Orientation Programme -"Group activity", "Anger
20.09.01 } Management", "Love"
24.09.01 }

19.09.01 இணுவில் அரிமாக்கழகம் -மாணவர் தலைவருக்கான தலைமைத்துவப் பட்டறை - இணுவில் மத்திய கல்லூரி -"உளவியல் அழுத்தங்களை எதிர்கொள்ளும் வழிகள்"

13.01.02 இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் -கோப்பாய் - இதழியல் கற்கைநெறி - "பத்திரிகைகளில் மக்கள் பங்களிப்பு"

17.02.02 முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிநெறி - சிறுவர் பாதுகாப்பு நிதியம் -அச்சுவேலி - "உளவியல் அணுகுமுறை"

22.04.02 } 27.04.02 சங்கானைக் கோட்ட ஆசிரியர் பயிற்சி - INS அநுசரனை -"மெல்லக் கற்கும் மாணவர்"

26.05.02 } 28.05.02 முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி - வளவாளர் கைநூல் -அறிமுகப் பட்டறை

26.06.02 } 28.06.02 TOT training for divisional facilitators -GTZ- Jaffna William Havey building - "Communication", "Problem solving", "Conflict resolution"

03.12.15 கோண்டாவில் இந்து ம.வி- மாணவர் உளசமூக மேம்பாட்டுத்திட்டம் - சின்மயா மிஷன் அநுசரணை - "மாணவர் உளநலம்".

04.12.15 } 05.12.15 சின்மயாமிஷன் - வளவாளர் கலந்துரையாடல் - நிபுணத்துவ ஆலோசனை

22.12.15 வளர்பிறை -வளவாளர் கருத்தரங்கு -"முரண்பாடு தீர்த்தலும் சமாதானத்தைக் கட்டி எழுப்பலும்"

31.01.16 Sai school Teacher's Seminar -"A great teacher"

22.02.16 Unicef Seminar with Master trainers

29.02.16 Unicef Seminar with consultants

09.03.16 } 10.03.16 } 11.03.16 Unicef Seminar for TOTS - P.C.M.

19.03.16 வட இல. சங்கீத சபை - ஆசிரியர்தரம் - கருத்தரங்கு -சபை மண்டபம்-"ஆய்வு முறையியல்"

17.03.16 Presentation on PCM for UNICEF high officials.

20.03.16 வட இல. சங்கீத சபை- ஆசிரியர் தரம் - "நடிப்பு முறைகள்"

05.04.16 GTZ Meeting with Dr. Bloomer & Ministry -"Importance of psycho social work"

07.04.16 Seminar for Resources - PCM - Kaladdy office.

18.04.16 Unicef Seminar for ISAA and Counselors on punishment. "What is behavioour?" - Gnanam's hotel.

19.04.16 Unicef Seminar - ABC model for behaviour.

20.04.16 Unicef Seminar - Case study.

21.04.16 Unicef Seminar - Principal & teachers as a team.

22.04.16 Unicef Seminar - Behaviour modification.

11.06.16 } 12.06.16 வடமாகாண முன்பள்ளி -ஆசிரியர் கருத்தரங்கு JSR - சமூகமன எழுச்சி விருத்தி

14.06.16 சத்திய சாயி பாடசாலை -ஆசிரியர் கருத்தரங்கு -"மனித மேம்பாட்டைப் பாடக் குறிப்பில் சேர்த்தல்"

25.06.16 தென்மராட்சி வலயம் - மாணவர் பாராளுமன்ற உறுப்பினர் தலைமைத்துவப் பயிற்சி -"போதை, மது, சிகரெட் பாவனை"
05.07.16 யாழ் செயலகம் - பெண்கள் அமைப்பின் தலைவிகள் "விமர்சனங்களையும் சவால்களையும் எதிர்கொள்ளல்"
14.07.16 வடமராட்சி உளவளத்துணை ஆசிரியருக்கான FRC கருத்தரங்கு -"சுய ஆளுமை விருத்தி"
15.07.16 Valikamam -TOT Seminar Unicef -"Punishment"
16.07.16 Vadamaradchi TOT Seminar Unicef - "ABC Model for behaviour"
19.07.16 முல்லைத்தீவு - அமைதித் தென்றல் - உளவளத் துணையாளர் பயிற்சி - "பால்வினை நோய்கள்" "சிறுவர் துஷ்பிரயோகமும் தீர்வுகளும்"
26.07.16 காரைநகர் பிரதேச செயலகம் - சமுர்த்தி உத்தயோகத்தர் - "குடும்ப உளவளத் துணை" - "ஆளுமை விருத்தி"
04.08.16 } வடமராட்சி அதிபர் விழிப்புணர்வுக் கருத்தரங்கு -ரில்கோ -"மாணவரை
05.08.16 } வழிப்படுத்தலும் கையாளலும்"
06.08.16 } வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி - பட்டதாரி ஆசிரியர் முன்பயிற்சி
08.08.16 } - நேர் வகுப்பறை முகாமை
19.08.16 }
20.08.16 } Graduate teachers Preservice training -English teachers -Jaffna college - PCM
25.08.16 }
29.08.16 } YMCA Jaffna - Unicef TOT training - Secondary teachers - PCM
02.09.16 வடமாகாண அதிபர் கருத்தரங்கு -(1000 அதிபர்) -இந்துக்கல்லூரி - நேர் வகுப்பறை முகாமை
04.10.16 Women development centre - peace table - panelist -"Role of women in the process of reconciliation"
05.10.16 } அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை - நேர் வகுப்பறை முகாமைத்துவம்
13.10.16 } ஆசிரியர்
17.10.16 மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை -நேர் வகுப்பறை முகாமைத்துவம்
19.10.16 பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி -நேர் வகுப்பறை முகாமைத்துவம்
21.10.16 } சீர்மிய ஆசிரியர் கருத்தரங்கு -அநுசரணை -ஒத்துழைப்பு U.K -வடமாகாண
22.10.16 } அமைச்சு மண்டபம் (RIMP) "மது, போதை. துஷ்பிரயோகம்"
23.10.16 வேம்படி மகளிர் கல்லூரி - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
24.10.16 கொக்குவில் இந்து ஆரம்ப பாடசலை- நேர் வகுப்பறை முகாமைத்துவம்
30.10.16 FRC Seminar on Reproductive health and teenage pregnancy - Subas hotel
03.11.16 அருணோதயக் கல்லூரி -நேர் வகுப்பறை முகாமைத்துவம்
05.11.16 வேம்படி மகளிர் கல்லூரி -நேர் வகுப்பறை முகாமைத்துவம்
06.11.16 FRC Seminar on Reproductive health - Subas hotel
09.11.16 வட இந்து மகளிர் கல்லூரி - நேர் வகுப்பறை முகாமைத்துவம்
11.11.16 தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளி -தாவடி இ.த.க பாடசாலை - நாடகமும் பெற்றோர் கலந்துரையாடலும் - நேர் முகாமைத்துவம்
12.11.16 கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி -நேர் வகுப்பறை முகாமைத்துவம்

14.11.16 ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம் - நேர் வகுப்பறை முகாமைத்துவம்
19.11.16 இணுவில் மத்திய கல்லூரி - நேர் வகுப்பறை முகாமைத்துவம்
25.11.16 பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி -நேர் வகுப்பறை முகாமைத்துவம்
26.11.16 கிளிநொச்சி வலய அதிபர் கருத்தரங்கு - Friends inn - கனகபுரம் FRC
28.11.16 அளவெட்டி அருணோதயா - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
29.11.16 அத்தியார் இந்துக் கல்லூரி - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
03.12.16 FRC - Kilinochchi Principals Seminar - Friends inn - Kanagapuram
05.12.16 நவாலி சென் பீற்றர்ஸ் - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
13.12.16 அச்சுவேலி மத்திய கல்லூரி - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
19.12.16, 20.12.16, 21.12.16 FRC Seminar for counselors -Kilinochchi Kanagapuram Friends Inn
23.12.16 வட்டு இந்துக் கல்லூரி - நேர் வகுப்பறை முகாமைத்துவம்
24.12.16 சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் - நேர் வகுப்பறை முகாமைத்துவம்
26.12.16 சாவகச்சேரி மகளிர் கல்லூரி - நேர் வகுப்பறை முகாமைத்துவம்
28.12.16 சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் - நேர் வகுப்பறை முகாமைத்துவம்
29.12.16 சுன்னாகம் மயிலணி வித்தியாலம் - நேர் வகுப்பறை முகாமைத்துவம்
வலிகாமம் வலய அதிபர் கருத்தரங்கு - நேர் வகுப்பறை முகாமைத்துவம்
02.01.17 சென். ஜோன்ஸ் கல்லூரி - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
03.01.17 சென். பற்றிக்ஸ் கல்லூரி - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
15.01.17 சாவகச்சேரி றிபெக் கல்லூரி - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
21.01.17 ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
01.02.17, 04.02.17 இராமநாதன் கல்லூரி - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
14.02.17 கீரிமலை நகுலேஸ்வரா - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
15.02.17 வட மத்திய கல்லூரி நெல்லியடி - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
24.02.17 புத்தூர் சோமாஸ்கந்தா - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
28.02.17 மகாஜனக்கல்லூரி - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
01.03.17 வல்லை சிவகுரு வித்தியாலயம் - வல்லை சிதம்பராக் கல்லூரி - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
04.03.17 கோண்டாவில் இந்து - நேர் வகுப்பறை முகாமைத்துவம்
05.03.17 வல்லை சிவகுரு வித்தியாலயம் - நேர் வகுப்பறை முகாமைத்துவம்
08.03.17 நெல்லியடி மத்திய கல்லூரி - நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை - நேர் வகுப்பறை முகாமைத்துவம்
09.03.17 வட. இல. சங்கீத சபை - ஆசிரியர்தரக் கருத்தரங்கு - ஆய்வு முறையியல்
18.03.17, 19.03.17 சாந்திகம் உளவளத் துணையாளர் பயிற்சி - “உடனிருத்தல், உற்றுக் கேட்டல், ஒத்துணர்வு”
21.03.17 கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. - நேர் வகுப்பறை முகாமைத்துவம்
25.03.17 சாந்திகம் உளவளத் துணையாளர் பயிற்சி -“பார்வை மாற்றம்”

27.03.17
28.03.17 ஆசிரிய உளவளத்துணையாளர் பயிற்சி - வடமாகாண அமைச்சு - RIMP
30.03.17 (அலுவலகம்)
31.03.17
29.03.17 ஊரி, அன்பு இல்லம் - நேர் வகுப்பறை முகாமைத்துவம்
03.04.17
04.04.17
05.04.17
06.04.17 ஆசிரிய உளவளத்துணையாளர் பயிற்சி - வடமாகாண அமைச்சு - (RIMP
07.04.17 அலுவலகம்)
17.04.17
18.04.17
19.04.17
20.04.17
21.04.17
24.04.17 ஆசிரிய உளவளத்துணையாளர் பயிற்சி - வடமாகாண அமைச்சு (RIMP
25.04.17 அலுவலகம்)
26.04.17
28.04.17
06.05.17 அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை, அல்வாய் ஸ்ரீலங்கா வித், வல்லை றோ.க.த.க. பாடசாலை - நேர்வகுப்பறை முகாமைத்துவம்
09.05.17 கோப்பாய் நாவலர் வித் - நேர்வகுப்பறை முகாமை
11.05.17 நவாலி ம.வி - நேர் வகுப்பறை முகாமை
16.05.17 கொழும்புத்துறை துரையப்பா வித் - நேர் வகுப்பறை முகாமை
13.05.17 யுனிசெப் அநுசரணை -மாதிரிப் பாடசாலை அதிபர்கள் - நேர் வகுப்பறை
20.05.17 முகாமை
21.05.17 சாந்திகம் உளவளத்துணையாளர் பயிற்சி - "இலக்கு நிர்ணயம்"
23.05.17 நாவற்குழி ம.வி - நேர் வகுப்பறை முகாமை
26.05.17 அமைதித் தென்றல் முல்லைத்தீவு - "அறிகை நடத்தைச் சிகிச்சை"
31.05.17 கிளிநொச்சி அதிபர் கருத்தரங்கு - நேர் வகுப்பறை முகாமை
01.06.17 UNFCR - "பால் நிலைசார் வன்முறைகள்" - ரில்கோ ஹோட்டல்
02.06.17 கரவெட்டி விக்னேஸ்வரா - நேர் வகுப்பறை முகாமை'
03.06.17 கரணவாய் ம.வி - நேர் வகுப்பறை முகாமை
04.06.17 சாந்திகம் உளவளத்துணையாளர் பயிற்சி - "பல வேறு வழிகள் தேடல்"
10.06.17 கிழக்கு மாகாண TOT -நேர் வகுப்பறை முகாமை
22.07.17
24.07.17 சாந்திகம் - உளவளத் துணையாளர் பயிற்சி
29.07.17
30.07.17
05.08.17 மல்லாகம் கனிஷ்ட வித் - நேர்வகுப்பறை முகாமை
12.08.17 பருத்தித்துறை சித்திவிநாயகர் வித் - நேர் வகுப்பறை முகாமை

14.08.17 - 18.08.17 ஆசிரிய உளவளத் துணையாளர் பயிற்சி - வடமாகாணக் கல்வி அமைச்சு -(RIMP மண்டபம்)

19.08.17 - 20.08.17 கிளிநொச்சி அன்னை இல்லம் - சிறுகதைப் பட்டறை

21.08.17 - 25.08.17 ஆசிரிய உளவளத் துணையாளர் பயிற்சி -- வடமாகாண கல்வி அமைச்சு -(RIMP மண்டபம்

27.08.17 ஸ்கந்தா ஆரம்பப் பாடசாலை - நேர் வகுப்பறை முகாமை

28.08.17 - 31.08.17 ஆசிரிய உளவளத் துணையாளர் பயிற்சி - வடமாகாணக் கல்வி அமைச்சு

01.09.17 உடுப்பிட்டி மகளிர் கல்லூரி - நேர் வகுப்பறை முகாமை

05.09.17 உரும்பராய் சந்திரோதய வித் - நேர் வகுப்பறை முகாமை

10.09.17 சாந்திகம் உளவளத்துணையாளர் பயிற்சி - உளவளத் துணை நுண்திறன்கள்

14.09.17 சாந்திகம் - "ஏற்றுக்கொண்டு உன்னிப்பாயிருத்தல்" மூத்த உளவளத் துணையாருக்கான கருத்தரங்கு

17.09.17 சாந்திகம் - உளவளத் துணையாளர் பயிற்சி - "சக்தி தீய்தல்"

23.09.17 சாந்திகம் - பரீட்சை வினாத்தாள் பற்றிய கலந்துரையாடல்

24.09.17 உளவளத் துணையாளர் பயிற்சி - சாந்திகம் -"அறிகை நடத்தைச் சிகிச்சையும் மகிழ்வும்"

19.11.17 - 20.11.17 சிறுவர் நிதியம் கருத்தரங்கு - டம்புல்ல - "சிறார் மீதான கவனமும் உளவளத் துணையும்"

22.11.17 சாந்திகம் -சமூக மருத்துவ மாணவருக்கான கருத்தரங்கு -"சம்பவக் கற்கை"

23.11.17 "அமைதித் தென்றல்" முல்லைத்தீவுக்கான கருத்தரங்கு -கோப்பாய் சங்கமம் மண்டபம் -"ஏற்றுக்கொண்டு உன்னிப்பாயிருத்தல்"

04.12.17 வேம்படி மகளிர் க.பொ.த உ/த மாணவர் - "காதல்"

06.12.17 சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியர் கருத்தரங்கு - "பெற்றார் ஆசிரியர் உறவு"

05.02.18 சாந்திகம் நட்புதவியாளர் பயிற்சி - Unicef- "உள சமூக ஆரோக்கியம்"

07.02.18 சாந்திகம் நட்புதவியாளர் பயிற்சி - Unicef -"ஒத்துணர்வு"

16.03.18 மானிப்பாய் ஹியு மெடிக்கா -பெற்றார் கருத்தரங்கு -"பெற்றோரியம்"

31.03.18 கந்தரோடை தமிழ்க்கந்தையா - ஆசிரியர் கருத்தரங்கு - "மாணவர் நலன்"

11.04.18 கிளிநொச்சி அ.ம.தி கரங்கள் - மாற்று வலுவுடைய பிள்ளைகள் பெற்றோர் கருத்தரங்கு - மாங்குளம் -"பிள்ளைகள் நலன்"

25.04.18 கொக்குவில் நூலக அநுசரணை -கொக்குவில் நாமகள் வித். கொக்குவில் முன்பள்ளி - "உலக வாசிப்பு நாள்"

28.04.18 வலிகாமம் வலய அதிபர், ஆசிரியர் கருத்தரங்கு -"விசேட தேவையுடைய பிள்ளைகள்"

01.05.18 Discussion with Bangaldesh Judges team - Tilco hotel by Unicef -"Child rights"

02.05.18 கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை - பெற்றோர் -"பெற்றோரியம்"
கொக்குவில் இராமகிருஷ்ண வித். - ஆசிரிய மாணவர் - "வாசிப்பின் முக்கியத்துவம்"

12.05.18 வலிகாமம் வலய அதிபர், ஆசிரியர் - உடுவில் மகளிர் கல்லூரி -"கற்றல் குறைபாடுடைய பிள்ளைகளைக் கையாளுதல்"

07.06.18 யாழ் வலய அதிபர், ஆசிரியர் "விசேட தேவையுடைய பிள்ளைகள்" - மில்லேனியம் ஹோட்டல், நாச்சிமார் கோயிலடி

21.06.18 வேலணை மத்திய கல்லூரி - ஆசிரியர், மாணவர் - "தற்கொலை"

16.08.18 வலிகாமம் வலயம் - நிரந்தர நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர் -"கற்றலில் பின்னடைவுள்ள பிள்ளைகளைக் கற்பித்தல்"

05.09.18 வேம்படி மகளிர் கல்லூரி - தரம் 10, 11, 12, 13 மாணவர் - "போதைப் பாவனை அடையாளம் காணல்" விழிப்புணர்வுக் கருத்தரங்கு

20.09.18 கொக்குவில் ஞானபண்டித வித். - "சிறுவர் துஷ்பிரயோகம்"

22.09.18 – 06.10.18 Centre for Wholistic healing - Inuvil hospital - Counselor's training - "Attending", "Active listening", "Empathy"

16.10.18 உடுவில் பிரதேச செயலகம் - உலக உளநலநாள் - "இளைஞர் உளநலம்"

20.10.18 – 03.11.18 Centre for wholistic healing - Inuvil hospital - Counselor's training - "Focusing", "Challenging", Exploration"

08.11.18 உடுவில் பிரதேச சபை - கருத்தரங்கு - வீமன்காமம் ம.வி. மாணவர் தலைவர்கள் -"பால்நிலை சமத்துவமும் வன்முறையும்"

12.11.18 'சொண்ட்' நிறுவனக் கருத்தரங்கு - வீமன்காமம் ம.வி. மாணவர் தலைவர்கள் - "தலைமைத்துவப் பண்புகள்"

03.12.18 'சொண்ட்' கருத்தரங்கு - வளலாய் சிறுவர்கழகம் - "தலைமைத்துவப் பண்புகள்"

'சொண்ட்' கருத்தரங்கு - பலாலி வடக்கு சிறுவர்கழகம் - "விழுமியங்கள்"

05.12.18 'சொண்ட்' கருத்தரங்கு - வீமன்காமம் சிறுவர்கழகம் -"தலைமைத்துவப் பண்புகள்" "தையிட்டி சிறுவர்கழகம் -"தலைமைத்துவப் பண்புகள்"

06.12.18 'சொண்ட்' கருத்தரங்கு - நல்லிணக்கபுரம் சிறுவர்கழகம் -"தலைமைத்துவப் பண்புகள்" "வறுத்தலைவிளான் சிறுவர்கழகம் -"தலைமத்துவப் பண்புகள்"

08.12.18 'சொண்ட்' கருத்தரங்கு - பலாலி வடக்கு சிறுவர்கழகம்- "தலைமைத்துவப் பண்புகள்" "தையிட்டி சிறுவர்கழகம் - "விழுமியப் பண்புகள்"

12.12.18 'சொண்ட்' கருத்தரங்கு -வீமன்காமம் சிறுவர்கழகம் -"விழுமியப் பண்புகள்"

13.12.18 'சொண்ட்' கருத்தரங்கு -வசாவிளான் சிறுவர்கழகம் - "தலைமைத்துவப் பண்புகள்"

'சொண்ட்' கருத்தரங்கு - பலாலி கிழக்கு சிறுவர்கழகம் -"தலைமைத்துவப் பண்புகள்"

13.01.19 – 30.03.19 Centre for wholistic healing - Invuvil hospital - counselor's training "Goal setting", Exploring options", "termination" - "Advanced counseling skills".

29.07.19 – 30.07.19 உரும்பராய் சந்திரோதய வித்தியாலயம் - ஆசிரியர் கருத்தரங்கு -"ஆசிரியர் உளநலம்", "அடைவு மட்டம் குறைந்த மாணவரைக் கற்பித்தல்"

24.09.19 வடமராட்சி உளவளத்துணையாளர் கருத்தரங்கு - "தற்கொலை" -வடமராட்சி வலய மண்டபம்

| | |
|---|---|
| 22.11.19 <br> 25.11.19 | Child Fund Seminar for lead mothers - "Expressive therapy Drama", "Empethic Joy", "Connection with others" - Mullaitivu Preschool hall |
| 14.12.19 | 3II இல் இருந்து 3I க்குத் தரம் உயரும் ஆசிரியர் கருத்தரங்கு - "பிள்ளையை இனம் காணல்", "விசேட தேவை உடைய பிள்ளை" -ஆசிரியர் நிலையம் - மானிப்பாய் |
| 29.01.20 | Haritas - Hudec - Seminar for counselors -"Mind fulness and E.Q" - Hudec Hall, Chundikuli |

Thanks for sharing
the pain & suffering
of our people. We will
do our best to help them

S. Kathiswaran

V. [illegible]

(AMAF)
AUSTRALIA.
2014

**நிகழ்த்தப்பட்ட பேச்சுக்கள் (முன்னர் வராதவை)**

| | |
|---|---|
| 08.01.00 | சிவத்தமிழ்ச் செல்வி பவளவிழா - தெல்லிப்பழை - வாழ்த்துரை |
| 22.02.00 | சங்கானைக் கோட்ட வலைப்பந்து இறுதிப்போட்டி - விக்ரோறியா மைதானம் - முதன்மை விருந்தினர் உரை |
| 23.02.00 | தெல்லிப்பழை சைவப் பிரகாசா இல்ல மெய்வல்லுநர் போட்டி - சிறப்பு விருந்தினர் உரை |
| 22.03.00 | கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் - இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு - சிறப்பு விருந்தினர் உரை |
| 15.09.00 | ஆரபி சிவஞானராஜாவின் "கரை தேடும் அலைகள்" சிறுகதைத் தொகுதி வெளியீடு - ஸ்கந்தா - நயப்புரை |
| 23.11.00 | தேசிய சர்வோதய சிரமதான இயக்கம் - யாழ் நகர மண்டபம் - "சிறுவர் உரிமைகளுக்கு ஏற்படும் தாக்கங்கள்" |
| 07.12.00 | மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் பரிசளிப்பு விழா - சிறப்பு விருந்தினர் உரை |
| 09.01.01 | மருத்துவ மாணவர் ஒன்றியம் - நாடி வெளியீடு - கைலாசபதி அரங்கு -ஆய்வுரை |
| 11.01.01 | கீரிமலை நகுலேஸ்வரா ம.வி - தற்காலிகக் கட்டிடத் திறப்புவிழா - சிறப்பு விருந்தினர் உரை |
| 31.01.01 | யாழ்ப்பாணக் கல்லூரி விஞ்ஞான மன்றத்தின் "அறிவியல் அருவி" சஞ்சிகை, மதிப்பீட்டுரை - ஒட்லி மண்டபம் - வட்டுக்கோட்டை |
| 22.02.01 | மானிப்பாய் மெமோரியல் - பேடன் பவல்தினம் - பிரதம விருந்தினர் உரை |
| 26.02.01 | சண்டிலிப்பாய்க் கோட்டம் -வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டி - சண்டிலிப்பாய் இந்து - பிரதம விருந்தினர் உரை |
| 09.03.01 | யாழ் மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் - மகளிர் தினம் - ஆச்சிரம மண்டபம் மருதனார் மடம்- விருந்தினர் உரை |
| 06.05.01 | விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளைக் கற்பிக்கும் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர் - சான்றிதழ் வழங்கும் வைபவம் - இராமநாதன் கல்லூரி - இணைப்பாளர் விசேட உரை |
| 01.03.01 | புதுமடம் றோ.க.த.க. பாடசாலை- இல்ல மெய்வல்லுநர் போட்டி - பிரதம விருந்தினர் உரை |
| 10-06-01 | சங்கானைக் கோட்ட குடும்பப் பாடசாலைகள் - மெய்வல்லுநர் போட்டி - சங்கானை சிவப்பிரகாசா - பிரதம விருந்தினர் உரை. |
| 07.01.02 | சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதிய விழா- வாழ்த்துரை |
| 28.01.02 | நாடி மருத்துவபீட மலர் வெளியீடு - மருத்துவபீட மண்டபம் - ஆய்வுரை |
| 28.03.02 | வரதர் பவளவிழா -நல்லை ஆதீன மண்டபம் - வாழ்த்துரை |
| 05.04.02 | சில்லாலை றோ.க.த.க. பாடசாலை - பரிசுநாள் - சிறப்பு விருந்தினர் உரை |
| 06.04.02 | வலி. தெற்கு பிரதேச செயலக முத்தமிழ்விழா - இராமநாதன் கல்லூரி - சிறப்பு விருந்தினர் உரை |
| 07.04.02 | இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கோப்பாய்ப் பிரிவு - முத்தமிழ் விழா - சிறப்பு விருந்தினர் உரை |
| 04.04.02 | உடுவில் மான்ஸ் ம.வி - பரிசளிப்பு விழா - பிரதம விருந்தினர் உரை |
| 09.04.02 | சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையம் - ஐயனார் கல்யாண மண்டபம் - சமூகதீபம் மலர் வெளியீடு - பின்னூட்டல் உரை |

| | |
|---|---|
| 28.04.02 | பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை - மணிவிழா - இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் மண்டபம் - சிறப்புரை |
| 09.06.02 | ஞானப்பிரகாசர் சனசமூக நிலையம் - மல்வத்தை - உடுவில் - "முன்பள்ளி மாணவர் உருவாக்கத்தில் பெற்றோர், ஆசிரியர், நடத்துநர் பங்கு" |
| 13.07.02 | பிரான்பற்றுக் கலைமகள் வித்தியாலயம் - மாணிக்கவாசகர் குருபூசை - வாழ்த்துரை |
| 04.01.03 | வலம்புரி - அமரர் சி.செல்லத்துரை ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டிப் பரிசளிப்பு விழா - சிறப்பு விருந்தினர் உரை |
| 28.03.03 | யாழ் இலக்கிய வட்டம் - வரதர் பவளவிழா - நல்லை ஆதீன மண்டபம் - வாழ்த்துரை |
| 03.07.05 | உளவளத்துணை ஆசிரியர் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு - நாவலர் மண்டபம் - பயிற்சி நிறைவுரை |
| 22.06.05 | பெண்களும் ஊடகத்துறையும் -ஊடக வளங்கள் பயிற்சி நிலையம் - யாழ் பல்கலைக் கழகம் - ஜும்மா பள்ளிவாசல் வீதி யாழ்ப்பாணம் - தலைமையுரை (நிகழ்வு -01) |
| 11.11.08 | St. Mary's Tamil M.V, Bampalapitiya - Chief guest speech |
| 25.11.15 | உளவைத்திய நிபுணர் எஸ்.சிவதாஸின் "சிறுவர்களுடன்" நூல் வெளியீடு - வவுனியா கலாசார மண்டபம் - தலைமையுரை |
| 29.11.15 | வளர்பிறை வருடாந்த இறுதிநிகழ்வு - கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி - பிரதம விருந்தினர் உரை |
| 02.12.15 | Sai School Assembly - "Accidents" |
| 13.12.15 | விழிசைக்குயில் - வெளியீடும், நேர்கொண்ட பாவை அறிமுகமும் - கொழும்பு தமிழ்ச் சங்கம் - ஏற்புரை |
| 20.12.15 | விழிசைக்குயில் அறிமுகவிழா - இணுவில் மத்திய கல்லூரி - ஏற்புரை |
| 09.01.16 | அகவொளி - அருட்தந்தை இராஜநாயகம் நூல் வெளியீடு - "நலமுடன் வாழ உள ஆற்றுப்படுத்தல்" சிறப்பு விருந்தினர் உரை |
| 13.01.16 | Sai School Assembly - Thai Pongal |
| 16.01.16 | விழிசிட்டி சனசமூக நிலையம் - தைப்பொங்கல் விழா - நெறிப்படுத்துநர் உரை |
| 27.01.16 | Sai School Assembly - 'Beauty of Truth" |
| 30.01.16 | முதியோர் சுகவாழ்வுக் கழகம் யாழ்ப்பாணம் - "சிரேஷ்ட பிரஜைகளின் உளநலம்" |
| 02.03.16 | Sai School Assembly - "Sports and Games" |
| 07.03.16 | 'புதியவள்' குறும்பட வெளியீடு - கருத்துரை - CCH மண்டபம் - கச்சேரி நல்லூர் வீதி |
| 08.03.16 | மகளிர்தினம் தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் - மருதனார்மடம் நுண்கலைப்பீட மண்டபம் - சிறப்பு விருந்தினர் உரை |
| 08.03.16 | மகளிர்தினம் சமூகவியல் துறை - யாழ் பல்கலைக் கழகம் - விருந்தினர் உரை "வானத்தின் சரிபாதி பெண்கள்" |
| 25.03.16 | ஏழாலை மேற்கு மாதர் அபிவிருத்திச் சங்கம் - முதலாம் ஆண்டு நிறைவு விழா - ஏழாலை மேற்கு கலாசார மண்டபம் - பிரதம விருந்தினர் உரை |
| 08.04.16 | Sai School - talk to Gr. 10 parents on 'Parenting" |

09.04.16 தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் - கவிதைப் பட்டறை - மல்லாகம் ம.வி "கவிதை என்றால் என்ன?"

09.04.16 வாழ்வகம் முத்தமிழ் விழா- பிரதம விருந்தினர் உரை

10.04.16 தெல்லிப்பழை கலை இலக்கியக் களம் - மணவர் எழுதிய கவிதை விமர்சனம் - மல்லாகம் ம.வி

23.04.16 அ. அஜந்தனின் "மனமெனும் கூடு" - கவிதைத் தொகுதி வெளியீடு - திருமறைக் கலாமன்றம் - மதிப்பீட்டுரை

27.04.16 Sai School Assembly - reading books & library

18.05.16 Sai School Assembly - Way to happiness

21.05.16 விழிசிட்டி சனசமூக நிலையம் - கல்வித்தினம் - தலைமையுரை

28.06.16 மகாஜனா - மகிழகம் - திறப்புவிழா - சிறப்பு விருந்தினர் உரை

30.06.16 முழங்காவில் ம.வி. மகிழகம் - திறப்புவிழா - சிறப்பு விருந்தினர் உரை

11.09.16 வாழ்வகம் - செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவுப் பேருரை - "பதின்ம வயதுப் பிரச்சினைகளும் அவற்றைக் கையாளலும்"

12.09.16 கந்தரோடை தமிழ்க் கந்தையா வித் - நிறுவியவர் நினைவுப் பேருரை - "மாணவர் கல்வியில் பெற்றோரின் பங்கு"

17.09.16 கலை இலக்கியக் களம் - 30வது ஆண்டுவிழா - இணுவில் மத்திய கல்லூரி - நெறிப்படுத்துநர் உரை

01.10.16 தாவடி இ.த.க. பாடசாலை - சிறுவர் தினம் - "சிறுவர் உரிமைகள்", மகாஜனா - சிறுவர் விளையாட்டு விழா - பிரதம விருந்தினர் உரை

06.10.16 சுண்டிக்குளி மகளிர் கல்லூரி - ஆசிரியர் தினம் - பிரதம விருந்தினர் உரை

14.10.16 யாழ் பிரதேச செயலகம் - சிறுவர், முதியோர், மாற்றுவலுவுடையோர் தினம், பிரதம விருந்தினர் உரை

15.10.16 Aharam Foundation - First work shop - Tilco hotel - Guest speech

16.10.16 மல்லிகை ஜீவாவுடன் ஒரு மாலை - நல்லூர் கலாசார மண்டபம் - அநுபவப்பகிர்வு

20.10.16 கோண்டாவில் தென்மேற்கு முதியோர் சங்கம் - ஒன்றுகூடல் - வேதபாராயண சனசமூக நிலையம் - பிரதம விருந்தினர் உரை

28.10.16 Manipay Sathya Sai School - English day - Chief guest speech

30.11.16 Little Chutty's Montesoori - Jaffna - Annual Concert - Chief guest speech

07.01.17 வரிக்குயில் வெளியீடு - இணுவில் மத்திய கல்லூரி - ஏற்புரை

11.01.17 கீரிமலை நகுலேஸ்வரா - தரம் 1 கால்கோள் விழா - பிரதம விருந்தினர் உரை

16.03.17 கோண்டாவில் தென்மேற்கு உதயம் மகளிர் விவகாரக்குழுவும் மாதர்சங்கமும் - மகளிர்தினவிழா - வேதபாராயண சனசமூக நிலையம் - பிரதம விருந்தினர் உரை

19.03.17 இணுவில் இளந்தொண்டர் சபை - திருமுறைநெறிச் செல்வர் பட்டமளிப்பு - விசேட உரை

09.09.17 விஞ்ஞானக் கதைகள் - 2ம் பதிப்பு வெளியீடு - யூனியன் கல்லூரி - ஏற்புரை

16.09.17 UNHCR ஏற்பாடு - பொ.பாலகிருஷ்ணன் நினைவுப் பேருரை - "உளநல வேர்" தியாகி அறக்கொடை மண்டபம் நல்லூர்

23.09.17 பண்பாட்டுப் பெருவிழா - வடமாகாணம் - யூனியன் கல்லூரி - அரங்கத் திறப்புரை

01.10.17 Bond - International School Concert - Special guest speech

| | |
|---|---|
| 05.10.17 | பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றம் - புத்தக அரங்கம் பண்பாட்டு நிகழ்வு - முதன்மை விருந்தினர் உரை |
| 28.10.17 | வாசகர் வட்டம் - யாழ் பொதுசன நூலகம் - "என் சிறுகதை எழுந்த முறை" |
| 05.11.17 | குரும்பசிட்டி சன்மார்க்க சபை - கனக செந்தி நூற்றாண்டு விழா - சிறப்புரை |
| 18.11.17 | Ed Locate Open day - Tilco hotel - special guest speech |
| 09.12.17 | ஆறுமுகநாவலர் மகாநாடு - இந்துமத அலுவல்கள் அமைச்சு - துர்க்கா மணிமண்டபம் - நல்லூர் - "ஔவை பாடலும் நாவலரும்" - கருத்தரங்க உரை |
| 01.01.18 | திருமனிதர் வாழ்வு - நூல் வெளியீடு - இணுவில் மத்திய கல்லூரி - ஏற்புரை |
| 28.01.18 | சிறுவர் உளநலம் - மூன்றாம் பதிப்பு வெளியீடு - யாழ் நூலக மண்டபம் - நெறிப்படுத்துநர் உரை |
| 07.02.18 | சோ.ப வின் தென்னாசியக் கவிதைகள் நூல் வெளியீடு - கைலாசபதி அரங்கு - ஆய்வுரை |
| 18.02.18 | இரா. செல்வகுமாரின் "அநுபவங்களும் அநுமானங்களும்" கவிதை நூல் வெளியீடு - உரும்பராய் இந்து - மதிப்புரை |
| 17.03.18 | அன்புராஜா அடிகளாரின் "சிறகடிக்கும் சிட்டுகள்", "வாழத்துடிக்கும் வடலிகள்" ஆகிய நூல்கள் கல்வியில் செலுத்தும் செல்வாக்கு - சென். ஜோன்ஸ் பொஸ்கோ மண்டபம் - ஆய்வுரை |
| 18.03.18 | ஆசி. கந்தராஜாவின் "செல்லப் பாக்கியம் மாமியின் முட்டிக் கத்தரிக்காய்" வெளியீடு - நாவலர் கலாசார மண்டபம் - ஆய்வுரை |
| 08.04.18 | சைவப்புலவர் சு.செல்லத்துரை அமுதவிழா - "வில்லிசைப் பாடல்" வெளியீடு - இளவாலை மெய்கண்டான் ம.வி - தலைமையுரை |
| 27.05.18 | யாழ் நூலக வாசகர் வட்டம் - யாழ் நூலகம் - "மனவடு" |
| 03.06.18 | வேலணையூர் சுரேஷின் "இனிப்பா" குழந்தைப் பாடல் வெளியீடு - யாழ் இந்துக் கல்லூரி - ஆய்வுரை |
| 18.06.18 | நளாயினி அம்பலவாணர் மணிவிழா, முத்துத்தம்பி ம.வி - சிறப்பு விருந்தினர் உரை |
| 24.06.18 | 'நீதியரசர் பேசுகிறார்' - முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நூல் வெளியீடு - வீரசிங்கம் மண்டபம் - சிறப்பு விருந்தினர் உரை |
| 19.10.18 | விழிசிட்டி சனசமூக நிலையம் -அறநெறிப் பாடசாலை - வாணிவிழா - பிரதம விருந்தினர் உரை |
| 03.11.18 | அன்புராசா அடிகளாரின் மூன்று நூல் வெளியீடு - திருமறைக் கலாமன்ற மண்டபம் - மதிப்புரை |
| 07.01.19 | தங்கம்மா அப்பாக்குட்டி அறக்கொடை நிகழ்வு - சிறப்பு விருந்தினர் உரை, தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானம் |
| 26.01.19 | தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் - 100வது நிகழ்வு - சந்தனச் சிதறல்கள் கவிவிதைகள், கலை இலக்கியக் களமும் கடந்தகாலமும் ஆகிய மூன்று நூல்கள் வெளியீடு, விஞ்ஞானக் கதைகள் அறிமுகம் - ஏற்புரையும் நன்றியுரையும் |
| 08.02.19 | திரு. சி.சிவராஜன் மணிவிழா - கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை- வாழ்த்துரை |
| 02.03.19 | திரு. லெ. முருகபூபதியின் 'சொல்லாத சேதிகள்' அறிமுகவிழா - விமர்சன உரை- நல்லூர் நாவலர் மண்டபம் |

| | |
|---|---|
| 03.03.19 | கனடா தேவகாந்தனின் பல நூல்கள் அறிமுகம் - சிறுகதைத் தொகுதிக்கான விமர்சன உரை - யாழ் நூலகக் குவிமாடம் |
| 08.03.19 | வட மாகாண மகளிர் விவகார அமைச்சு நடத்திய மகளிர்தின விழா - பிரதம விருந்தினர் உரை - யாழ் வீரசிங்கம் மண்டபம் |
| 17.03.19 | திரு. சர்வேஸ்வரன் நவரத்தினம் அஞ்சலிக் கூட்டம் (UK) விழிசிட்டி சனசமூக நிலையம் - அஞ்சலி உரை |
| 25.06.19 | வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்ட "ஆடலிறை ஆக்கங்கள்" உள்ளிட்ட மூன்று நூல்கள் வெளியீடு - அறிமுக உரை |
| 21.07.19 | அம்பிகை பஞ்சலிங்கத்தின் "அநேகி" கவிதைத் தொகுதி வெளியீடு - நயவுரை - நாவலர் கலாசார மண்டபம் |
| 22.07.19 | மகாஜனா 85 O/L மாணவர் ஒன்றுகூடல் - ஆசிரியர் கௌரவ நிகழ்வு - ஆசிரியர் சார்பில் ஏற்புரை - வலம்புரி ஹோட்டல் |
| 28.07.19 | மகாஜனா 89 A/L, 93 A/L, 94 A/L மாணவர் ஒன்றுகூடல் - 89 A/L மாணவர் நிகழ்வில் ஆசிரியர் குறிப்புரை - 94 A/L மாணவர் வெளியிட்ட "நாம் வாழ்ந்த மகாஜனா" நூல் விமர்சனவுரை |
| 05.09.19 | DBT, CBT பயின்றோரின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு - சோலைக்குயில் அவைக்காற்று களம் - தலைமையுரை - இணுவில் மத்திய கல்லூரி |
| 12.09.19 | திருமதி. த. இராமசாமி (நியூசிலாந்து) - பாராட்டு விழா - வாழ்த்துரை - கீரிமலை நகுலேஸ்வரா ம.வி |
| 28.10.19 | உலக உளநலநாள் - வடமராட்சி கல்வி வலயம் - பிரதம விருந்தினர் உரை - ஹாட்லிக் கல்லூரி |
| 09.12.19 | 'ஜெசாக்' - மகளிர் மீதான வன்முறைகள் - திறவுகோல் குறிப்புரை - நாவலர் மண்டபம் |
| 04.01.20 | வள்ளியம்மை சுப்பிரமணியத்தின் 'வெற்றிக்கு வலிகள் தேவை' நூல் அறிமுக விழா நயப்புரை - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி. |
| 25.01.20 | அருணோதயாவின் 125வது ஆண்டுவிழா - வாணி சற்குணசெல்வத்தின் 'சில கணங்கள்' கவிதைத் தொகுதி வெளியீடு - ஆய்வுரை |

**சைவ நற்சிந்தனை**

| | |
|---|---|
| 1981 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - தேசிய சேவை - 2 நாள் |
| 1981 | பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி - 2 நாள் |
| 24.04.84<br>25.04.84<br>13.05.84<br>14.05.84 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தேசிய சேவை |

**Dan T.V காலை நிகழ்வில் செய்த உளநலச் சிந்தனைகள்**
**2019 தீபாவளி முதல் நாள் தோறும் (ஒக். 27 முதல்)**

01. நலம் - 3 முறை
02. வெற்றி- 2 முறை
03. ஏற்றுக்கொள்ளல் - 3 முறை
04. வாழ்வின் மறுபக்கம்
05. சந்தோஷமாய் இருத்தல்
06. உணர்வு நுண்மதி
07. தாங்குதிறனை அதிகரித்தல்
08. அன்பு செய்தல்
09. தொடர்பாடல்
10. முழுமைக் காட்சி
11. நித்திரை - 2 முறை
12. விமர்சனம் தெளிதல்
13. கோபம் என்ற உணர்ச்சி
14. அர்த்தம் தேடுதல் - 2 முறை
15. நெருக்கமான உறவு - 2 முறை
16. பிள்ளை வளர்ப்பு - 2 முறை
17. பிள்ளைகளில் நடத்தை மாற்றம்
18. எண்ணங்களில் தெளிவு
19. நெருக்கீடு
20. தளர்வு - இசை
21. தளர்வு - மூச்சுப்பயிற்சி
22. தளர்வு - தசைத்தளர்வுப்பயிற்சி - 3முறை
23. பயமும் பதகளிப்பும்
24. தேவை, வசதி, ஆடம்பரம்
25. வேலையுடன் இணைப்பு
26. ஆளுமை
27. குடும்ப எல்லை
28. உறுதியான வெளிப்பாடு
29. நேர முகாமை - 6 முறை
30. பாதுகாப்புக் கவசம் - 4 முறை
31. நெருக்கீட்டைக் கையாளல்
32. நாடகம் ஒரு சிகிச்சை
33. உனை நீ அறி
34. கர்ப்பப்பைக் குழந்தை
35. பிறந்துவிட்ட குழந்தை
36. குடும்ப இயக்கப்பாடு
37. கேட்டுப்பெறுதல்
38. நிம்மதி - 3 முறை
39. சுயகணிப்பு
40. தீர்ப்பிடாத வாழ்வு
41. இருப்பதே மூலதனம்
42. மந்திரக் கடை
43. தசை நீட்டலும் வாசனைச் சிகிச்சையும் - 2 முறை
44. கதை சொல்லல் - வெளிப்பாட்டுச் சிகிச்சை
45. 1 வயதுக் குழந்தை - 3 முறை
46. படிப்பது எப்படி? - 3 முறை
47. சோதனை நாள் - 2 முறை
48. வாழ்க்கை ஒரு தெரிவு
49. குற்ற உணர்வு
50. உயர்வின் திறவுகோல் - 4 முறை
51. நல்லவரும் வல்லவரும்
52. மறக்கத் தெரிந்த மனம்
53. தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அடிமையா?
54. மனம் ஒரு குரங்கு - 2 முறை
55. விசேட தேவை - விவேகக் குறைபாடு - 2 முறை
56. வாசிப்பு சிகிச்சை - 2 முறை
57. வரைதல் சிகிச்சை - 3 முறை
58. 2 வயதுக் குழந்தை - 3 முறை
58. சக்தி தீய்தல் - 2 முறை
60. இழப்புத்துயர் - 3 முறை
61. பிரபை - 2 முறை
62. ஓட்டிசம் - 3 முறை
63. தைமகள் - 2 முறை

64. முன்பள்ளிப் பருவம்
65. டவுண் சிண்ட்ரோம்
66. பெண்கள் உளநலம் - 2 முறை
67. நட்பு
68. மூளையின் ஒரு சீர்த்திடநிலை
69. தொழில்நுட்ப வளர்ச்சி - 2 முறை
70. உளநலப் பாதுகாப்பு
71. கவிதை எழுதும் சிகிச்சை
72. சிறுகதை எழுதும் சிகிச்சை
73. சீர்மியம்
74. பிள்ளைப் பருவம் 6 - 7 வயது
75. மூளை முடக்குவாதம் - 3 முறை
76. டிஸ்லெக்சியா (Dyslexia) - 3 முறை
77. 3ஆம் நிலைப் பாதுகாப்புக் கவசம் - 2 முறை
78. 4ஆம் நிலைப் பாதுகாப்புக் கவசம் - 3 முறை
79. முயற்சி - 3 முறை
80. சக்திக்காப்பு - 5 முறை
81. முன்வைத்தல் - 2 முறை
82. உன்னிப்பாயிருத்தல் - 3 முறை
83. பிள்ளைப்பருவ உணர்வுகள் - 4 முறை
84. பிள்ளைப் பருவம் 8 - 9 வயது - 3 முறை
85. டிஸ்கல்குலியா (Dyscaloulia) -3 முறை
86. கவனக் குறைவுடன் கூடிய அதீத செயற்பாடு. - 2 முறை
87. எண்ணச் சுழல் நிர்ப்பந்தம் - 2 முறை
88. காதல் - 3 முறை
89. உடலும் மனமும் - 2 முறை
90. கனவு - 2 முறை
91. கனவுகளின் வகை - 2 முறை
92. சந்தோஷ நாட்காட்டி - 2 முறை
93. சுயம் - 2 முறை
94. பிள்ளைப்பருவம் - 10-11 வயது - 2 முறை
95. பதின்ம வயது ஆரம்பம் 12 - 13 வயது - 2 முறை
96. தொடு பயம்
97. பீதிநோய் - 2 முறை
98. உணவுப்பழக்கம்
99. படிப்பதை நினைவில் வைத்திருத்தல் - 2 முறை
100. நோயெதிர்ப்பும் மனமும் - 3 முறை
101. தலைமை ஏற்றல் - 3 முறை
102. இறை நம்பிக்கை
103. சமூக சேவை ஒரு சிகிச்சை
104. கூட்டுப்பிரார்த்தனை ஒரு சிகிச்சை - 2 முறை
105. கொரனா என்ற நெருக்கீடு
106. கொரானவும் இயற்கையும்
107. வீட்டில் இருந்து என்ன செய்வது?
108. கொரனா காலைக் கவனம்
109. எண்ணப் பரவலாக்கம்
110. கொரனா காலப் பெற்றோர்
111. நெருக்கீட்டு மறுதாக்கமும் நீண்ட கால விளைவும்
112. மகிழ்ச்சி நாட்காட்டி

(21-05-2020 வரை)



ISBN 978-624-5407-00-2
9 786245 407002